[பாஹௌள வலயதாமந் ச ஸ்கந்தமாலாவலம்பநம்]
ப்ரகோஷ்டே வலயஞ்சைவ மணிபந்தே கலாபகம் || 8 ||

ரத்நாங்குலீயகைஶ்சைவ விநா மத்யாங்குலீயகம் |
மத்யே சோதரபந்தம் ஸ்யாத் தஸ்யோர்த்வே ஸ்தநஸூத்ரகம் || 9 ||

யஜ்ஞஸூத்ராதி பார்ஶ்வைகம் ஸூத்ரம் ஸ்யாத் ஸ்தநாவ்ருதம்
புரஸூத்ரம் லம்பநம் ஸூத்ரே (ஸ்யாத்) யஜ்ஞஸூத்ரந்து |
பந்தநம் || 10 ||

8. பாஹுவில்; வலயம், தாம, ஸ்கந்தமாலாவலம்பநம் என்ற அணிகளும்; ப்ரகோஷ்டத்தில் (மணிக்கட்டுக்கும் முழங்கைக்கும் நடுவில்) வலயம் என்ற அணியும்; மணிபந்தத்தில் (மணிக்கட்டில்) கலாபம் என்ற அணியும்;

9. நடுவிரலைத்தவிர மற்ற விரல்களில் ரத்னமோதிரங்களும்; இடையில் உதரபந்தமும் (வயிற்றை இறுக்கிக் கட்டும் பட்டையும்); இதற்குமேலே ஸ்தனசூத்ரகம் என்ற அணியும் இருக்கவேண்டும். (இங்கு ஸ்தனஸூத்ரமென்பது, உதரபந்தத்திலிருந்து குறுக்குநெடுக்காக மேலே சென்று ஸ்தனங்களை மறைப்பது.)

10. பூணூல் முதலிய சூத்ரம் (முதலிய என்பதனால் வைகக்ஷிகம் குறிக்கப்படுகிறது) பார்ச்வைகசூத்ரமாகும். அதாவது ஒரு பக்கத்திலிருந்து மற்றோர் பக்கத்தை வியாபித்தபோதிலும்; ஒரு பக்கத்தையே தனக்கு ஆச்ரயமாகக் கொண்டதாகும். ஸ்தனசூத்ரமென்பது, ஸ்தனாவிருதமாகும். அதாவது இரண்டு ஸ்தனங்களையும் சூழ்ந்து கொண்டு குறுக்கு நெடுக்காகத் திகழுமென்பது கருத்து. புரஸூத்ரமென்பது தொங்குவதாதலால், லம்பநம் ஆகிறது. யஞ்ஞசூத்ரமானது, உடலைச் சூழ்ந்து நிற்பதால் பந்தனம் (கட்டிக்கொண்டது) ஆகிறது.

கடிஸூத்ராவஸானம் ஸ்யாத் லம்ப³ஸூத்ரமிதி ஸ்ம்ருதம் ।
வக்ஷ:ஸ்த²லே து ஹாரம் ஸ்யாது³பக்³ரீவம் ஹ்ருத³க்ஷகம் ॥ ௧௧ ॥

பா³ஹுமூலே து வலயம் தா³ம கக்ஷாவஸானகம் ।
பா³ஹுமாலாவலம்ப³ம் ஸ்யாத்கேயூரகடகான்விதம் ॥ ௧௨ ॥

பா³ஹோராயாமமத்⁴யே து கேயூரகடகான்விதம் ।
தது³ர்த்⁴வே பத்ரிகம் கார்யம் கர்ணே மகரபூ⁴ஷணம் ॥ ௧௩ ॥

கடிஸூத்ரம் து ஸம்யுக்தம் கடிதே³ஶே ஸமந்விதம் ।

11. முன்பு கூறிய, தொங்கும் புரஸூத்ரமானது; அரைநாண் கயிறுவரையுள்ளதெனக் கருதப்பட்டிருக்கிறது. ஹாரம் என்பது மார்புபுறத்தேயுள்ளது. உபக்ரீவம் என்பது கழுத்தையொட்டி கழுத்தைச்சுற்றித் திகழ்வது.

12. பாஹுவின் மூலத்தில் (தோளில்) வலயம் என்னும் அணியும்; அதனின்றும் கக்ஷம்வரைத் தொங்குகின்ற தாம (மாலை) என்ற அணியும்; கேயூரகடகத்தோடு இணைந்த பாஹுமாலாவலம்பம் அல்லது ஸ்கந்தமாலாவலம்பம் என்ற (பாஹுமூலத்திலிருந்து தொங்கும் மாலையும்) அணியும்;

13. பாஹுவின் (முழங்கையிலிருந்து தோள்வரையுள்ள பாகத்தின்) உயரத்தினுடைய மத்தியில் கேயூர கடகத்தின் இணைப்பு; அதற்குமேலே பூரிமத்தைச் (தழைகுழைபோன்றதைச்) செய்யவேண்டும். காதில் மீன்வடிவம் கொண்ட காதணியைச் செய்யவேண்டும்.

14. இடுப்புப் பிரதேசத்தில் பட்டிகையுடன் கூடிய (இடுப்பைச் சூழ்ந்த பட்டையுடன் கூடிய) அரைநாண் கயிறு இணைக்கப்படவேண்டும். அந்த (இடுப்பைச் சுற்றிய) பட்டிகையின் முடிவு ஆண்குறியின் முடிவை முடி

மேட்ராணாம் பட்டிகாணாம் ஸ்யாத்தந்மத்யே ஸிம்ஹவக்த்ரவத் ॥ ௧௪ ॥

அதவா ரத்நபந்தம் ஸ்யாத் ஸ்தாநாக்ரே விநிர்கமே ।
நீவ்யம் ச பஞ்ச பார்ஶ்வே து மத்யே சலம் ப்ரலம்பிதம் ॥ ௧௫ ॥

பீதாம்பரம் து குல்போர்த்வம் ச நளகாந்தப்ரலம்பநம் ।
அதவா ஜாநுபர்யந்தம் சர்ம சீரம் ச வாஸஸம் ॥ ௧௬ ॥

ஜங்காதிவலயோபேதம் பாதஜாலாதிபூஷணம் ।

வாக வுடையதாகும். (அதாவது ஆண்குறியின் முடிவு என்பது உடலில் சம்பந்தித்த இடம் என்றும், ஆண்குறியின் நுனி என்பது சம்பந்திக்காத அக்ரபாகம் என்றும், தெரிந்துகொள்ள வேண்டும்.) அந்தப் பட்டிகையின் நடுவில் சிங்கத்தின் முகம்போன்ற (தொங்கும்) முகப்பைச் செய்யவேண்டும்.

15. அல்லது; ஆண்குறியின் நுனிமுதல், அது வெளியே தோன்றும் இடம் வரை ரத்னபந்தத்தை (ரத்னங்களாலிழைத்த வட்டவடிவமான முகப்பைச்) செய்ய வேண்டும். நீவ்யம் என்ற தாமாவை (இடையில் அணியத்தக்க மாலையை) பக்கத்தில் ஐந்து நிறுவ வேண்டும். அதன் நடுவில் சலம் (அசையும் குஞ்சலம்) இருக்கவேண்டும்.

16. கணுக்காலுக்கு மேலேயுள்ள நளகம் வரை (தண்டு வரை) தொங்குகின்ற பீதாம்பரம் என்னும் பொன் பட்டாடையையோ அல்லது முழங்கால் வரையுள்ள தோலாடை மரவுரியாடை இவைகளையோ உடுத்த வேண்டும்.

17. முழங்காலுக்குக் கீழேயுள்ள கண்டங்கால் முதல் பாகம் வலயத்துடன் கூடியிருக்கவேண்டும். பாதசரம்

விஹாய தர்ஜநீம் ஸர்வாஸ்வங்குலீஷ்வங்குலீயகம் ॥ ௧௭ ॥
[விஹாய மத்யமாம் ஸர்வாஸ்வங்குலீஷ்வங்குலீயகம்]

ஊர்த்வகாயே ச ஹாராதி பார்ஶ்வயோர்வர்தலம்பநம் ।
[ஊர்த்வகாயே ச ஹாராதி பார்ஶ்வயோர்பாஹுலம்பநம்]
மத்யே தாம(ம)ச லம்பம் ஸ்யாச்சந்நவீரமிதி ஸ்ம்ருதம் ॥ ௧௮ ॥

இத்யுக்தம் பூஷணம் தேவைஶ்சக்ரவர்தீதி ஸ்ம்ருதம் ।
சக்ரவர்திவத் (யதா) விஷ்ணோர்வநமாலாவிபூஷிதம் ॥ ௧௯ ॥

அதிராஜே நரேந்த்ராக்யே விநா ஸூத்ராவஶிஷ்டகம் ।
[அதிராஜநரேந்த்ராக்யம் விநா ஸூத்ரம் வஶிஷ்டகம்]

முதலிய அணியும் பிரகாசிக்கவேண்டும். நடுவிரல் தவிர மற்ற விரல்களில் மோதிரங்கள் இருக்கவேண்டும்.

18. இவ்வாறு; ஊர்த்வகாயத்தில் (மேல் உடலில்) உள்ள ஹாராதியும் (ஹார, உபக்ரீவ, கேயூரகடக, பூரிமங்களும்) இரு பக்கங்களிலே தொங்கும் மாலைகளான பாஹுலம்பனமும், நடுவில் தொங்கும் லம்பனமும், (புரஸூத்ரமெனும் லம்பனதாமாவும்) சன்னவீரம் என்று கருதப்பட்டது.

19. இவ்வாறு தேவர்களுடன்கூட சக்ரவர்த்திக்கும் பூஷணம் கூறப்பட்டது. இவ்விதமான அணிகள் சக்ரவர்த்திக்கு எவ்வாறோ: அவ்வாறே மகாவிஷ்ணுவிற்கும் கருதப்பட்டிருக்கிறது. ஆனால்; விஷ்ணுவிற்கு வனமாலை யென்ற அணியானது அதிகமாகும். (நுனிக்கால்வரை, கழுத்திலிருந்து தொங்கும் மாலை; வனமாலையெனப்படும்).

20. அதிராஜன், நரேந்திரன் என்ற இவ்விரண்டு அரசர்கள் பொருட்டு; ஸ்தனங்களை மறைக்கின்ற ஸ்தன சூத்ரம் ஒன்றைத்தவிர மற்ற அணிகள் ஏற்றனவாம்.

அன்யேஷாம் ஸர்வதேவானாம் கேயூரகடகம் விநா ॥ ௨௰ ॥

ஸர்வேஷாமபி தேவாநாம் குல்ஃபோபரி தேஶகே ।
புஜங்ககடகோபேதம் பாதநூபுரஸம்யுதம் ॥ ௨௧ ॥

கர்ணே(ர்ணௌ) விஶேஷணம் கார்யம் மீநாகாரம் க்ருதகாஞ்சனம் ।
அந்யத்வா ஸ்வர்ணதாடங்கம் ஶேஷம் து பூர்வவத்பவேத் ॥ ௨௨ ॥

அங்கபூஷணமித்யுக்தம் பஹிர்பூஷணமுச்யதே ।
தீபதண்டம் வ்யஜனஞ்ச தர்பணஞ்சைவ லக்ஷணம் ॥ ௨௩ ॥
[தீபதண்டவ்யஜனகதர்பணானாஞ்ச லக்ஷணம்]

அதைத்தவிரவும்; மற்ற அரசர்களுக்கு கேயூரகடகம் என்ற அணியும் கிடையாதென்றறியவும்.

21 அரசர்களைத்தவிர; எல்லா தேவர்களுக்கும், கணுக்காலுக்கு மேலே; அதாவது நளகமென்னும் பிரதேசத்தில், புஜங்ககடகத்துடன் (பாம்புபோன்ற வடிவங் கொண்டவளையலுடன்)கூடிய, பாதநூபுரத்தின் (ஒலிக்கும் சதங்கை, ரத்தினங்கள் கொண்ட அணியின்) இணைப்பு; அதிகமாகக் கருதப்பட்டிருக்கிறது.

22. இதுபோலவே; காதில் மீன்வடிவங்கொண்ட குண்டலத்தையோ, அல்லது ஸ்வர்ணமயமானதோடு களையோ அணிவிக்கவேண்டும். எஞ்சிய அணிகள் முன் கூறியதுபோலாகும்.

23. இவ்வாறு அங்கபூஷணம் கூறப்பட்டது. இப் பொழுது பஹிர்பூஷணம் எனும் வெளிப்படையான அணி கள் கூறப்படுகின்றன. தீபதண்டம், விசிறி, கண்ணடி, இவைகளின் இலக்கணமும்;

𑌵𑌰𑍍𑌣𑌮𑌞𑍍𑌜𑍂𑌷𑌿𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌦𑍋𑌲𑌾𑌯𑌾 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌤𑌥𑌾 ।
𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌚 𑌤𑍁𑌲𑌾𑌭𑌾𑌰 𑌤𑍁𑌲𑌾𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௨௪ ॥

𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌪𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌕𑌰𑍍𑌣𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
[𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌵𑍇𑌲𑌾𑌯𑌾𑌂 𑌪𑌤𑍍𑌰𑌕𑌰𑍍𑌣𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍]
𑌗𑌨𑍍𑌧𑌨𑌾𑌭𑌿𑌬𑌿𑌡𑌾𑌲𑌸𑍍𑌯 𑌶𑍁𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌚 𑌪𑌞𑍍𑌜𑌰𑌮𑍍 ॥ ௨௫ ॥

𑌚𑌾𑌤𑌕𑌸𑍍𑌯 𑌚𑌕𑍋𑌰𑌸𑍍𑌯 𑌹𑌂𑌸𑌸𑍍𑌯 𑌚 𑌪𑌞𑍍𑌜𑌰𑌮𑍍 ।
𑌪𑌾𑌰𑌾𑌵𑌤𑌸𑍍𑌯 𑌨𑍀𑌡𑌂 𑌚 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠𑌸𑍍𑌯 𑌪𑌞𑍍𑌜𑌰𑌮𑍍 ॥ ௨௬ ॥

𑌤𑌿𑌤𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌯 𑌕𑍁𑌲𑌾𑌯𑌂 𑌚 𑌪𑌞𑍍𑌜𑌰𑍀𑌟𑌸𑍍𑌯 𑌪𑌞𑍍𑌜𑌰𑌮𑍍 ।
𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌸𑍍𑌯 𑌕𑍁𑌲𑌾𑌯𑌂 𑌚 𑌨𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑌞𑍍𑌜𑌰𑌮𑍍 ॥ ௨௭ ॥

𑌚𑌟𑌕𑌸𑍍𑌯 𑌚 𑌗𑍋𑌧𑌾𑌯𑌾𑌃 𑌪𑌞𑍍𑌜𑌰𑌂 𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌪𑌞𑍍𑌜𑌰𑌮𑍍 ।

24. அவ்வாறே; வர்ணமஞ்சூஷை (வர்ணப்பெட்டி) முதலிய பெட்டிகளுடையவும், ஊஞ்சலினுடையவும், அரசர்களுடைய தராசு, பாரம் சுமக்கும் தராசு இவைகளுடையவும் இலக்கணம் கூறப்படுகிறது.

25. வருடத்தின் ஆரம்பக் கடிதத்தின் பொருட்டு, பத்ரகர்ணத்தின் இலக்கணமும் கூறப்படுகின்றது. ஜவ்வாது புனுகுப்பூனையினுடையவும், கிளியினுடையவும் கூண்டின் இலக்கணம்,

26. நீர்விழுங்கிப் பறவை, நிலா விழுங்கிப் பறவை, அன்னப்பறவைகளுடைய கூண்டின் இலக்கணம், புருவின் பொந்தின் இலக்கணம், மயிலின் கூண்டின் இலக்கணம்,

27. தித்திரியின் கூட்டின் இலக்கணம், பரத்வாஜத்தின் கூண்டின் இலக்கணம். கோழியின் கூட்டின் இலக்கணம், கீரியின் கூண்டின் இலக்கணம்,

28. சிட்டுக்குருவி, உடும்பு இவைகளின் கூண்டின் இலக்கணம், புலிக்கூண்டின் இலக்கணம் இவையனைத்

ஸவிஸ்தரம் லக்ஷணம் வக்ஷ்யே விதி4ம் ஸம்க்ஷேபத: க்ரமாத் ||௨அ

ஆத்3யம் அங்கு3லமாத்ரஸ்ய ஸகாத்3யம் அங்கு3லம் ப4வேத் |
அஷ்டஸப்தாம் அங்கு3லோத்தரம் விம்ஶத்யம் அங்கு3லகாந்தகம் || ௨௯ ||

[ஆத்3யம் அங்கு3லமாத்ரஸ்ய ஷோட3ஶாம் அங்கு3லகம் ப4வேத் |
அஷ்டாதி4காம் அங்கு3லோத்தரவிம்ஶத்யம் அங்கு3லகாந்தகம் ॥]

நவதா4 தீ3பத3ண்டா3நாம் த்3வித்3வ்யங்கு3லவிவர்த்3த4நாத் |
அத2வா ஹஸ்தமாநேந தீ3பத3ண்டோ3த3யம் க்ரமாத் || ௩௰ ||

ஏகஹஸ்தம் ஸமாரப்4ய த்ரி த்ர்யங்கு3லவிவர்த்3த4நாத் |

திற்கும் இலக்கணத்தையும் முறையையும், சுருக்கமாகவும் வரிசையாகவும் கூறுகிறேன்.

29. இப்பொழுது, தீபதண்டத்தின் உயரம் கூறப்படுகிறது. பன்னிரண்டு அங்குலம் முதல், பதினாறு அங்குலம் கூடுதலாக, ஏற்படவேண்டும். இதன் முடிவு இருபத்தெட்டு அங்குலங்களாம்.

30. இவ்வாறான தீபதண்டத்தின் உயரம், ஒன்பது வகையாம். இந்த ஒன்பது வகைகளும், இரண்டிரண்டு அங்குலங்களின் கூடுதலால் ஏற்படுவதாகும். அதாவது பன்னிரண்டங்குலம் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூடுதலால், இருபத்தெட்டு அங்குலங்கள் வரையொன்பது பேதம் கொண்டது தீபதண்டம் எனக்கருத்து. அல்லது கையின் அளவால், முறையே தீபதண்டத்தின் உயரம் கூறப்படலாம்.

31. ஒருகை தொடங்கி (இருபத்தினான்கு அங்குலம் தொடங்கி) மும்மூன்று அங்குலங்களின் கூடுதலால்; இரண்டு கைகள் முடிவுகொண்ட தீபதண்டத்தின் உயரம், அதுபோலவே ஒன்பது விதமாம். அதாவது மும்மூன்று

ஶிகாராந்தம் தஸ்யோத்ஸேதம் ததா ஹஸ்தேந வர்த்தயேத் || ௩௧ ||

நவஹஸ்தாவஸாநம் ஸ்யாத் தண்டஸ்யாதி த்ரயம் த்ரயம் |
கேசித் த்வாரதோ தீபதண்டம் ஹர்ம்யவஶோதயம் || ௩௨ ||
[கேசித்தா வாரதோ தீபதண்டம் ஹர்ம்யவஶோதயம்]

அங்குலங்களாகக் கூட்டுதலால், ஒரு கரத்திற்கு (இருபத்தினன்கு அங்குலங்களுக்கு) எட்டுவிதமாகின்றது. இந்த எட்டுவிதமும் ஒரு கரத்திலிருந்து (இருபத்தினன்கு அங்குலங்களிலிருந்து தொடங்குவதனல், அதனையும் சேர்த்து தீபதண்டத்தின் உயரம் ஒன்பது விதமாகிறது. இவ்வாறே கரத்தினலும் கூட்டி விருத்தி செய்யலாம்.

32. ஒருகரம் தொடங்கி, ஒன்பதுகரம்வரை, ஒன்பது விதமாகின்றது இங்கு கூறப்பட்ட மூன்றில்; அதம, மத்யம, உத்தமமெனும் மூன்றுபேதங்கள் அடங்கியிருக்கின்றன. அதாவது; இதன் பொருளை இரண்டுவிதம் கொள்ளவேண்டும். இந்த மூன்றும் அதம, மத்யம, உத்தமமெனும் மூன்றுவிதமுள்ளது எனவும், அதம மத்யம உத்தமமெனும் மூன்றுவிதமுள்ள மூன்றைக் கொண்டது எனவும், ஆகவே, இந்த தீபதண்ட மானவிதிகள் மூன்றுமே; முறையே அதம, மத்யம, உத்தமங்களெனவும் இந்த விதிகளில் ஒவ்வொன்றிலும் கூறப்பட்ட ஒன்பது பிரிவுகளிலும் மும்மூன்று பிரிவுகளும் முறையே அதம மத்யம உத்தமங்களெனவும் பொருள் கிடைக்கிறது. இவைகளின் உட்பிரிவுகளாகிய; அதமாதம, அதமமத்யம, அதமோத்தமமெனும் வகைகளைத் தானகவே தெரிந்துகொள்ளவேண்டுமெனக் கருத்து. சிலர் கர்பக்ருஹம் முதலிய ஹர்ம்யங்களின் முன்புள்ள தீபங்களின் (சரவிளக்குகளின்) தண்டத்தை ஹர்ம்யத்திற்கு வசப்பட்டதான உயரமுள்ளதாகக் கருதுகின்றனர். இந்த தீபதண்டத்தின் உயரமும் ஒன்பது விதமாகும்.

𑌮𑍂𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌨𑍍𑌤𑌂 𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌫𑌲𑌿𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ॥ ௩௩ ॥

𑌸𑍍𑌤𑍂𑌪𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌾𑌵𑌸𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑌕𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௩௪ ॥
[𑌦𑍍𑌵𑌵𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍]

𑌅𑌧𑍍𑌯𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾 𑌵𑌾 𑌷𑌟𑍍𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।

33. ஹர்ம்யத்தின் அடித்தலத்தை முடிவாகக்கொண்டது. வேதிகையை முடிவாகக் கொண்டது. கழுத்தை முடிவாகக் கொண்டது. தண்டகத்தை முடிவாகக்கொண்டது. மூக்கை முடிவாகக் கொண்டது. பலிகையை முடிவாகக் கொண்டது. தாமரையை முடிவாகக் கொண்டது. அதன் குடத்தை முடிவாகக் கொண்டது.

34. ஸ்தூபிகையின் முடிவை (நுனியை) முடிவாகக் கொண்டது என ஒன்பது விதமாகும். இதில் மும்மூன்றும் முறையே அதம, மத்யம, உத்தமமென மூன்று விதமாகும். இவ்வாறு தீபதண்டத்தின் உயரத்தைக் கூறியது போலவே; இரண்டு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனாலோ அல்லது;

35. ஒன்றரை அங்குலம் கூட்டுவதனாலோ ஏற்படும் ஆறு அல்லது ஐந்து அங்குலங்கள் வரையுள்ளதாகும் தீபதண்டத்தின் அகலம். அதாவது இரண்டு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்களைக் கூட்டுவதனால், மூன்றும் பர்வாவில் ஆறு அங்குலங்களாகும். இரண்டு அங்குலங்கள் தொடங்கி, ஒன்றரை ஒன்றரையாகக் கூட்டுவதனால், மூன்றும் பர்வாவில் ஐந்து அங்குலங்களாகும். ஆகவே தீபதண்டத்தின் அகலம்; இரண்டு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டியோ; ஒன்றரை ஒன்றரை அங்குலம் கூட்டியோ

மாத்ராங்குலேந தேநோக்தம் தீபதண்டவிஶாலகம் ॥ ௩௫ ॥
[மாத்ராங்குலேநைவோக்தம் து தீபதண்டவிஶாலகம்]

ஏவம் து தாருஜை: கார்யம் லோஹஜே து விஶேஷத: ।
ஏகாங்குலம் ஸமாரப்ய அர்த்தார்த்தாங்குலவர்த்தநாத் ॥ ௩௬ ॥

பஞ்சாங்குலாவஸாநம் ஸ்யாத் நவஸாஹித்ரயம் த்ரயம் ।
ஃபலகாதண்டகமிதி ப்ரோக்தம் விஸ்தாரம் தண்டமூலகே ॥ ௩௭ ॥
[ஃபலகாதண்டகமிதி ப்ரோக்தம் ஸ்யாத்தண்டமூலகே]

த்ர்யர்த்தசதுஷ்பஞ்சஷட்ஸப்தஸாம்ஶபாகவிபாஜிதே ।
[த்ர்யர்த்தசதுஷ்பஞ்சஷட்ஸப்தார்த்தபாகவிபாஜிதே]

மூன்று பர்வாக்களை முடிவாகக் கொண்டதாகக் கருதப்படுகிறது. மேற்கூறியுள்ள தீபதண்டத்தின் அகலமானது, மாத்ராங்குலத்தினலேயே (பொது அளவினலேயே) கூறப்பட்டிருக்கிறது.

36. இவ்வாறு, தீபதண்டத்தை மரங்களினலோ, லோஹங்களினலோ செய்யலாம். ஆனல் லோஹங்களினல் தீபதண்டத்தைச் செய்யும் விஷயத்தில்; ஒரு அங்குலம் தொடங்கி, அரை அரை அங்குலம் கூட்டுவதனல்;

37. ஐந்து அங்குலங்கள் வரை ஒன்பது விதங்கள் ஏற்படுகின்றன. இவை முறையே மும்மூன்றும், அதம மத்யம உத்தமமெனக் கருதப்படும். இவ்வாருன தண்டத்தின் அடியில், பலகையினலாகிய தண்டம் கூறப்பட்டிருக்கிறது.

38. இந்த தீபதண்டத்தின் அடியிலுள்ளப் பலகை தண்டமானது; அரைப் பங்கு கூட்டிய மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழுகளால் பங்கிடப்பட்டு, நிற்பின்; தீப தண்டத்தின் ஒன்பது பிரிவுகளிலும், அந்தவந்தப் பிரிவின்

𑌤𑌤𑍍𑌤𑌲𑍇 𑌫𑌲𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌂𑌶𑍇(𑌶𑌂)𑌨𑌾𑌧 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥ ௩௮ ॥

𑌶𑍁𑌭𑍍𑌰𑌂 𑌪𑌾𑌣𑍍𑌯𑌗𑍍𑌰𑌵𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌮𑍂𑌲𑍇 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌚 𑌫𑌲𑌕𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌤𑌾𑌟𑌿𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ॥ ௩௯ ॥

𑌅𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌕𑌵𑌾𑌰𑌿 𑌸𑍍𑌯𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌚 𑌕𑍁𑌡𑍍𑌮𑌲𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌦𑌣𑍍𑌡𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑌾𑌨𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌮𑍇𑌵 𑌵𑌾 ॥ ௪௦ ॥

தீபதண்டம் அடியில் பலகையின் ஒரு பங்கினுல் அற்றதாயும், மேலே ஒரு பங்கினுல் எஞ்சியதாகவும் இருக்கும். அதாவது—ஒரு அங்குலம் தொடங்கி அரை அரை அங்குலம் கூட்டி, ஐந்து அங்குலங்கள் வரை நிறுவப்பட்ட தீபதண்டங்களின் ஒன்பது வகைக்கும்; கீழே அடிப்புறத்திலமைக்கப்பட்டப் பலகை தண்டமானது; தீபதண்டத்திற்கு மேலே ஒரு அங்குலமும் கீழே ஒரு அங்குலமும், ஆக இரண்டங்குலங்கள் எஞ்சிக் கிடக்கும்படி அமைக்கப் படவேண்டுமென்பதாம்.

39. இவ்வாருகிய தீபதண்டமானது; அழகியதாகவும், கையின் நுனிபோலவும் (குவித்த விரல்களையுடைய கையின் நுனிபோலவும்) இருக்கவேண்டும். அடிப்புறத்தில் தாமரைபோன்ற ஆசனத்துடன் கூடியிருக்க வேண்டும். மேலே பலகாந்தமானது (எண்ணைவிட்டு ஏற்றும் அகல் பலகை; அதன் முடிவானது) தாடிகை முதலியவற்ருல் (சிகரம் முதலியவற்ருல்) அலங்கரிக்கப் பட்டிருக்கவேண்டும்.

40. அல்லது (தண்டு கோர்க்கப்பட்டிருக்கும்) அங்க்ரிகவாரி என்பது இருக்கவேண்டும், அது, மேலே மொட்டுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

தீபதண்டத்தின் அடியிலுள்ளத் தாமரையின் பரப்பளவானது; தண்டத்தின் பரப்பளவினுல் இரண்டு அல்லது மூன்று,

𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑍋𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌷𑌟𑍍𑌕𑍋𑌣𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
[𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑍋𑌣𑌂 𑌪𑌞𑍍𑌚𑌷𑌡𑍍𑌵𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍇𑌵 𑌵𑌾]
𑌫𑌲𑌕𑌾 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌦𑌣𑍍𑌡𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌥𑌵𑌾 𑌪𑌦𑍍𑌮𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍 ॥ ௪௧ ॥

𑌦𑌣𑍍𑌡𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌯𑍁𑌗𑍍𑌮𑌾 𑌅𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌕𑌵𑌾𑌰𑌿𑌕𑌾 ।
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌤𑌥𑌾𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 (𑌶𑍍𑌰𑌂) 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌚𑌲𑌦𑌣𑍍𑌡𑌕𑌮𑍍 ॥ ௪௨ ॥

𑌸𑍍𑌥𑌿𑌰𑌦𑌣𑍍𑌡𑌵𑌿𑌶𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌦𑍍𑌵𑍌 𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௪௩ ॥

41. அல்லது நான்கு அல்லது ஐந்து ஆறு என்றிருக்கவேண்டும். தீபதண்டத்தின் மேலேயுள்ள பலகை (எண்ணை ஆதாரம்) மூன்று தண்டவளவு அகன்றிருக்கவேண்டும். அல்லது தாமரைக்குக் கூறியவாறு இருக்கலாம்.

42. அவை அனைத்தும் (முன்கூறிய பத்மம், பலகை, தாடிகாதி மொட்டு இவைகள்) தண்டத்தின் மத்தியிலே. அங்க்ரிகவாரிகா (தண்டு கோர்க்கப்பட்ட முளை) இரண்டு. இந்த இரட்டையான அங்க்ரிகவாரிகையெனும் முளைகளும், தண்டத்தின் மத்தியிலே யென்றறியவும். இவ்வாருகிய தீபதண்டமானது; நான்கு முனையுள்ளதாகவோ, எட்டு முனையுள்ளதாகவோ, உருண்டையாகவோ இருக்கலாம். இது சலதண்டலம் எனப்படும். (நாற்புறமும் சுழலும்படியான தண்டம் ; சலதண்டம்).

43. தீபதண்டங்களில் ஸ்திரதண்டத்தின் பரப்பளவுகள் இரண்டு. இந்த பரப்பளவை மாநாங்குலத்தினுல் அளக்கவேண்டும். ஸ்திரதண்டத்தின் பரப்பளவுகளின் இரண்டில் ஒன்று; மூன்று அங்குலத்தில் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டி

ஶாகொ நஷிம்ஶத்யம் ஶூழ்யா விம்ஶத்யம் ஶூஷகாஞகழ |
ஶாவம் நவவிடிம் வ்யாக்தம் ஸ்திர தண்டவிஸாயுகழ ॥ ௪௪ ॥

ஜொஹஜெஜஶொஶா ஜெவஶாவி ஶெஶெவஶாய வூகஷு யெகூ ।
வாஶொக்தஶண்தாம்ஶெ தா த்ரி தாஷ்ணுஷாம்ஶகெ ॥ ௪௫ ॥

ஶாகெகம் வாயிகம் யாக்தம் தண்டஸ்ய ஷ நஶாநகழ |
ஶெஷெ வ வெஷிகாம் காயஶாத்வெ௭வவீ௦ஜெவ வா ॥ ௪௬ ॥

ஷழுகாதிஹஷணம் வாவி ஜஜாஶம்ஶஶயாவி வா |

44. பத்தொன்பது அங்குலங்கள் வரை கணக்கிடப் படுவது. மற்ருென்று; நான்கு அங்குலத்தில் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டி, இருபது அங்குலங் கள் வரை கணக்கிடப்படுவது. இவ்வாறு ஸ்திரதண்டத் தின் அகலம் ஒவ்வொரு வகையிலும், ஒன்பது விதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

45. இந்த ஸ்திரதண்டத்தை லோஹங்களிஞலோ, மரங்களிஞலோ, கருங்கல்லிஞலோ செய்யலாம். முன் கூறப்பட்டதான தீபதண்டவுயரத்தில் (இருபத்தி ஒன்ப தாவது சுலோகத்தில் கூறப்பட்ட வுயரத்தில்) மூன்று, நான்கு, ஐந்து, ஆறு அம்சங்களில் ;

46. தண்டத்தின் கன அளவானது, ஒவ்வொரு அங்குலம் அதிகமாக இருப்பது பொருத்தமானது. தீப தண்டத்தின் அடியில் மேடையைச் செய்யவேண்டும். அல்லது அடியிலுள்ள தாமரைக்கு உபபீடத்தைச் செய்ய வேண்டும்.

47. தண்டத்திற்குமேலே பலகை முதலிய அணி யையோ அல்லது, நேராகிய தண்டத்தையோ செய்யலாம். அடியில் தண்டமானது நான்கு முனைகளுடையதாகவோ,

अग्रे च वर्तुलाश्रं स्यादष्टाश्रं वा सुवृत्तकम् ॥ ௪௭ ॥

ऊर्ध्वे पूर्ववदग्रे चामूलाग्रं क्षयं क्रमात् ।
[ऊर्ध्वे पूर्ववदग्रं स्यादामूलाग्रं क्षयः क्रमात्]
युक्त्यावयवयुक्तवन्माने कार्यमूर्ध्वे तु दण्डकम् ॥ ௪௮ ॥

[मानं व्यजनदण्डस्य लक्षणं वक्ष्यतेऽधुना]
एकाङ्गुलघनेनैव षट्सप्ताङ्गुलमारभेत् ॥ ௪௯ ॥

आ दशैकादशाङ्गं स्याद्द्वादशाङ्गुलायतं भवेत् ।
एवं वाथ द्व्यङ्गुलघन्यं यथा संपरिकीर्तितम् ॥ ௫௰ ॥

उक्तं मूलाग्रयोर्मध्ये किञ्चित्कृशमितम् ।

எட்டு முனைகளுடையதாகவோ, உருண்டை வடிவமாகவோ இருக்கலாம்.

48. அக்ரபாகம் (நுனி) மேலே, முன் கூறியதுபோல இருக்கவேண்டும். அடிமுதல் நுனிவரை முறையே குறைந்திருக்கவேண்டும். மேல்பாகத்தின் அளவில் முன் கூறியதுபோல, யுக்தியினால் தண்டத்தைச் செய்யவேண்டும்.

49. விசிறியின் தண்டத்தினுடைய அளவும், இலக்கணமும் இப்பொழுது கூறப்படுகின்றது. இந்த வ்யஜன தண்டமானது, ஒரு அங்குல கனமானத்தினால், ஆறு ஏழு அங்குலங்கள் தொடங்கி;

50. பதினொன்று பன்னிரண்டு அங்குலங்கள் வரை நீளம் கொண்டதாயிருக்கவேண்டும். இவ்வாறாகிலும், அல்லது; இரண்டு அங்குலகனமானத்தினால்; முன் கூறப்பட்டதுபோல விருக்கலாம்.

51. இவ்வாறு வ்யஜனதண்டத்தின் அடியும் நுனியும் கூறப்பட்டது. நடுவிலோ, சிறிது மெலிந்து இருக்கவேண்

[illegible] ॥ ௫௧ ॥

[illegible] ।
[illegible] ॥ ௫௨ ॥

[illegible] ।
[illegible] ॥ ௫௩ ॥

[illegible] ।
[illegible] ॥ ௫௪ ॥

டும். இந்த தண்டமானது உருண்டை வடிவமாகவும், நுனிபாகத்தில் ஹரிதத்துடன் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

52. தண்டத்தின் அடியிலோ மொட்டின் வடிவம் இருக்கவேண்டும். அதன்கீழ் சிறிதளவே பத்மாஸனம் இருக்கவேண்டும். இந்த தண்டத்தின்மேலே பிரமதண்டம் (சுழலும்தண்டம்) இருக்கவேண்டும். இந்தப் பிரம தண்டத்தின் நீளம் மூலதண்டத்தின் (அடியிலுள்ள தண்டத்தின்) நீளம் போன்றதாகும்.

53. இந்தப் பிரமதண்டம் அகலத்தில் (கனத்தில்) மூன்றிலொரு பங்கு, நான்கிலொரு பங்குகொண்டதாகும். இதனுடைய நுனியில் ஹரிதையும் தாமரையும் இருக்க வேண்டும். அந்தத் தாமரை, சிறிதளவே மொட்டுடன் கூடியிருக்கவேண்டும்.

54. இவ்வாருகிய வ்யஜனதண்டமானது; மரத்தினுலாகிய தாகவோ, உலோஹத்தினுலாகியதாகவோ இருக்கலாம். இந்த, தண்டத்தில்; செக்கிலியனுல் பண்படுத்தப் பட்டந்தோலே இணைக்கவேண்டும். இதுவே வ்யஜனம்,

𑌵𑍍𑌯𑌜𑌨𑌸𑍍𑌯 𑌬𑌹𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑍂𑌪𑌾𑌦𑍍𑌯𑍈𑌰𑌲𑌂𑌕𑍃𑌤𑌮𑍍 ।
𑌵𑌰𑍍𑌣𑍈𑌰𑍍𑌲𑍋𑌹𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌜𑍈𑌰𑍍𑌲𑌿𑌖𑍇𑌚𑍍𑌛𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑍁𑌧𑍀𑌃 ॥ ௫௫ ॥

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌵𑍍𑌯𑌜𑌨𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌪𑌞𑍍𑌚𑌷𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௫௬ ॥

𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑍇𑌷𑍁 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌏𑌵𑌂 𑌨𑌵𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌦𑌰𑍍𑌪𑌣𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ ௫௭ ॥

𑌯𑌵𑌾𑌦𑍇𑌕𑍈𑌕𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌯𑌵𑌾𑌦𑍇𑌨 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌯𑌵𑌾𑌨𑌾𑌂 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 𑌬𑌹𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௫௮ ॥

55. அந்த விசிறியினுடைய வெளிப்புறத்தில் (இரு பக்கங்களிலும்) லக்ஷ்மியின் வடிவம் முதலியவற்றால் அலங்காரத்தைச் செய்யவேண்டும். அறிஞன் இவ்விதமான சித்ரவேலைகளைச் சாஸ்திரத்தில் கூறியபடி, தங்கம் வெள்ளி முதலிய லோஹத்திரவியங்களினால் செய்த வர்ணங்களினால் எழுதவேண்டும்.

56. இவ்வாறு விசிறி கூறப்பட்டது. இப்பொழுது கண்ணாடி, கூறப்படுகின்றது. இந்தக் கண்ணாடியின் பரப்பளவானது; ஐந்து ஆறு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனால்;

57. இருபத்தொன்று அங்குலங்கள் வரையும் அல்லது இருபத்திரண்டு அங்குலங்கள் வரையும் முடிவுகொண்டதாக, ஒவ்வொரு வகையிலும் ஒன்பது விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

58. கண்ணாடியின் கனமானது; ஒருயவையின் பரப்பளவு தொடங்க, ஒவ்வொருயவையின் பரப்பளவு கூட்டுவதனால், ஒன்பதுயவைகளின் பரப்பளவு வரை இருக்கலாம்.

தர்பணம் (தத்) ஸமவ்ருத்தம் மத்யோந்நதம் கிஞ்சிதிஷ்யதே ।
[தர்பணம் தத் ஸமவ்ருத்தம் மத்யோத்ஸேதஃ கிஞ்சிதிஷ்யதே]
நிர்மலம் தர்பணம் மத்யே பாஹ்யே ரேகாபிராவ்ருதம் ॥ ௫௯ ॥

ப்ருஷ்டே ச லக்ஷ்மீரூபாத்யைர்லதாத்யைஶ்ச விபூஷிதம் ।
[ப்ருஷ்டே லக்ஷ்மீரூபாத்யம் வல்ல்யாதீம்ஶ்சாபி விபூஷிதம்]
தர்பணஸ்ய த்ரிபாகைகம் தண்டே கீலாயதம் ததா ॥ ௬௰ ॥

ஆயாமோத்ஸேதஸம் தஸ்ய பாதம் பத்மாந்தமேவ ஹி ॥
ஶேஷம் கீலாயதம் கர்ணாத் த்ரிபாகைகவிஸ்த்ருதம் ॥ ௬௧ ॥

59. கண்ணுடியானது, நன்கு வட்டவடிவமாக இருக்கவேண்டும். இருபக்கங்களிலிருந்து நடுவே சிறிது மேடிட்டதாகவும், தூய்மைகொண்டதாகவும். இருக்க வேண்டும். வெளிப்புறத்தில் (முகம்பார்க்கும் மத்யபாகம் தவிர, நாற்புறமும்) வண்ணக்கோடுகளால் சூழ்ந்து அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும்,

60. கண்ணுடியின் பின்புறத்தில் ; லக்ஷ்மியின் வடிவம் முதலியவற்றையும், செடிகொடி முதலியவற்றையும், அமைக்கவேண்டும், கண்ணுடியின் மூன்றிலொரு பாகம் ; அடியில், பிடியில் நீண்டதாயிருக்கும்படி, அவ்வாறு அமைக்கப்பெறவேண்டும்,

61. அந்தக் கீலாயதமானது (பிடியினுல் வியாபிக்கப்பட்டக் கண்ணுடியின் நீளமானது) கண்ணுடியின் உயரத்திற்கு (நீளத்திற்கு)ச் சமமானது. அதனுடைய பாதிபாகம் தாமரைப்பூவின் முடிவு வரையுள்ளது. ஆகவே ; எஞ்சியதான, கண்ணுடியின் மூன்றிலொருபாகப் பரப்பளவுள்ளது கீலாயதம் ; எனச் செய்யவேண்டும்.

𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌕𑍀𑌲𑌕𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑌮𑍍 ।
𑌯𑌥𑌾𑌬𑌲𑌂 𑌯𑌥𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌿 𑌦𑌰𑍍𑌪𑌣𑌂 𑌦𑌣𑍍𑌡𑌵𑌤𑍍 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௬௨ ॥

𑌦𑌰𑍍𑌪𑌣𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑍋𑌣𑍇 𑌤𑍁 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌕𑌾𑌂𑌸𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌦𑌾𑌰𑍁𑌜𑌂 𑌲𑍋𑌹𑌜𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌤𑌦𑍍𑌦𑌣𑍍𑌡𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌸𑍁𑌧𑍀𑌃 ॥ ௬௩ ॥

𑌦𑌰𑍍𑌪𑌣𑌸𑍍𑌯 𑌸𑌮𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
𑌅𑌰𑍍𑌧𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌾𑌧𑌿𑌕𑌮𑍇𑌵 𑌵𑌾 ॥ ௬௪ ।

𑌦𑌰𑍍𑌪𑌣𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌾𑌲𑍇 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑌂𑌶𑍈𑌕𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ।
𑌮𑍂𑌲𑍇 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑍇𑌨𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌚 𑌦𑌣𑍍𑌡𑌕𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥ ௬௫ ॥

𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।

62. அதனடியில், கீலகத்தின் (பிடியின்) அகலம்; பதினறில் ஒருபங்காகும். இவ்வாறு கண்ணடியை முறையுடன், பலத்திற்கேற்றவாறும், ஊகத்திற்கேற்றவாறும் பிடியுடன் கூடியதாகச் செய்யவேண்டும்.

63. கண்ணடிமுடிவின் கோணங்களில், வெண்கல வேலைசெய்யும் கன்னன்மார்களினல் லோஹத்தினலாகிய கோணதண்டங்களேயோ; அல்லது மரத்தினலாகிய கோணதண்டங்களேயோ; அறிஞன் செய்விக்கவேண்டும்.

64. கண்ணடியின் நீளமானது (உயரமானது) அகலத்திற்குச் சமமாகவோ; கால்பங்கு அதிகமாகவோ; பாதி அதிகமாகவோ; முக்கால் அதிகமாகவோ; சமபாகம் அதிகமாகவோ இருக்கலாம்.

65. கண்ணடியின் அகலத்தில்; நாலிலொருபாகம் அகலமானது; அடியில் பத்மாசனத்துடனும் மேலே கோணதண்டங்கள் முதலியவற்றுடனும் இணைந்திருக்கும்.

66. சிற்பிகளுள் அறிஞன்; இம்மாதிரியான கண்ணடியை, ஸர்வாலங்காரங்களுடனும் கூடியதாகச் செய்ய

மானம் து பதவ்ருத்யம் ஸ்யாத் வர்ணகாதிப்ரலக்ஷணம் ॥ ௬௬ ॥

த்ரிவேதாங்குலாரப்ய த்வித்வ்யங்குலவிவர்த்தநாத் ।
நவதத்வ்யங்குலாந்தம் வா விம்ஶாந்தாவஸாநகம் ॥ ௬௭ ॥

வர்ணமஞ்ஜூஷவிஸ்தாரம் கந்யஸாதி த்ரயம் த்ரயம் ।
பாதாதிகஸமார்த்தம் வா பாதோநத்விகுணாந்தகம் ॥ ௬௮ ॥

தத்விஸ்தாரஸமோத்ஸேதம் கார்யம் து உத்தரஸ்ருகம் ।

வேண்டும். இவ்வாறு கண்ணடி கூறப்பட்டது. இனி, வர்ணகாதிலக்ஷணம்,

67. இப்பொழுது வர்ணப்பேழை முதலிய மஞ்சூஷங்களின் (பேழைகளின்) இலக்கணத்தைக் கூறுகின்ருர். மூன்று அல்லது நான்கு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்களேக் கூட்டுவதனுல், பத்தொன்பது அங்குலங்கள் முடிவுவரையிலோ இருபது அங்குலங்கள் முடிவுவரையிலோ ஏற்படும் ஒன்பது விதமான அளவுகள் ; வர்ணமஞ்சூஷத்தின் பரப்பளவாம்.

68. இரண்டு விதங்களான, வர்ணமஞ்சூஷத்தின் பரப்பளவுகள் ஒன்பதும், முறையே மும்மூன்று, அதம, மத்யம, உத்தமமெனக் கருதப்படுகின்றது. இந்த வர்ண மஞ்சூஷத்தின் உயரமானது ; பரப்பளவைக் காட்டிலும் கால்பாகம் அதிகமாகவோ, அரைப்பாகம் அதிகமாகவோ முக்கால்பாகம் அதிகமாகவோ இருக்கலாம்.

69. அல்லது, அதன் அகலத்திற்குச் சமமான உயரம் கொண்டதாகவும் இருக்கலாம். (இங்கு 'பாதோநத்விகுணாந்தகம்' என்னும் பதத்திற்கு, முக்கால் பாகம் அதிகம் என்பது கருத்து. ஏனெனில், விஸ்தார சமமானவுயரம் ஒன்று, கால்பாகம் அதிகம் என்பது

वृत्तं वृत्तायतं वापि यथा कांस्यैस्तु लोहकैः ॥ ௬௯ ॥

दारुमयं मञ्जूषं वापि पादार्धाङ्गुलकं मानं (घनं) भवेत् ।
तदुत्सेधे चतुर्भागे चैकांशेन पिधानकम् ॥ ௭௰ ॥

एककोष्ठं द्विकोष्ठं वा त्रिकोष्ठं वाथ कल्पयेत् ।
यथाबलं यथायुक्ति तथा बन्धायसेन च ॥ ௭௧ ॥

तथैव तैलमञ्जूषोत्सेधे पादाधिकमेव वा ।
[तथार्धतैलमञ्जूषिकोत्सेधे पादं ह्यधिकमेव वा]

ஒன்றேகால், அரை அதிகம் என்பது ஒன்றரை, முக்கால் அதிகமானல் ஒன்றேமுக்கால், இதற்கே 'பாதோநத்விகுணம்' எனும் சொல் வழங்கப்படுகிறது.) இந்த வர்ணமஞ்சூஷத்தை; நான்கு முனைகள் கொண்டதாகவோ, வட்டமாகவோ, நீண்டவட்டமாகவோ வெண்கலம் முதலிய வுலோகங்களால் செய்யவேண்டும்.

70. வர்ணமஞ்சூஷமானது; மரத்தினல் செய்யப்படுமேயானல், அம்மரத்தின் கனம் கால் அல்லது அரை அங்குலம் இருக்கவேண்டும். அந்தப் பேழையின் உயரத்தை நான்கு பங்குகளாக்கிக்கொண்டு, ஒரு பங்கினல் மூடியை யமைக்கவேண்டும்.

71. எஞ்சிய மூன்று பாகங்களில்; ஒரு கோஷ்டத்தையோ, இரண்டு கோஷ்டங்களையோ, மூன்று கோஷ்டங்களையோ அமைக்கவேண்டும். (கோஷ்டம் என்பது அறை) பேழையின் பலத்திற்கேற்றவாறும், யுக்திக்கேற்றவாறும், இரும்புக்கட்டுடன் இணைக்கவேண்டும்.

72. வர்ணமஞ்சூஷத்திற்கு எவ்வாறோ; அவ்வாறே தைலமஞ்சூஷத்தினுடையவும் உயரமானது; ஸமமாகவோ, அல்லது கால்பங்கு அதிகமாகவோ, அரைப்பங்கு

ஸ்யாத³ர்தா⁴தி⁴கமேவம் வா பாதோ³நத்³விகு³ணாதி⁴கம் ॥ ௭௨ ॥
[ஸ்யாத³ர்தா⁴தி⁴கமேவம் வா பாதோ³நத்³விகு³ணாதி⁴கம்]

ஶேஷம் து பூர்வவத்குர்யாத்³வர்ணகோஶாகாரவிதா⁴னத꞉ ।
ஸர்வாப⁴ரணகோஶம் ச குர்யாதே³வம் து வித³꞉ ॥ ௭௩ ॥

ஏகஹஸ்தம் ஸமாரப்⁴ய த்ரி த்ர்யங்கு³லவிவர்த⁴னாத் ।
தத்³த்³விஹஸ்தாவஸானம் ஸ்யாத்³வஸ்த்ரகோஶவிஸ்த்ருதம் ॥ ௭௪ ॥

ஸங்க்²யா தத³ந்தேந மானயேந்மானவித³꞉ ।

அதிகமாகவோ, முக்கால்பங்கு அதிகமாகவோ இருக்க வேண்டும்.

73. எஞ்சியவற்றை, முன்போலவே, வர்ணப் பேழையின் வடிவத்தின் விதியின்படி செய்யவேண்டும் அறிஞனுள்ள ஒருவன், எல்லாவித அணிகளும் வைக்கும்படியான, ஆபரணப் பேழையையும் இவ்வாறே செய்ய வேண்டும்.

74. இப்பொழுது, ஆடைகள் வைக்கும் பேழை கூறப்படுகிறது, ஒரு கரம் தொடங்கி, மும்மூன்று அங்குலங்கள் கூட்டுவதனால், அவ்வாருன யிரண்டு கரங்கள் முடியும் வரையுள்ள அளவு; ஆடைப்பேழையின் அகலமாகும். (அதாவது:—அங்குலங்களால் அளக்கப்படுகின்ற யிரண்டு கரங்கள் முடியும்வரை யென்றபடியால்; மூன்று கரங்கள் அகலம் கொண்டது ஆபரணப் பேழையெனவும், ஒன்பது வகைத்தது அகலம் எனவும் கிடைக்கின்றது.)

75. அல்லது; அந்த எண்ணிக்கையுடையதை (கரத்தை) முடிவாகக்கொண்ட அளவினுலும், அளவறிஞன் அளக்கலாம். (அதாவது:—ஒரு கரம் தொடங்கி,

தத்³விஸ்தாரஸமோத்ஸேத⁴ம் பூர்வவச்சதுரஶ்ரகம் ॥ ௭௫ ॥

ஶேஷம் யுக்த்யா ப்ரகல்பீத வஸ்த்ரபேடகே ததா² யத: ।
தே³வாநாம் மாநுஷாணாம் ச டோ³லாயா லக்ஷணம் தத: ॥ ௭௬ ॥

த்ரிகம் ச ஸமாரப்⁴ய ஷட்ஷட³ங்கு³லவர்த⁴நாத் ।
ஏகவிம்ஶதிதோ⁴ தை³ர்க்⁴யம் தத்பாதோ³த்ஸேத⁴காங்க³கம் ॥ ௭௭ ॥

[த்ரிகரஞ்ச ஸமாரப்⁴ய ஷட்ஷட³ங்கு³லவர்த⁴நாத் ।
ஏகாத³ஶவித⁴ம் தை³ர்க்⁴யம் தத்பாதோ³த்ஸேதா⁴ங்கு³லாங்ககம் ॥]

பஞ்சஷாங்கு³லமாரப்⁴ய ஏகைகாங்கு³லவர்த⁴நாத் ।

ஒவ்வொரு கரம் கூட்டி, ஒன்பது கரம் முடியும்வரை, அகலத்தைக் கொள்ளலாமென்பது.) அந்தப் பேழை, அகலத்திற்குச் சமமான வுயரமுடையது. முன்னது போலவே நான்கு முனைகள் கொண்டதாகச் செய்யத் தக்கது.

76. இவ்வாருகிய, ஆடைப்பேழையில்; எஞ்சிய வற்றை யுக்தியினுல் செய்யவேண்டும். இப்போழ்து, தேவர்களுடையவும் மனிதர்களுடையவும் ஊஞ்சலின் இலக்கணம் எதுவோ; அது (கூறப்படுகின்றது.)

77. ஊஞ்சலின் நீளமானது; மூன்று கரங்கள் தொடங்கி, ஆறு அங்குலங்கள் வீதம் முறையே கூட்டு வதனுல் (ஐந்து கரங்கள் முடிவுரை) பதினேருவிதங்களு டையதாகின்றது. ஊஞ்சலின் காலினுடைய வுயரம்: மூன்று அங்குலம் தொடங்கி, அரை அரை அங்குலம் கூட்டுவதனுல், எட்டு அங்குலங்கள் முடிவுவரை, பதினேரு விதங்களுடையதாகின்றது.

78. ஊஞ்சலின் கால்களுடைய அகலமானது; ஐந்து அல்லது ஆறு அங்குலங்கள் தொடங்கி, ஒவ்வோரங் குலத்தைக் கூட்டுவதனுல், பதிமூன்று அல்லது

ஏகைகாங்குல நவமாத்ராணாம் பாதவிஸ்தாரமிஷ்யதே || ௭௮ ||

பாதாநாம் பூஷணம் ப்ரோக்தம் யதாகாரம் ப்ரகல்பயேத் |
உக்தவத் பித்திமாநேந ஏகபித்திர் த்விபித்திக꞉ || ௭௯ ||

தஸ்யோர்த்வே பாஶநம் கீலஸ்தாப்யே பாதே யதாபலம் |
பாஶேந ச வலயம் ஹ்யாயஸம் து யதாபலம் || ௮௦ ||

விதஸ்த்யேகம் ஸமாரப்ய ஏகைகேந விவர்த்தநாத் |
ஏகவிம்ஶாங்குலாந்தம் ஸ்யாத்தஶகம் விஸ்த்ருதம் பவேத் || ௮௧ ||

பதினான்கு அங்குலங்கள் முடியும்வரை ஒன்பது விதங்களுடையதாகின்றது.

79. ஊஞ்சலின் பாதங்களுக்குக் கூறப்பட்ட அலங்காரமனைத்தையும், அந்தப் பாதங்களின் வடிவத்திற்கு ஏற்ற முறையில் செய்யவேண்டும். பாதங்களின் அலங்காரமானது; பித்திமானத்தினால் (சுவர்களின் அளவினால்) ஒரு பித்தியுடன் கூடியதாகவும் இரு பித்திகளுடன் கூடியதாகவும் இருக்கலாம். (சுவர்களில் பாதத்தின் அலங்காரங்கள் எவ்வாறு கூறப்பட்டதோ; அஃதேபோலும் இங்கேயும் பாதங்களின் அலங்காரம் எனக் கருத்து).

80. அந்த ஊஞ்சல் பலகையின்மேலே, ஒவ்வொரு காலிலும், பலகையின் பலத்திற்கேற்றவாறு, முளை அடிக்க வேண்டும். அந்த முளையில் வலிவுக்கேற்றவாறு, இரும்பினாலாகிய வளையங்களிரண்டிரண்டு கோர்க்கவேண்டும்.

81. இந்த ஊஞ்சல் பலகையின் அகலமானது; ஒரு விதஸ்தி தொடங்கி (பன்னிரெண்டு அங்குலங்கள் = ஒரு சாண்) ஒவ்வொரு அங்குலம் கூட்டுவதனால், இருபத்தியொன்று அங்குலம் முடியும்வரை, பத்து விதங்களுடையதாகும்.

ததர்தாதிகமேவம் வா பாதோநத்விகுணாயதம் ।
த்விகுணாந்தம் ததாயாமம் கநம் யுக்த்யா ச யோஜயேத் ॥ ௮௨ ॥

பார்ஶ்வத: ப்ருஷ்டதோ மத்யே தர்பணம் பத்ரஸம்யுதம் ।
பார்ஶ்வயோர்வாரணம் குர்யாத்தஸ்யாதோऽக்ஷம் ஸஸம்யுதம் ॥

தஸ்யாத:பலகைர்யுக்தம் ஸர்வாலங்காரஸம்யுதம் ।
ஶ்ருங்கலே நிகலம் குர்யாதாயஸைர்யோஜயேத்ரஜ்ஜுநைவ வா ॥ ௮௪ ॥

ஷட்த்ரி (ஸார்த)த்வ்யேகைகஹஸ்தாந்தம் தோலாயா:
முகாந்தகம் ।

82. அல்லது; ஊஞ்சல் பலகையின் நீளத்தைப் பின் வருமாறும் கொள்ளலாம். அதாவது, முன் கூறியதானப் பலகையின் அகலத்தைக் காட்டிலும் காற்பங்கு அதிகமாக நீளம் இருக்கலாம்; அல்லது அரைப்பங்கு அதிகமாகவோ, முக்காற்பங்கு அதிகமாகவோ இருக்கலாம்; அல்லது இரண்டு பங்கு நீளத்தை முடிவாகக் கொண்டிருக்கலாம். பலகையின் கனத்தையோ யுக்தியினுல் இணைக்கவேண்டும்.

83. ஊஞ்சல் பலகையின்; முன்னும் பின்னும் இரு புறங்களிலேயும், நடுவேயும், மங்கள அலங்காரங்களுடன் கூடிய கண்ணுடியைச் செய்யவேண்டும். இரண்டு பார்ச்வங்களிலே (பக்கங்களிலே) யானையைச் செய்யவேண்டும். அதனடிபாகத்தில் (யானையினடியில்) பிடிப்புடன்கூடிய முளையைச் செய்யவேண்டும்.

84. அதனடியில் (அந்த முளையின் பிடிப்பிற்கு அடிப்புறத்தில்) பலகைகளுடன் கூடியதாக்கவேண்டும். இவ்வாறு, ஊஞ்சலை சர்வாலங்காரங்களுடன் கூடியதாகச் செய்யவேண்டும். இந்த ஊஞ்சலில் இரும்பினுலாகிய சங்கிலியையோ, கயிற்றையோ இணைக்கவேண்டும்.

85. ஊஞ்சலின் மேலே; ஒரு கரம் அகலத்தை முடிவாகக்கொண்டதும், ஊஞ்சற்பலகையின் நீளத்தை

[மாகோர்த்4வே வைகஹஸ்தாநாம் ஶோபா4யா: ஸமுகாநகம்]
தஸ்யோர்த்4வே வாஜநாநாம் ஸ்யாந்நிக3டா3யாஸீமிதம் ॥ ௮௫ ॥

நிக3டா3க்3ரே த்3வயாக்3ரம் ஸ்யாத3ங்குஶாவலயாந்விதம் ।
ப2லகாயா வலக்ஷணம் ப்ராந்தம் தத்3வலயலக்ஷணஸம்யுதே ॥ ௮௬ ॥

ஹஸ்தத்3வயம் ஸமாரப்4ய த்ரித்ர்யங்கு3ளவிவர்த4நாத் ।
த்ரிஹஸ்தாந்தம் நவாயாமம் கந்யஸமத்4யமோத்தமாநகம் ॥ ௮௭ ॥

முடிவாகக்கொண்ட நீளமுடையதுமான, யாதாமொரு மரக்கட்டையுண்டோ; அதன்மேல் பாகத்தில், இரும்பு முளையின் முடிவு இருக்கவேண்டும். இந்த வாஜனத்தின் (இரும்பு முளையின்) முடிவை; வரையாகக்கொண்டது, சங்கிலியின் நீளம் எனக் கூறப்பட்டிருக்கின்றது.

86. இந்தச் சங்கிலியின் அக்ரத்தில் (கீழ்ப்புறத்தில்), இரண்டு கொக்கிகள் இருக்கவேண்டும். அந்தக் கொக்கிகள் பலகையின் வலயங்களில் இணைக்கப்படவேண்டும். (எண்பதாவது சுலோகத்தில் "வலயே த்3வயம்" என்று பலகையின் ஒவ்வொரு முளையிலும், இரண்டு வளையங்கள் கூறப்பட்டமையால்; இங்கு சங்கிலியின் அக்ரத்தில் இரண்டிரண்டு கொக்கிகள் கூறப்பட்டன). இவ்வாறு ஊஞ்சலின் இலக்கணம் கூறப்பட்டது. இனி தராசின் இலக்கணம் கூறப்படுகின்றது.

87. தராசின் நீளமானது (தராசுதண்டத்தின் நீளமானது) ஒன்பது விதமானது. அதாவது; இரண்டு கரங்கள் தொடங்கி, மும்மூன்று அங்குலங்கள் கூட்டுவதனால், மூன்று கரங்கள் முடிவுவரை, ஒன்பது விதமாம். இவை முறையே அதம மத்யம உத்தமமானவை. (கரம் என்பது இருபத்தினான்கு அங்குலங்கள்).

𑌅𑌸𑍍𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌨𑌵𑌧𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ॥ ௮௮ ॥

𑌮𑌧𑍍𑌯𑍇 𑌯𑌾𑌵𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌤𑍁 𑌤𑌤𑍍𑌤𑌦𑌂𑌶𑍇𑌨 𑌹𑍀𑌨𑌕𑌮𑍍 ।
𑌅𑌗𑍍𑌰𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌕𑍍𑌷𑌯𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑌗𑍍𑌰𑍇 𑌵𑌲𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௮௯ ॥

𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌮𑌂 𑌚 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌯𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
[𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌮𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌯𑌤𑌂 𑌤𑌥𑌾 ।]

88. தராசின் ஒன்பது வகைத்ததான இந்நீளமானது, முறையே, அஸ்த்ரக்கிராஹன் என்ற அரசன் முதல் ஸார்வபௌமன் என்ற அரசன் முடியவுள்ளோருக்குக் கூறப்பட்டதென அறியவேண்டும். இந்தத் தராசின் தண்டமானது; நடுவில் மூன்று அல்லது நான்கு அங்குலங்கள் பரப்பளவு கொண்டது.

89. இந்தத் தராசு தண்டத்தின் முனைகளின் அகலமோ; நடுவின் அகலம், அந்தந்த வகைக்கு எத்தனை அங்குலங்களோ, அதனின்றும் அம்சமொன்றினால் குறைந்தது. (அதாவது:—மூன்று அங்குலங்கள் நடுப் பரப்புக் கொண்ட தண்டத்தின் முனைகள்; இரண்டங்குலங்கள் பரப்பளவு கொண்டன. நான்கு அங்குலங்கள் நடுப்பரப்புக் கொண்ட தண்டத்தின் முனைகள்; மூன்றங்குலங்கள் பரப்பளவு கொண்டன எனக் கருத்து.) இவ்வாருகிய தண்டத்தின் முனைகளே; நடுவிலிருந்து நுனி வரை முறையே குறைந்தவைகளாகவும், நுனிகளில் வளையங்களுடன் கூடியவைகளாகவும் செய்யவேண்டும்.

90. தராசு தண்டத்தின் நடுவேயுள்ள நாக்கின் (அளவைக் குறிக்கும் முள்ளின்) நீளமானது; அந்த நாக்கின் அடிபரப்பளவு, எவ்வாறு தண்டத்தினகலத்தின் மூன்றிலொரு பங்குடையதோ; அவ்வாறே தண்ட நீளத்

உச்சதாரம் த்ரிபாகைகம் ஜிஹ்வாமூலவிஶாலகம் । ௯௦ ॥

தத³ஷ்டாம்ஶைகபா⁴க³ம் வா ஷோட³ஶாம்ஶோநமேவ வா ।
தத்தத³ர்தோ⁴நகம் வா தஜ்ஜிஹ்வாக்³ரவிஶாலகம் ॥ ௯௧ ॥

அத²வா ஸூசீநிப⁴ம் குர்யாத் தந்மூலாக்³ரம் க்ஷயம் க்ரமாத் ।
தந்மூலம் ப³ஹலம் குர்யாத் தந்மூலே த³ண்ட³ஸம்யுதம் ॥ ௯௨ ॥

தத்³வாரஃ வ்ருஷ்டதே³ஶே து (ச) கீலயேத் தோரணாங்க்⁴ரிகம் ।

தினளவினுல் (மூன்றிலொரு பங்கினுல்) நிறுவத்தக்கது. (அதாவது :—தண்டத்தின் நடுவேயுள்ள நாக்கின் உயரம், தண்டத்தின் நீளத்திலும் ; நாக்கின் அடியகலம், தண்டத்தின் அகலத்திலும் ; மூன்றிலொரு பாகமாகும் என்பதாம்.)

91. இந்தத் தராசு தண்டத்தின் நடுவேயுள்ள நாக்கின் நுனியகலமானது ; அதனடியகலத்தில் பதினுறிலொருபங்கோ, எட்டிலொருபங்கோ, அரைப்பங்கோ குறைந்திருக்கவேண்டும்.

92. அல்லது நாவின் நுனியை ஊசிபோன்றதாகச் செய்யலாம். அப்போழ்து அதன் நாக்கு அடி முதல் நுனி வரை முறையே குறைந்திருக்கவேண்டும். (உருண்டை வடிவமாகவென்பது கருத்து). அப்போழ்து ; அந்த நாக்கினடியில், தண்டத்தின் அகலத்தில் பாதியை கனமாகக் கொள்ளவேண்டும். அந்த தண்டமோ ஓட்டையுடன் கூடியதாகவிருக்கவேண்டும்.

93. தராசுதண்டத்தின் நடுவே, நாவின் கீழேயுள்ள, அவ்வோட்டையின் முன்புறத்திலும் பின்புறத்திலும் ; தோரணத்தின் காலே (தராசுதண்டத்தைத் தூக்கும் மாலேயின்காலே)ச் செவ்வனே பொருத்தவேண்டும். அவ்வாறு

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍋𑌰𑌣𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 । ௯௩ ॥

𑌤𑍋𑌰𑌣𑌾𑌗𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌵𑌲𑌯𑌂 𑌲𑌮𑍍𑌬𑌨𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌮𑌸𑌮𑌂 𑌪𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 । ௯௪ ॥

𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌮𑍍𑌨𑌤𑌲𑌂 [illegible] 𑌚 𑌤𑌤𑍍 ।
𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 [illegible] ॥ ௯௫ ।
[𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌿𑌮𑍍𑌨𑌤𑌲𑌂 [illegible] 𑌚 𑌤𑌤𑍍 ।
𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 [illegible] ॥]

[illegible] 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।

பொருத்தப்பெற்ற அவ்விடத்திலிருந்து, தோரணத்தின் உயரமானது; நாக்கின் உயரத்தைவிட காற்பங்கு அதிகமாகவிருக்கவேண்டும்.

94. நாக்குடன் கூடிய, தராசைத் தொங்கவிடுவதன் பொருட்டு, தோரணத்தின் நுனியில் (மேல் பாகத்தில்) வளையமொன்றைச் சேர்க்கவேண்டும். இத்தகைய தராசின் தட்டு, நாக்கின் உயரத்திற்குச் சமமான பரப்பளவு கொண்டதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

95. மேலும்; தராசுத்தட்டின் உட்புறம் சிறிது குழிந்து இருக்கவேண்டும். தட்டு வட்டவடிவமாகவும், அரையங்குல கனமுள்ளதாகவும் இருக்கவேண்டும். மற்றொரு தட்டும் அதற்குச் சமமாகவே இருக்கவேண்டும் (அதாவது; இரு தட்டுக்களும் ஒன்றுக்கொன்று சமமானதாகவே இருக்கவேண்டுமென்பதாம்.) அவ்வாருகிய இரண்டு தட்டுக்களும் மேல்பாகத்தில் வளையங்களுடன் கூடியவைகளாய் இருக்கவேண்டும்.

96. இரண்டு தட்டுக்களிலும் சேர்ந்திருக்கும் வளையங்களை இரும்பினுலேயே செய்யவேண்டும். தராசின்

ताविष्टके आयसे वापि दारुणां युक्त्या च कारयेत् ॥ ९६ ॥

जिह्वां च तोरणं वापि सर्वथा लोहजं भवेत् ।
[जिह्वा च तोरणं वापि सर्वथा लोहजं भवेत्]
बन्धयेच्छृङ्खलैः पात्रे त्रिचतुर्णो लम्बयाद्दृढम् ॥ ९७ ॥
[बन्धयेच्छृङ्खलैः पात्रे तद्दण्डे लम्बयेद्दृढे ॥]

द्वारोत्क्षिप्तं प्राग्रं शेषं युक्त्या प्रयोजयेत् ।
सर्वेषां दक्षिणे हस्ते मध्यमाङ्गुल्यमध्यते ॥ ९८ ॥

पत्रकार्यं यवान्तावं पीठे तु मध्यमाङ्गुलम् ।

தட்டுக்களையோ, தண்டத்தையோ; மரத்தினலேயோ, இரும்பினலேயோ கீழே கூறியுள்ளபடி யுக்தியினல் செய்யலாம்.

97. ஆனல்; தராசின் நாக்கும், தூக்கும், எவ்விதத்தினலும் இரும்பினலாகியதாகவே இருக்கவேண்டும். இத்தகைய தட்டுக்களிரண்டையும், இரண்டு முனைகளைக் கொண்ட அந்த தண்டத்தில் சங்கிலிகளால் பிணைக்க வேண்டும்.

98. இவ்வாறு தராசின் இலக்கணம் கூறப்பட்டது. இதனில் எஞ்சியவற்றை யுக்தியினல் அனுஷ்டிக்கவேண்டும். (இனி ‘‘पत्रासनसमायुक्तं पत्रलक्षणम्’’ என முன்பு கூறப்பட்டபடி; ஆண்டின் ஆரம்பத்தில் எழுதுவதன்பொருட்டான பத்ரம், கர்ணம் இவைகளின் இலக்கணத்தைக் கூறுகிருர்.) இது அரசனின் வலது கரத்தின் நடுவே காணத்தக்கதாகக் கூறப்படுகிறது. (அல்லது; நடுவின் தோற்றமளிப்பது).

99. அரசனின் வலது கரத்தின் நடுவே தோற்றமளிக்கும் பத்ரம் என்னும் இது; இலைபோன்றது. புஜ பீடத்தில் இரண்டு அங்குலங்கள் உயரமுடையது.

𑌨𑌾𑌲𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌯𑌾𑌮𑍇𑌨𑍇𑌤𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 । ௯௯ ॥

𑌪𑌤𑍍𑌰𑌮𑌾𑌨𑌂 𑌅𑌯𑌾𑌮𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌪𑍀𑌠𑌮𑌾𑌨𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌪𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌦𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌂 𑌪𑌤𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍂𑌪𑌿𑌤𑌮𑍍 ॥ ௱ ॥

𑌨𑌾𑌲𑌂 𑌪𑍀𑌠𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌨 𑌲𑌙𑍍𑌘𑌨𑌮𑍍 ।
𑌮𑍂𑌲𑌂 𑌤𑍁 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌸𑍂𑌚𑍀𑌵𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ॥ ௱௧ ॥

𑌮𑍂𑌲𑍇 (𑌮𑍂𑌲𑌾𑌤𑍍) 𑌚 𑌤𑍍𑌰𑌿 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌨𑌾𑌲𑌂 𑌪𑍀𑌠𑌸𑍍𑌯-
𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ।
𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌯𑌾 (𑌤𑌤𑍍) 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

(இரண்டங்குல நீளமுடையது.) இதன் காம்பு பன்னிரண்டங்குல நீளமுடையது எனக் கூறப்படுகிறது.

100. புஜபீடத்தின் பரப்பளவு எவ்வாறே; அவ்வாறே, இலையின் அகலமும் இரண்டங்குலமாம். இலையின் அடிப்புறம் அதனில் பாதியாம். நுனியின் உயரமோ உறுதிசெய்யப்பட்டதே.

101. பீடத்துடன் கூடிய காம்பு (இலையின் அடிப்புறத்திலுள்ள காம்பு) அகலத்தில் அரையங்குலமாம். இது பீடத்தைத் தாண்டியிருக்கமாட்டாது. இந்தக் காம்பின் அடியை மெல்லியதாக, ஊசியைப்போன்றும், சமர்த்தன் செய்யவேண்டும்.

102. இந்தப் பன்னிரண்டங்குல நீளம் கொண்டதான காம்பை; அடியிலிருந்து, மும்மூன்று அங்குலங்களாக (நீளத்தில்) எடுத்துக்கொண்டு, அகலத்தில் அரை அங்குலம் விஸ்தாரப்படுத்தவேண்டும். ஆகவே; மேலேயுள்ள (நான்காவது) மூன்றங்குலங்களில், மூன்று மடங்காக நாளம் (காம்பு) விஸ்தாரமடைந்திருக்கவேண்டும். (அடியில், நான்காவது மூன்றங்குலங்களில், ஊசியைப்போலவே அகலாதிருக்குமெனக் கருத்து).

ஸாவ்ருத்தம் நாலதேஶே து பத்ரமூலே து கர்ணயுக்தகம் ।
ஸ்நிக்தம் பிந்துகயுக்தம் ஹேமரேகாலங்க்ருதம் ॥ ௱௩ ॥

பத்ரம் (த்ரம்) து ப்ரஹ்மதைவத்யம் பீடம் து (பீடம் ஸ்யாத்) விஷ்ணுதைவதம் ।
நாலம் (லம்) து ருத்ரதைவத்யம் கர்ணம் (ர்ணம்) சைவ ஸரஸ்வதீ ॥ ௱௪ ॥

ஏவம் து ஜாதிதைவத்யம் கர்ணமேவம் ப்ரகல்பயேத் ।
ஸர்வேஷாமபி ஜீவாநாம் ச ஸ்திரம் வா சலமேவ ஹி வேத் ॥ ௱௫ ॥

103. இத்தகைய பத்ரமானது (இலைபோன்றும் புஜ பீடத்திலமைக்கப்பெற்ற இலையானது) தண்டின் பிரதேசத்தில் உருண்டையாகவும்; இலையின் அடிப்புறத்தில் கர்ணத்துடன் கூடியதாகவும்; நடுவே புள்ளிகளுடன் கூடியதாகவும், வழுவழுப்பானதாகவும், சுவர்ணரேகைகளால் (தங்கமயமான வரிகளால்) அலங்கரிக்கப்பெற்றதாகவும் இருக்கவேண்டும்.

104. இலையானது, பிரமனை தேவதையாகவுடையது. பீடம், விஷ்ணுவை தேவதையாகவுடையது. காம்பு, உருத்திரனை தேவதையாகவுடையது. கர்ணமென்பது ஸரஸ்வதியை தேவதையாகவுடையது.

105. இவ்வாறு தேவதையைச்சார்ந்து பெருமை கொண்டதான கர்ணத்தை; இம்முறையே நிறுவவேண்டும். எல்லாவிதமானப் பிராணிகளுக்குமே கூண்டானது; அசைக்கமுடியாமல் ஒரே பிரதேசத்தில் நிலைபெற்றதாகவோ, பெயர்த்துச் செல்லக்கூடியதாகவோ, இருக்கலாம்.

एकहस्तं समारभ्य त्रित्र्यङ्गुलविवर्धनात् ।
साष्टाष्टपञ्जराणां कन्यसादि त्रयं त्रयम् ॥ ௱௬ ॥

उच्चमानाद्विस्तारस्य पञ्जरस्य विस्तारतः ।
तदधिकं च त्रिपादं वा तदर्धं पादमेव वा ॥ ௱௭ ॥

अर्धाधिकायामं आस्यमानं तु कथ्यते ।
भौमान्तं प्रस्तरान्तं वा मस्तकान्तं शिखान्तकम् ॥ ௱௮ ॥

106. & 107. ஜவ்வாதுப்பூனே முதலிய, வாசனேத் திரவியத்தையளிக்கும் பூனேயின்; பஞ்சரத்தின் (கம்பிகளாலாகிய கூண்டின்) அகலம்; ஒரு கரம் துடங்கி, மும்மூன்று அங்குலங்கள் கூட்டுவதனுல், நாற்பத்தியெட்டு அங்குலங்களின் முடிவுவரை ஏற்படுகின்ற ஒன்பது வகைப்பட்டதாகும். இந்த ஒன்பது வகையும் முறையே மும்மூன்றும்; அதம மத்யம உத்தமமாகும். இந்த பஞ்சரத்தின் உயரமோ; அதனகலத்திற்குச் சமமாக இருக்கலாம். அகலத்தைவிட காற்பங்கு அதிகமாகவோ, அரைப் பங்கு அதிகமாகவோ, முக்கால் பங்கு அதிகமாவோ இருக்கலாம்.

108. மேற்கூறிய புனுகுப் பூனேயின் கூண்டின் நீளம் அகலத்தைவிட ஒன்றரைப் பங்கு அதிகமாக இருக்க வேண்டும். இக்கூண்டின் வாயிலின் அளவானது; பௌமாந்தமாகவோ, ப்ரஸ்தராந்தமாகவோ, மஸ்தகாந்த மாகவோ, சிகாந்தமாகவோ இருக்கலாம். [அதாவது, பூமியில் ஊறும்படியாகவும் இருக்கலாம். கூண்டின் கீழ்ப் பலகையிற் படியும்படியாகவும் இருக்கலாம். கூண்டின் முக்காலுயரம் தாண்டி, ஆங்கு தடையுறும்படியாகவும் இருக்கலாம். மேற்பலகை வரை இழுக்கும்படியாகவும் இருக்கலாம் எனக் கருத்து.]

நவாங்குலம் ஸமாரப்ய த்வ்யங்குலவிவ்ருத்திதஃ ।
பஞ்சவிம்ஶாங்குலாந்தம் ஸ்யாத்கந்யஸாதி த்ரயம் த்ரயம் ॥ ௱௯ ॥

ஶுகபஞ்ஜரவிஸ்தாரம் நவதா பரிகீர்திதம் ।
உச்ச்ரயம் ஸமமேவாத பாதார்த்தத்ரிபாதபூர்ணாபி விஸ்தரதஃ ॥ ௱௰ ॥

ஸப்தாங்குலம் ஸமாரப்ய த்வ்யங்குலவிவ்ருத்திதஃ ।
த்ரயோவிம்ஶாங்குலாந்தம் ஸ்யாத்யதா கந்யஸாதிபிஃ ॥ ௱௰௧ ॥

ஆதகஸ்ய உத்க்ரோஶஸ்ய பஞ்ஜரஸ்ய விஶாலகம் ।
விஸ்தாரம் த்விகுணம் வாபி த்ரிகுணம் வா சதுர்குணம் ॥ ௱௰௨ ॥

109. & 110. கிளிக்கூண்டின் அகலமானது; ஒன்பது அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுதலால், இருபத்தைந்து அங்குலங்கள் முடியும் வரை ஒன்பது வகைத்ததாகின்றது. இவ்வொன்பது வகைகளில், முறையே மும்மூன்றும், அதம மத்யம உத்தமமெனப்படும். இதனுயரம், முன் கூறியதுபோலச் சமமாகவோ, அல்லது காற்பங்கு, அரைப்பங்கு, முக்காற்பங்கு அதிகமாகவோ இருக்கலாம். அல்லது முழுமையும் அதிகமாக இருக்கலாம்.

111, 112, 113. இப்பொழுது; நீர்விழுங்கிப் பறவையினுடையவும், நிலாவிழுங்கிப் பறவையினுடையவும் கூண்டின் (கம்பிகளாலாகிய பஞ்சரத்தின்) அகலம் கூறப்படுகிறது. இதனகலம்; ஏழு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனுல், இருபத்திமூன்று அங்குலங்கள் முடியும்வரை, ஒன்பது வகைப்பட்டதாகும். இதனில் மும்மூன்றும் முறையே அதம மத்யம உத்தமமானவை. இக்கூண்டின் நீளமானது; அகலத்தைப்போல, இரண்டு மடங்கு மூன்று மடங்கு நான்கு மடங்கு

ஶுகாதீநாம் ஹி ப்ரோக்தோऽயம் ஸந்நிவேஶ ஏவ ஹி |
ஸ த்வத்ர ஸ்தூலகாகாரம் ஹம்ஸஸ்யாபி யோக்யக: || ௱௰௩ ||

தச்சைவ சதுரஶ்ரம் ஸ்யாத் பாராவதஸ்ய ச |
பஞ்சவிம்ஶாத்ஸமாரப்ய ஷட்ஷட்வ்ருத்த்யா நவாதிகா: || ௱௰௪ ||

ஶைகாஷ்டநீடோத்ராணாம் கந்யஸாதித்ரயம் த்ரயம் |
பஞ்ஜரம் நீலகண்டஸ்ய நவதா விஸ்த்ருதம் ஹி வை || ௱௰௫ ||

ஸமைவம் து தஸ்யைவோச்ச்ராயம் ஸர்வ ஏவ ஹி |
பஞ்சாங்குலம் ஸமாரப்ய த்வ்யங்குலம் விவர்த்தநாத் || ௱௰௬ ||

ஏகவிம்ஶாங்குலாந்தம் ஸ்யாத் கந்யஸாதித்ரயம் த்ரயம் |

என பேதமுடையது என்று கூறப்பட்டிருக்கின்றது. உயரமோ, முன்கூறியதுபோன்றதேயாகும். இக்கூண்டே கழிகளின் வடிவம் கொண்டதானுல், அன்னப்பறவைக்கும் ஏற்றதாகும்.

114, 115, 115½. முன்பு நீர்விழுங்கி நிலாவிழுங்கிகளுக்குக் கூறப்பட்ட அந்தக் கூண்டே; நான்கு மூலைகள் கொண்டதாக (சமபரப்பளவு கொண்டதாக) இருக்குமேயானுல், அது புருவுக்கு ஏற்றதாகும். இனி மயிலின் கூண்டினுடைய, அகலம் கூறப்படுகின்றது. இருபத்தைந்து அங்குலங்கள் தொடங்கி, ஆறு ஆறு அங்குலங்களாகக் கூட்டுவதனுல், எழுபத்திமூன்று அங்குலங்கள் முடியும் வரை ஏற்படும் ஒன்பது வகைகளும் இக்கூண்டின் அகலமாம். இவ்வொன்பது வகைகளிலும் முறையே மும்மூன்றும் அதம மத்யம உத்தமமெனப்படும். இக்கூண்டின் நீளம் அகலத்திற்குச் சமமானதேயாம். உயரமோ; முன்கூறியதுபோலாகும்.

116, 117, 117½. தித்திரியென்ற பறவையின் கூட்டினுடைய அகலமானது; ஐந்து அங்குலங்கள் தொடங்கி,

த்ரித்ருதீயகாம்ஶாயதஸ்ய நவதா விஸ்த்ருதம் பவேத் || ௱௰௭]

உத்ஸேதம் பூர்வவத்க்ஷயாத்ஸ்தாநம் ஸமாஶ்ரயம் ।
ஸ்தாநம் குண்டம் ஸமாஶ்ரஸ்ய த்ரித்யம் குண்டவிந்யாஸநாத் || ௱௰௮ ||

த்ரயோவிம்ஶாங்குலாந்தம் ஸ்யாத் ஸப்தாத்யங்குலாதி பூர்வவத் ।
விஸ்தாரம் நவதா ப்ரோக்தம் பரத்வாஜஸ்ய பஞ்ஜரே || ௱௰௯ ||

ஸமாஶ்ரம் சதுரஶ்ரம் ஸ்யாதுத்ஸேதம் பூர்வவத்பவேத் ।
பஞ்சபக்ஷம் குண்டம் ஸமாஶ்ரஸ்ய த்ரித்யம் குண்டவிந்யாஸநாத் || ௱௨௰ ||

இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனுல் இருபத்தொன்று அங்குலங்கள் முடியும் வரை ஏற்படும், ஒன்பது வகைகளையுடையது. இதனில் முறையே மும்மூன்றும், அதம மத்யம உத்தமமாகும். முன்கூறியதுபோலவே, அகலத்திற்குச் சமமான உயரத்தைச் செய்யவேண்டும். இக்கூண்டு நான்கு முனைகளையும் சமமாகக்கொண்டது.

118, 119, 119½. பரத்வாஜம் என்ற பறவையின் (கரிச்சானின்) கூண்டின் அகலம்; ஏழு அங்குலங்கள் தொடங்கி. இரண்டிரண்டு அங்குலங்களைக் கூட்டுவதனுல், இருபத்திமூன்று அங்குலங்கள் முடியும் வரை, ஏற்படும் ஒன்பது வகைகளையுடையதாம். இதனில் அதமம் முதலியவை முன்போன்றனவாகும். இக்கூண்டு சமமான நான்கு கோணங்களையுடையது. இதன் உயரம் முன் கூறியதுபோலாகும்.

120, 121. கோழியினுடைய குலாயத்தின் (கூட்டின்) அகலமானது; பதினைந்து அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்களைக் கூட்டுவதனுல், முப்பத்தொன்று அங்குலங்கள் முடியும் வரை, ஒன்பது விதங்களாகவுள்ளது. இந்த ஒன்பது விதங்களும், அதமாதி

ஏகத்ரிம்ஶாங்குலாந்தம் ஸ்யாந்நவதா கநீயஸாதிபி: |
குக்குடஸ்ய கபோதஸ்ய விஶாலம் ஸமவேதாம்ஶகம் ॥ ௱௨௧ ॥

ஏகாதஶம் ஶுகஸ்ய த்வ்யங்குலவிவர்த்தநாத் |
ஸப்தவிம்ஶாங்குலாந்தம் கநீயஸாதித்ரயம் த்ரயம் ॥ ௱௨௨ ॥

விஶாலம் ஸமவேதத்வம் ச நகுலஸ்யாபி பஞ்சரம் |
சடகஸ்ய பஞ்சரஸ்ய தித்திரேருக்தவத்ததா ॥ ௱௨௩ ॥

நவாங்குலம் ஸமாரப்ய பஞ்சவிம்ஶாங்குலாந்தகம் |
ஸமவேதவஶயா ப்ரோக்தம் விஶாலம் ஸமவேதாம்ஶகம் ॥ ௱௨௪ ॥

விஸ்தாரம் து ஸமாரப்ய வ்யாக்ரஸ்யாயா: பஞ்சரம் க்ஷிபேத் |

பேதங்களாலேற்படுவன. இக்கூண்டானது, முன்கூறியதுபோலவே உயரமுடையது.

122, 123. கீரியின் பஞ்சரத்தின் (கூண்டின்) அகலமானது; பதினொன்று அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்களைக் கூட்டுவதனால், இருபத்தேழு அங்குலங்கள் முடியும்வரை, அதமாதிபேதங்கொண்ட ஒன்பது வகைத்ததாகும். இக்கூண்டு, முன்கூறியது போன்றவுயரமுடையதாம். சடகம் எனும் பறவையின் (சிட்டின்) கூண்டை; உயரத்தாலும், அகலத்தாலும், தித்திரியென்ற பறவைக்குக் கூறியதுபோலும் செய்.

124. உடும்பின் கூண்டின் அகலமானது; ஒன்பது அங்குலங்கள் தொடங்கி, முன்போல இரண்டிரண்டு அங்குலங்களைக் கூட்டுதலால், இருபத்தைந்து அங்குலங்கள் முடியும்வரை, ஒன்பது வகைத்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. உயரம் முன்கூறியதுபோலாகும். இக்கூண்டு பரப்பளவில் சமகோணங்களையுடையதாகும்.

125, 126. புலிக் கூண்டின் அகலமானது; ஒன்றரைக் கரம் தொடங்கி, ஆறு ஆறு அங்குலங்களைக் கூட்டு

ஸாயத்ஹஸ்தம் ஸமாநஸ்ய ஷட்கம் முகபதேத்ரக ॥ ௧௨௫ ॥

ஸ்வாயாமிகம் த்ரிஹஸ்தாந்தம் கந்யஸாதித்ரயம் த்ரயம் ।
நவதா வ்யாப்ய நீசஸ்ய விஸ்தாரம் பரிகீர்திதம் ॥ ௧௨௬ ॥

உத்ஸேதம் பூர்வவத்க்ஷேத்ரம் தத்ஸமாஸ்ரம் தபிஸார்யகம் ।
உக்தமேதேன கதிதை: ஸர்வேஷாம் ஸம்ஹஸ்தகம் ॥ ௧௨௭ ॥

ஸர்வாஸாம் து ஸம்க்ஷிப்ய கவாடம் சைகமேவ ச ।
உத்ஸேதே து ஷட்மாம் ஸ்யாத் த்வாராதிகம் சைகஹஸ்திகம் ॥ ௧௨௮ ॥

வதனல், மூன்றரைக் கரம் முடியும் வரை, ஏற்படும் ஒன்பது வகைகளையுடையது. இவ்வொன்பது வகைகளும், முறையே மும்மூன்றினல், அதம மத்யம உத்தமமெனும் பிரிவுபெற்றவை. இப்புலிக் கூண்டின் உயரம் முன்கூறப்பட்டது போன்றதேயாகும். மேலும்; இக்கூண்டு சமகோணங்களையுடையது. அம்மாதிரியான அகலமுடையது. (நீளமும் அகலமும் ஒன்றே.)

127, 128. இதுவரை ஒவ்வொரு பறவையினுடையவும், மிருகத்தினுடையவும் கூண்டானது; அகலத்தாலும், நீளத்தாலும், உயரத்தாலும், வடிவத்தாலும் அடைந்திருக்கும் வேற்றுமைகளைக் கூறிய பிறகு; இப்போழ்து; சகலவிதமான கூண்டுகளுக்கும் பொதுவான அமைப்பின் விதியையும், அதனில் ஏற்படும் வேற்றுமைகளையும் கூறுகின்ருர்.

கூண்டானது; நான்கு கோணங்களையும் சமமாக வுடைய ஒரே விதமான சுவர்கொண்டிருக்கவேண்டும். நான்கு தூண்களுடன் கூடியதாயிருக்கவேண்டும். நடுவிலே வாயிற்படியை நிறுவி, ஒற்றைக் கதவாக ஒரு கதவைக் கூண்டில் ஏற்படுத்தவேண்டும். (இங்கு சுவர்

𑌪𑌾𑌦𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑍁 𑌯𑍁𑌗𑌾𑌂𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌾𑌂𑌶𑌂 𑌸𑍋𑌪𑌵𑍇𑌦𑌿𑌕𑌾 ।
𑌅𑌥𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌤𑍁𑌙𑍍𑌗𑍇 𑌤𑍁 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌂𑌶𑌂 𑌪𑌾𑌦𑌕𑍋𑌦𑌯𑍇 ॥

𑌷𑌡𑍍𑌭𑌾𑌗𑌂 𑌪𑌾𑌦𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌾𑌂𑌶𑍇𑌨𑍋𑌪𑌵𑍇𑌦𑌿𑌕𑌾 ।
𑌪𑌕𑍍𑌷𑍇 𑌪𑌾𑌦𑌾𑌰𑍍𑌧𑌤𑌾𑌰𑍇 𑌪𑌾𑌦𑌕𑍇𑌣𑍋𑌪𑌵𑍇𑌦𑌿𑌕𑌾 ॥ ௫ ॥

என்பது வலையினாலோ கம்பிகளாலோ நிறுவப்பட்ட அடைப்புக்குப் பெயர். அவ்வாறே வாஸ்துவித்யா என்னும் புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது :—

“ 𑌤𑌤𑍍𑌕𑍁𑌡𑍍𑌯𑌂 𑌪𑌞𑍍𑌚𑌧𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌶𑌿𑌲𑌾𑌮𑌯𑌂 𑌚𑍈𑌷𑍍𑌟𑌕𑌞𑍍𑌚 𑌜𑌾𑌲𑌕𑌾𑌮𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌪𑌿 ।
𑌫𑌲𑌕𑌾𑌮𑌯𑌮𑌪𑍍𑌯𑍇𑌤𑌨𑍍𑌮𑍃𑌣𑍍𑌮𑌯𑌂 𑌚 𑌪𑌰𑌂 𑌬𑍁𑌧𑌾𑌃 ॥ ”

அதாவது :—சுவர், அந்தந்தத் திரவியபேதத்தால் ஐந்து விதமாகக் கூறப்பட்டிருக்கிறது. பாறை, செங்கல், வலை, பலகை, மண் என. மேலும், இங்கு கூறப்பட்டதான கதவும் ‘ ஸம்ஹாரம் ’ எனும் பேதத்தைச் சார்ந்ததென அறியவேண்டும். அதாவது; கதவுகள் நான்கு விதம்

“ 𑌕𑌵𑌾𑌟𑌾𑌨𑌿 𑌚𑌤𑍁𑌷𑍍𑌕𑌾𑌣𑌿 𑌸𑍍𑌯𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌂 𑌦𑍍𑌵𑌿𑌕𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑌂𑌹𑌾𑌰𑍋 𑌯𑌾𑌪𑌨𑌂 𑌚𑍈𑌷𑌾𑌂 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌲𑌕𑍍𑌷𑌣𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑍇 ॥

இரட்டைக் கதவு, ஒற்றைக் கதவு, கீழிருந்து மேலே இழுத்து மூடும் கதவு, சுவருக்குள்ளே ஒட்டி இழுக்கும் கதவு, என. ஆகவே கூண்டுகளில், ஸம்ஹாரம் எனும் ஒற்றைக் கதவு நிறுவப்படவேண்டும் என்பது கருத்து.)

இனி தூண்களின் உயரத்தைக் கூறுகின்றார்—

கூண்டின் உயரத்தை ஆறு கூறுகளாக்கி; ஒரு பாகத்தால் பாதுகத்தையும், நான்கு பாகங்களால் கால்களின் உயரத்தையும், ஒரு பாகத்தால் மேல் பட்டிகையையும் நிறுவவேண்டும்.

கூடபாதக்ஷேபிகோணே தத் பாதுகம் ச ப்ரயோஜயேத் ।
உத்தராயோ நிம்நமுகம் ஸந்தௌ திர்யக்கீலம் ப்ரயோஜயேத் ॥ ௱௨௮ ॥

[கூடபாதக்ஷேபிகே கோணே பாதுகம் ச ப்ரயோக்தவ்யம் ।
உத்தராயோ நிம்நமுகம் ஸந்தௌ திர்யக்கீலம் ப்ரயோஜயேத்]

(இங்கு, தளவரிசையின் அடிப்புறத்தைக் கூறும்; ஜகதீ, பாதுகம் என்னும் பதமானது, கூண்டின் அடிப் பலகையைக் குறிக்கின்றது. உத்தரவடிகா என்னும் பதம் கூண்டின் மேலேயுள்ள பலகையில் வாய்ப் பட்டைப் பலகையை (அணியை) குறிக்கின்றது.

129, 130. அல்லது இவ்வாறும் கால்களின் உயரத்தைக் கொள்ளலாம். கூண்டின் உயரத்தை எட்டு கூறுகளாக்கி, அதனில் ஒரு பாகத்தைப் பாதுகத்தின் உயரமாகவும், ஆறு பாகங்களைப் பாதங்களின் (கால்களின்) உயரமாகவும், ஒரு பாகத்தை மேல் பட்டிகையின் உயரமாகவும் கொள்ளலாமென்பது. (ஆகவே; ஆறு பாகங்களிலோ, எட்டு பாகங்களிலோ, ஒரு பாகம் அளவே கொண்டவை பாதுகமும் பட்டிகையும் எனவும்; எஞ்சிய பாகங்களின் அளவானது, பாதங்களின் உயரம் எனவும் கருத்து). இவ்வாறு ஒரு பாகம் அளவுகொண்ட பாதுகமும் பட்டிகையும்; சச்சதுரமான நான்கு மரக்கட்டையின் வடிவம் கொண்டவை.

131. இப்பொழுது, கூண்டிலுள்ள கதவின் அமைப்பைக்கூறுகின்றார். பாதங்களின் (கால்களின்) அடிபாகத்திலும் மேல்பாகத்திலும், கோணத்தில் (சாய்வான மூலையில்) இரண்டு துளையுள்ள நாதாங்கிகளை, வலிய இணைக்க வேண்டும். அவைகளில் மேலும் கீழும் சென்றுவரக் கூடிய கீலத்தை (முளையை) பிணைக்கவேண்டும். இந்த கீலத்தின் மேலேயுள்ள சூலத்தில் (மேல்பாகத்தில்) குறுக்கேயுள்ள கீலத்தை (முளையை)ப் பிணைக்கவேண்டும்.

ஏகத்வித்ரிசதுரங்குலம் பாதவிஷ்கம்பஸம்யுதே ।
த்வித்ரிவேதபஞ்சஷட்ஸப்தாங்குலம் உபானகம் ததா ॥ ௧௩௨ ॥

[illegible] ।
[illegible] ॥ ௧௩௩ ॥

(இங்கு; மேலும் கீழும் செல்லக்கூடிய நீண்ட இருப்பு முளையானது, கதவின் பிடிப்பிற்காகவும்; இம் முளையின் நுனியில் குறுக்கு முளையானது; கம்பி கழன்று கதவு வீழ்ந்துவிடாமலிருப்பதற்காகவும் என அறிய வேண்டும். மற்றும் இங்கு கூறியதான கதவின் இலக்கணத்தின் அமைப்பானது; ஒற்றைக் கதவுள்ள இரண்டு விதங்களுக்கும் பொருத்தமானதேயாகும். அதாவது:— திறந்து மூடும்படியான வெளிக்கதவானால்; மேலும் கீழும் செல்லக்கூடிய முளையொன்றும், அதன் நுனியில் குறுக்கு முளையொன்றும் இணைக்கத் தக்கதெனவும்; கர்க்கரிகைகளிலிணைக்கப்பட்ட கதவு, மேலும் கீழும் செல்லக்கூடியதெனப் பொருள் கொண்டால்; சூலத்தில் குறுக்குமுளையொன்றே இணைக்கத்தக்கதெனவும் கொள்ளவேண்டும்.)

132, 133. இவ்வாறான கூண்டில் நான்கு பாதங்களும்; கீழேயுள்ள உபாநத்திலும் (பாதுகம் என்ற அடித் தலத்திலும்) மேலேயுள்ள பட்டிகையிலும்; ஒன்று இரண்டு மூன்று அல்லது நான்கு அங்குலங்கள் வரைத் திகைந்த பிடிப்பைக் கொண்டவை யெனவும்; அதற்கேற்றவாறே, உபாநமும் பட்டிகையும் முறையே இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு அல்லது ஏழு அங்குலங்கள் வரை பரப்பளவை யுடையவை யெனவும் கூறப்பட்டிருக்கிறது. இதனை யுக்திக்குப் பொருந்தும்படி அனுஷ்டிக்கவேண்டும். கூண்டின் நாற்புறமும் மேலும் கீழும் வாதாயநத்தை (காற்று வரக்கூடிய ஜன்னலை)ச் செய்யவேண்டும். (இதனால் குளிர்

தஸ்மிம்ஶ்ச வேத்ரஸம்யுக்தம் க்ஷுத்ராதிக்ஷேபயுக்தகம் ।
பாஜாநாம் ச தசா ஸ்ருகம் வா பாத்தபக்ஷக்ஷயுக்தகம் ॥ ௧௩௪ ॥

தஸ்யைவ பார்ஶ்வதேஶே து கல்பவா சக்ராக்ருதிம் ததா ।
ஸர்வாலங்காரஸம்யுக்தம் குர்யாத்து ஸர்வநீடகம் ॥ ௧௩௫ ॥

சாதகஸ்ய சகோரஸ்ய பஞ்ஜராக்ருதிவச்சகே ।
த்ரிதுரீயே ச தத்பஞ்ச வாஸம் குர்யாத்து தீர்ககே ॥ ௧௩௬ ॥

காலம் முதலிய சமயங்களில், கூண்டின் மற்றப் பிரதேசங்கள் மூடப்படவேண்டுமெனத் தெரிகின்றது.)

134, 135. இந்த ஜன்னல், உயரத்தில் பிரம்புகளுடன் கூடியிருக்கவேண்டும். (கீழும் மேலுமான பிரம்புகளுடனே பிரம்புபோன்ற கம்பிகளுடனே கூடியிருக்கவேண்டும்.) யானைக்கண்களால் (யானையின் கண்போன்ற கண்களை யுடைய நெறுங்கிய வலைகளால்) அலங்கரிக்கப்பட்டிருக்க வேண்டும். கால்களோ முன்கூறியபடி அலங்கரிக்கப்பட்டு, நாற்கோணவடிவம் கொண்டவைகளாக இருக்கலாம் அல்லது; கீழே நாற்கோண வடிவமுடையவைகளாகவும், மேல்பிரதேசத்தில் வட்டவடிவமாக்கப்பட்டவைகளாகவும், அவ்வாறு அலங்கரிக்கப்பட்டிருக்கலாம். இவ்வாறு எல்லா விதமான கூண்டுகளையும், சர்வ அலங்காரங்களுடன் கூடியவைகளாகச் செய்யவேண்டும்.

136. கூண்டின், சாதாரணமான அமைப்புக்களைக் கூறிய பிறகு; சாதகம் (நீர்விழுங்கி) சகோரம் (நிலா விழுங்கி) இவைகளின் கூண்டின் அமைப்பில் விசேஷத்தைக் கூறுகின்றார். (முன்கூறியதுபோலவே, இந்த விதியை, அன்னப்பறவைக்கும் சேர்த்துக்கொள்ள வேண்டியது.) சாதகம் சகோரம் இவைகளின் கூண்டு; நீண்டவைகளான மூன்று, நான்கு அல்லது ஐந்து தண்டங்களால்; நிறுவப்பட்டு, நீண்டவடிவம் கொண்டதாக இருக்க

[த்ரிதண்டா: பஞ்சதண்டைர்வாபி ஸங்க்யயோத்ததத்தா தீர்கதைர்கை:]
சேஷம் ப்ராக்வத்ஸ்யாத் ஸர்வாலங்கார ஸம்யுதம் ।
பாதகஸ்ய பஞ்சாம்சே தாங்கே பாதுகாமதிகாதிதே ॥ ௱௩௭ ॥

ஏகாம்சம் பாதுகஞ்சைவ வேதாம்சம் பாததுங்ககம் ।
ஏகாம்சம் பட்டிகோத்ஸேதம் த்வ்யம்சம் க்ஷுத்ரசூலிகா ॥ ௱௩௮ ॥

வேண்டும். அதாவது :—தூண்களின் மேலே வைக்கக் கூடிய பொருள்களில் ‘ போதிகா ’ என்பது ஒன்று. இதன் அளவை ;

“ போதிகா து த்ரிதா ஜ்ஞேயா நாஹஹேது ந ஸைவ்யத: ।
த்ரிதண்டா ச சதுர்தண்டா பஞ்சதண்டா யதாக்ரமம் ॥” என,

தூண்களில் நீளத்தினுல் இணைக்கக்கூடிய போதிகை யானது த்ரிதண்டம், சதுர்தண்டம், பஞ்சதண்டம் என முறையே நீளத்தினுல் மூவகைப்படும் எனக் கூறியிருக்கிற படியினுல், இந்தக் கூண்டின் தூண்களிலும், த்ரிதண்டம் முதலிய முறையால் நீண்டதான குறுக்குக் கழிகளை யமைப்பதனுல் ; இக்கூண்டு தண்டகாகிருதியுடையது [நீண்டவடிவமுடையது] எனக் கூறப்பட்டது. எஞ்சியவை முன்கூறியது போலாகும். இவ்வாருகிய இக் கூண்டை, சர்வாலங்காரங்களுடன் கூடியதாகச் செய்ய வேண்டும்.

137, 138. கிளியின் கூண்டினுடைய அமைப்பில் விசேஷவிதி கூறப்படுகின்றது. கிளிக்கூண்டின் உயரத்தை எட்டு பங்குகளாகப் பிரித்துக்கொண்டு, அதனில் ஒரு பங்கினுல் பாதுகத்தையும் (அடித்தலத்தையும்) ; நான்கு பங்குகளால் கால்களின் உயரத்தையும் ; ஒரு பங்கினுல் மேல்பட்டிகையின் உயரத்தையும் ; எஞ்சிய இரண்டு பங்குகளாய் மேலே சூளிகையையும் (கூண்டின் மேல்பட்டிகைக்குமேலே, கீழிருந்து மேலே முறையே குறைந்து,

ஶேஷம் து பூர்வவத்ப்ரோக்தம் ஸர்வாலங்காரஸம்யுதம் ।
ததேவ ஶுகநாஸம் ஸ்யாத் தத்தலாயாமம் த்ரிபாதகம் ॥ ௱௩௯ ॥

பூர்வோக்தம் ஷட்த்ரிபாதம் ஸ்யான்மத்தவாரணஸம்யுதம் ।
விஸ்தாரே சதுர்பாகைகேநாவ்ருதமிஷ்யதே ॥ ௱௪௰ ॥

[விஸ்தாரே சதுர்பாகே ஏகாம்ஶிகம் பாட:]
பரிதஸ்து ப்ரபாயுக்தம் பக்ஷஹாராதிபூஷிதம் ।
ததேவாலிந்தகம் வா பஞ்சாம்ஶை: ஶோபயிதோஷயம் ॥ ௱௪௧ ॥

குடுமிபோலத் திகழ்வது) செய்யவேண்டும். எஞ்சியவை முன்கூறியதுபோலதாகும். இவ்வாறு கிளிக்கூண்டை, சர்வாலங்காரங்களுடன் கூடியதாக்கவேண்டும்.

[முன்பு பொதுவிதியின் எட்டு பங்குப் பிரிவினையில், கால்கள் ஆறு பங்கு கொண்டவை. இங்கு கிளிக்கூண்டின் விசேஷவிதியில், எட்டு பங்குப் பிரிவினையில் கால்கள் நான்கு பங்கு கொண்டவை. ஊர்த்வசூளிகை இரண்டு பங்கு கொண்டதென, வேற்றுமை அறியத்தக்கது.]

139, 140, 141. அந்தக் கிளிக்கூண்டே முகபத்ரம் என்னும் பெயர் கொண்டதாகும். இந்த முகபத்ரம் என்ற கூண்டானது; பரப்பளவில் சரிபாதியில் மூன்று தூண்களை யுடையது. முன்னும் பின்னும் இரண்டு மூன்று தூண்களை (முன்பு மூன்று தூண்களையும் பின்பு மூன்று தூண்களையும், ஆக ஆறு தூண்களை) உடையது. இந்த ஆறு தூண்களும் (கால்களும்) மத்தவாரணத்துடன் கூடியதாயிருக்கவேண்டும். (மத்தவாரணம் என்பது இரண்டு தூண்களுக்கு நடுவே இணைக்கப்பட்ட அழிவடிவமான கழி) கூண்டின் பரப்பளவை நான்கு பாகங்களாக்கிக் கொண்டு, நான்கிலொரு பாகத்தை (வெளிப்புறத்திலுள்ள பாகத்தை) வராந்தாவாகச் செய்யவேண்டும். இதுவே ஆளிந்தகம் எனப்படும். இந்த வராந்தாவை நாற்புறமும்

செய்யவேண்டும். [சாலா என்பது தூண்களையுடையது. ஆளிந்தகம் தூண்களற்றது.

" ஹீநஸ்தம்பஸஹிதம் ஶாலாஸ்தம்பா ஸ்தம்பைர்ஹீந: அலிந்தகா ।"

எனக் கூறப்பட்டிருக்கிறது.] ஆகவே; நாற்புறமும் தூண்களற்ற அளிந்தகம் போக; எஞ்சிய நான்கில் மூன்று பாகமாகிய சாலையில், முன்னும் பின்னும் நிற்கும் மத்தவாரணத்துடன் கூடிய மும்மூன்று கால்களுக்கும்; சமப்பாதியில் நிறுவப்பட்ட மூன்று கால்களுக்கும்; மேலே லுபையுடன் கூடியிருக்கவேண்டும்.

[லுபையென்பது; மேல்ப் பட்டிகையில் இணைக்கப்படும் பலகைகள். இவை உத்தரத்திற்கு ஏற்றவாறு அகலமுடையவை. உத்தரத்திற்கு மேலே வைக்கப்படும் சூளிகையின் (காவடியின்) மேலே இணைக்கப்பட்டு, கூடுவாய்கள்தோறும் வந்து, மேல்ப்பட்டிகையில் முடிவடைபவை.]

இக்கூண்டை, கண்டஹர்ம்யம் முதலியவற்ருல் அலங்கரிக்கப்பெற்றதாக்கவேண்டும். (கண்டஹர்ம்யம் = சிறு பங்களா).

[இக்கூண்டின் அமைப்பு; நான்கு சாலாகிருஹங்களுடனும் சுற்றிலும் அளிந்தத்துடனும் இருப்பதனுல், இதற்கு "ஏகாளிந்தம்" எனப் பெயர். "ஏகாலிந்தம் சதுஶ்ஶாலே" எனக் கூறப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான கூண்டின் அல்லது இல்லத்தின் அமைப்பு; தனத்தையும், ஜயத்தையும், க்ஷேமத்தையும் அளிக்கும்; "தநம் ஜயம் ச க்ஷேமதம்" எனக் கூறப்பட்டிருப்பதனுல்,] மேலும்; இக்கூண்டையே ஊர்த்வகூடத்துடன் கூடியதாகவும் செய்யலாம். அவ்வாறு செய்யும்பக்ஷத்தில் கூண்டிற்குரிய உயரத்தைவிட, ஐந்து பாகங்கள் உயரத்தை அதிகமாகக் கொள்ளவேண்டும். (ஊர்த்வகூடம் = மேல்மாடிக்கூடம்).

𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑍇𑌨 𑌶𑌿𑌖𑌾𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌶𑌿𑌖𑌰𑍋𑌦𑌯𑌮𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌚𑌤𑍁𑌰𑍍𑌨𑌾𑌸𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥ ௧௪௨ ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌸𑌭𑌦𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌚𑍈𑌕𑌭𑌦𑍍𑌰𑍇𑌣 𑌨𑌿𑌰𑍍𑌗𑌤𑌮𑍍 ।
𑌨𑍀𑌵𑍍𑌰𑌧𑌾𑌰 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑍈𑌕𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌾𑌗𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌿𑌕𑌮𑍍 ॥ ௧௪௩ ॥

𑌪𑌞𑍍𑌚𑌭𑌾𑌗𑍇 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌵𑌾 𑌭𑌦𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌵𑌨𑍍𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ ௧௪௪ ॥

142. உயரத்தில் அதிகமாகக்கொண்ட இந்த ஐந்து பாகங்களில் மூன்று பாகங்களால் சிகரத்தின் உயரத்தையும், இரண்டு பாகங்களால் சிகையின் உயரத்தையும் செய்யவேண்டும். இந்த மேல்கூடத்தில், நான்கு திசைகளிலும் நான்கு நாஸிகள் இருக்கவேண்டும். [நாஸி என்பது தூண்களின்மேல் உத்தரத்திற்குக் கீழ், சந்தியில் உள்ள மரக்கட்டை.] இந்த நாஸாதாருவானது ஸகல விதமான அலங்காரங்களுடன் கூடியதாயிருக்கவேண்டும். அல்லது அந்த நாஸாதாருவானது ஸபத்ரம் என்பதாக இருக்கலாம், [ஸபத்ரம் என்பது நான்கு பக்கங்களிலும் சிகையுடன் கூடியது. “𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚𑌤𑍁𑌃𑌶𑌿𑌖𑍋𑌪𑍇𑌤𑌂 𑌸𑌭𑌦𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑌮𑍍” எனக் கூறியிருக்கிறபடியால்.]

இந்த நாஸாதாருவிலோ, ஸபத்ரத்திலோ தூண்களைக் கோர்க்க; ஒரு அங்குலம் அல்லது இரண்டங்குலம் அளவுள்ள பள்ளம் இருக்கவேண்டும். [அவ்வாறே கூறப்பட்டிருக்கின்றது :—

“𑌏𑌕𑌾𑌂𑌶𑌦𑍍𑌵𑌯𑌵𑌾 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌭𑍇𑌦𑌯𑍇𑌤𑍍𑌤𑌥𑌾 ।
𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌾𑌵𑌾𑌪𑌕𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌦𑍋 𑌵𑌿𑌦𑍁𑌃” ॥ என]

143, 144. இந்த ஸபத்ரம் எனும் நாஸாதாருவின் பத்ரத்தின் (சிகையலங்காரத்தின்) விஸ்தாரமானது ; கூண்டின் அகலத்தில் மூன்றிலொரு பங்கோ, நான்கிலிரண்டு

ஸர்வம் தத் ஸாங்கநீலம் ஸ்யாத³த²வா தத்த்வநோக்தவத் ।
தே³வப்³ராஹ்மணராஜ்ஞாம் ச வைஶ்யஶூத்³ரஸ்ய யோக்³யகம் ॥

பாதே³ நூபுரகிரீடமுத்³ரிகா
குண்ட³லம் ச வலயம் ச தோ³ர்வலா ।
ஹாரகங்கணபடீரவிபூ⁴ஷணம்
கிங்கிணீவலயகாஞ்சிபூ⁴ஷணம் ॥ ௱௪௪ ॥

கேயூரதாடங்கவிஶேஷகஞ்ச
கண்டே² ச முக்தாமணிஹாரபட்டம் ।

பங்கோ, ஐந்தில்மூன்று பங்கோ இருக்கலாம். எஞ்சிய வற்றை முன்கூறியதுபோலவும், சர்வாலங்காரங்களுடன் கூடியதாகவும் செய்யவும்.

145. கிள்ளையின் கூண்டு, இவ்வாறு நிறுவப்பட வேண்டும். அல்லது; முன்கூறியதைப்போலவும் செய்ய லாம். இவ்வாருகிய இந்தக் கிளிக்கூண்டு; தேவர்களுக் கும், அந்தணர்களுக்கும், அரசர்களுக்கும், வைச்யர்களுக் கும், சூத்ரர்களுக்கும் பொருத்தமானதாகும்.

146. இப்பொழுது; இந்த அத்யாயத்தில் கூறியவை களைச் சுருங்கச் சொல்லுகின்ருர். அதாவது:—பாதங் களில் அணியத்தக்கநூபுரத்தையும், சிரத்தில் அணியத் தக்க கிரீடத்தையும், விரல்களில் அணியும் மோதிரத்தை யும், காதிலணியும் குண்டலத்தையும், தோளிலணியும் பாஹுவலயத்தையும், இடுப்பிலணியும் பட்டிகையையும், ஹாரத்தையும், மணிபந்தகங்கணங்களையும், தலைஅணியை யும், பட்டிகையிலுள்ள கிங்கிணீவலயங்களையும், சுவர்ண தாடங்கமென்ற காதணியையும் கூறியிருக்கிறது.

147. தோள்களிலுள்ள கேயூரத்தையும், காதில் அணி யும் மகரகுண்டலமென்ற தாடங்கவிசேஷத்தையும், சிரத்தி

𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑌾𑌮𑌪𑌿 𑌚𑌾𑌰𑍍𑌧𑌹𑌾𑌰𑌂
𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌤𑌨𑌤𑌃 𑌸𑍍𑌤𑌨𑌾𑌹𑍍𑌵𑌾𑌮𑍍 ॥ ௱௪௭ ॥

𑌰𑌤𑍍𑌨𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌂 [illegible]
𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌂𑌶𑍁𑌕𑌂 𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌮𑌾𑌲𑌿𑌕𑌾𑌮𑍍 ।
𑌲𑌮𑍍𑌬𑌹𑌾𑌰𑌮𑌪𑌿 𑌚𑍂𑌲𑌿𑌕𑌾𑌦𑌿𑌭𑌿𑌃
[illegible]𑌮𑌪𑌿 𑌜𑌟𑌾𑌬𑌨𑍍𑌧𑌕𑌮𑍍 ॥ ௱௪௮ ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌹𑍇𑌶𑌶𑌕𑍍𑌰𑍈𑌃 𑌦𑌿𑌕𑍍𑌪𑌾𑌲𑌕𑍈𑌃 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑍈𑌃
𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌦𑍇𑌵𑌤𑌾𑌗𑌣𑍈𑌰𑍍𑌦𑍁𑌰𑍍𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌣𑍀𑌗𑍌𑌰𑍀𑌭𑌿𑌃 ।

னுச்சியிலுள்ள சூடாமணியையும், நெற்றியிலணியும் பாலபட்டத்தையும், இருபத்தி ஏழுமணிகள் கொண்ட உபக்ரீவமான நக்ஷத்ரமாலையையும், பாதி தொங்கும்படியான அர்த்தஹாரத்தையும், ஸ்தனங்களுக்கு நாற்புறமுமுள்ள ஸ்தனஸூத்ரமென்ற சுவர்ணசூத்ரத்தையும் கூறியிருக்கிறது.

148. மத்யபட்டிகையிலுள்ள ரத்னமாலையையும், வெண்பட்டு ஆடையையும், சன்னவீரம் என்னும் அணியையும், சுவர்ணமயமான கஞ்சுகம் (சட்டை) சுவர்ணமாலை இவைகளையும் சிரச்சூளம் முதலியவைகளுடன், அவைகளில் தொங்கும் ஹாரத்தையும், ஜடாபந்தத்தையும் கூறியிருக்கிறது.

149. பிரமன் விஷ்ணு மகேச்வரன் இந்திரன் இவர்களெல்லோருடனும், திக்பாலகர்களுடனும், கின்னரர்களுடனும், கந்தர்வர்களுடனும், சர்வ தேவக்கூட்டத்தவர்களுடனும், துர்கை இந்திராணி கௌரி இவர்களெல்லோருடனும், கூடிய ; சாமுண்டை முதலிய மாத்ருவர்க்கத்

𑌭𑌾𑌰𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌗𑌣𑌪𑌤𑍇𑌃 𑌷𑌾𑌣𑍍𑌮𑌾𑌤𑍁𑌰𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑌥𑌾
𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌸𑌕𑌲𑌂 𑌵𑌿𑌭𑍂𑌷𑌣𑌗𑌣𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑍇 𑌚 𑌨𑍈𑌮𑌿𑌤𑍍𑌤𑌿𑌕𑍇 ॥

𑌰𑌾𑌜𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌰𑌾𑌜𑍇𑌷𑍁
𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌦𑍇𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌃 ।
𑌵𑌿𑌹𑌂𑌗𑌮𑌾𑌃 𑌪𑌞𑍍𑌜𑌰𑌦𑍇𑌵𑌸𑍂𑌕𑍍𑌤𑌂
𑌕𑍃𑌤𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑍇 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌿𑌹𑍇𑌤𑍁𑌃 ॥ ௧௫௦ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

துக்கும், ஸரஸ்வதிக்கும், கணபதிக்கும், சுப்ரம்ஹண்ய னுக்கும்; நித்ய நைமித்திக காலங்களில் கூறப்பட்ட, அந்த சகலவிதமான பூஷணங்களையும் கூறியிருக்கிறது.

150. சக்ரவர்த்திகளுடனும், ஸகலவிதமான அரசர் களுடனும், அந்த அந்த வர்ணத்தார்களுடனும் கூடிய தேவர்களுக்கும்; கிரீடையின்பொருட்டான, பறவைகளும்; அவைகளின் கூண்டும் கூறப்பட்டது. இவ்வாறு (கீழே கூறப்பட்டபடி) நிறுவப்பட்டால்; லக்ஷ்மியின்பொருட்டா கின்றது. அவ்வாறல்லாது மற்றதோ, லக்ஷ்மிக்குக் காரணமாவதில்லை.

ஸ்ரீமானஸாரம் என்ற வாஸ்துசாஸ்திரத்தில்
அணிகளினிலக்கணவிதியெனும்
ஐம்பதாவது அத்யாயம்
முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮

|| 𑌏𑌕𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌹𑍇𑌶𑌾𑌨𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌰𑌜𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌤𑌾𑌮𑍍𑌰𑍇𑌣 𑌶𑌿𑌲𑌯𑌾𑌪𑌿 𑌵𑌾 || ௧ ||

𑌦𑌾𑌰𑍁𑌣𑌾 𑌸𑍁𑌧𑌯𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌭𑌾𑌸𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ।
𑌏𑌤𑍈𑌶𑍍𑌚 𑌨𑌵𑌧𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌦𑌿 𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 || ௨ ||

ஸ்ரீமானஸாரமெனும் சில்பசாஸ்திரத்தில் திரிமூர்த்திலக்ஷணமெனும் ஐம்பத்தொன்ருவது அத்யாயம்.

—o—

1, 2. திரிமூர்த்தி லக்ஷணவிதாநம் என்ற இந்த அத்யாயத்தில்; முதலாவதாக, த்ரிமூர்த்திகளின் பிம்பத்தின் (ப்ரதிமையின்) இலக்கணத்தைச் சொல்லத் தொடங்குகின்ருர்.

பிரம, விஷ்ணு, மகேசுவரர்களின் (பிம்பங்களின்) இலக்கணம் இப்போது கூறப்படுகின்றது. இவர்களின் பிம்பத்தை; சுவர்ணத்திஞலோ, வெள்ளியிஞலோ, தாமிரத்திஞலோ, கருங்கல்லிஞலோ, மரத்தாலோ, சுண்ணும்பிஞலோ, சுக்கான்கற்களாலோ, தாதுக்களாலோ, மண்ணுலோ, இந்த ஒன்பது வகைத் திரவியங்களாலும், ஒன்பதுவிதமாகச் செய்யலாம். இவை முறையே மும்மூன்றும், உத்தம மத்யம அதமமானவை. (இங்கு முறையே, பிம்பத்திரவியங்களில் தங்கம் வெள்ளி தாமிரம் சிறந்தவையென்றும்; சிலை மரம் சுண்ணம் மத்யமமென்றும்; சுக்கான் தாது மண் அதமமென்றும்; திரவியங்களின் உயர்வு தாழ்வு கூறப்பட்டதென அறியவேண்டும்).

𑌚𑌲𑌂 𑌚𑌾𑌪𑍍𑌯𑌚𑌲𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌨𑌵𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍈𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌃 ।
𑌲𑍋𑌹𑌜𑍈𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌯𑌾 𑌚𑍈𑌵 𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌧𑌾𑌤𑍁𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 ॥ ௩ ॥

𑌚𑌲𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑌨𑍍𑌯𑌚𑍍𑌚𑌾𑌪𑌿 𑌚𑌲𑌾𑌚𑌲𑌮𑍍 ।
𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌚𑌾𑌰𑍍𑌧𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌭𑌾𑌸𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௪ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌦𑍃𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌯𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।

3. இங்கு, இந்த ஒன்பது வகைத் திரவியங்களால் நிர்மாணம் செய்யப்பட்ட பிம்பமானது ; சலம் (அசையும் படியானது) என்றும், அசலம் (அசையாதது) என்றும் இருவகைப்பட்டது. தங்கம் வெள்ளி முதலிய லோஹங்களால் செய்யப்பட்டது சலம். ["𑌚𑌲𑌂 𑌚𑍈𑌵𑌂 𑌤𑍁 𑌲𑍋𑌹𑌜𑌮𑍍" என காச்யபீயத்தில் கூறப்பட்டிருக்கின்றது.] சுண்ணம், சுக்கான், தாது, மண் இவைகளால் செய்யப்பட்டது; அசலம்.

4. இவ்வாறு சலத்திற்கேற்பட்ட திரவியம் கூறப்பட்டது. சலாசலம் என்று மற்றொரு வகையும் உண்டு.

[அதாவது:—எந்தத் திரவியத்தால் செய்த பிம்பமானது; சலமாகவும், அசலமாகவும் இருக்கப் பொருத்தமோ அது சலாசலம். கருங்கல், மரம், தாது, ரத்னம் இவை சலாசலம்.] இந்த பிம்பமானது; சித்ராங்கம் என்றும், அர்த்தசித்ராங்கம் என்றும், ஆபாசாங்கம் என்றும் மூன்றுவிதமாகக் கூறப்படுகின்றது.

5. ஸகலவிதமான அவயவங்களும் காணக்கூடிய நிலையிலமைக்கப்பெற்றது எதுவோ ; அந்த பிம்பமானது சித்ரம் எனக் கூறப்படுகின்றது. [இது லோஹம் முதலியவற்றால் செய்யப்பெற்றது. இது சுவர்ணமானால் அசலமாகவும், மற்ற லோஹங்களில் சலமாகவும், அவ்வாறின்றி சலாசலமாகவும் இருக்கலாம்.] பாதி அவயவங்கள் காணக்

सर्वार्धं दृश्यमानं तदर्धचित्रमिति कथ्यते ॥ ௫ ॥

सर्वार्धार्धदृश्यमानं तदाभासमिति स्मृतम् ।
आभासं पञ्चवर्णेन पटभित्तिषु लिख्यते ॥ ௬ ॥

चित्रं चोत्तमं प्रोक्तमर्धचित्रं तु मध्यमम् ।
आभासमधमं प्रोक्तं शिल्पशास्त्रेषु वै तथा ॥ ௭ ॥

उत्तमं सर्वसिद्धिः स्यान्मध्यमं भोगमोक्षकम् ।
अधमं भोगसिद्धिः स्यादीप्सितेनैव कीर्त्यते ॥ ௮ ॥

கூடிய நிலையில் அமைக்கப்பெற்றது எதுவோ; அந்த பிம்பமானது, அர்த்தசித்ரம் எனக் கூறப்படுகின்றது. [இது அசலமானது. சுண்ணத்திஞல் செய்யப்பெற்றது. "अर्धचित्रं तु सुधया" என காச்யபீயத்தில் கூறப் பட்டிருக்கின்றது.]

6. பாதியிற்பாதி காணக்கூடிய அவயவங்களையுடையது எதுவோ; அந்த பிம்பமானது ஆபாஸம் (ஆபாஸ சித்ரம் அல்லது சித்ராபாஸம்) எனக் கூறப்படுகின்றது. இந்த சித்ராபாஸமானது, துணி அல்லது சுவற்றில் பஞ்ச வர்ணத்தால் (தாது விகாரங்களால்) எழுதப்பெற்றது. ["आभासं धातुभिः कार्यम्" என காச்யபீயம்.]

7. இந்த சித்ரம், அர்த்தசித்ரம், ஆபாஸம் எனும் மூன்றுவகைத்த பிம்பங்களிலே; சித்ரமென்பது உத்தம மெனவும், அர்த்தசித்ரம் மத்யமமெனவும், ஆபாஸம் அதம மெனவும், கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, எப்பொழுதும் இவ்வகையறிந்து, செய்யவேண்டும்.

8. இந்த சித்ரம் முதலியவற்றில்; உத்தமமானது, ஸகலவிதமான ஸித்திகளையும் அளிக்கக்கூடியது. மத்யம மானது, போகம் மோக்ஷம் இவ்விரண்டையும் அளிக்கக் கூடியது. அதமமானது, போகஸித்தியை மட்டிலும் அளிக்கக்கூடியது.

ஸ்தா²வரம் ஜங்க³மஞ்சைவ த்³விவித⁴ம் பே³ரமுச்யதே ।
ஜங்க³மஞ்சோத்ஸவம் வித்³யாத³ந்யத் ஸ்தா²வரமிஷ்யதே ॥ ௯ ॥

உத்தமம் லோஹஜம் பி³ம்ப³மத⁴மம் தா⁴துஜம் விது³꞉ ।
ஸ்தா²நகஞ்சாஸநம் சைவ ஶயநம் வைஶாக²ம் வைஷ்ணவம் ததா² ॥ ௰ ॥

ந்ருத்தாதி³ஸர்வபே³ராணாம் த்³ரவ்யமுக்தம் ஸநாதநம் ।

9. இந்த பேரமானது, (பிம்பமானது) ஸ்தாவரம் ஜங்கமம் என, இருவிதமானது எனக் கூறப்படுகின்றது. இவ்விரண்டில் ஜங்கமம் என்பது, உற்சவபேரமென அறியப்படவேண்டும். அஃதல்லாதது ஸ்தாவரமெனக் கூறப்படுகின்றது.

10, 11. லோஹத்தினல் ஏற்பட்ட பிம்பமானது, உத்தமமானது. தாதுவிகாரங்களால் (பஞ்சவர்ணத்தால்) ஏற்பட்ட பிம்பமானது, அதமமானது. [மற்றவை நடுத்தரமானவை.] ஸ்தானகம், ஆஸனம், சயனம், வைசாகம், வைஷ்ணவம், நிருத்தம் முதலிய நிலைகளிலுள்ள ஸகல விதமான பேரங்களுக்கும் (விக்ரஹங்களுக்கும்) எந்தத் திரவியமானது கூறப்பட்டதோ; அந்த அந்தத் திரவியங்களிளுலேயே, பிம்பங்களுக்குத் தனியாகிய பீடத்தைச் செய்யவேண்டும். [இங்கு:—ஸ்தாநகம் என்பது சமமான பாதங்களுடன் நிற்கும் நிலை. ஆஸனம் என்பது உட்கார்ந்த நிலை. சயனம் என்பது படுத்த நிலை. வைஷ்ணவம் என்பது ஒரு காலை சமமாக வைத்துக்கொண்டு, ஒரு காலை முப்பத்தாறு அங்குலங்கள் இடைவெளியிருக்குமாறு நிறுத்தி, சிறிது முன்காலைச் சாய்த்து, கண்டங்கால் சிறிது வளைந்து நிற்கும் நிலை. இந்நிலைக்கு விஷ்ணு தேவதையானமையால், இதற்கு வைஷ்ணவம் எனப் பெயர். வைசாகம் என்பது; முன்போலவே ஒரு காலைச் சமமாக நிறுத்தி, மற்றொரு காலை நாற்பத்தியெட்டு அங்குலங்கள்

தத்ர வைஶாக²ஸம்ஸ்தா²நம் ஸ்தி²தம் பீட²ம் ப்ரகல்பயேத் ॥ ௧௧ ॥

ஸுகா²ஸநே ச ஶயநே ஶிலாபீட²ம் து கல்பயேத் ।
ஏவமேவ க்ருதம் ஸர்வம் ஸுதா⁴ம்ருச்சர்கராதி³பி⁴꞉ ॥ ௧௨ ॥

ப்³ரஹ்மாணம் ப்ரத²மம் த்⁴யாத்வா ப்ரதிமாத்⁴யாநம் ப்ரவக்ஷ்யதே ।
சதுர்பு⁴ஜம் சதுர்வக்த்ரம் த்³விபாத³மஷ்டலோசநம் ॥ ௧௩ ॥

இடைவெளி தோன்ற முன்னிட்டு, பக்கத்தில் முன்கால் இருக்கும்படி நிறுத்தி, துடைகளில் முன்னுடல் இருத்திய தோற்றத்துடன் நிற்கும் நிலை. இந்நிலைக்கு சுப்ரம்ஹண்யன் தேவதையானமையால், இதற்கு வைசாகம் எனப் பெயர். நிருத்தம் என்பது; ஆட்டத்தின் தோற்றநிலை. இது பல்வகைப்பட்டது. இந்நிலைகளின் இலக்கணங்களையும், வேற்றுமைகளையும் நாட்டியசாஸ்திரத்தில் நன்கு காணலாம்.]

12. கால்களைத் தொங்கவிட்டு, உட்கார்ந்திருக்கும் நிலையிலும்; படுத்தநிலையிலும்; தனியாக, சிலையினலாகிய பீடத்தைச் செய்யவேண்டும், இவ்வாறே, சுண்ணம் மண் சுக்கான் இவைகளாலாகிய பேரங்களுக்கு, செய்யப்பட்ட பீடமனைத்தும், அதே திரவியமெனக் கூறப்பட்டிருக்கின்றது. இனி திரிமூர்த்திகளின் த்யானம் கூறப்படுகின்றது.

13. முதன் முதலாவதாகப் பிரமனின் வடிவம், த்யானிக்கப்படுகின்றது. இந்தப் பிரமனின் வடிவம்; நான்கு கரங்களையுடையது. நான்கு முகங்களையுடையது. இரண்டு கால்களையுடையது. எட்டு கண்களையுடையது.

அஷ்டகர்ணஸமாயுக்தம் தந்வேகாக்ருதிஸம்யுதா ।
உத்தமம் தஶதாலேந மாநயேத்தம் ஸுதீர்நக: ॥ ௧௪ ॥

ஸ்தாநகம் சாஸநம் வாபி சீராம்பரதரம் ததா ।
வரதாபயஹஸ்தம் ச ஜடாமகுடமண்டிதம் ॥ ௧௫ ॥

குண்டிகா அக்ஷமாலா ச வாமேதரவாமயோ: கரே ।
ஸ்ருக்ஸ்ருவௌ கார்யதாரணம் வாபி பூர்வவத்வரதாபயாந்விதம் ॥ ௧௬ ॥

ஸ்வர்ணஜாம் ஹிதம் புஷ்பம் குண்டலம் வாத கர்ணயோ: ।
யஜ்ஞஸூத்ரோத்தரீயாதி ஹாராத்யோதரபந்தநம் ॥ ௧௭ ॥
[யஜ்ஞஸூத்ரோத்தரீயாதி ஹாராத்யுதரபந்தநம்]

14. எட்டு காதுகளுடன் கூடியது. உடலோ ஒரே வடிவம்கொண்டது. இந்த வடிவத்தின் அளவை, உத்தம தசதாளத்தினுல் அளக்கவேண்டும்.

15. நின்றநிலேயோ, உட்கார்ந்தநிலேயோ உடையது. மரவுரியையோ, நூல் ஆடையையோ உடுத்திருப்பது. வரம் அபயம் இவ்விரண்டையும் அளிக்கும் உட்கைகளேயுடையது. ஜடாமகுடத்தினுல் அலங்கரிக்கப்பட்டது.

16. வெளிக்கைகளிரண்டிலும்; முறையே இடது வலது கரங்களில், கமண்டலமும் ஜபமாலேயும்; அல்லது ஸ்ருக் ஸ்ருவம் என்ற ஹோமசாதனமான கரண்டிகளோ தரிக்கப்படவேண்டும். முன்போல வரதம் அபயம் இவைகளுடன் கூடியது.

17. காதுகளில் சுவர்ணமயமான கர்ணபுஷ்பமோ; அல்லது, மீன்கள் அடையாளம்கொண்ட குண்டலமோ; அணிவிக்கப்பெறவேண்டும். பூநூல் உத்தரீயம் முதலியவையும், மாலே முதலியவையும், உதரபந்தனம் என்ற வயிற்றுப்பட்டையும் அணிவிக்கப் பெறவேண்டும்.

𑌹𑌾𑌰𑌗𑍍𑌰𑍈𑌵𑍇𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌬𑌾𑌹𑍁𑌮𑌾𑌲𑌾𑌵𑌿𑌭𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑍇𑌯𑍂𑌰𑌕𑌟𑌕𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 ॥ ௧௮ ॥

𑌕𑌟𑌕𑌤𑍍𑌰𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌨𑌳𑌕𑌾𑌕𑌟𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌕𑌟𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌦𑌿 𑌪𑌟𑍍𑌟𑌂 𑌵𑍍𑌯𑌾𑌲𑌨𑍀𑌵𑍍𑌯𑌂 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௯ ॥

𑌰𑌤𑍍𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌯𑌕𑍌 𑌹𑌸𑍍𑌤𑍌 𑌪𑌾𑌦𑍌 𑌜𑌾𑌲𑌕𑌰𑌤𑍍𑌨𑌕𑍌 ।
𑌲𑌲𑌾𑌟𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑌿𑌲𑌕𑌂 𑌚𑌨𑍍𑌦𑌨𑌾𑌗𑌰𑍁𑌣𑍈𑌵 𑌵𑌾 ॥ ௨௰ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌹𑍇𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌳𑌕𑌾𑌂 𑌤𑍁 𑌪𑍀𑌨𑌯𑍇𑌤𑍍 ।

18. இந்தப் பிரமனின் வடிவமானது; மாலை, உபகண்டம் (கழுத்தை யொட்டியமாலை) இவைகளுடன் கூடியதாகவும், பாஹுமாலைகளால் அலங்கரிக்கப்பட்டதாகவும், இருக்கவேண்டும். கேயூரகடகமென்ற தோள் வளை கடகம் முதலியவற்றுடன் மணிபந்தனம் என்ற மணிக்கட்டின் அலங்காரத்தையும் செய்யவேண்டும்.

19. தோள்வளை, ப்ரகோஷ்டவளயம், மணிபந்த கடகம் எனும்படியான மூன்று கடகங்களுடனும் கூடியதாகவும்; கணுக்காலுக்கு மேலே யுள்ள நளகையெனும் கண்டைக்காலிலே கடகத்துடன் (வளயத்துடன்) கூடியதாகவும் இருக்கவேண்டும். அறைஞாண் முதலியவையும், நீவியென்ற, இடையிலணியத்தக்க சலனமென்ற அசைந்தாடும் முகப்புடன் கூடிய இடைப்பட்டிகையும் இருக்கவேண்டும்.

20. இரண்டு கரங்களும், ரத்னமயமான மோதிரங்களுடன் கூடியவை. கால்கள் ரத்னமயமான பாதஸரங்களுடன் கூடியவை. நெற்றியில் வட்டமான திலகம்; சந்தனத்தினுலாகியதாகவோ, அகருவினுலாகியதாகவோ இருக்கவேண்டும்.

21. முழுமையானவுடலும் சுவர்ணவண்ணம் கொண்டிருக்கவேண்டும். நளகம் (கணுக்காலுக்கு மேல்பாகம்)

பார்ஶ்வயோ꞉ ஶக்திகோபேதம் த³க்ஷிணே து ஸரஸ்வதீ ॥ ௨௧ ॥

வாமபார்ஶ்வே து ஸாவித்ரீ ஸர்வாப⁴ரணபூ⁴ஷிதா ।
ஏவம் பிதாமஹம் ப்ரோக்தம் கார்யா தத்த்வஶாஸ்த்ரவித்³பு³தை⁴꞉ ॥ ௨௨ ॥

அத² சதுர்பு⁴ஜம் த்³விநேத்ரம் ச கிரீடமகுடாந்விதம் ।
பீதாம்ப³ரத⁴ரம் ரம்யம் ஶ்யாமவர்ணாங்க³ஶோபி⁴தம் ॥ ௨௩ ॥

ஸர்வே வக்ஷஸ்த²லே கார்ய ஊர்த்⁴வே ஶ்ரீவத்ஸலாஞ்ச²நம் ।
உத்தமம் த³ஶதாலேந அம்ஶாந் ஸந்தா⁴நயேத் ॥ ௨௪ ॥

முடியும்வரை மரவுரியுடன் கூடியிருக்கவேண்டும். இரு பக்கங்களிலும் சக்திகளுடன் கூடியதாக இருக்கவேண்டும். வலது பக்கத்தில் ஸ்ரீ ஸரஸ்வதி இருக்கவேண்டும்.

22. இடது பக்கத்தில் ஸாவித்ரீ இருக்கவேண்டும். இவ்வாறு பிதாமஹனுடைய வடிவமானது கூறப்பட்டது. இதனை அறிஞனவன் சாஸ்திரமறிந்தவனாக இருந்து கொண்டு சகல ஆபரணங்களாலும் அணிவிக்கப்பெற்றதாக ஆக்கவேண்டும்.

23. இனி விஷ்ணுவின் வடிவமானது தியானிக்கப் படுகின்றது. நான்கு கைகளையுடையது. இரண்டு கண்களையுடையது. கிரீடமகுடத்துடன் கூடியது. மஞ்சள் பட்டை தரிப்பது. அழகியது. சியாமளவர்ணத்தினால் (பசும்புல் நிறத்தினால்) உடலின் சோபைகொண்டது.

24. முழுமையான மார்பிலும் மேலே ஸ்ரீவத்ஸமெனும் மருவைச் செய்யவேண்டும். உத்தம தசதாளத்தால் கணக்கிடவேண்டும்.

𑌕𑌟𑌕𑌂 𑌵𑌾 𑌗𑌦𑌾𑌯𑌾𑌂 𑌵𑌾 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
[𑌕𑌟𑌕𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌗𑌦𑌾𑌯𑌾𑌮𑍍]
𑌅𑌭𑌯𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌹𑌸𑍍𑌤𑌂 𑌵𑌾𑌮𑌤𑍋 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ॥ ௨௫ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌾𑌭𑌯𑌂 𑌬𑌾𑌹𑍍𑌯𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌕𑍍𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌶𑌙𑍍𑌖𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌞𑍍𑌚𑌜𑌨𑍍𑌯𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௨௬ ॥

𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 𑌕𑌰𑍍𑌣𑌪𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌕𑌰𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌂 𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌨𑌾𑌸𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾𑌕𑍍𑌷𑌿𑌶𑍋𑌭𑌿𑌤𑌮𑍍 ॥ ௨௭ ॥

𑌹𑌾𑌰𑍋𑌪𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌕𑌮𑍍 ।

25. உட்கைகளிரண்டில் இடதுகரத்தில் கடகம் தரிக்கப்பட்டிருக்கவேண்டும், அவ்வண்ணமே பூமியிற்படியும் படியான கதையெனும் ஆயுதத்தைத் தரித்திருக்கவேண்டும், அல்லது; இக்கரமானது, வரத்தைக் கொடுப்பதாகவும் இருக்கலாம்.

26. வலது கரத்திலோ (உட்கை வலது) அபயம் தரித்திருக்கவேண்டும், வெளிக்கரங்களிரண்டில் வலது கரத்தின் மேல்பாகத்தில் சக்ராயுதத்துடன் கூடியதாயிருக்கவேண்டும். மற்ருென்ருகிய இடதுகரத்திலோ; பாஞ்சஜன்யமென்ற சங்கை தரித்திருக்கவேண்டும்.

27. இரு காதுகளுக்கும் சமமாயிருக்கும்படி கர்ணபத்ரங்களேயோ, மகரகுண்டலங்களேயோ அணிவிக்கவேண்டும். இந்த விஷ்ணுபிம்பமானது, தெளிந்தமுகமுடையது. உயர்ந்த நாசியுடையது. நீண்ட கண்களுடன் விளங்குவது.

28. ஆரம், கழுத்தைச் சுற்றி விளங்கும் உபக்ரீவம், இவைகளுடன் கூடியது. யஞ்ஞசூத்திரத்தினுல் உத்தரீயம்

रत्नोदरबन्धं सौवर्णहारविभूषितम् ॥ २८ ॥

कटकं कटिसूत्रं च केयूरं रत्नपूरितम् ।
रत्नाङ्गुलीयकैर्युक्तं पादजालविभूषितम् ॥ २९ ॥

नळकान्तं चलान्तं स्यात् पीताम्बरं विलम्बितम् ।
शिरश्चक्रं शिरःपृष्ठे युक्तं सर्वाङ्गभूषणम् ॥ ३० ॥

आजानुलम्बमाना स्याद्वनमाला मनोहरा ।
एवं तु विष्णुमूर्तिः स्याच्छक्तियुक्ता तु पार्श्वयोः ॥ ३१ ॥

உடையது. பாஹுமாலைகளால் அலங்கரிக்கப் பெற்றது. ரத்னங்களாலாகிய உதரபந்தம் (வயிற்றைச் சுற்றியபட்டிகை) இருக்கவேண்டும்.

29. கடகத்தையும், அறைஞாண்கயிற்றையும், தோள்வளையையும், அத்தோள்வளையில் ரத்னமயமான பூரிதத்தையும், அணிவிப்பதுடன், ரத்னமோதிரங்களுடன் கூடியதாகவும்; பாதசரங்களினுல் அலங்கரிக்கப் பெற்றதாகவுமாக்கவேண்டும்.

30. இடையிலே மஞ்சள்பட்டாடை இருக்கவேண்டும். இப்பட்டாடை சலாந்தம் முதல் நளகாந்தம்வரை தொங்கவேண்டும். [இடையிலுள்ள பட்டிகையின் முகப்பு =சலம்.] சிரத்திலுள்ள கிரீடத்தின் பின்புறத்தில் சிரஸ் சக்ரம் எனும் வட்டவடிவமான ரத்னமயமான அலங்காரம் இணைந்திருக்கவேண்டும். அவயவபூஷணங்களைத்தும் அணிவிக்கப் பெற்றிருக்கவேண்டும்.

31. இரு புறங்களிலும்; கண்டங்கால் முடிவை அளவாகக்கொண்ட மனோஹரமான வனமாலை இருக்கவேண்டும். இவ்வாருகிய இந்த விஷ்ணுவின் வடிவம்; இருபக்கங்களிலும், சக்திகளுடன் கூடியதாக இருக்கவேண்டும்.

ஶ்ரீம் ஹ்ரீம் தக்ஷிணே பார்ஶ்வே [illegible] வா ।
[illegible] ஸ்தாநகம் வாபி ஆஸநகம் ஶயநம் ததா ॥ ௧௨ ॥

சதுர்புஜம் த்ரிணேத்ரம் ச ஜடாமகுடமண்டிதம் ।
வ்யாக்ர [illegible] ஜாநோரூர்த்வே ச ஸமலங்க்ருதம் ॥ ௧௩ ॥

நீவ்யாம் [illegible] ஸம்யுக்தம் ரக்தவர்ணாங்கஶோபிதம் ।
ஹாரோபக்ரீவ வக்ஷஸ்ஸ்த [illegible] ॥ ௧௪ ॥

கபாலரத்நபந்தம் வா [illegible] வா ।

32. பெயற்கப்பெருத நிலையிலும், பெயற்கப்பெறும் நிலையிலும், இந்த வடிவத்தின் வலதுபுறத்தில் லக்ஷ்மியையும் இடது புறத்தில் பூமியையும் (சக்திகளைச்) செய்ய வேண்டும். இந்த வடிவம்; நின்றநிலையிலோ, உட்கார்ந்த நிலையிலோ, அவ்வாறு படுத்தநிலையிலோ இருக்கலாம்.

33. இப்பொழுது மகேச்வரனின் வடிவம் கூறப்படுகின்றது. நான்குகரங்களையுடையது. மூன்றுகண்களையுடையது. ஜடாமகுடத்தால் அலங்கரிக்கப்பெற்றது. இருமுழங்கால்களுக்குமேலே, புலித்தோலை உடையாகக் கொண்டது. நன்கு அலங்கரிக்கப்பெற்றது.

34. இடையிலுள்ள பட்டிகையில், சலம் என்ற முகப்பு அணியுடன் கூடியது. சிவந்த நிறங்கொண்ட அவயவங்களுடன் விளங்குவது. ஹாரம் உபக்ரீவம் இவைகளை மார்பில் உடையது. தொங்கும் நெற்றிமாலைகளையுடையது.

35. மண்டை ஓடுபோன்றும் ரத்னங்கள் சூழ்ந்து அமைக்கப்பெற்ற ரத்னபந்தத்தையோ அல்லது ருத்ரபந்தத்தையோ (ருத்ராக்ஷவடிவம்கொண்ட பந்தத்தையோ)

ஸபத்ரோதரபந்தம் வா ஸரத்நோதரபந்தகம் ॥ ௩௫ ॥

கடகம் கடிஸூத்ரம் ஸ்யாத்கேயூரஞ்ச ஸபூரிமகம் ।
பாஹுமாலாதிமாலாட்யம் ஸர்வாபரணபூஷிதம் ॥ ௩௬ ॥

வாமே து கும்பபத்ரம் ஸ்யாத்தக்ஷே ஹ்யஹிகுண்டலம் ।
அபயம் தக்ஷகே ப்ரோக்தம் வரதம் வாமஹஸ்தகே ॥ ௩௭ ॥

அபரே வாமஸவ்யே து ஹரிணம் டங்கதாரணம் ।
மகுடம் வாமபார்ஶ்வே து சந்த்ரரேகாஸமந்விதம் ॥ ௩௮ ॥

செய்யவேண்டும். [இது ஜடாமகுடத்தில் அமைக்கப் பெறவேண்டியது.] உதரபந்தமானது (வயிற்றில் விளங் கும் பட்டிகையானது) பத்ரமயமாகவோ (இலைகள் வடிவம் கொண்டதாகவோ) ரத்னமயமாகவோ இருக்கவேண்டும்.

36. இந்த மகேசனின் வடிவத்தில், கடகமும், அறை ஞாணும், பூரிமத்துடன் கூடிய தோள்வளையும், இருக்க வேண்டும். இந்த வடிவமானது; பாஹுமாலை முதலிய மாலைகளுடன் ஸர்வாபரணபூஷிதமாய் இருக்கவேண்டும்.

37. இந்த வடிவத்தின் இடது காதில் தொங்கும் கர்ணபத்ரம் (தோடு) இருக்கவேண்டும். வலது காதில் பாம்புகுண்டலம் இருக்கவேண்டும். உட்கைகளில் வலது புறத்தில் அபயம் இருக்கவேண்டும். இடது புறத்தில் வரதம் இருக்கவேண்டும்.

38. மற்ற இருகரங்களில்; இடது கரத்தில் மானும், வலது கரத்தில் டங்கமெனும் பரசுவும் இருக்கவேண்டும். இடது புறத்தில் சந்திரகலையுடன் கூடிய கிரீடம் இருக்க வேண்டும்.

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇𑌽𑌰𑍍𑌕𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌶𑍍𑌚 𑌨𑌾𑌗𑌂 𑌗𑌙𑍍𑌗𑌾𑌂 𑌜𑌟𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 ।
𑌦𑍂𑌰𑍍𑌵𑌾𑌭𑌿𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌸𑌿𑌨𑍍𑌦𑍂𑌰𑌂 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌚 𑌕𑌿𑌰𑍀𑌟𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 ॥ ௩௯ ॥

𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌂𑌹𑌿𑌤𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌂 𑌲𑌲𑌾𑌟𑍇 𑌚𑍈𑌕𑌨𑍇𑌤𑍍𑌰𑌯𑍁𑌕𑍍 ।
𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌕𑌾𑌲𑌕𑍂𑌟𑌵𑌿𑌷𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௪௰ ॥

𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌰𑌤𑍍𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌯𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌾𑌸𑌨𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌵𑌾 𑌨𑌿𑌵𑍇𑌶𑌾𑌸𑌨𑌾𑌸𑌿𑌤𑌮𑍍 ॥ ௪௧ ॥

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌰𑍁𑌦𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀 ।
𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑍇𑌨 𑌮𑌾𑌨𑌯𑍇𑌤𑍍𑌤𑌂 𑌸𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௪௨ ॥

39. வலது புறத்தில் எருக்கமலர்களுடன் பாம்பு கங்கை இவைகள் சடைநடுவே இருக்கவேண்டும். இடது புறத்துக் கிரீடத்திடையே; அருகம்புற்களுடன் தாமரை மலரும், சுவர்ணஸிந்தூரமும் இருக்கவேண்டும்.

40. இந்த வடிவமானது; நடுவே இணைந்த முகத்தையுடையதாயிருக்கவேண்டும். நெற்றியில் ஒரு கண்ணுடன் கூடியதாகவும் இருக்கவேண்டும். கழுத்தின் வலது பக்கத்தில் காலகூடமெனும் விஷத்துடன் கூடியது.

41. பூணூலை உத்தரீயமாகக்கொண்டது. எல்லா விரல்களிலும் ரத்தினமோதிரங்களையுடையது. பாதசரத்துடன் விளங்குவது. இந்த வடிவம் நின்றகோலத்திலோ, உட்கார்ந்தகோலத்திலோ இருக்கலாம்.

42. இவ்வாறு ருத்திரனின் வடிவம் இருக்கவேண்டும். இடது புறத்தில் பார்வதி இருக்கவேண்டும். இந்த வடிவத்தின் அளவை, உத்தமதசதாளத்தில் அளக்கவேண்டும்.

𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑌕𑌮𑍍 ।
𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑌂 𑌮𑌹𑌾𑌪𑍀𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௪௩ ॥

𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌤𑍋𑌰𑌣𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑍇𑌣 𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌏𑌵𑌨𑍍𑌤𑍁 𑌰𑍁𑌦𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌣𑍍𑌵𑌾𑌦𑍇𑌃 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌧𑌿𑌵𑌤𑍍𑌤𑌤𑌃 ॥ ௪௪ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌨𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌨𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌪𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௪௫ ॥

𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑌵𑌶𑌾𑌤𑍍𑌤𑍁 𑌯𑌤𑍍
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌸𑌕𑌲𑌾𑌨𑌾𑌂𑌮𑌪𑍇𑌕𑍈𑌃 ।

43. எல்லா தேவர்களுடைய தேவிமார்களுக்கும், மத்யமதசதாளம் உரித்ததாகும். திரிமூர்த்திகளுக்கும் பத்மபீடத்தையோ, மகாபீடத்தையோ, பீடமாக இணைக்க வேண்டும்.

44. அந்த பீடத்தில் ப்ரபாவதோரணத்தையோ, கல்பவிருக்ஷத்தையோ இணைந்ததாக ஆக்கவேண்டும். இவ்வாறு ருத்திரன் விஷ்ணு முதலியோருக்கு விதி முறையே அதனைச் செய்யவேண்டும். அதன்பிறகு;

45. இவ்வாறு ஸர்வ அலங்காரங்களுடனும் கூடிய வனாக; மூன்று வடிவம் தாங்கிய தேவனை, தியானம் செய்து கொண்டு, இந்த பிரம்ஹவிஷ்ணு மகேசர்களுக்கு, இங்கு கூறாதிருக்கும் மற்றவைகளையும், சாஸ்திரமுறையுடன் இணைக்கவேண்டும்.

46. பிரம, விஷ்ணு, மகேசர்களின் மூர்த்தியின் அள வானது; தசதாளவசத்தினால் உத்தமமாகக் கருதப்பட்ட தென்பதானது, ஸ்தாவரத்தில் (மூலஸ்தான விக்ரஹ விஷயத்தில்) கூறப்பட்டபோதிலும், ஜங்கமத்திலும் (உற்

𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑍇 𑌚 𑌜𑌙𑍍𑌗𑌮𑍇
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌃 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑍈𑌃 ॥ ௫௧ ॥

[𑌉𑌕𑍍𑌤𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌶𑌾𑌤𑍍𑌤𑌸𑍍𑌯
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌶𑌿𑌵𑌾𑌦𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌷𑍁 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌾𑌮𑍍 ।
𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌖𑍍𑌯𑍇 𑌜𑌙𑍍𑌗𑌮𑍇 𑌚 𑌸𑍍𑌥𑌾-
𑌪𑌿𑌤𑍇 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌃 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌯𑌥𑌾𑌕𑍍𑌤𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑍍𑌯 । ௫௧ ॥]

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌤𑍍𑌰𑌿𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮

𑌏𑌕𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

சவ விக்ரஹத்திலும்) அதுவே அளவாக இருக்கவேண்டும். இந்த அளவுகொண்ட ஸ்தாவர ஜங்கம பிம்பங்களைச் சிற்பிகளைக்கொண்டு, மகரிஷிகளின் வாக்யத்தை மீருத முறையில் செய்வாயாக.

மானஸாரமகரிஷியால் செய்யப்பட்ட மானஸாரமெனும்
சில்பசாஸ்திரத்தில் திரிமூர்த்திலக்ஷணமெனும்
ஐம்பத்தொன்ருவது அத்யாயம்
முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮

॥ 𑌦𑍍𑌵𑌿𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌾𑌨𑌵𑌿𑌧𑌿𑌃 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌶𑍈𑌵𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌞𑍍𑌚𑍈𑌵 𑌕𑌾𑌲𑌾𑌮𑍁𑌖𑌮𑌹𑌾𑌵𑍍𑌰𑌤𑍇 ॥ ௧ ॥

𑌵𑌾𑌮𑌞𑍍𑌚 𑌭𑍈𑌰𑌵𑌞𑍍𑌚𑍈𑌵 𑌨𑌾𑌮 𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌷𑌡𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ।
𑌸𑌮𑌕𑌰𑍍𑌣𑌂 𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌂 𑌶𑌿𑌵𑌾𑌙𑍍𑌕𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌤𑌥𑌾 ॥ ௨ ॥

𑌏𑌤𑌚𑍍𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌞𑍍𑌚 𑌯𑍋𑌗𑍍𑌯𑌕𑌮𑍍 ।
𑌸𑌮𑌕𑌰𑍍𑌣𑌂 𑌦𑍍𑌵𑌿𑌜𑌨𑍍𑌮𑌾𑌨𑌾𑌂 𑌭𑍂𑌪𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௩ ॥

ஸ்ரீமானஸாரமெனும் சில்பசாஸ்திரத்தில்
லிங்கவிதாநம் எனும்
ஐம்பத்திரண்டாவது அத்யாயம்.

—o—

1. இப்பொழுது; லிங்கத்தின் அளவின் முறையும் அதனிலக்கணமும் கூறப்படுகின்றது. லிங்கத்தின் பெயர், சைவமென்றும், பாசுபதமென்றும், காலாமுகமென்றும், மகாவ்ரதமென்றும்,

2. வாமமென்றும், பைரவமென்றும் ஆறுவகைப் பட்டதாம், அவ்வாறே; ஸமகர்ணம், வர்த்தமானம், சிவாங்கம், ஸ்வஸ்திகம் என்ற;

3. இந்த நால்வகைப்பட்ட லிங்கமானது; அந்தணர் முதலியவர்களுக்குப் பொருத்தமானது. ஸமகர்ணமென்பது, அந்தணர்களுக்கும்; வர்த்தமானகமென்பது, அரசர்களுக்கும்;

𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 𑌶𑌿𑌵𑌾𑌙𑍍𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌞𑍍𑌚 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 𑌦𑍋𑌷𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௪ ॥

𑌶𑌿𑌵𑌾𑌙𑍍𑌕𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌭𑍂𑌪𑌸𑍍𑌯 𑌯𑍋𑌗𑍍𑌯𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌞𑍍𑌚 𑌶𑌿𑌵𑌾𑌙𑍍𑌕𑌞𑍍𑌚 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌯𑍋𑌗𑍍𑌯𑌕𑌮𑍍 ॥ ௫ ॥

𑌶𑍁𑌦𑍍𑌧𑌗𑌰𑍍𑌭𑌗𑍃𑌹𑍇 𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑍇 ।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍋𑌦𑌯𑍇 𑌪𑌾𑌦𑍇 𑌤𑍁𑌙𑍍𑌗𑌮𑌾𑌨𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥ ௬ ॥

𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌶𑍍𑌚𑍈𑌵 𑌯𑌜𑌮𑌾𑌨𑍋𑌦𑌯𑍇𑌨 𑌚 ।
𑌅𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௭ ॥

4. சிவாங்கமென்பது, வைசியர்களுக்கும்; ஸ்வஸ்திகமென்பது, மற்றவர்களுக்கும் ஏற்றதாகின்றது. அந்தணர்களுக்கு எல்லா விதமான லிங்கத்தையும், ஏற்றதாகக் கொள்ளலாம். குற்றமொன்றுமில்லை.

5. அரசனுக்கு; சிவாங்கம், ஸ்வஸ்திகம் இவ்விரண்டு லிங்கமும் பொருத்தமானதெனக் கூறப்பட்டிருக்கின்றது. வைச்யர்களுக்கோ தங்களுக்குக் கூறப்பட்ட சிவாங்கமும், ஸ்வஸ்திகமும் பொருத்தமென்றறியவும்.

6. இப்பொழுது லிங்கத்தின் துங்கமானத்தை (உயரத்தை) எட்டு விதமாகக் கொள்ளலாமெனக் கூறுகின்றார். அதாவது; சுத்தமான கர்பகிருஹத்தின் அகலத்தாலும், சுத்தத்வாரத்தின் அகலத்தாலும், ப்ராஸாதத்தின் அகலத்தாலும், அதிஷ்டானத்தின் உயரத்தாலும், பாதத்தின் உயரத்தாலும்,

7. ஹஸ்தமானத்தாலும், அங்குலமானத்தாலும், யஜமானனின் உயரத்தாலும், லிங்கத்தின் துங்கமானமானது; இவ்வாறு எட்டுவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது. கீழே கூறிய எட்டு விதங்களில் ஒவ்வொன்றும், பல்வேறு விதமுடையதாக ஆகிவிடும்,

ஶ்ரேஷ்டாதி ச கநிஷ்டாந்தம் ப்ரத்யேகம் த்ரித்ரிமாநகம் ।
கர்பே நவவிஸ்தாரே து ஏகைகம் லிங்கதுங்ககம் ॥ ௮ ॥

கேசித்து கர்பாகாரே து நவபாகவிபாஜிதே ।
ததேகாஶீதிலிங்கம் ஸ்யாத் கந்யஸாத்யமாநகம் ॥ ௯ ॥

ப்ரத்யேகம் த்ரிதா மாநே ஏகைகம் லிங்கதுங்ககம் ।

8. ஒவ்வொன்றும் பலவிதமுடைய தென்ப தெவ்வாறோ? எனில்; கூறுகின்றார். உத்தமம் முதல் அதமம் வரையுள்ள ஒவ்வொன்றும்; உத்தம, மத்யம, அதம மெனும் மும்மூன்று அளவு கொண்டதாம். [ஆகவே; உத்தம, மத்யம, அதமங்களிலும், உத்தம, மத்யம, அதம மெனும் பிரிவினால், ஒன்பது வகைத்ததெனக் கருத்து.] இப்பொழுது லிங்கத்தின் உயரத்தைக் கணக்கிடும் எட்டு மானங்களில்; கர்பக்ருஹமானம் கூறப்படுகின்றது. கர்பக்ருஹத்தின் அகலத்தை யொன்பது கூறுகளாக்கி, அதனிலொவ்வொன்றும் லிங்கத்தின் உயரமெனக் கொள்ளவேண்டும். [ஒவ்வொன்றுமென்றால்; ஒன்று, இரண்டு, மூன்று என, ஒன்பது பங்கு வரை உயரமுடையது, ஒன்பது விதங்களெனக் கருத்து.]

9. சிலர் இவ்வாறு கூறுகின்றனர். அதாவது; கர்பக்ருஹத்தின் அகலத்தை, ஒன்பது கூறுகளாக்கி, அதனிலும் ஒரு பாகத்தை ஒன்பது கூறுகளாக்கி, முறையே ஒவ்வொரு பாகமும் லிங்கதுங்கமாக; எண்பத்தொருவகைத்தது லிங்கத்தின் உயரமெனவும் முறையே மும்மூன்றும் அதம, மத்யம, உத்தமமெனவும் கூறுகின்றனர்.

10. அந்த ஒன்பது பாகங்களில், ஒவ்வொரு பாகமும்; அதம, மத்யம, உத்தமமென மூவகை அளவானது. ஒவ்வொன்றும் லிங்கத்தின் உயரமாம். இதைத் தவிர;

𑌕𑌨𑍍𑌯𑌸𑌂 𑌗𑌰𑍍𑌭𑌤𑌾𑌰𑌾𑌯𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௰ ॥

𑌗𑌰𑍍𑌭𑌤𑌾𑌰𑌸𑌮𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑌕𑌮𑍍 ।
𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௧௧ ॥

𑌶𑍁𑌦𑍍𑌧𑌦𑍍𑌵𑌾𑌰𑍋𑌦𑌯𑌂 𑌨𑌵𑌭𑌾𑌗𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌭𑌾𑌜𑌕𑌮𑍍 ।
𑌏𑌕𑍈𑌕𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌧𑌮𑌾𑌦𑍀𑌨𑌿 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 ॥ ௰௨ ॥

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌮𑌾𑌨𑌾𑌷𑍍𑌟𑌾𑌦𑌶 𑌚 𑌤𑍁𑌙𑍍𑌗𑌕𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌤𑍁 𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑍋𑌕𑍍𑌤𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௰௩ ॥

கர்பக்ருஹத்தின் அகலத்தில் பாதி உயரமாகக்கொண்ட லிங்கத்தின் துங்கம், அதமமெனவும்; முக்கால் பங்கு உயரமாகக்கொண்ட லிங்கத்தின் துங்கம், மத்யமமெனவும்.

11. சமமான உயரம் கொண்ட லிங்கத்தின் துங்கமானது, உத்தமமெனவும்; லிங்கதுங்கம் மூவகைப்பட்டதாகும். இவ்வாறு; கர்பக்ருஹத்தின் தாரமானத்தால், லிங்கத்தின் உயரத்தை நிறுவவேண்டும்.

12. சுத்தமானத்வாரத்தின் (வாயிற்படியின்) உயரத்தையோ; அல்லது அகலத்தையோ; ஒன்பது பாகங்களாகச் செய்து, அதனில் ஒவ்வொன்றையும் லிங்கத்தின் உயரமாகக் கொள்ளவேண்டும். அதமம் முதலிய பிரிவுகள் முன்கூறியதுபோலாகும்.

13. அகலத்திலும், நீளத்திலும் ஒவ்வொன்றிலும் ஒன்பது விதங்கள். ஆகவே; இரண்டும் சேர்ந்து, வாயிற்படியளவு காரணமாக ஏற்படும் லிங்கதுங்கமானது பதினெட்டுவகைகள் கொண்டது. அதனிலும் ஒவ்வொன்றிலும் அதம, மத்யம, உத்தமமென மூன்று விதமாக அளவு; ஏற்படுகின்றது. ப்ராஸாதத்தின் அகலத்தினுல் ஏற்படும் லிங்கதுங்கமானது; கர்பக்ருஹத்தின் அகலத்தினுல் ஏற்படும் பேதத்தைக் கூறியது போன்றதேயாகும்.

அதிஷ்டானஸமம் ஶ்ரேஷ்டம் த்ரிபாதம் மத்யமம் பவேத் ।
ததர்த்தம் கன்யஸம் ப்ரோக்தம் த்ரிவிதம் லிங்கமீரிதம் ॥ ௨௪ ॥

அதவா நவபாகம் ஸ்யாதிஷ்டானோன்னதஸ்ய து ।
கன்யஸாத்யுத்தமாந்தம் ஸ்யாத் ப்ரத்யேகம் ஸப்தவிம்ஶத்பவேத் ॥ ௨௫ ॥

பாதோதயம் நவாம்ஶம் து நவதா லிங்கமானகம் ।
ததேகம் வேதபாகே து சதுர்பாகவிபாஜிதே ॥ ௨௬ ॥

ஏகைகம் லிங்கதுங்கம் ஸ்யாத் ஷட்த்ரிம்ஶல்லிங்கதுங்ககம் ।

14. அதிஷ்டானத்தின் உயரத்தினுல் கணக்கிடப்படும் லிங்கதுங்கமானது; அதிஷ்டானத்தின் உயரத்திற்குச் சமமானவுயரம் கொண்டதானுல், அது உத்தமம். முக்கால் பங்கு உயரம்கொண்டதானுல், மத்யமம். அதனில் பாதி உயரம் கொண்டதானுல், அதமம் என; அதிஷ்டானத்தின் உயரத்தால் கணக்கிடப்படும் லிங்கவுயரம் மூன்று விதமுள்ளதாகக் கூறப்பட்டிருக்கின்றது; இவ்வாறு ஒரு வகை கூறப்பட்டது.

15. அல்லது; அதிஷ்டானத்தின் உயரத்தை, ஒன்பது கூறுகளாக்கி, அதனிலொவ்வொன்றும் லிங்கதுங்கமெனக்கொண்டு, ஒன்பது லிங்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இவைகளில் ஒவ்வொன்றிலும் முன்கூறியதுபோல, அதம மத்யம உத்தமமென பேதம் ஏற்படுகின்றது.

16. தூணின் உயரத்தை ஒன்பது பங்குகளாகக் கொள்ள, ஒன்பதுவிதமாக லிங்கத்தின் உயர அளவு, ஏற்படுகின்றது. இவ்வாறு ஏற்பட்ட அதுவும்; அதனில் ஒரு பாகத்தை நான்கு பங்குகளாக்கி, அவைகளில்

17. ஒவ்வொன்றும்; லிங்கத்தின் உயர அளவாகும். ஆகவே, பாதோதயத்தால் ஏற்படும் லிங்கதுங்கமானது; முப்பத்தி ஆறு விதம் கொண்டது. இவையனைத்தும்

कन्यसाद्युत्तमान्तं स्यात्सर्वं प्रागुक्तवन्नयेत् ॥ १७ ॥

हर्म्योत्तुङ्गं नवांशं स्यात्कन्यसादि त्रयं त्रयम् ।
एवं तु नवलिङ्गं स्यान्नवभेदोदयं भवेत् ॥ १८ ॥

केचिद्विमानतुङ्गे तु नन्दनन्दांशकं भवेत् ।
एकैकं लिङ्गतुङ्गं स्यान्नन्दनन्दोदयं भवेत् ॥ १९ ॥

कन्यसाद्युत्तमान्तं स्यात्पूर्ववल्लिङ्गमिष्यते ।
एकहस्तं समारभ्य हस्तैकेन प्रवर्धयेत् ॥ २० ॥

एकैकं लिङ्गतुङ्गं स्यान्नवहस्तावसानकम् ।
एवं तु नवतुङ्गं स्यात्कन्यसादि त्रयं त्रयम् ॥ २१ ॥

அதம மத்யம உத்தமமென பேதம் கொண்டவை. இந்த பேதங்களை முன்கூறியதுபோலச் செய்துகொள்ள வேண்டும்,

18. ஹர்ம்யத்தின் உயரம், ஒன்பது பாகங்களாக்கப் படவேண்டும். அவைகளில் முறையே மும்மூன்றும், அதம, மத்யம, உத்தமமாகும். இவ்வாருன பாகங்களால் ஏற்படும் அவ்வளவுகொண்ட லிங்கதுங்கங்களும் ஒன்ப தாம். இந்த ஒன்பதும் ; தன்னிடைப்பட்ட ஒன்பதுவகை துங்கத்தையுடையவை ஆயின.

19. சிலர், விமானத்தின் உயரத்தில், ஒன்பது பாகங் களில், ஒவ்வொன்றையும் ஒன்பதாகக்கொண்டு, ஒவ் வொரு லிங்கதுங்கமும் ஏற்படுகின்றது. ஆகவே இவ்வா ருகிய லிங்கதுங்கமானது, எண்பத்தொரு வகைத்தாகும். எனக் கூறுகின்றனர். இந்த லிங்கம் ஒவ்வொன்றும் முன் போல, அதமம் முதல் உத்தமம் ஈருனது ; எனக் கருதப் படுகின்றது,

20, 21. ஒரு கரம் தொடங்கி, ஒவ்வொரு கரம் கூட்டு தலால், ஒன்பது கரங்களின் முடிவுவரை ; ஒவ்வொன்றும், லிங்கதுங்கமாகும். இந்த ஒன்பது லிங்கதுங்கங்களிலும் முறையே மும்மூன்றும் அதம மத்யம உத்தமங்களாம்.

करं त्रिपादमारभ्य तत्पादेन विवर्धनात् ।
पादोनसप्तहस्तान्तं लिङ्गतुङ्गं नवधा मतम् ॥ २२ ॥

अथवा हस्तमारभ्य अर्धार्धेन विवर्धनात् ।
सार्धवेदकरान्तं स्यात् नवधोदयं भवेत् ॥ २३ ॥

पादहस्तं समारभ्य पादहस्तेन वर्धनात् ।
पादाधिकद्विहस्तान्तं नवधा तु लिङ्गवत् ॥ २४ ॥

जातिः छन्दं विकल्पं च आभासं तु चतुर्विधम् ।
एकहस्तविभागस्थं कन्यसादि त्रयं त्रयम् ॥ २५ ॥

22. முக்கால் கரம் தொடங்கி, முக்கால் முக்காலாகக் கூட்டுதலால், ஆறேமுக்கால் கரம் முடியும் வரை, ஏற்படும் ஒன்பது பேதங்களும் லிங்கதுங்கங்களாம். இவைகளில் மும்மூன்றும் முன்கூறியவைபோன்றவை.

23. அல்லது; கரத்தில் பாதி தொடங்கி, அரை அரையாகக் கூட்டுதலால், நாலரைக் கரம் முடியும் வரை, ஏற்படும் ஒன்பது பேதங்களும்; ஒன்பது வகை லிங்க துங்கங்களாம்.

24. கால் கரம் தொடங்கி, கால்காலாகக் கூட்டுதலால், இரண்டேகால் கரம் முடியும் வரை; ஏற்படும் ஒன்பது பேதங்களும், ஒன்பது வகை லிங்கதுங்கங்களாம். மற்றவை முன்கூறியதுபோல.

25. ஜாதி, சந்தம், விகல்பம், ஆபாஸம் என்று நால் வகைப்பட்ட ஹர்ம்யத்தின் உயரமானது; ஒரு கரம் என்ற முறையால், ஒன்பது பாகங்களாக்கப்பட்டால்; அதனிலொவ்வொன்றும் லிங்கதுங்கமாம். இதனில் மும்மூன்றும் முறையே அதம மத்யம உத்தமமானவை. இவ்வாறு சந்தம் முதலிய ஹர்ம்யங்களின் மானம் முப்பத்தியாறு, அதனுலேற்படும் லிங்கதுங்கமும் முப்பத்தியாறு.

அங்குலீநாம் து மாநம் ஸ்யாத் உத்க்ருஷ்டம் லிங்கதுங்ககம் ।
ஏகாதஶ ஸமாரப்ய த்வித்வ்யங்குலவிவர்தநாத் ॥ ௨௬ ॥

ஸப்தவிம்ஶாங்குலாந்தம் ஸ்யாந்நவதா லிங்கதுங்ககம் ।
த்வாதஶாங்குலமாரப்ய ஷட்ஷடங்குலவர்தநாத் ॥ ௨௭ ॥

ஷஷ்ட்யங்குலாவஸாநம் ஸ்யாந்நவதா லிங்கமாநகம் ।
பஞ்சவிம்ஶம் ஸமாரப்ய ஷட்ஷடங்குலவர்தநாத் ॥ ௨௮ ॥

த்ரிஸப்ததிகமாத்ராந்தம் நவதா லிங்கதுங்ககம் ।
ஸர்வேஷாம் கந்யஸம் ஶ்ரேஷ்டம் பர்யந்தாங்குலமாநகம் ॥ ௨௯ ॥

26. இவ்வாறு ஹஸ்தமானத்தினுல் லிங்கதுங்கத்தைக் கூறியபிறகு; அங்குலமானத்தினுல் லிங்கதுங்கத்தைக் கூறுகின்ருர். பதினேரு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுதலால், இருபத்தியேழு அங்குலங்கள் முடியும் வரை, ஏற்படும் ஒன்பது விதங்களும் லிங்கதுங்கமாம்.

27. அல்லது; பன்னிரண்டு அங்குலங்கள் தொடங்கி. ஆறு ஆறு அங்குலங்கள் கூட்டுதலால், அறுபது அங்குலங்கள் முடியும்வரை, ஏற்படும் ஒன்பது விதங்களும் லிங்கதுங்கமாம்.

28. அல்லது; இருபத்தைந்து அங்குலங்கள் தொடங்கி, ஆறு ஆறு அங்குலங்கள் கூட்டுதலால், எழுபத்திமூன்று அங்குலங்கள் முடியும்வரை, ஏற்படும் ஒன்பது விதங்களும் லிங்கதுங்கமாம்.

29. இவ்விதமான பர்யந்தாங்குளமானமானது, (இது முதல் இது வரையென குறிக்கப்பட்ட அங்குல அளவானது) எல்லாவற்றிலும் எது குறைந்த அளவுள்ளதோ; அது சிரேஷ்டமெனக் கொள்ளப்படுகின்றது.

யஜமாநஸ்ய மேட்ராந்தம் நாப்யந்தம் ஹ்ருதயாந்தகம் |
ஸ்தநாந்தம் பாஹுஶீர்ஷாந்தம் ஹந்வந்தம் நாஸிகாந்தகம் || ௩௦ ||

நேத்ராந்தம் ஸமதுங்கம் ஸ்யாந் நவலிங்கோதயம் பவேத் |
அதவா துங்கமாநே து நவபாகவிபாஜிதே || ௩௧ ||

ஏகைகம் லிங்கதுங்கம் ஸ்யாத் கந்யஸாதி த்ரயம் த்ரயம் |
நவத்யம்ஶவிதம் லிங்கம் யஜமாநவஶாதிதை: || ௩௨ ||

30. இப்பொழுது யஜமானனின் உயரத்தினுல் ஏற்படும் லிங்கதுங்கங்களைக் கூறுகின்ருர். யஜமானனின் ஆண்குறி முடிவு வரை ஒன்று, நாபியின் முடிவு வரையொன்று, இருதயத்தின் முடிவுவரையொன்று, ஸ்தனங்களின் முடிவுவரையொன்று, தோள்களின் முடிவுவரையொன்று, தாடைகளின் முடிவுவரையொன்று. மூக்கின் முடிவுவரையொன்று, கண்களின் முடிவுவரையொன்று, சமமான உயரமுடையதொன்று என; ஒன்பது லிங்க துங்கங்கள் ஏற்படுகின்றன.

31, 32. அல்லது; யஜமானனின் உயரத்தை ஒன்பது பாகங்களாகச் செய்து, அவைகளிலொவ்வொன்றும் லிங்கதுங்கமென, ஒன்பது லிங்கதுங்கங்களைக் கொள்ளலாம். இவைகளில் முறையே மும்மூன்றும், அதம மத்யம உத்தமமென ஏற்படுகின்றது. பின் கூறியதான ஒன்பது விதங்களில்; ஒவ்வொரு பாகத்தையும் ஒன்பது கூறுகளாக்கி, அவைகளிலொவ்வொன்றும் லிங்கதுங்கமெனக் கொண்டால்; யஜமானனின் வசத்தால் ஏற்படும் லிங்க துங்கங்கள், தொண்ணூறு வகை கொண்டன; எனக் கருதுகின்றனர்.

பஹ்வ்யா ஸ்தாபயேல்லிங்கம் வா நவலிங்கஸ்ய ஸங்க்யயா ।
அத ஹஸ்தாதிமாநேந ஸர்வலிங்கேஷு கல்பயேத் ॥ ௩௩ ॥

பஞ்சதஶாங்குலம் மாநம் யாவந் நவலிங்ககே ।
ஸப்ததஶாங்குலாந்தஞ்ச பஞ்சதஶாங்குலமாரபேத் ॥ ௩௪ ॥

ஸ்தாபயேத் பஞ்சலிங்கம் து தத ஊர்த்வம் ந து காரயேத் ।
த்ரிபாதகராதூர்த்வம் பாதிகம் வர்த்தநந்ததே ॥ ௩௫ ॥

ஸர்வேஷாமேகஹர்ம்யம் து ஏகைகலிங்கே ஸமந்தகம் ।

33. இப்பொழுது, அனேக லிங்கங்களை ஸ்தாபிக்கும் முறை கூறப்படுகின்றது. பல லிங்கங்களை ஸ்தாபிக்க வேண்டியதானல்; ஸ்தாபிக்கவேண்டிய லிங்கங்கள் ஒன்பது லிங்கங்களானல்; அங்குல எண்ணிக்கையினலும், அல்லது கரமானத்தாலும், எல்லா லிங்கங்களையும் நிறுவலாம்.

34. ஸ்தாபிக்கப்படவேண்டியவை பஞ்சலிங்கங்களானல்; அப்போது, அங்குலத்தினற் கூறப்பட்ட நவலிங்கங்களில், பதினைந்து பதினேழு அங்குலங்கள் கொண்ட அளவே; பதினைந்து அங்குலங்கள் தொடங்கி, பதினேழு அங்குலங்கள் முடிய எற்றனவாம்.

35. இவ்வாறே, பஞ்ச (ஐந்து) லிங்கங்களை ஸ்தாபிக்கவேண்டும். அதற்கு மேலே அளவுகொண்டதாகச் செய்யக்கூடாது. ஹஸ்தமானத்தினல் பஞ்சலிங்கங்களை ஸ்தாபிப்பதானல்; முக்கால் கரம் தொடங்கி, முக்கால் முக்கால் கூட்டி, மூன்றேமுக்கால் முடிய மேலே அதிகம் செய்யவேண்டும்.

36. இவ்வாருகிய பஹுலிங்க ஸ்தாபந விஷயத்தில் எல்லா லிங்கங்களுக்கும் ஆலயம் ஒன்றே. ஒவ்வொரு லிங்கஸ்தாபன விஷயத்திலும் ஆலயம் ஒன்றே. (ஒவ்

बहूनां सर्वलिङ्गेषु त्रिकर्णं न कारयेत् ॥ ३६ ॥

द्विकर्णं बहुलिङ्गे तु त्रिकर्णमेकलिङ्गके ।
लिङ्गदैर्घ्यमिति प्रोक्तं तद्विस्तारमिहोच्यते ॥ ३७ ॥

त्रिपञ्चाङ्गुलपर्यन्तं विस्तृतं बहुलिङ्गके ।
अथवा दैर्घ्यमाने त्रिचतुष्पञ्चभागिकम् ॥ ३८ ॥

तदेकांशविस्तारं बहुलिङ्गविस्तारकम् ।

வொன்றிற்கும் ஆலயம் ஒன்று எனக் கருத்து). பல லிங்கங்களாக ஸ்தாபனம் செய்யும் எல்லாவித லிங்கங்களுக்கும் திரிகர்ணத்தை செய்யக்கூடாது. [இந்த திரிகர்ணமென்பது; லிங்கத்தின் உயரத்தில் மூன்று பாகங்கள். ஒன்று வட்டவடிவமானது, மற்ருென்று எட்டு கோணமுடையது, மற்ருென்று நான்கு கோணமுடையது. இவை முறையே சிவ விஷ்ணு பிரம்ஹாம்சமானவை.]

37. பல லிங்கங்களை ஸ்தாபிக்கவேண்டிய விஷயத்தில்; இரண்டு பாகமுடையதாகவே (ப்ராம்ஹாம்சம் நீங்கலாக) ஸ்தாபிக்கவேண்டும். ஒரே லிங்கத்தின் ஸ்தாபனமாயின்; மூன்று பாகமுடையதாக ஸ்தாபிக்கவேண்டும். இவ்வாறு லிங்கத்தின் உயரத்தைப்பற்றி கூறப்பெற்றது. இனி அதனகலம்பற்றி இங்கு கூறப்படுகின்றது.

38. பல லிங்கங்களின் ஸ்தாபன விஷயத்தில்; மூன்று முதல் ஐந்து அங்குலங்கள் முடிவுவரை லிங்கங்களின் அகலம் இருக்கலாம். அல்லது; லிங்கத்தின் உயர அளவில், மூன்றுலொன்று நான்கிலொன்று ஐந்திலொன்று என மூவகையில் அகலம் இருக்கலாம்.

39. மேற்கூறிய அந்த அந்த அளவுகளைக் காட்டிலும், ஒரு அங்குலம் அதிகமாக அகலமுடையதான பஹு லிங்கங்களாயின்; அவை (நான்கு ஐந்து ஆறு அங்குலங்

நாகரம் த்ராவிடம் சைவ வேஸரஞ்ச த்ரிதா மதம் ॥ ௩௯ ॥

ஷட்ஸப்தாஷ்டாங்குலம் சைகலிங்கதாரமிதி ஸ்ம்ருதம் ।
நவபங்க்திருத்ராந்த்யம் வைகலிங்கவிஶாலகம் ॥ ௪௰ ॥

த்வாதஶாங்குலஞ்சைவ த்ரயோதஶாங்குலமேவ ச ।
[த்வாதஶைகாங்குலஞ்சாபி த்ர்யங்குலாதிகமேவ ச]
ஏவஞ்ச சைகலிங்கஸ்ய விஸ்தாரம் பரிகீர்திதம் ॥ ௪௧ ॥

பஞ்சதஶாங்குலம் சைவ ஷோடஶாங்குலமேவ ச ।
ஸப்தாதிகதஶம் சைவ லிங்கநாரமிதி ஸ்ம்ருதம் ॥ ௪௨ ॥

அஷ்டாதஶாங்குலம் சைவ நவபங்க்த்யங்குலாந்தகம் ।
விம்ஶத்யங்குலகஞ்சைவ லிங்கதாரம் த்ரிதா மதம் ॥ ௪௩ ॥

கள் அகலமுடையவை) முறையே நாகரம் திராவிடம் வேஸரம் என மூன்று விதமாகக் கருதப்பட்டிருக்கின்றது.

40. ஏகலிங்க விஷயத்தில்; அகலமானது, ஆறு ஏழு எட்டு அங்குலங்கள் எனக் கருதப்பட்டிருக்கின்றது. அல்லது ஒன்பது பத்து பதினொன்று அங்குலங்கள் அகலமாகலாம்.

41. பன்னிரண்டு பதிமூன்று பதிநான்கு அங்குலங்கள் அகலமாகலாமெனவும், இவ்வாறு ஏகலிங்கத்தின் அகலம் கூறப்பட்டிருக்கின்றது.

42. மற்றும்; இந்த ஏகலிங்க விஷயத்தில், அகலமானது பதினைந்து அங்குலங்கள் பதினாறு அங்குலங்கள் பதினேழு அங்குலங்கள் என்றிருக்கலாம்.

43. இவ்வாறே; பதினெட்டு அங்குலங்கள், பத்தொன்பது அங்குலங்கள், இருபது அங்குலங்கள் என; ஏகலிங்கத்தின் அகலம், மூன்று விதமாகக் கருதப்பட்டிருக்கின்றது.

ஏகவிம்ஶாங்குலம் சைவ த்வாவிம்ஶதி ததாங்குலம் |
த்ரயோவிம்ஶாங்குலம் சைவ த்ர்யம்ஶம் லிங்கவிஶாலகம் || ௪௪ ||

சதுர்விம்ஶாங்குலம் சைவ பஞ்சவிம்ஶாங்குலம் ததா |
ஷட்விம்ஶாங்குலகம் சைவ விஶாலம் த்ரிவிதம் மதம் || ௪௫ ||

ஸப்தவிம்ஶாங்குலம் சைவ அஷ்டவிம்ஶாங்குலம் ததா |
நவவிம்ஶதிமாத்ரம் ஸ்யால்லிங்கதாரமிதி ஸ்ம்ருதம் || ௪௬ ||

அதவா த்ரிம்ஶதங்குல்யைகத்ரிம்ஶதிமாத்ரகம் |
த்வாத்ரிம்ஶாங்குலகம் சைவ லிங்கதாரமிதி ஸ்ம்ருதம் || ௪௭ ||

கந்யஸாத்யுத்தமாந்தம் ஸ்யாத்ப்ரத்யேகம் த்ரித்ரிமானகம் |

44. அவ்வாறே; இருபத்தோரு அங்குலங்கள், இருபத்திரண்டு அங்குலங்கள், இருபத்திமூன்று அங்குலங்கள் என; ஏகலிங்கத்தின் அகலம் மூன்றுவிதமானது.

45. மேலும்; இருபத்திநான்கு அங்குலங்கள், இருபத்தைந்து அங்குலங்கள், இருபத்தியாறு அங்குலங்கள் எனவும்; ஏகலிங்கத்தின் அகலம் மூன்றுவிதமாகக் கருதப் பட்டிருக்கின்றது.

46. அவ்விதமே; இருபத்தி ஏழு அங்குலங்கள், இருபத்தெட்டு அங்குலங்கள், இருபத்தொன்பது அங்குலங்கள் என; ஏகலிங்கத்தின் அகலம் கருதப்பட்டிருக்கின்றது.

47. அல்லது; முப்பது அங்குலங்கள், முப்பத்தோரு அங்குலங்கள், முப்பத்திரண்டு அங்குலங்கள் எனவும்; லிங்கத்தின் அகலம் கருதப்பட்டிருக்கின்றது.

48. இவ்வாறு, ஒவ்வொரு பிரிவினையிலும் உள்ள மும்மூன்று அளவுகளும், அதமம் முதல் உத்தமம் முடியும் வரையுள்ளதாகும். இந்த மும்மூன்று அளவுகொண்ட

ஏவம் து நவதா லிங்கம் ப்ரத்யேகம் நாகராதிபி: || ௪௮ ||

சதுர்வா த்வம்ஶா பஞ்ச அதஷ்ட்வம் உச்ச்ராயாம்ஶகம் ।
தத்தத்பாகைகபாகேந ஏகலிங்கவிஶாலகம் || ௪௯ ||

நாகரம் த்ராவிடம் சைவ வேஸரம் ச த்ரிதா மதம் ॥ ௫௦ ॥

இஷ்டாயாமே த்வ்யம்ஶவத்ரிம்ஶதம்ஶகம்
க்ருத்வா க்ரமாதிகம் ததம்ஶகம் ।
விஸ்தாரம் தத்க்ரந்யஸாதி த்ரிதா ய-
யுக்த்யா தீமாந் வேஸராதீநி கல்பயேத் || ௫௧ ||

பஹுலிங்கேமயோதிதே ஸர்வே ப்ரூஹ்யாதம் விநோதயம் ।

ஒவ்வொரு பிரிவும், நாகரம் திராவிடம் வேஸரம் என்னும் பேதத்தால்; இவ்வாறு ஒன்பதுவிதமான லிங்கமாம்.

49, 50. அல்லது; உயரத்தின் அளவை நான்கு ஐந்து ஆறு கூறுகளாக்கி, அவைகளிலொவ்வொரு பாகத்தினல்; ஏகலிங்கத்தின் அகலத்தைக் கொள்ளலாம். இது நாகரம் திராவிடம் வேஸரம் என மூன்றுவிதமாகக் கருதப் பட்டிருக்கின்றது.

51. இஷ்டமான லிங்கத்தின் உயரத்தில்; முன் கூறிய முப்பத்திரண்டு அம்சங்களையும், அந்த அந்த அளவுக்கேற்றவாறு ஒவ்வோரம்சம் முறையே அதிகமாக்கிக்கொண்டு; அதனல் கிடைத்த அதமாதி மூவகைப் பட்ட யாதாமொரு அகலமுண்டோ, அதனை; அறிஞனை ஒருவன், யுக்தியினல் வேஸராதிகளாகச் செய்யவேண்டும்.

52. முன்பு பஹுலிங்க விஷயத்தில் இருகர்ணங்களே செய்யத்தக்கவை, மூன்று கர்ணங்களைச் செய்யக் கூடாதெனக் குறிப்பிட்ட பின்னர்; அதனில் இரண்டு கர்ணங்களை; ஸமகர்ணம் வர்த்தமானம் சிவாங்கம்

विहाय ब्राह्मं समकर्णं स्याद्विष्णुरुद्रांशतः समम् ॥ ५२ ॥

अथवा तद्बहु नवधा वेदं नारायणांशयम् ।
बाणांशं शिवांशकं स्याद्वर्धमानमिति स्मृतम् । ५३ ॥

अष्टादशांशकं तद्वत् वैष्णवं चाष्टभागिकम् ।
दशांशं शिवांशकं स्याच्छिवाङ्कं लिङ्गमीरितम् ॥ ५४ ॥

ஸ்வஸ்திகம் எனும் பேதங்களில் எவ்வாறு கொள்ள வேண்டுமென்பதை, இப்போது விளக்கிக் கூறுகின்ருர்.

ஸகலவிதமான பஹுலிங்க விஷயத்திலும் உயரமானது, ப்ரம்ஹாவின் பாகம் நீங்கலாகக் கொள்ளப்படுகின்றது. [அதாவது; விஷ்ணுவின் அம்சமும் சிவாம்சமுமே ஏற்கப்படுகின்றன.] இத்தகைய (இரு கர்ணமுடைய) பஹுலிங்கத்தின் இருபாகங்களும் விஷ்ணு ருத்ராம்சங்களினுல் சமமாக இருக்கும் பக்ஷத்தில், அது ஸமகர்ணமெனப்படும்.

53. அவ்வாறல்லாது; ஒன்பது பாகமாக்கப்பட்ட உயரத்தையுடைய இந்த பஹுலிங்கத்தின்; விஷ்ணு அம்சத்தின் உயரம் நான்கு பாகங்களும், சிவாம்சத்தின் உயரம் ஐந்து பாகங்களுமாஞல்; அது வர்த்தமானமெனக் கருதப்பட்டிருக்கின்றது.

54. உயரத்தில் பதினெட்டு பாகங்களையுடைய இந்த லிங்கத்தின் வைஷ்ணவாம்சமானது எட்டு பங்குகள் உயரமுடையதும், சிவாம்சமானது பத்து பங்குகள் உயரமுடையதுமாஞல்; இது சிவாங்கம் எனும் லிங்கமாகக் கூறப்படுகின்றது.

15

உத்ஸேதே தஶபாகே து விஷ்ண்வம்ஶம் ஷடம்ஶகம் |
வேதாம்ஶம் து ஶிவாம்ஶம் ஸ்யாத் ஸ்வஸ்திகம் பஹுலிங்ககே || ௫௫ ||

ப்ரஹ்மண ஹரிஹராம்ஶம் தத்ஸமம் சைகலிங்ககே
[illegible] |
ப்ரஹ்மண ஹரிஹராம்ஶம் ஸர்வதோபத்ரலிங்ககம்
[illegible] வர்த்தமானம் ததைவ ச || ௫௬ ||

55. பஹுலிங்க விஷயத்தில்; உயரத்தைப் பத்து பாகங்களாக்கி, அதனில் ஆறு பாகங்கள் விஷ்ணு அம்சத்தின் உயரமாகவும், நான்கு பாகங்கள் சிவாம்சத்தின் உயரமாகவும் கொள்ளப்பட்டால்; இது ஸ்வஸ்திகம் எனும் லிங்கமாகின்றது.

56. இவ்வாறு பஹுலிங்கவிஷயத்தில் விஷ்ணு சிவாம்சங்களின் அளவுபேதத்தினுல் ஏற்படும் ஸமகர்ணுதி லிங்கபேதங்களைக் கூறி; இப்போது திரிகர்ணலிங்கங்களான ஏகலிங்கங்களின் வேற்றுமையைக் கூறுகின்றுர்.

இந்த ஏகலிங்கவிஷயத்தில்; நான்கு கோணங்களைக் கொண்ட ப்ரம்ஹாம்சமும், எட்டு கோணங்களைக்கொண்ட விஷ்ணு அம்சமும், உருண்டையான சிவாம்சமும், சமமான அளவு கொண்டிருக்குமேயாயின்; அஃது ஸமகர்ணலிங்கமாகும். இந்த ஸமகர்ணலிங்கமே மூன்று அம்சங்களிலும் விருத்தாகாரமாகி, பிரம்ஹாம்சம் பூதலத்திலேயும், விஷ்ணு அம்சம் யோநியிலேயும், சிவாம்சம் பூஜிக்கத்தக்க நிலையிலேயும், இருக்குமேயாயின்; இது ஸர்வதோபத்ரலிங்கமாகும். இவ்வாறே; லிங்கத்தினுயரம் இருபத்தினுன்கு பாகங்களாகப்பெற்று, பிரம்ஹ விஷ்ணு சிவாம்சங்கள் முறையே, ஏழு எட்டு ஒன்பது பங்குகள் கொண்டிருக்குமாயின்; வர்த்தமான லிங்கமெனப்படுகின்றது. இது அந்தணர் கூட்டத்தாலும் அரசர்களாலும் பூஜிக்கப்பெறுவது.

பஞ்ச பஞ்ச ஷடம்ஶகோன்னதம்
ப்ரஹ்மவிஷ்ணுஶிவாம்ஶத꞉ க்ரமாத் |
தன்மத்யேஷ்வம்ஶமானாம்ஶகே க்ருதே
தச்சிவாம்ஶகமிதி வைஶ்யயோக்யகம் || ருஎ ||

ஸ்வஸ்திகஸ்ய து ஶக்திஶிவோன்னதம்
ஷோடஶாம்ஶமிதி வைஷ்ணவம் ததா |
ஸம்பதாமபி விபக்தபாகத꞉
ஸம்வதந்த்விஹ ஶூத்ரயோக்யகம் || ருஅ ||

வேதாஶ்ராம் ப்ரஹ்மபாகே ச மூலே
அஷ்டாஶ்ராம் மத்யமே விஷ்ணுபாகே |

57. ஏகலிங்கத்தின் உயரமானது; பதினாறு பாகங்களாக்கப்பட்டு, அதனில் ஐந்து பாகங்கள் பிரம்ஹாம்ச, மாகவும், ஐந்து பாகங்கள் விஷ்ணுவின் அம்சமாகவும் ஆறு பாகங்கள் சிவாம்சமாகவும், முறையே ஏற்கப்படு மாயின்; அஃது சிவாங்கம் எனப்படுகின்றது. இது வைச்யர்களால் பூஜிக்கத்தக்கது.

58. ஸ்வஸ்திகமெனும் ஏகலிங்கத்தின் சிவாம்சத்தி னுடைய உயரமானது, பதினாறு பாகங்களாகும். அவ் வாறே பிரமனுடையவும் விஷ்ணுவினுடையவும் அம்சங் களின் உயரமானது, பதினாறு பாகங்களாம். [அதாவது; பிரமனின் பாகம் எட்டு, விஷ்ணுவின் பாகம் எட்டு எனக் கருத்து.] ஸம்பத்தின்பொருட்டானல், பத்திரத்திற்கு எவ்வாறு பங்குவிதி கூறப்பட்டதோ; அவ்வாறே அனுஷ் டிக்கவேண்டும். இது சூத்திரர்களால் பூஜிக்கத்தக்கதாகும்.

59. பிரமனின் பாகமாகிய மூலத்தில் நான்கு கோணங்கள் கொண்டதாகவும், விஷ்ணுவின் பாகமாகிய நடுவில் எட்டு கோணங்கள் கொண்டதாகவும், மேல்பாகத் தில் அந்த சிவாம்சத்தை வட்டவடிவமாகவும், இவ்வாறு

வൃத்தாகாரம் யாரு௫கெ தஷீவாம்ஶம்
கூயஶ்ராத்ஸவஶம் ஸெஉகஶூிம்மகுரெ தூ ா ருகூ ॥

வெஉாஞூம் வஷ்ஞுகம் வൃத்தெஉவம்
ஹொாக்தாநெ௫கெ ஶிம்மகெ உூஞுஉயெூ ।
வൃத்தாகாரம் யாரு௫கெ ஈ௯உ௫ஶாமெ
கூயஶ்ராசெவம் ஶிஶூிவிஷூிரெவ ॥ கூ0 ॥

ணகாநெ௫கெ ஹொாக்தூிம்மெ ஶிவாம்ஶெ
கூயஶ்ராஸாரம் ஷொஶஶாஷீஷயெந ।
வൃஸ்யா யாரா யத்ஸஹஸ்ராவஶாநம்
யாராஶூிம்மெ ஸெஉவஉத்தம் ஹி தமெஜெ௫ஃ ॥ கூக ॥

வஞுஷண்ஞுநிவராஷவிஷ்தூதெ
ஷிஷிஹா மஶிர ஶா நதாம்மகஓ ।

ஏகலிங்ககிரமத்தில் அனைத்தையும் (மூன்று கர்ணங்களை யும்) செய்யவேண்டும்.

60. இவ்வாறு ஏகலிங்கவிஷயத்தில் கூறப்பட்ட, நாற்கோணம் எண்கோணம் வட்டவடிவம் என்பவை முறையே மூலமத்யங்களில் முன்னிரண்டையும், மேலே ருத்ரபாகத்தில் வட்டவடிவத்தையும் சிற்பிகளான வித்வான்களால் செய்விக்கவேண்டும்.

61. முன் கூறப்பட்டதான ஏகலிங்கம் அனேக லிங்கம் இவைகளில், சிவாம்சத்தில்; பதினறு முதல் இரட்டிப் பாக தாரையைச் செய்யவேண்டும். இவ்வாறு கூட்டுவதனல், தாரையானது (கோடானது) ஆயிரம் முடியும்வரை யாதாமொன்றுண்டோ; அதுவே முடிவாம். தாராலிங்க விஷயத்தில் சாஸ்திரங்களால் இவ்வாறே கூறப்பட்டிருக்கின்றது.

62. லிங்கத்தின் அகலம், ஐந்து ஆறு ஏழு எட்டு அங்குலங்களானல்; அவைகளிலிரண்டு பாகங்கள், லிங்க

தத்தஷம்கக்ர ததஜ்ஜொநொஷயெ
அத்யம்ஶயா ஹ்ஶயிநொவஶா நகழ ॥ ௬௨ ॥
[அத்யம்ஶெவஶயிநொவஶா நகழ ॥]

வதிர்கொஷ்டஶிவ தஜ்ஜிவம் பாஹ்யெ:
யாஷாயர்[யஷ்த்யாஹம்] த்ரி வாஶாஷா[ஶஹா]க்ர திஷ்யா ।
சுயர்வஷ்ர ஶிதி ஷிக்ருவஷ்வெகஷ
ஶிஷிஹி: ஷ்ருவஶ வ(க்)ணாஷத: க்ருஶாகஷ ॥ ௬௩ ॥

வஷிஜாம்ஶெ தத்தாம்ஹஶஷ அயாம்ஶம்
க்ரக்வாம்ஶெ ந ஷித்ரி வெஷாஙிம்ஶ்ரஜ்ய ।
தஶ்த்யாயஷ்டாஷ்க்ஷணொஷாஶஶெஷம்
ஶிஷ்ஷ் காயர்ஶாஙா ஹஶாதீம்ஷ்த்ரெயெவ ॥ ௬௪ ॥

சிரத்தின் உயர அளவாகும். இவ்வாறு அந்த அந்த லிங்கத்தின் வடிவ அளவினுல் ஏற்படும் சிரத்தினுயரத்தில், அதிகமான அளவு இரண்டு அம்சங்களாகும்.

63. முப்புரத்தையெரித்த சிவனின் யாதாமொரு வடிவம், இரண்டங்குலமெனக் கூறப்பட்டதோ; அது திரியிலுள்ள அதன் சிகை (ஜ்வாலை) போலும் அறிஞர்களால் (அறியப்படுவது). இவ்வாறு, அர்த்தசந்திரமென்பது சிறந்ததான கர்ணத்திலிருந்து (சிவாம்சத்திலிருந்து) முறையே ஆச்சரியமுடையதாக இருக்கக்கூடியது; இது சிற்பிகளால் (அறியப்படுவது).

64. பூஜாம்சம் என்னும்படியான சிரோமானம் நீங்கிய சிவாம்சத்தில்; அதன் உயரத்தைப் பதினுறு கூறுகளாக்கிக்கொண்டு, அதனில் இரண்டு மூன்று அல்லது நான்கு பாகங்களை விடுத்து, அதனடியில் சிவாம்சலக்ஷணங்களில் எஞ்சியவற்றையும்; மூவகைப்பட்ட நாகராதி பேதங்களையும்; சிற்பியானவன் செய்யவேண்டும்.

தத்ரைகா(த்ர்யா)ம்ஶஹீநம் (வா) அர்த்தஹீநம் (அர்த்யோ)
விஸ்தாரம் ஸ்யால்லக்ஷணோத்தாரணே ச |
ஊர்த்வே த்வேகத்வ்யம்ஶத்ர்யம்ஶேந (த்ரிவேதேந) துங்கம்
தஸ்மாத்பார்ஶ்வே ஹ்யேகஸ்மிந் ப்ருஷ்டகாந்தம் || ௬௫ ||

அந்யஸ்மிந்நேகாம்(வம்) பிண்டிகாந்தம் ச ஶோப்யம்
ஏகத்வித்ர்யம்ஶகாந்தராலம் |
ப்ருஷ்டே யுக்த்யா காரயேத்விஷ்ணுகாந்தம்
ஏவம் யுக்த்யா நாகராதிக்ரமம் ஸ்யாத் || ௬௬ ||

ஏகாநேக(கே) லிங்க(கே) தாரணாம்ஶே
அந்யஸ்மிம்ல்லிங்கே ஶீர்ஷவத்குட்மலம் வா |

65. லக்ஷணோத்தாரணஸ்தானத்தில், அந்த அந்த லிங்கத்தினுடையதான நடுபாகமானது; முழுமையும் பாதி பாகங்கள் அகன்றதாயிருக்கவேண்டும். மேலே துங்கமானது, ஒன்று இரண்டு மூன்று அல்லது நான்கு பாகங்களால் இருக்கவேண்டும். அதனின்றும் ஒரு பக்கத்தில் பிருஷ்டகம் முடியும் வரை அலங்கரிக்கவேண்டும்.

66. இவ்வாறு மற்றொரு பக்கத்தில், பிண்டிகம் முடியும்வரை அலங்கரிக்கவேண்டும். இவ்விரண்டினுடைய இடைவெளி, ஒன்று இரண்டு அல்லது மூன்று அம்சங்களாம். இவ்வாறே பின்புறத்தில், விஷ்ணுகம் முடியும் வரை யுக்தியினுல் அலங்காரத்தைச் செய்விக்கவேண்டும். இவ்வாறு யுக்தியினுல் நாகராதிகளின் முறை ஏற்படுகின்றது.

67. இவ்விதமான ஏகலிங்கவிஷயத்திலும், அனேகலிங்கவிஷயத்திலும் தாரணும்சத்தில் (கீழே ஊன்றிய பாகத்தில்) லிங்கத்தின் சிரத்திற்போலும் மொட்டின் வடி

அத்வாராணாம் வாத மத்யேऽபி குர்யாத்
யத்நாத்தீமாந் யுக்திதஶ்சாதரேऽபி || ௬௭ ||

லிங்காதீந் ஸ்தாபயேத் ஸர்வஹர்ம்யேஷு பூர்வோக்தவத் க்ரமாத் || ௬௮ ||

ஸப்தஸமாவ்ருதே மத்யே ஸூத்ரஸமவிபாஜிதே |
மத்யே ப்ரஹ்மபதஞ்சைவ பரிதோऽஷ்டௌ லோகபா: || ௬௯ ||

மாநுஷாணாம் பதம் தஸ்மாத் பாஹ்யே பரித: ஷோடஶாம்ஶகம் |
சதுர்விம்ஶாம்ஶகம் பாஹ்யே பரித:(தத:) பைஶாசமேவ ச ||

மத்யே ப்ரஹ்மபதே ஸப்தஸப்தவிபாஜிதே |
ப்ரஹ்மாம்ஶே மத்யமே ப்ரஹ்மஸூத்ரம் தத்பரிகல்பயேத் || ௭௧ ||

வம் இருக்கலாம். அல்லது சிரத்தின் பிரதேசத்திலும் குடையின் வடிவம் இருக்கலாம். அறிஞன் இதனை யுக்தியினால் அடிப்புறத்திலும் செய்யலாம்.

68. எல்லாவிதமான ஆலயங்களிலும் முன்கூறியது போல, லிங்கம் முதலியவற்றை முறையே ஸ்தாபிக்க வேண்டும்.

69. எழு கூறுகளாகப் பிரிக்கப்பட்ட சுத்தகர்பகிருஹ மத்யத்தில் நடுவில் ப்ரம்ஹஸ்தானம் இருக்கவேண்டும். அதனைச் சுற்றிலும் எட்டு திக்பாலர்கள் ஸ்தானமாகும்.

70. அதன் வெளிப்புறத்தில் பதினாறு பாகங்களுடையது, மனிதர்களின் ஸ்தானமாகும். அதற்கு வெளிப்புறத்தில் இருபத்திநான்கு பாகங்களுடையது, பைசாச ஸ்தானமாகும்.

71. இவ்வாறாகிய நடுவிலுள்ள பிரம்ஹஸ்தானத்தை (குறுக்கும் நெடுக்கும்) ஏழு ஏழு பாகங்களாகப் பிரித்து, அதன் நடுவிலுள்ள பிரம்ஹாசத்தில், அந்த பிரம்ஹஸூத்ரத்தைக் கற்பிக்கவேண்டும்.

தத்பாஹ்யே விஷ்ணுஸூத்ரம் ஸவ்யாத் ப்ரஹ்மணோ வினிக்ஷிபேத் ।
தத்ஸூத்ரா(த்ரு)த்வயோः (த்விதயே) மத்யே ஶிவஸூத்ரகம்
ப்ரக்ஷிபேத் ॥ ௭௨ ॥

ப்ரஹ்மவிஷ்ணுஸூத்ரம் ஸவ்யாந்மத்யே ச ஶிவஸூத்ரகம் ।
[ப்ரஹ்மவிஷ்ணோஸ்து ஸூத்ரே ஸவ்யாந்மத்யே ச ஶிவஸூத்ரகம்]
ஏவம் து ஏகலிங்கம் ஸம்ஸ்தாபயேச்சில்பவித்தமः ॥ ௭௩ ॥

பஹுலிங்கப்ரதிஷ்டா சேத் தத்தத்தேவதோக்தவத் ।
கார்யா தேவபதே விஷ்ணும் பஹுதா சைகமேவ வா ॥ ௭௪ ॥
[பஹுலிங்கப்ரதிஷ்டா சேத்தத்தத்தேவ பதோக்தவத் ।
கார்யா தேவபதே விஷ்ணும் பஹுதா சைகமேவ வா ॥]

கர்பகேஹஸ்ய நீரதாரா மத்யஸமா பவேத் ।

72. அந்த பிரம்ஹஸ்தானத்திற்கு வெளியில், அந்த பிரம்ஹஸூத்ரத்தின் இடப்புறத்தில், விஷ்ணு சூத்திரத்தைக் கற்பிக்கவேண்டும். இந்த இரண்டு சூத்ரங்களின் மத்யத்தில் சிவஸூத்ரத்தைக் கற்பிக்கவேண்டும்.

73. இவ்விதமான பிரம்ஹவிஷ்ணு சூத்ரங்களும், அவைகளிடையே சிவஸூத்ரமும், இருக்கவேண்டும். இவ்வாறு சிற்பிசிரேஷ்டனானவன் ஏகலிங்கத்தை ஸ்தாபிக்கவேண்டும்.

74. அனேக லிங்கங்களின் ப்ரதிஷ்டையைச் செய்ய வேண்டுமானால், அந்த அந்த தேவதைஸ்தானம் கூறப்பட்ட முறையில், தேவபதத்தில் (தேவதைகளின் ஸ்தானத்தில்) செய்யவேண்டும். இந்த தேவபதத்தில் விஷ்ணுவை ஒன்றாகவும், பலவாகவும் செய்யலாம்.

75. கர்பக்ருஹஸ்தலத்திலுள்ள நீர்த்தாரையானது, லிங்கத்தின் நடுவிற்குச் சமமாக இருக்கவேண்டும். அவ்

அஜ்ஞாநாததிகம் தத்வை ஸர்வதோஷப்ரதம் பவேத் || எரு ||

தஸ்மாத் கர்பக்ருஹே ஸர்வதேவதாஸ்தாபநம் புத: |
பேரமேகஶிலா ப்ரோக்தா லிங்காநாம் சதுஶ்ஶிலா || எசு ||

நந்த்யாவர்த்தாக்ருதிம் ஸ்தாப்ய யதா சைகாஶ்மநா பவேத் |
ஸ்வயா பாஷாணகூர்மாக்ருதிம் ஊர்த்வாதாரமிதி ஸ்ம்ருதம் || எஎ ||

அத ஊர்த்வம் ஶில்பிநா த்வ ஶிலாத்யே பீடகே வாபி ஶாஸ்த்ரத: |
உச்ச்ரயம் கல்பயேத் தஸ்மாத் ஹீநாதிக்யம் ந காரயேத் || எஅ ||

லிங்காநாமபி பேராணாம் தேவீபி: தேவகை: ஸஹ |

வாறல்லாமல், அறியாமையினுல் அதிகமாகவோ குறைந்ததாகவோ இருக்குமாளுல், சகலவிதமான தோஷங்களையும் அளிப்பதாகும்.

76. ஆகையினுல் அறிஞன் ஒருவன், கர்பகிருஹத்தில் சகலவிதமான தேவதைகளின் ஸ்தாபனத்தை விடுக்க வேண்டும். விக்ரஹமானது ஒரே சிலையினுலாகியதாக இருக்கவேண்டும். லிங்கங்களோ நான்கு சிலைகளினுலாகியவைகளாக இருக்கவேண்டும்.

77. எவ்வாறு ஒரே பாறையினுலாகக்கூடுமோ; அவ்வாறு நந்தியாவர்த்தாகிருதியைக்கொண்ட லிங்கத்தை ஸ்தாபித்து, அதன் பிறகு கருங்கல்லினுலாகிய ஆமை வடிவத்தை மேல் ஆதாரமாகச் செய்யவேண்டும்.

78. இதற்குமேல், சிற்பியானவன் சிலை முதலியவற்ருலாகிய பீடவிஷயத்தில் உயரத்தைச் சாஸ்திரத்திற் கூறியவாறே கற்பிக்கவேண்டும். அதனிற் குறைந்ததாகவோ அதிகமானதாகவோ செய்யக்கூடாது.

79. லிங்கங்களின் பேரங்களையும், தேவர்கள் தேவிகள் இவர்களுடைய பேரங்களையும். தேவர்கள் தேவிகள்

𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌪𑍀𑌠𑌕𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑍌 ॥ ௭௯ ॥

𑌶𑌿𑌲𑌾𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌪𑌰𑍍𑌵𑌤𑍇 𑌵𑌾 𑌵𑌨𑍇 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌸𑍍𑌥𑌪𑌤𑌿𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑍈𑌃 𑌸𑌹 ॥ ௮௦ ॥

𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑍇 𑌤𑍁 𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌾𑌯 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌆𑌨𑍁𑌚𑌰𑍈𑌃 𑌸𑌹 ।
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍇 𑌮𑌾𑌰𑍍𑌗𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌸𑍁 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌶𑌕𑍁𑌨𑌾𑌨𑌿 𑌚 ॥ ௮௧ ॥

𑌸𑍁𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌸𑍁𑌲𑌗𑍍𑌨𑍇 𑌚 𑌶𑌿𑌲𑌾𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌉𑌕𑍍𑌤𑌵𑌦𑍍𑌵𑌾𑌹𑌨𑌾𑌰𑍋𑌪𑍍𑌯 𑌶𑌿𑌲𑍍𑌪𑌶𑌾𑌲𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 (𑌵𑍇𑌶) 𑌤𑍍(𑌯𑍇𑌤𑍍) ॥ ௮௨

𑌪𑌤𑍍𑌰𑌪𑌲𑍍𑌲𑌵𑌸𑌂𑌛𑌨𑍍𑌨𑌾 𑌯𑌾 𑌯𑌾 𑌨𑌗𑍍𑌨𑌾𑌵𑌟𑌕𑍂𑌪𑌕𑍈𑌃 ।

லிங்கங்கள் இவைகளின் பீடங்களின் வடிவங்களையும், தேவாலயத்தில் ஸ்தபதியானவன் ஸ்தாபகர்களுடன் கூடி, ஸ்தாபிக்கவேண்டும்.

80. ஸ்தபதியானவன் ஸ்தாபகர்களுடன் கூடியவனாக, மலையிலோ காட்டிலோ, தொழிலுக்கேற்ற பாறைகளை சேமிக்கவேண்டும். ஆகவே சிலைகளைச் சேமிக்கும் இலக்கணம் இப்பொழுது கூறப்படுகின்றது.

81. கர்த்தாவானவன் தனது வேலையாட்களுடன் விடியற்காலையில் எழுந்திருந்து, சாஸ்திரத்திற் கூறியவாறு வழியிலும், பக்கலிலும் சகுனங்கள் அனைத்தையும் கவனிக்கவேண்டும்.

82. அதன் பிறகு நல்ல லக்னத்தில் நல்லதோர் முகூர்த்தத்தில் சிலைகளைக் கிரஹிக்கவேண்டும். அதன் பின்னவைகளைக் கூறியமுறையே வண்டியிலேற்றி வைத்துத் தொழிற்சாலைக்குக் கொணரவேண்டும்.

83. எந்தப் பாறையானது; தழைகுழைகளால் மூடப்பட்டிருக்கின்றதோ, அல்லது நெருப்பினாலும் குழிகளாலும் சேற்றினாலும் சூழப்பட்டிருக்கின்றதோ, அல்லது

ஸூர்யதாபேந ஶீர்ணஸ்து வர்ஜநீயா ஶிலா ஸதா ॥ ௮௩ ।

யஸ்ய பூர்வோத்தரே சாக்ரம் மூலம் தக்ஷிணபஶ்சிமே ।
தயோர்பாகே முகம் ஜ்ஞாத்வா பஶ்சிமே பாவயேத் புத: ॥ ௮௪ ॥

பூர்வாக்ராஸ்து ஶிலா: ஸர்வா தக்ஷிணே ஸவ்யபார்ஶ்வகே ।
உத்தரே வாமபாக: ஸ்யாதுத்தராக்ரஶிலாம் விது: ॥ ௮௫ ॥

பூர்வே து தக்ஷிணம் பார்ஶ்வம் பஶ்சிமே வாமபார்ஶ்வகே ।
ஐஶாந்யாக்ரஶிலாநாம் து மூலம் நைர்ருத்யதேஶகே ॥ ௮௬ ॥

அந்யகோணேஷு ஸர்வேஷு மூலாக்ரம் ந வித்யதே ।

வெய்யிலினுல் பொரிந்திருக்கின்றதோ, அந்தச் சிலையா னது நீக்கத்தக்கதாகும்.

84. படுத்தநிலையில் எந்த சிலையினுடைய நுனி கிழக்கிலும் அடி மேற்கிலுமிருக்கின்றதோ; அதற்கு அடிப் புறத்தில் முகம் எனவும்; எந்த சிலையினுடைய நுனி வடக்கிலும் மூலம் தெற்கிலுமிருக்கின்றதோ; அதற்கு மேல்புறம் முகம் எனவும்; அறியவேண்டும்.

85. எல்லா சிலைகளுமே (அநேகமாக) கிழக்கில் நுனியுடையவை. இவைகளுக்கு தெற்கே வலதுபுறமும் வடக்கே இடதுபுறமும் ஏற்படுகின்றது. வடக்கில் நுனியை யுடைய சிலையை மேற்கூறும் முறையில் அறிகின்றனர்.

86. இந்த சிலைகளுக்குக் கிழக்கு பாகத்தில் வலது பக்கத்தையும் மேற்கு பாகத்தில் இடதுபக்கத்தையும் அறி கின்றனர். ஈசான திசையில் நுனியையுடைய சிலைகளின் மூலமோ, நிருருதி திசையில் உள்ளது.

87. மற்றய கோணங்கள் எல்லாவற்றிலும் உள்ள சிலைகட்டு மூலமும் அக்ரமும் கிடையாது. திசைகளில்

தீர்கா தீர்கஸமாயுக்தா: ஸர்வா: பும்லிங்காஶ்ச ப்ரகீர்த்திதா: ॥ ௮௭ ॥

சதுஷ்கோணேஷு தீர்கா யா ஶிலா ஷண்ட: ப்ரகீர்த்தித: |
ப்ரபூமிதஶ்ச ஸ்திதம் ஸர்வம் ப்ருதிவ்யாகாஶஸமாயதம் ॥ ௮௮ ॥

ஊர்த்வே சாக்ரம் அதோ மூலம் யதா ப்ராகீஶதேஶகே |
ததைவோர்த்வமுகம் ஸர்வம் ச யதி ச ஸ்தாபனம் பவேத் ॥ ௮௯ ॥

தத்பார்ஶ்வம் ஸர்வதோ ஜ்ஞாத்வா தஸ்யாகாரவிஶேஷத: |
மூலமத்யாக்ர ஸமாகாரம் பும்ஶிலா ॥ ௯௦ ॥

ஸ்தூலமூலம் க்ருஶாக்ரம் ஸ்யாத் ஸ்த்ரீஶிலா ஸா ப்ரகாஶிதா |

நீண்டவைகளான சிலைகளனைத்தும் ஆண்சிலைகளெனக் கூறப்பட்டிருக்கின்றன.

88. நான்கு முனைகளிலும் நீண்டதான சிலையானது, நபும்ஸகம் எனக் கூறப்பட்டிருக்கின்றது. பூமி முதல் ஆகாயம் வரை உயர்ந்தவைகளான இம்மாதிரியான சிலை யெல்லாம், அதிகமாக இருக்கின்றது.

89. இவ்வாறான சிலைகளுக்கு, அக்ரம் மேலேயும் மூலம் கீழேயும் உள்ளதாம். எவ்வாறெனில் முன்பு ஈசான திசையில் அக்ரம்கொண்ட சிலைகட்கு, நிருருதி திசையில் மூலம் என்றதுபோல; அந்த அந்த ஊர்த்வமுக சிலையும் அறியத்தக்கது. ஸ்தாபனம் செய்யவேண்டுமேயானால்;

90. அந்த சிலைகளின் பார்ச்வங்களையறிந்து செய்ய வேண்டும். இப்பொழுது அதன் வடிவத்தை இங்கே கூறுகின்றோம். அடியும் நுனியும் நடுவும் சமவடிவம் கொண்டதாயின், அது ஆண் சிலையாகும்.

91. அடியிற் பருத்ததும் நுனியில் சிறுத்ததுமான சிலையானது ஸ்திரீ சிலையென வெளியிடப்பட்டிருக்

𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑌾 𑌮𑌧𑍍𑌯𑌕𑍃𑌶𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑍂𑌲𑌮𑍂𑌲𑌂 𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌮𑍍 ॥ ௯௧ ॥

𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌪𑍁𑌮𑌾𑌨𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌤𑌿 𑌨𑌿𑌤𑌾 𑌶𑌿𑌲𑌾 ।

𑌬𑌹𑍁𑌧𑌾 𑌚𑌾𑌗𑍍𑌰𑌶𑍃𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌮𑌿𑌤𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௯௨ ॥

𑌕𑌾𑌂𑌸𑍍𑌯𑌧𑍍𑌵𑌨𑌿𑌨𑌾𑌦𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑌿𑌲𑌾 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ।

𑌰𑌤𑍍𑌨𑌾𑌭𑌰𑌣𑌧𑍍𑌵𑌨𑌨𑌾𑌦𑌂 𑌶𑌿𑌲𑌾 𑌚 𑌪𑌾𑌷𑌾𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௯௩ ॥

𑌨𑌿𑌰𑍍𑌧𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌨𑌿𑌃𑌸𑍍𑌵𑌨𑌾 𑌶𑌿𑌲𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌨 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌚 𑌨 𑌪𑍁𑌮𑌾𑌨𑌿𑌤𑌿 ।
𑌤𑌾𑌲𑌧𑍍𑌵𑌨𑌨𑌾𑌦𑌾 𑌯𑌾 𑌤𑍁 𑌶𑌿𑌲𑌾 𑌵𑌲𑍍𑌲𑍀 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ॥ ௯௪ ॥

𑌮𑌹𑌿𑌷𑌧𑍍𑌵𑌨𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌶𑌿𑌲𑌾 𑌵𑍃𑌕𑍍𑌷𑌃 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ।

கின்றது. நுனியில் பருத்ததும் நடுவில் சிறுத்ததும் அடியிற் பருத்ததுமான சிலை நபும்ஸகமாகும்.

92. நான்கு கோணங்களையுடைய சிலையானது ஆணாகவும், வட்டவடிவமுடையது பெண்ணாகவும், பலவிதமாக அக்ரசிருங்கங்களையுடையது நபும்ஸகமாகவும் ஆகும் எனக் கூறப்பட்டிருக்கின்றது.

93. வெண்கலத்தின் ஒலிபோன்ற ஒலியையுடைய சிலையானது, பெண் எனக் கூறப்பட்டிருக்கின்றது. ரத்னமயமான அணிகலத்தின் ஒலியைச் செய்யும் சிலையானது, ஆண் எனக் கருதப்பட்டிருக்கின்றது.

94. ஒலியற்ற சிலைகளனைத்தும், ஆணுமல்ல பெண்ணுமல்ல என அறிகின்றனர். கரதாளத்தின் அல்லது பணையின் ஒலியை கொடுக்கும் எந்த சிலையுண்டோ, அது வல்லீ (கொடி) எனக் கூறப்பட்டிருக்கின்றது.

95. எருமையின் த்வனியுடன் கூடிய சிலையானது விருக்ஷம் (மரம்) எனக் கூறப்பட்டிருக்கின்றது. முன்

𑌷𑌡𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌾𑌯𑌤𑌿𑌨𑌾𑌹𑌂 𑌤𑍁 𑌯𑍌𑌵𑌨𑌾 𑌸𑌾 𑌶𑌿𑌲𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௯௫ ॥

𑌶𑌿𑌲𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌵𑍃𑌤𑍍𑌤𑌞𑍍𑌚 𑌶𑌿𑌲𑌾𑌞𑍍𑌚𑌾𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ।
[𑌶𑌿𑌲𑌾𑌸𑍁 𑌯𑌾 𑌭𑌵𑍇𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌶𑌿𑌲𑌾𑌂𑌸𑍍𑌤𑌾𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍]
𑌸𑍁𑌂𑌵𑌾 𑌤𑍁 𑌶𑌿𑌲𑌯𑌾 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑍇𑌖𑌾𑌵𑌾𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௯௬

𑌶𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌪𑍀𑌠𑌕𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑌿𑌲𑌾𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑍋 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌾𑌨𑌾𑌞𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌶𑌿𑌲𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௯௭ ॥

𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌰𑌕𑍍𑌤𑌞𑍍𑌚 𑌪𑍀𑌤𑌞𑍍𑌚 𑌶𑌿𑌲𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌞𑍍𑌚 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌦𑌿𑌕𑌂 𑌬𑍁𑌧𑌃 ॥ ௯௮ ॥

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌸𑌾 𑌶𑌿𑌲𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑍈𑌵 𑌵𑌾 ।

கூறியத்வநியில் பாதியுடையதானல், அச்சிலை யாவனு என்பதாகும்.

96. கூறிய சிலைகளுக்குள்ளே எந்த சிலையானது வட்டவடிவமாயுள்ளதோ; அச்சிலையைத் தவிற்கவேண்டும் அதனில் கோடு இருந்தால் தவிர்க்க வேண்டும்.

97. பெண் தேவதைகளின் பேரங்களைச் செய்வதற்கும், எல்லாவித பேரங்களின் பீடங்களைச் செய்வதற்கும், ஸ்திரீ சிலையை எடுத்துக் கொள்ளலாம். எல்லாவிதமான பிராசாதங்களுக்கும் நபும்ஸக சிலை ஏற்றதாகும்.

98. இவ்வாருகிய சிலைகள், முறையே வெளுப்பு சிகப்பு மஞ்சள் கருப்பு என நிறங்கள் கொண்டவை. அறிஞன் கீழ்க்கூறிய முறையினுலேயே, அந்தணன் முதலிய வர்ணத்தாருக்கு லிங்கம் முதலியவற்றைச் செய்ய வேண்டும்.

99. கருநிறங்கொண்ட அந்த சிலையே, எல்லா வர்ணத்தாருக்கும் ஏற்றதாகும். எல்லா வர்ணத்தாருக்கும் கூறப்பட்ட வர்ண பாஷாணத்தில் (நிறங்கொண்ட சிலை

ஸர்வேஷாம் வர்ணபாஷாணே க்ருஷ்ணரேகாம் விஸர்ஜயேத் ||௯௯||

ஶ்வேதம் ஸ்வர்ணரேகம் வா ஸர்வஸம்பத்கரம் பவேத் |
ஶிலாஸங்க்ரஹணம் ப்ரோக்தம் ஶேஷமாகமதஸ்ஸ்ம்ருதம் || ௱ ||

ஸர்வஸ்வயம்புலிங்கானாம் லக்ஷணம் வக்ஷ்யதேऽதுனா |
உத்பூதம் தைவகம் சைவ மானுஷம் காணவம் ததா || ௱௧ ||

ஏவம் சதுர்விதம் லிங்கம் ஸ்வயம்புரிதி கீர்த்திதம் |
ந ஸ்தாப்யம் ஸ்வயமுத்பூதம் ஸ்வயம்புரிதி கீர்த்தித: || ௱௨ ||

தேவைஸ்து ஸ்தாபிதம் லிங்கம் தைவிகம் லிங்கமுச்யதே |

களில்) கருநிறக்கோடு இருக்குமேயாயின்; அஃது விலக்கத்தக்கதாம்.

100. சிலைகளில் வெண்ணிறக்கோடு, அல்லது தங்கமயமான கோடு இருக்குமேயாயின்; அஃது ஸகல விதமான ஸம்பத்துக்களையும் அளிக்கும். க்ஷேமத்தை தரும். இவ்வாறு சிலைகளின் சேமிப்புக் கூறப்பட்டது. எஞ்சியவற்றை ஆகமங்களினின்றும் அறிந்துகொள்ள வேண்டும்.

101. ஸகலவிதமான ஸ்வயம்பு லிங்கங்களுடையவும் இலக்கணம், இப்போது கூறப்படுகின்றது. உத்பூதம் தைவகம் மானுஷம் காணவம் என்பதாக;

102. இவ்விதம் ஸ்வயம்புலிங்கம் நான்குவிதங்களை யுடையதாகக் கூறப்பட்டிருக்கின்றது. மற்ற எவராலும் ஸ்தாபிக்கப்படாமல் தானே தோன்றியது, உத்பூதம் என்ற ஸ்வயம்புலிங்கம் என கூறப்பட்டிருக்கின்றது.

103. தேவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற லிங்கமானது தைவிகம் என்ற ஸ்வயம்புலிங்கமாகக் கூறப்படுகின்றது.

𑌮𑌾𑌨𑍁𑌷𑍈𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ॥ ௱௩ ॥

𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌃 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌆𑌰𑍍𑌷𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌗𑌣𑍈𑌶𑍍𑌚 𑌪𑍂𑌜𑌿𑌤𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌗𑌾𑌣𑌵𑌂 𑌚𑍇𑌤𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ॥ ௱௪ ॥

𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍈𑌵𑌿𑌕𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌕𑌮𑍍 ।
𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚 𑌗𑌾𑌣𑌵𑌮𑍍 ॥ ௱௫ ॥

𑌆𑌰𑍍𑌷𑌂 𑌤𑍁 𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌕𑍃𑌤𑌿 𑌚𑍈𑌵 𑌵𑌾 ।
𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌨𑌿𑌭𑌂 𑌦𑍈𑌵𑌿𑌕𑌮𑍍 ॥ ௱௬ ॥

அவ்வாறே, மனிதர்களால் ஸ்தாபிக்கப்பெற்றது மானுஷம் எனக் கூறப்படுகின்றது.

104. மகரிஷிகளால் நிறுவப்பட்டதான லிங்கம், ஆர்ஷம் எனக் கூறப்படுகின்றது. கணதேவதைகளால் பூஜிக்கப்பெற்ற லிங்கமானது, காணவம் எனக் கூறப்படுகின்றது.

105. கீழே கூறப்பட்ட ஸ்வயம்பு லிங்கங்களில், உத்பூதமென்பது வெண்ணிறங்கொண்டது. தைவிகமென்பது, செந்நிறம் கொண்டது. மானுஷமென்பது, மஞ்சள் நிறம் கொண்டது. காணவம் என்பது, கருநிறங் கொண்டது.

106. ஆர்ஷமெனும் ஸ்வயம்புலிங்கமானது, ஸூத்ரங்களுடன் கூடியதாகும். அல்லது ஸ்வஸ்திகவடிவம் கொண்டதாயிருக்கலாம். உத்பூதமெனும் ஸ்வயம்புலிங்கமானது, சங்கரவடிவம் கொண்டது. தைவிகமெனும் ஸ்வயம்பு லிங்கமானது, உருத்திரனின் கண்போன்ற வடிவம்கொண்டது.

𑌨𑌗𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌤𑍍 𑌕𑌾𑌣𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌕𑌾𑌰𑌵𑌿𑌲𑍋𑌕𑍍𑌯𑌤𑍇 ।
𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌮𑍂𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌕𑍃𑌶𑌾𑌗𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌸𑌮𑌾𑌧𑌿𑌕𑌮𑍍 ॥ ௨௭ ॥

𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑌂 𑌕𑍍𑌰𑌮𑌶𑍋𑌽𑌣𑍁𑌕𑌮𑍍 ।
𑌦𑍈𑌵𑌿𑌕𑌂 𑌡𑌿𑌣𑍍𑌡𑌿𑌮𑌾𑌕𑌾𑌰𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌸𑍍𑌰𑍁𑌕𑍍𑌸𑍍𑌰𑍁𑌵𑌾𑌕𑍃𑌤𑌿 ॥ ௨௮

𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌕𑌾𑌰𑌂 𑌕𑍂𑌷𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌾𑌕𑍃𑌤𑌿 𑌕𑌾𑌣𑌵𑌮𑍍 ।
𑌪𑍁𑌣𑍍𑌯𑌨𑌦𑍍𑌯𑌦𑍍𑌰𑌿𑌦𑍇𑌶𑍇 𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌣𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௯ ॥

107. காணவம் எனும் ஸ்வயம்பு லிங்கமானது, பர்வதத்தின் வடிவம்போன்ற வடிவமுடையது இனி லிங்கங்களின் வடிவம் இங்கு கூறப்படுகின்றது. உத்பூத மெனும் லிங்கம் அடிப்பாகத்தில் ஸ்தூலமாகவும், அக்ர பாகத்தில் இளைத்ததாகவும் இருக்கும். அல்லது மேலிருந்து கீழ் ஸமாதிகமாய் (முறையே பருத்ததாய்) இருக்கலாம்.

108. அவ்வாறல்லாத மற்ற லிங்கங்களுடையவோ அக்ரமானது. ஸ்தூலமாகவும் அடி மெலிந்ததாகவும் இருக்கும். தைவிகம் எனும் லிங்கமானது டிண்டிமம் எனும் வாத்யத்தின் வடிவம்போன்ற வடிவமுடையது. மானுஷம் எனும் லிங்கமானது, ஸ்ருக்ஸ்ருவம் எனும் ஹோம சாதனமான கருவிகளின் வடிவம்போன்ற வடிவத்தையுடையது.

109. உத்பூதமெனும் லிங்கமானது, மலையின் வடிவம்போன்ற வடிவம்கொண்டது. காணவம் எனும் லிங்கமானது, பூசனிக்காயின் வடிவம்போன்ற வடிவமுடையதாகும். இவ்வாருகிய லிங்கங்களின் ஸங்கிரஹணம், புண்யமான நதிகளுடையவும் மலைகளுடையவும் பிரதேசத்திலேற்படவேண்டும்.

ஏவம் பரார்த²லிங்க³ம் ஸ்யாச்சே²ஷமாக³மதோர்த²த: |
ஆத்மார்த²லிங்க³பீட²ஸ்ய லக்ஷணம் ப்ரோச்யதே(அ)து⁴நா || ௱௰ ||

பீட²துல்யம் ப⁴வேல்லிங்க³ம் பாதோ³நமர்த⁴மேவ வா |
லிங்கா³யாமமிதி ப்ரோக்தம் நாஹம் பீட²விஸ்தாரவத் || ௱௰௧ ||

நதீ³பர்வததே³ஶே து லிங்க³ஸங்க்³ரஹணம் ப⁴வேத் |
ஶ்வேதம் ரக்தம் ச பீதம் ச க்ருஷ்ணவர்ணம் சதுர்விதா⁴ || ௱௰௨ ||

ப்³ராஹ்மணாதி³வர்ணாநாம் வர்ணோக்தம் லிங்க³த: க்ரமாத் |
அத²வா க்ருஷ்ணவர்ணம் து ஸர்வம் சார்ஷகம் ப⁴வேத் || ௱௰௩ ||

110. இவ்வாறு பரார்த்தமான (பிறர் பூஜிக்கவேண்டிய) லிங்கமானது இருக்கவேண்டும். இதனில் எஞ்சிய அவ்விஷயமானது, ஆகமத்தினுல் அறியத்தக்கது. இப்பொழுது ஆத்மார்த்தமாகிய (தானே பூஜிக்கவேண்டிய) லிங்கம் பீடம் இவைகளின் இலக்சணம் கூறப்படுகின்றது.

111. லிங்கத்தின் உயரமானது; பீடத்தின் உயரத்திற்குச் சமமானதாகவோ, முக்காற் பங்கு உடையதாகவோ, அரைப்பங்கு உடையதாகவோ இருக்கவேண்டும். லிங்கத்தின் சுற்றளவோ பீடத்தின் பரப்பளவின் அளவு கொண்டதாகும்.

112. இவ்வாருன லிங்கத்தை கிரஹிப்பது (பெறுவது) நதீ தேசத்திலும், பர்வதப் பிரதேசத்திலும் ஏற்றதாகும். இந்த லிங்கமானது; வெண்ணிறமுடையது, செந்நிறமுடையது, மஞ்சள் நிறமுடையது, கருநிறமுடையதென நால்வகைப்பட்டதாகும்.

113. அந்தணன் முதலிய நான்கு வர்ணத்தினர்கட்கும் முறையே முன்கூறிய லிங்கங்கள் ஏற்றவைகளாம். அல்லது எல்லோருக்குமே கருநிற லிங்கம் ஏற்றதாகும். அவையனைத்தும் ஆர்ஷகம் எனும் லிங்கங்களாம்.

𑌅𑌤𑌿𑌕𑌷𑍍𑌟𑌤𑌮𑌂 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌯𑌦𑍍𑌭𑍂𑌮𑌿𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍁𑌲𑌿𑌂𑌗𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌕𑌾𑌰𑌵𑌦𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ ௱௧௪ ॥

𑌸𑍂𑌤𑍍𑌰𑍈𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌚 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌯𑌾𑌵𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌲𑍍𑌲𑌿𑌂𑌗𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌦𑌿𑌨𑌦𑍀𑌭𑌵𑌮𑍍 ॥ ௱௧௫ ॥

𑌰𑍇𑌖𑌾𑌬𑌿𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌾𑌂𑌕𑌾𑌂𑌕𑌂 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌰𑍇𑌖𑌾𑌢𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌪𑌤𑍍𑌸𑍁𑌖𑌾𑌵𑌹𑌮𑍍 ॥ ௱௧௬ ॥

𑌆𑌲𑌯𑌾𑌭𑍋𑌨𑍍𑌨𑌤𑌂 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍁𑌲𑌿𑌂𑌗𑌕𑌮𑍍 ।

114. மிகவும் கடையப்பட்ட லிங்கமானது எதுவோ, அது; பூமிதேவ்யம் (பூமியை தெய்வமாகக் கொண்டது) எனக் கூறப்படுகின்றது. இந்த லிங்கங்களுள் ஸ்யம்பு லிங்கமானது, விகார வடிவமுள்ளதாயினும் விசேஷமாகக் கொள்ளப்படுகின்றது.

115. பர்வத நதீபவமான லிங்கமானது, ஸுத்ர அளவுகள் நன்கு அமையப்பெற்றிருப்பின்; கூறிய இலக்கணங்கள் ஏற்படும் வரை அதனை ஸம்ஸ்கரிக்கவேண்டும். இவ்வாறு ஸம்ஸ்கரிக்கப்பெற்ற (சீர்திருத்தப்பெற்ற) அந்த லிங்கமானது, மானுஷம் எனக் கூறப்பெற்றிருக்கின்றது.

116. இவ்வாருகிய அந்த லிங்கமானது, கோடு புள்ளி முதலிய மாசுகளால் அடையாளம் கொண்டிருப்பின்; அதனை முக்கியமாக விலக்கியாகவேண்டும். தங்கமயமான புள்ளிகளாலோ கோடுகளாலோ நிறைந்த லிங்கமானது, ஸகலவிதமான ஸம்பத்துக்களையும் க்ஷேமங்களையும் உண்டுபண்ணுவதாகும்.

117. ஆலயம்போன்றும் சிறிது உன்னதமான லிங்கமானது, ஸ்யம்புலிங்கம். இஃது நாபியினின்றும் (நடுவிலிருந்து) மேலே வட்டமாகவோ, நீண்ட வட்டவடிவமா

வ்யக்தம் வாயதவ்யக்தம் வா நாபிஸ்தாநமாயத: ॥ ௱௰௭ ॥

கிஞ்சித் பீடோந்நதம் வபுர்நிம்நம் தத் ப்ருஷ்டே விஶிஷ்யதே ।
ஸ்தூலாக்ரம் யத்க்ருஶம் மூலே லிங்கம் தந்மாநுஷாக்ருதி ॥ ௱௰௮ ॥

ஸ்வபாவதந்தோஷ்டயுக்தம் யல்லிங்கம் மாநுஷம் பவேத் ।
ஸிகதாரோபணம் க்ருத்வா சைவம் ஸ்வயம்பூலிங்ககஃ ॥ ௱௧௯ ॥

விநா ரக்தம் விநா க்ருஷ்ணம் ஶஸ்யதே லிங்கமிஷ்யதே ।
ஸர்வஸ்வயம்பூலிங்கேஷு ஆத்மார்த்தம் ச பரார்த்தகஃ ॥ ௱௨௰ ॥

ந க்ருஷ்ணேஷு ந ரக்தேஷு லிங்கஸ்யாத்மார்ச்சநம் பவேத் ।

கவோ உள்ளது. இதன் சரணம் (கீழ்ப்புறம்) நீண்டது. [இந்த சுலோகத்தில் 'ஸமஸ்யவத்' என்ற இடத்தில் 'வீமாஸ' என்றிருந்தால் பொருத்தமெனத் தெரிகின்றது.]

118. இவ்வாறு பீடத்தைக் காட்டிலும் சிறிது உயரமான உடலும், அதன் பின்புறத்தில் பள்ளமும் எந்த லிங்கத்திற்கு இருக்கின்றதோ! அந்த லிங்கத்தின் அக்ர பாகம் பருமனுகவும் மூலபாகம் மெலிந்ததாகவும் இருக்குமாயின்; இந்த லிங்கம் மனிதவடிவம் கொண்டதாகும்.

119. இயற்கையினுலேயே பற்களுடனும் உதடுகளுடனும் கூடியதானுல்; அந்த லிங்கமானது, மானுஷம் எனப்படுவது. சிரம் முதலியவிடங்களில் மணல் ஏற்றப் பட்டுத் தெரியுமானுல், இவ்வாறிருப்பது ஸ்வயம்புலிங்கமாகும்.

120. கருப்பும் சிகப்பும் தவிர மற்ற நிறங்களிலுள்ள ஸ்வயம்புலிங்கமானது, பூஜைக்கு ஏற்றதாக, ஆத்மார்த்தம் பரார்த்தம் இருவகைகளிலும் விரும்பப்படுகின்றது.

121. இவ்வாறு கூறப்பட்ட லிங்கபூஜையானது, கருநிறமுடையதாகவோ செந்நிறமுடையதாகவோ இருக்

உக்தலிங்கப்ரகாரேண ஶேஷமாகமத: ஸ்ம்ருதம் ॥ ௱௨௧ ॥

ஸ்வாத்மார்த்தலிங்கஸ்ய வக்ஷ்யதே பீடலக்ஷணம் ।
கர்த்துர்நாஶம் யதா ந ஸ்யாத் ததைவ ஶிலா பவேத் ॥ ௱௨௨ ॥

ஜலாநலாதபைர்வாதை: ப்லுஷ்டாஶ்மாநி விவர்ஜயேத் ।
பூமிமக்நம் ஸ்நிக்தம் பிந்துரேகம் விவர்ஜயேத் ॥ ௱௨௩ ॥

ஏகதேஶேநிகாதம் யத் ஸ்த்ரீஶிலா து ப்ரகீர்த்திதா ।
நஸம்பூர்ணம் கீடதஷ்டம் நபும்ஸகஶிலா பவேத் ॥ ௱௨௪ ॥

கின்ற லிங்கங்களில் ஏற்கப்படலாகாது. கூறப்பட்ட லிங்க முறைகளுடன் எஞ்சியவை ஆகமத்தினின்றும் அறியப்பட வேண்டியவையெனக் கருதப்பட்டிருக்கின்றது.

122. இனி தான் பூஜிக்கவேண்டிய லிங்கத்தின் பீடத்திற்காகிய இலக்கணம் கூறப்படுகின்றது. இதனிற்காகிய சிலையானது, எஜமானனுக்கு எவ்வாறு நாசத்தை விளைவிக்காதோ, அவ்வாறு இருக்கவேண்டும்.

123. ஜலத்தினாலோ, காற்றினாலோ, வெய்யிலினாலோ, நெருப்பினாலோ முற்றிலும் தாக்கப்பட்ட பாறைகளைத் தவிர்க்கவேண்டும். பூமியின் உட்புறத்திலேயே புதைந்துகிடப்பதையும், வழுவழுப்பானதையும், புள்ளிகளாலும் கோடுகளாலும் நிறைந்ததையும் தவிர்க்க வேண்டும்.

124. எந்த சிலையின் ஒரு பக்கம் மண்ணில் புதைந்து கிடப்பதனால் ஒரு பக்கம்தான் வெளிப்படையாகத் தெரிகின்றதோ! அது பெண் சிலையெனக் கூறப்பட்டிருக்கின்றது. முற்றாத சிலையும், கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளால் தின்னப்பட்டதும் (அரிக்கப்பட்டதும்) நபும்ஸக சிலை ஆகும்.

ஶுக்லக்ருஷ்ணநீலாஃ ஶ்ரேஷ்டாஃ வர்ணமந்யம் விவர்ஜயேத் ।
[ஶுபதாஃ க்ருஷ்ணநீலாஃ வர்ணமந்யம் விவர்ஜயேத் ।]
கஷபாஷாணவத்ஸ்வர்ணரேகாவாரோ வரிஷ்யதே ॥ 125 ॥

ஏவம் பரீக்ஷிதே பஶ்சாச் ஶிலாஸங்க்ரஹணம் பவேத் ।
ஏவம் லக்ஷணயுக்தஸ்ய ஶிலாபீடம் ப்ரகல்பதே ॥ 126 ॥

கர்துர்தக்ஷிணஹஸ்தஸ்ய மத்யமாங்குலிமத்யமே ।
பர்வாயதவிஸ்தாரமங்குலம் த்விவிதம் பவேத் ॥ 127 ॥
[பர்வாயதம் ததைவேவ மங்குலம் த்விவிதம் பவேத் ॥]

யவேந கல்பிதே வாபி வாங்குலே வாபி கல்பயேத் ।

125. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் சிலைகளில் கரு நிறம் கொண்டவைகளும் நீலநிறங்கொண்டவைகளும் சிலாக்யமானவை. இதைத் தவிர மற்ற நிறத்தைத் தவிர்க்கவேண்டும். தங்கம் உரைக்கும் உரைகல்லைப் போலும் சுவர்ணரேகைகளின் ஏற்றத்தைக் கொண்டது மிக விரும்பப்படுகின்றது.

126. இவ்வாறு பரீக்ஷை செய்யப்பட்ட பிறகு, சிலைகளின் தேர்ந்தெடுத்தல் ஏற்படவேண்டும். கீழே கூறிய வாறு இலக்கணத்துடன் கூடிய லிங்கத்திற்கு சிலையினுலாகிய பீடத்தைச் செய்கின்றனர்.

127. இப்பொழுது லிங்கபீடத்தின் உயரத்தையும் அகலத்தையும் கூறுவதற்கு அங்குல நிர்ணயத்தைச் சொல்லுகின்றார். யஜமானனுடைய வலது கரத்தின் நடு விரலின் நடுபர்வாவின் (கணு வரையின்) உயரம் அல்லது அகலம், இவ்விரண்டுவிதமும் அங்குலமாகும்.

128. இவ்வாறு கூறப்பட்ட அங்குலத்தினுலோ, யவத்தினுல் கற்பிக்கப்பட்ட அங்குலத்தினுலோ பீடத்தின்

[यद्वेन कल्पयेद्वापि मानाङ्गुलेनापि कल्पयेत् ।]
कर्तृनक्षत्रयुक्तं हि मानं युक्त्या प्रयोजयेत् ॥ १२८ ॥

परार्थे वा स्वयम्भूनां मानाङ्गुलेन वा ।
आयादि षड्वर्गशुद्धं पीठोदयं भवेत् ॥ १२९ ॥
[आयादिकं षड्वर्गशुद्धं पीठोदयं भवेत् ॥]

लिङ्गं चानवस्थं चेत् तत्पीठं मानुषादिवत् ।
त्र्यङ्गुलाद्यं समारभ्य द्व्यङ्गुलविवृद्धितः ॥ १३० ॥

पञ्चविंशाङ्गुलं यावत् पीठविस्तारमेव च ।
तत्पीठविस्तारं चतुर्धा तु [illegible] ।

அளவைக் கற்பிக்கலாம். இவ்வாறு கற்பித்த பீடத்தின் அளவை யுக்தியினுல் யஜமானனின் நக்ஷத்திரத்திற்கு அனுகூலமான முறையில் உபயோகிக்கவேண்டும்.

129. ஸ்வயம்புலிங்கங்களுக்கு ஏற்ற பீடமானது, பிறர் பொருட்டானுல், அதனை மாநாங்குலத்தால் அளக்க வேண்டும். இந்த பீடத்தின் உயரத்தை, ஆயாதிஷட்வர்கத்தால் பரிசோதித்து, இவ்வாறு கொள்ளவேண்டும். [ஆயாதிஷட்வர்க்கமானது, மானஸாரத்தில் அத்யாயம் 9 சுலோகம் 32 முதல் கூறப்பட்டிருக்கின்றது]

130. லிங்கமானது, அளவு அற்றதானுல்; (ஸ்வயம்பு லிங்கமானுல்) அதன் பீடத்தை மானுஷாதி லிங்கங்களுக் குப் போலும் நிறுவவேண்டும். இவ்வாருகிய பீடத்தின் அகலத்தை; மூன்று அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனுல், இருபத்தைந்து அங்குலங்கள் வரையிலும் கொள்ளலாம்.

131. அந்த பீடத்தின் விஸ்தாரமானத்தை (அகல அளவை) நான்கு பாகங்களாக ஆக்கிக்கொண்டு, அதனி

एकांशं लिङ्गमानं स्याच्छेषं तत्पीठतुङ्गकम् ॥ १३१ ।

अथवा पञ्चभागांशं तल्लिङ्गोच्चमितीरितम् ।
शेषं तु पूर्ववत्पीठं तुङ्गं कुर्याद्विचक्षणः ॥ १३२ ॥

पीठतारसमं लिङ्गं मध्यान्नालाग्रकान्तकम् ।
पीठतारं द्वयं कृत्वा चैकांशं नालविस्तृतम् ॥ १३३ ॥

तच्चतुर्भागैकांशहीनं नालाग्रतारकम् ।
केचिद्द्वित्र्यंशमेवं स्यान्मूलाग्रान्तक्षयं क्रमात् ॥

லொருபாகம் லிங்கத்தினுயரமாகவும் எஞ்சிய மூன்று பாகங்கள் பீடத்தின் உயரமாகவும் கொள்ளத்தக்கது.

132. அல்லது; பீடவிஸ்தாரத்தில் ஐந்திலொரு பாகம், லிங்கத்தின் உயரமெனக் கூறப்பட்டிருக்கின்றது. எஞ்சிய நான்கு பாகங்கள் முன் கூறியதுபோல பீடத்தின் உயரமென அறிஞன் கொள்ளவேண்டும்.

133. நாளத்தின் மத்யம் முதல் நுனி வரையுள்ள லிங்கமானது, பீடத்தின் அகல அளவிற்குச் சமமானது. (அதாவது லிங்கத்தின் நடுவு முதல் நாளமென்ற கீழ்ப் புறத்தின் முடிவு வரையுள்ள லிங்கத்தின் நீளமானது பீடத்தினகலத்திற்குச் சமமானதெனக் கருத்து.) அந்த லிங்க நாளத்தினகலமானது, பீடத்தினகலத்திலிரண்டிலொருபங்காக இருக்கவேண்டும்.

134. அந்த நாளவிஸ்தாரத்தின் நான்கிலொரு பாகம் குறைந்திருப்பது நாளாக்ரத்தின் (நாளத்தின், நுனியின்) அகலம். சிலர் இந்த நாளாக்ரத்தின் அகலத்தை, நாளத்தின் அடி முதல் நுனி வரை முறையே, இரண்டு பங்குகள் குறைந்திருப்பது மூன்று பங்குகள் குறைந்திருப்பது என இவ்வாறு இருக்கவேண்டும் எனக் கூறுகின்றனர். [அதாவது :—நான்கிலிரண்டு பங்குகள் நான்கில்மூன்று பங்குகள், முதலில் நான்கிலொரு பங்கு என முறையே குறைந்திருக்கவேண்டுமென்பது கருத்து.]

तन्नालत्रिभागैकं प्रणाले विस्तृतं तथा ।
पीठतारचतुर्थांशं त्र्यंशं वृत्तवारिका ॥ १३५ ॥

पीठतारसमं चैव लिङ्गस्य परिणाहकम् ।
एवमात्मार्थलिङ्गेषु स्वयम्भुवं परार्थके ॥ १३६ ॥

एतदनेकलिङ्गेषु नैकलिङ्गं न कारयेत् ।
पीठतुङ्गं त्रिधा कृत्वा एकांशं गलतुङ्गकम् । १३७ ॥

अथ पञ्चमांशं वा गलतुङ्गं विशेषतः ।
शेषं तु वेदिकायोर्बाह्यं पट्टजङ्घलसान्तकम् ॥ १३८ ॥

135. அந்த நாளவிஸ்தாரத்தில் மூன்றிலொரு பங்கு ப்ரணாளத்தில் (லிங்கத்தைச் சொருகும்படியான பீடத்திலுள்ள குழாயில்) விஸ்தாரத்தைச் செய்யவேண்டும் அவ்வாறே; பீடத்தின் அகலத்தில் நான்கிலொரு பாகம் அல்லது மூன்றிலொரு பாகம் வ்ருத்தவாரிகை (வட்டமான லிங்கத்தைத் தடுத்துத் தாங்கக் கூடிய வரம்பு) இருக்க வேண்டும்.

136. லிங்கத்தின் சுற்றளவானது, பீடத்தின் அகலத்திற்குச் சமமானதாக இருக்க வேண்டும். இவ்வாறு பீடத்தை; ஆத்மார்த்தலிங்கங்களிலும், ஸ்வயம்புவானல் பரார்த்தத்திலும், செய்யவேண்டும். ஏகலிங்க விஷயத்தில் கூறிய இந்த முறையை, அனேகலிங்க விஷயத்தில் செய்யக்கூடாது.

137, 138. இனி பீடத்தின் பாகங்களேயும், அதனிற் செய்யவேண்டிய வேலைப்பாடுகளேயும் கூறுகின்ருர். பீடத்தினுயரத்தை மூன்று பாகங்களாக்கிக் கொண்டு, அதனிலொரு பாகத்தை களத்தினுயரமாகக் கொள்ள வேண்டும். [களம் = கழுத்து; இது உடுக்கை போன்ற வடிவம்கொண்ட லிங்கபீடத்தின் நடு பாகமாகும். ஆனல்

ஸைகாம்ஶம் ஜந்மதாம்ஶம் த்ரி வேதிகாம்ஶம் த்ரி வேத்ரகம் |
தத்ஸமம் பங்கஜாம்ஶம் ஸ்யாத் தத்வ கக்ஷித்ரயோம்ஶகம் || ௱௩௯ ||

தத்ஷாம்ஶைகவேத்ரம் ஸ்யாத் தத்தத்ஸமம் சோர்த்வவேத்ரகம் |
பத்மவத்கர்ணஸம்யுக்தம் ஊர்த்வபட்டோபேதவத் || ௱௪௰ ||

உடுக்கையின் நடுபாகம் மெலிந்து இணைந்து நிற்கும் இந்த பீடத்தின் நடுபாகமோ ! மூன்றிலொரு பாகம் உயர முடையதாக இருக்கும்.] அல்லது ; பீடத்தினுயரத்தில் ஐந்திலிரண்டு பாகங்கள், கழுத்தினுயரமாகக் கொள்ளப் படலாம். இது விசேஷமானது. இவ்விருவகைத்த களபரிமாணத்தினின்றும் எஞ்சிய பாகமிரண்டும் ; மேலும் கீழுமான வேத்ரபந்தத்தையுடைய [பிரம்பு போன்ற சூழ் தலையுடைய] பட்டம் ஜந்ம ஸரோருஹம் என்ற வடிவம் கொண்டதாகும். [அதாவது ; மூன்றிலொருபாகம் களமானல், ஒவ்வொரு பாகம் மேலும் கீழுமுள்ள பட்ட ஜந்ம ஸரோருஹமெனவும் ; ஐந்திலிரண்டு பாகம் களமானல், ஒன்றரை யொன்றரைப் பாகம் மேலும் கீழுமுள்ள பட்ட ஜந்ம ஸரோருஹமெனவும் கருத்து. இங்கு கழுத்திற்கு மேலே வேத்ரமும் அதற்குமேலே ஜன்ம என்ற சரிவான பாகமும் அதற்கு மேலே வேத்ரமும், இவ்வாறு மேலும் கீழும் வேத்ரபந்தம் கொண்ட ஜன்ம பிரதேசத்திற்கு மேலே பட்டம் என்ற வட்ட வடிவமானப் பிரதேசமென வும் அதற்கு மேலே தாமரைபோன்ற ஸரோருஹம் எனவும் அறிய வேண்டும்.]

139, 140. முன் கூறிய மேலும் கீழுமுள்ள பட்ட ஜன்மஸரோருஹத்தை எட்டு பங்குகளாக்கிக்கொண்டு ; ஜன்மத்தின் உயரத்தை ஒரு பாகமாகவும், அதன்மேல் வேத்ரத்தை (பிரம்பு போன்ற சூழ்ந்த அணியை) ஒரு பாகமும், தாமரையின் நுனியை ஒரு பாகமும், தாமரையின் குக்ஷியை (நடுவை) ஒரு பாகமும் கொள்ளவேண்டும்.

𑌸𑌪𑌾𑌦𑌾𑌂𑌶𑌾𑌧𑌿𑌕𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑌂 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌯𑍋𑌃 ।
𑌪𑍀𑌠𑌾𑌨𑍍𑌤𑍋𑌦𑌯𑌂 𑌨𑌾𑌲𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑌂 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௱௪௧ ॥

𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌕𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌪𑍀𑌠𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌯𑌾𑌕𑍃𑌤𑌿 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌨𑌾𑌹𑌸𑍍𑌯 𑌸𑌾𑌦𑍃𑌶𑌮𑍍 ॥ ௱௪௨ ॥

𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍇𑌶𑌨𑌂 𑌤𑌨𑍍𑌨𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ।
𑌮𑌾𑌨𑌯𑍇𑌦𑍍𑌬𑌹𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌤𑍁 𑌵𑍈𑌕𑍈𑌕𑌨𑌾𑌧𑌿𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑍈𑌃 ॥ ௱௪௩ ॥

இதற்கு மேலே கர்ணமெனும் வட்ட வடிவமான வரம்புடன் கூடியிருக்க வேண்டும். இத்தகைய மேல்கண்டம் போலவே கீழ்க்கண்டமும் அமைக்கப்பெற வேண்டும். [இதனை யொட்டியே தாமரையின் நடுவு இரண்டு அம்சங்கள் என மூலத்திற் கூறப்பட்டிருக்கின்றது.]

141. கீழே கூறப்பட்ட இருவிதமான அளவுகளுக்குள் ஒண்ணேகாற் பங்கு கூட்டியோ, குறைந்ததாகவேயோ பீடத்தினளவைக் கொள்ளலாம். ஆனுல் மனோரம்யமாயிருக்க வேண்டுமென்பதேயாம். பூஜாம்சம் நீங்கலாக பீடத்தினுள்ளே செலுத்தப்படும் லிங்கநாளத்தின் நீளமானது; பீடத்தினகலத்தை உயரமாகக் கொண்டது. முன் கூறியதுபோலவே அதனைச் செய்ய வேண்டும்.

142. இந்த பீடமானது, வட்ட வடிவம் கொண்டிருக்க வேண்டும். மற்ற வடிவம் தவிர்க்கத்தக்கது. இந்த பீடத்தின் ரந்த்ரமானது (ஓட்டை) லிங்கத்தின் சுற்றளவுக்குச் சமமான உயர அளவிலிருக்க வேண்டும்.

143. இந்த லிங்கத்தின் துங்கத்தைக் காட்டிலும் (மேலே தெரியும் உயரமான பூஜாம்சத்தைக் காட்டிலும்) எஞ்சியவுயரபாகமானது, வேசனம் எனப்படும். இதனை அறிஞன் (புழையில்) நுழைக்க வேண்டும். இவ்வாறு ஏகலிங்க விஷயத்திலும் அனேக லிங்க விஷயத்திலும்,

मानं तत्सर्वलिङ्गेषु स्वार्थायां च परार्थके ।
तन्मध्ये स्थापयेल्लिङ्गमधो रत्नानि विन्यसेत् ॥ १४४ ॥

लिङ्गस्य परितो रन्ध्रे स्वर्णेनापूरणं तथा ।
अभावे रजतेनैव ताम्रेणायसेन वा ॥ १४५ ॥

कारयेच्छिल्पिना सम्यक् लिङ्गपीठोदयैः सह ।
एकानेकसलिङ्गानां परार्थेऽष्टबन्धनम् ॥ १४६ ॥

केचित्त्रिबन्धनं गुग्गुल्वाद्यैर्द्रव्यैस्त्रिभिरेव हि ।
सर्वेषां रन्ध्रलिङ्गानां सन्धावेकं प्रकल्पयेत् ॥ १४७ ॥

அந்த அந்த லிங்கங்களுக்குக் கூறிய அளவுகளால் அவற்றை அளக்கவேண்டும்.

144. மேற்கூறிய இவ்விஷயமானது, தான் பூஜிக்கும் பொருட்டானதாகிலும் பிறர் பூஜிக்கும் பொருட்டானதாகிலும், எல்லா லிங்க விஷயத்திலும் ஏற்கத்தக்கதாம். [பீடத்தின் விதியெனக் கருத்து.] அந்த பீடத்தின் நடுவில் லிங்கத்தை ஸ்தாபிக்க வேண்டும். இதற்கு முன்னதாக நவரத்னங்களைப் போடவேண்டும். [அப்புழையிலென்பதாம்.]

145. லிங்கத்தின் நாற்புறமும் புழையில், தங்கச் சாந்தினற் பூசவேண்டும். அவ்வாறில்லாவிடில், வெள்ளியினலோ தாமிரத்தினலோ இரும்பினலோ சாந்து பூசலாம்.

146. பிறர் பூஜையின் பொருட்டான ஏகலிங்க அனேக லிங்கங்களுக்கு, சிற்பியைக்கொண்டு பீடத்தினுயரத்திற்குச் சமமாக அஷ்டபந்தனத்தை (எட்டுப் பொருள்களாலாகிய சாந்தைப் பூசுதலை)ச் செய்விக்க வேண்டும்.

147. சிலர் குங்கிலியம் முதலிய பொருள்களாலாகிய த்ரிபந்தனத்தை (மூன்று பொருள்களாலாகிய சாந்தின்

𑌅𑌥𑌵𑌾 𑌰𑌤𑍍𑌨𑌪𑍀𑌠𑌂 𑌤𑍁 𑌰𑌤𑍍𑌨𑌲𑌿𑌙𑍍𑌗𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌣 𑌯𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌣 𑌪𑍀𑌠𑌕𑌮𑍍 ॥ ௱௪௮ ॥

𑌨𑌵𑌰𑌤𑍍𑌨𑌸𑍍𑌯 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌪𑍀𑌠𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌦𑍍𑌰𑌤𑍍𑌨𑌸𑍍𑌯 𑌤𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑌦𑍍𑌰𑌤𑍍𑌨𑍇𑌨𑍈𑌵 𑌨𑌾𑌮𑌕𑌮𑍍 ॥ ௱௪௯ ॥

𑌪𑍀𑌠𑌸𑍍𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌨𑌵𑌰𑌤𑍍𑌨𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌏𑌕𑌕𑌰𑍍𑌣𑌂 𑌚𑍈𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌬𑌹𑍁𑌭𑌿𑌶𑍍𑌚𑍈𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑌮𑍍 ॥ ௱௫௰ ॥

𑌵𑌜𑍍𑌰𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌰𑌤𑍍𑌨𑌾𑌨𑍀𑌤𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌏𑌕𑌂 𑌵𑌾 𑌬𑌹𑍁𑌰𑌤𑍍𑌨𑌂 𑌵𑌾 𑌨𑌵𑌰𑌤𑍍𑌨𑌸𑍍𑌯 𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥ ௱௫௧ ॥

பூச்சை)ச் செய்யலாம் என்கின்றனர். எல்லாவித ரத்ன லிங்கங்களுக்கும், ஸ்வர்ணபீடத்தைச் செய்யவும்.

148, 149. அல்லது முன்புகூறிய சுவர்ண பீடத்தைப் போல, ரத்னலிங்கங்களுக்கு ரத்னபீடத்தையும் செய்ய லாம். எந்த எந்த லிங்கங்கள் எந்த எந்தத் திரவியத்தால் நிறுவப்பட்டதோ; அந்த அந்தத் திரவியத்திஞலேயே அவைகளின் பீடத்தையும் செய்யலாமென்பது முறை. ரத்னலிங்கங்களுக்குச் செய்யும் சுவர்ண பீடமானது நவ ரத்னங்களுடனும் கூடியதாகக் கற்பிக்கப்பட வேண்டும். ஆயினும்; லிங்கம் எந்த எந்த ரத்னத்திஞலாகியதோ, அந்த அந்த ரத்னத்தின் பெயரிஞலேயே அந்த லிங்கம் பெயருடையதாகும்.

150, 151. சாதாரணமான லிங்க விஷயத்திலேயும், நவரத்னங்களுடன் கூடிய பீடமானது, சிறந்ததாகும். மேற்கூறிய ரத்னமயமான லிங்கங்களுக்குள் ஏகலிங்க மானது, சிவாம்சமாகிய ஒரு கர்ணமுடையதாகவும் இருக்கலாம்; பல கர்ணங்களுடன் கூடியதாகவும் இருக் கலாமெனக் கூறப்படுகின்றது. இந்த மூன்று கர்ணங்களை யுடைய ரத்னலிங்கமானது, வஜ்ரலிங்கமெனக் கூறப் பட்டிருக்கின்றது. இதன் பீடமானது, ஒரே ரத்தினத்திஞ

𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌯𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌸𑍌𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌰𑌤𑍍𑌨𑌾𑌦𑌿 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌅𑌥𑌵𑌾 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌵𑌾 𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥ ௱௫௨ ॥

𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑍇𑌨 𑌵𑌾 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨𑌾𑌹𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌤𑍍 ॥ ௱௫௩ ॥

[𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁 𑌵𑌾]
𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌪𑍂𑌜𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑍋𑌪𑌦𑍇𑌶𑌵𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌲𑌿𑌙𑍍𑌗𑌪𑍂𑌜𑌾𑌯𑌾𑌂 𑌫𑌲𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ॥ ௱௫௪ ॥

𑌨𑌦𑍀𑌪𑌰𑍍𑌵𑌤𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌕𑍈𑌲𑌾𑌸𑌾𑌰𑍋𑌹𑌣𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌇𑌹 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌶𑌕𑍍𑌤𑌿𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 [𑌮𑌂 𑌤𑌥𑌾] ॥

லாகியதாகவோ பல ரத்னங்களாலாகியதாகவோ நவ ரத்னங்களுடன் (ஒன்பது வகைத்த பிரஸித்தமான ரத்னங்களுடன்) கூடியதாகவோ இருக்கலாம்.

152. சுவர்ணத்திலாகியதான லிங்கத்தின் பீடத்தில் ரத்னங்களைப் பதிக்கலாமெனக் கூறப்பட்டிருக்கின்றது. அல்லது, அறிஞன் தனித்ததொரு சுவர்ண மயமான பீடத்தையும் செய்விக்கலாம். இவ்வாருகிய லிங்கத்திற்குச் சுவர்ணலிங்கமெனப் பெயர். இதனிலக்கணம், முன்பு கூறப்பட்டதுபோலதாகும்.

153, 154. இந்த லிங்கமானது, தனது ஆசார்யனின் ஹஸ்தாங்குளமானம் கொண்டதாகவோ, அல்லது சிஷ்யனின் ஹஸ்தாங்குளமானம் கொண்டதாகவோ இருக்க வேண்டும். அதன் பிறகு ஆசார்யன் எவ்வாறு முறைகளை உபதேசித்தானே, அவ்வாறு பூஜையைச் செய்ய வேண்டும். இனி,முன் கூறப்பட்ட ஒவ்வொரு லிங்கத்தையும் முறைப்படி பூஜித்தால் ஏற்படும் பயனைக் கூறுகின்றேன்.

155. ஆறு பர்வதம் இவைகளிலுள்ள லிங்கங்களின் பூஜையினுல் கைலாயம் பெறுதலும், இவ்வுலகில் பூஜிக்கப்

रत्नलिङ्गस्य पूजायां फलं मुक्तिप्रदायकः ।
स्वर्णलिङ्गार्चनेनैश्वर्यं फलं स्वर्गापवर्गकः ॥ १५६ ॥

स्वर्णपीठे तु तल्लिङ्गं मुक्तासंघनिभेऽपि वा विधिः ।
[स्वर्णपीठे तु तल्लिङ्गं मुक्तासंघेऽपि वा ।]

कर्तुरङ्गुलमानेन तत्पीठस्य प्रशस्तता दोषवर्जितः ॥ १५७ ॥
[कर्तुरङ्गुलमानं तत्पीठस्य प्रशस्तं दोषवर्जितः ॥]

तोये वा गोमये वापि भस्मनि वा चन्दनेऽपि वा ।
पैष्टे वाथ सक्थे वा ताम्रे दैव्ये प्रपूजयेत् ॥

शालिके वाथ पिष्टे वा गोमये वा यथेष्टकः ।
सद्यः पूज्यं तदा लिङ्गं पात्रस्थं तत्क्षणिकं भवेत् ॥ १५९ ॥
[सद्यः पूजा उदलिङ्गं पात्रस्थं तत्क्षणिकं भवेत् ॥]

படும் பெருமையும், இம்மை மறுமை, சுகப்பயனும் ஏற்படு கின்றது.

156. இரத்தின லிங்கத்தின் பூஜையினுல் முக்தியை யளிக்கும் பயன் ஏற்படுகின்றது. ஸுவர்ணலிங்கத்தைப் பூஜிப்பதற்கு இவ்வாறு ஸ்வர்க்கம் மோக்ஷம் இரண்டையும் உடைய பயன் ஏற்படுகின்றது.

157. இந்த சுவர்ணலிங்கத்தையே, சுவர்ண மயமான பீடத்திலோ நெருங்கிய முத்துக் கூட்டத்திலைாகிய பீடத் திலோ பூஜிக்கலாம். இந்த பீடமானது, பூஜிப்பவன் எவனோ; அவன் அளவினுல் ஏற்படத் தக்கது. முக்தா பீடமானது, குற்றமற்றிருப்பின் சிலாக்யமாம்.

158, 159. இப்பொழுது தினந்தோறும் அவ்வப் பொழுது கருத்தினுல் பாவித்து, ஈசனைப் பூஜிக்கவேண் டிய லிங்கங்களைக் கூறுகின்றூர். ஜலத்திலோ, பச்சை மாப்பொடி செம்மண் முதலியவற்றுல் அலங்கரிக்கப்

தானி லிங்கானி ஸர்வேஷாம் யதாலிங்காக்ருதிர்பவேத் |
ஜ்ஞாத்வா து க்ஷணிகாலிங்கம் மானம் ஸர்வம் ந காரயேத் || ௱௯௰ ||
[ஜ்ஞாத்வாத க்ஷணிகம் பஶ்சாத் மானம் ஸர்வம் ந காரயேத் ||]

ஷட்வர்க்கம் து லிங்கதைர்க்யாதாயாதிஶுத்திம் ப்ரகுர்யாத் யதோக்தவத் |
மானே ஸ்வாயம்புவே லிங்கே ததாயாதி ந காரயேத் || ௱௯௧ ||

ஆத்மார்த்தே ச பரார்த்தே ச லிங்கஸ்யா
யோன்யாயவ்யயநக்ஷத்ரவாராம்ஶா |

பெற்றத் தரையிலோ, மலர்த்திரளிலோ, ஆம்பலிலோ, மணலினாலாகிய லிங்கத்திலோ, வலதுகரத்திலோ, அரிசியின் குவியலிலோ, வெல்லத்தின் குவியலிலோ, குழக்கட்டையிலோ, இடித்துத் தேன் சர்க்கரை ஒக்கக்கலந்த மாவிலோ, கோமயத்திலோ (பசுவின் சாணத்திலோ) இவைகளுள் தனது விருப்பத்திற்கேற்றது எதுவோ; அதனை லிங்கமாகக் கொண்டு, உடனடியாகப் பூஜையை ஆசரிக்கலாம். அந்த லிங்கமானது, க்ஷணிகம் எனக் கூறப்பட்டதாகின்றது.

160. கீழே கூறியுள்ள அந்த லிங்கங்கள் எல்லோருக்கும் பொதுவானவை. இவைகளில் லிங்க வடிவம் எவ்வாறோ; அவ்வாறே சிறிது நேரம் த்யானித்து, அதன் பிறகு பூஜையைச் செய்ய வேண்டும். ஸர்வவிதமான அளவும் இங்கு செய்யத்தக்கதல்ல.

161. மேற்கூறிய லிங்கத்தினுயரத்தில் ஆயம் முதலிய ஷட்வர்க்க சுத்தியைக் கூறியபடி செய்துகொள்ள வேண்டும். அங்குல மானத்திலோ, ஸ்வயம்புலிங்க விஷயத்திலோ அவ்வாறு ஆயாதிகளைச் செய்யக்கூடாது. ஆயாதிஷட்வர்க்கம் :— ஆயம், வ்யயம், யோநி நக்ஷத்ரம், வாரம், அச்சம் என்பன.

162. ஆத்மார்த்தமானலிங்க விஷயத்திலும் பரார்த்தமான லிங்க விஷயத்திலும்; யோநி ஆயம் வியயம் நக்ஷத்

யோந்யஶ்ச வ்யயம் ச ததா வாராம்ஶம்
த்ரிம்ஶைகேந சாயஶேஷாத் ப்ரமாணாத் ததாம்ஶகே ॥ ௱௬௨ ॥
[யோநிஶ்ச வ்யயவ்யயஶக்ஷகவாராம்ஶ-
மாத்ராயஶ்ச த்ரிம்ஶவிஷயே ச ப்ரமாணாத் ததாம்ஶகே ॥]

த்வஜதூமஸிம்ஹஶ்வாநகவ்ருஷகர்தபாஶ்ச
தந்தீ ச காகஸ்து வஸுயோநி யதாக்ரமேண ।
த்வஜஸிம்ஹஹஸ்திவ்ருஷயோநிஶுபம் ப்ரஶஸ்தம்
அந்யா ச யோநிரஶுபம் ஹ்யுதிதம் புராணை: ॥ ௱௬௩

ஶஸ்த்ரவ்ருத்திஸ்ஸுகம் ஸாதகம்
சக்ஷுர்வ்ருத்திர்வபுஸ்ஸாம்ராஜ்யம் ।
ஶ்ரீகரம் ஸர்வதம் ஸர்வஸித்திதம்
ப்ரக்ஷயாய ரவி தக்ஷம் க்ரமாத் ॥ ௱௬௪ ॥

ரம் வாரம் அம்சம் இவைகளை முறையே மூன்று எட்டு ஒன்பது எட்டு ஒன்பது நான்கு இவைகளால் பெருக்கி வந்ததுகையை, முறையே எட்டு பன்னிரண்டு பத்து இருபத்தியேழு ஏழு ஒன்பது இவைகளால் வகுத்து, எஞ்சியவற்றினால் நன்மை தீமையை அறியவேண்டும்.

163. முன்கூறிய ஆயாதிஷட்வர்க்கத்தில் யோநிகள் முறையே த்வஜம் தூமம் ஸிம்ஹம் சுநகம் (நாய்) விருஷபம் கர்த்தபம் (கழுதை) தந்தீ(யானை) காகம் என எண் வகைப்பட்டவை. இவைகளுள் த்வஜம் ஸிம்ஹம் யானை விருஷபம் எனும் யோநிகள் சுபமானவை எனக் கூறப்பட்டிருக்கின்றன. மற்றவை நான்கும் அசுபமெனச் சான்றோர்களால் கூறப்பட்டிருக்கின்றன.

164. இப்பொழுது பன்னிரண்டுவிதமான ஆயங்களின் சுபப்பயனைக் கூறுகின்றார். சஸ்த்ரம், விருத்தி, வாழ்வு, நன்மையளிப்பது, கண், வளர்ச்சி, வடிவம்,

புக்தி முக்தி ஶுபதம் ஸுபூர்ணதம்
ஸம்பதர்த்தத(தம்) ஶ்ரிய ।
புத்தி நாஶகலஹம் ச மைத்ரகம்
ப்ரோக்தமேவ தஶதா பலம் பவேத் ॥ 165 ॥

வ்யயாதிக்யம் சாந்யதா ஹி நூநகம்
ஆயம் ஹி நூநம் சாந்யதா ப்ரகீர்த்திதம் ।
ம்ருத்யு தாரித்ர்யவதாம் நாஶஹேது-
ஶ்ராயாதிக்யம் ஸம்பதம் ஸமம் வா ॥ 166 ॥

ஜந்மத்விதுர்யஷஷ்டாஷ்டநவ நக்ஷத்ராணி ஶுபாநி ।

மேன்மை, ஐச்வர்யம், சுகம், நல்ல வளர்ச்சி, நிறைந்த வருமானம் இவை முறையே ஆயத்தின் பயனும்.

165. இப்பொழுது பத்து வியயங்களின் பயனைக் கூறுகின்றார். புக்தியை யளிப்பது. முக்தியை யளிப்பது, சுபத்தை யளிப்பது, நிறைவையளிப்பது, ஸம்பத்தை யளிப்பது, அர்த்தமெனும் தனத்தை யளிப்பது, மேன்மை யளிப்பது, புத்திநாசம், கலஹம், நட்பு என பத்துவிதமாம்.

166. இங்கு ஆயவ்யயங்களுக்குக் கூறப்பட்ட பயனானது; ஆயம் அதிகமாயும், மற்றொன்று குறைந்ததாயும் அல்லது வ்யயம் அதிகமாயும் ஆயம் குறைந்ததாயும் இருக்கும் நிலையில் கூறப்பட்டதாகும். வ்யயம் அதிகமானால் மிருத்யுவும் தாரித்திரியமும் நாசமும் உண்டாம். ஆயம் அதிகமானால் சம்பத்தும், சமமானால் பொருளும் ஏற்படும் என்பதாம்.

167. நக்ஷத்ரங்களில் ஜன்மநக்ஷத்ரமும் இரண்டு நான்கு ஆறு எட்டு ஒன்பது என்ற நக்ஷத்ரங்களும் சுபங்

[illegible] ॥ [illegible]
[[illegible] ॥]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ [illegible] ॥

களாம். இவ்வாறு இரண்டாம் பர்யாயத்தில் முன்கூறிய சுபநக்ஷத்ரங்களுடன் கூடியிருப்பினும் சுபமாம். இவ்வாறே கிராமலக்ஷணாத்யாயத்தில் நாற்பதாவது பாடலில் கூறப்பட்டிருக்கின்றது.

“ [illegible] ।
[illegible] ॥ ” என,

ஜன்மநக்ஷத்ரமானால் மூன்றும் பர்யாயத்திலும் சுபமாம். அதாவது :—

“ [illegible] ”

எனக் கூறப்பட்டிருக்கின்றமையினால், கிழமைகளில் சனிக்கிழமை தவிர மற்றவை யெல்லாம் க்ஷேமத்தை யளிப்பவைகளாம்.

“ [illegible] । ”

எனக் கூறியிருப்பதனால்,

168. அம்சங்கள் ஒன்பது. அவைகளாவன :—

“ [illegible] ।
[illegible] ॥ ” என,

இவைகளுக்குள்; அரசன், வீரன், அதனம், வேலையாள், சக்தி, தந்யம், புக்தி இவை சுபம்சங்களாம். திருடன்

[𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌵𑌾𑌮𑌨𑌂 𑌦𑍍𑌵𑍇𑌷𑍍𑌯𑌮𑍇𑌵𑌂
𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 𑌹𑍀𑌨𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍇𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌹𑌾𑌨𑌿𑌶𑍍𑌚 ।
𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌾𑌦𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾𑌂𑌶𑌂
𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌚𑍇𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌵𑌿𑌨𑌾𑌶𑌃 ॥]

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
॥ 𑌦𑍍𑌵𑌿𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

முதலிய மற்றவையெல்லாம் [திருடன், நபும்ஸகன் இவ்விரண்டும்] கூடியிருக்குமாயின் ; எல்லா சம்பத்துக்களின் அழிவும் நேரிடும்.

மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
லிங்கவிதாநமென்ற
ஐம்பத்திரண்டாவது அத்யாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌪𑍀𑌠𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮

|| 𑌤𑍍𑌰𑌿𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌪𑍀𑌠𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑌾𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌪𑍀𑌠𑌤𑌾𑌰𑌂 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑍇 || ௧ ||

𑌅𑌥𑌵𑌾 𑌲𑌿𑌙𑍍𑌗𑌨𑌾𑌹𑍇 𑌤𑍁 𑌸𑍍𑌥𑍂𑌲𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑌮𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑌮𑍇𑌵 𑌵𑌾 || ௨ ||

𑌅𑌧𑍍𑌯𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑍋𑌨𑌂 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌂 𑌤𑍁 𑌵𑌾 |
[𑌅𑌧𑍍𑌯𑌰𑍍𑌧𑌂 𑌵𑌾 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑌂 𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।]

ஸ்ரீமானஸாரமெனும் சில்பசாஸ்திரத்தில் லிங்கங்களின் பீடலக்ஷணமெனும் ஐம்பத்திமூன்ருவது அத்யாயம்.

——o——

1. இப்பொழுது ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்து சாஸ்திரத்தில் லிங்கங்களின் பீடலக்ஷணத்தைக் கூறுகின்ருர். எல்லாவிதமான லிங்கங்களுடையவும் பீடத்தின் இலக்கணம் கூறப்படுகின்றது. லிங்கத்தினகலம் மூன்று மடங்கினல் பீடத்தினகலம், ஸ்வயம்புலிங்கவிஷயத்தில் கொள்ளத்தக்கதாம். அல்லது லிங்கத்தின் பருத்தப் பிரதேசம் எதுவோ, அவ்விடத்தின் சுற்றளவிற்குச் சமமாகவும் பீடத்தினகலமிருக்கலாம்.

2, 3. இப்பொழுது ஸ்வயம்புலிங்கபீடத்தின் உயரம் கூறப்படுகின்றது. லிங்கத்தின் உயரத்திற்குச் சமவுயரமுடையதாகவோ, காற்பங்கு அதிகமாகவோ, அரைப்பங்கு

𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌲𑌿𑌙𑍍𑌗𑌪𑍀𑌠𑌸𑍍𑌯 𑌚𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌮𑌿𑌤𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ॥ ௩ ॥

𑌏𑌵𑌂 𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑌮𑌾𑌨𑍇𑌨 𑌪𑍀𑌠𑌂 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌮𑌧𑍁𑌨𑌾 𑌪𑍀𑌠𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥ ௪ ॥

𑌲𑌿𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌬𑌾𑌹𑍍𑌯𑌦𑍇𑌶𑍇 𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑌾𑌰𑌂 𑌸𑌮𑌨𑍍𑌤𑌤𑌃 ।
𑌪𑍂𑌰𑍍𑌣𑌲𑌿𑌙𑍍𑌗𑌪𑌰𑌿𑌣𑌾𑌹𑌸𑍍𑌯 𑌸𑌮𑌂 𑌵𑌾 𑌪𑍀𑌠𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ॥ ௫ ॥

𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌾𑌂𑌶𑌂 𑌸𑌮𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑍇 ।
𑌶𑍇𑌷𑌂 𑌪𑌾𑌦𑌾𑌂𑌶𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌂𑌶𑍇 𑌸𑌂𑌭𑍃𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௬ ॥

அதிகமாகவோ, முக்காற்பங்கு அதிகமாகவோ, இரண்டு பங்கு உயரமுடையதாகவோ ஸ்வயம்புலிங்கத்தின் பீடமிருக்கவேண்டும்.

4. இங்கு கூறியுள்ள இந்த பீடத்தினுயரத்தை, அறிஞுன ஒருவன் பூஜாம்சமானத்தினுல் (பீடத்திற்கு வெளியே பூஜிக்கத்தக்க முறையில் தெரிகின்ற லிங்கத்தின் உயர அளவினுல்) இவ்வாறு அளக்கவேண்டும். முன் கூறப்பட்ட அளவுடைய லிங்கங்களின் பீடலக்ஷணத்தை இப்பொழுது கூறுகின்றோம்.

5. லிங்கத்திற்கு நாற்புறமும் வெளிப்பிரதேசத்திலுள்ள பீடவிஸ்தாரமானது, லிங்கத்தினகலமேயாம். முழுமையான பீடவிஸ்தாரமானது, லிங்கத்தின் சுற்றளவிற்குச் சமமானதாம்.

6. ஸ்வஸ்திகமெனும் லிங்கவிஷயத்தில், யாதாமொரு பீடமுண்டோ; அதனில் வைஷ்ணவாம்சமானது, லிங்கத்தினுயரத்திற்குச் சமவுயரம் கொண்டதாகும். மற்றோ; எஞ்சிய பாதாம்சாதிகமான (காற்பங்கு அதிகமான) உயரம், பிரம்ஹாம்சத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும்.

ஸ்வஸ்த்யந்யேஷு ஸர்வலிங்கானாம் ப்ரஹ்மாம்ஶோதயம் புதை: ।
[ஸ்வஸ்த்யந்யேஷாம் ஸர்வலிங்கானாம் ப்ரஹ்மாம்ஶோதயகம் புதா: ।]
குர்யாத்தந்மானம் ஸம்ப்ராஹ்ய த்வித்ரிவேதஶராம்ஶகம் ॥ ௭ ॥

ததைகாம்ஶாதிகம் விஷ்ணுமானம் பீடோதயே ததா ।
பீடாம்ஶஸாம்யேऽர்தே ச வைஷ்ணவாம்ஶம் நவா(ஸமா)ஸ்ருதம் ॥

பீடே து யோஜயேத்தத்தத்விஸ்தாரே து த்ரிபாகிகே ।
ஏகாம்ஶம் நாளகம் தீர்கம் மூலவிஸ்தாரதஸ்ஸமம் ॥ ௯ ॥

சதுர்பாகைகாம்ஶஹீனம் த்ர்யம்ஶம் வா பரிவிஸ்த்ருதம் ।

7. ஏ! அறிஞர்களே! ஸ்வஸ்திலிங்கம் நீங்கலாக மற்றைய லிங்கங்களின் பிரம்ஹாம்சத்தினுயரத்தை; அந்த பிரம்ஹாம்சத்திற்குக் கூறப்பட்ட அளவைப் பற்றியவாறு, இரண்டு மூன்று நான்கு ஐந்து என அம்சங்களையுடைய தாகச் செய்யவேண்டும். [அதாவது :—அர்த்தாதிகம், த்ரிபாதாதிகம், த்விகுணம், பாதாதிகத்விகுணம் என பீடத்தினுயரம் எனக் கருத்து.]

8. அவ்வாறே பீடத்தினுயரத்தில் வைஷ்ணவபாகத்தின் அளவு, அந்த பிரம்ஹாம்சத்தைக்காட்டிலும் ஒரு பாகம் அதிகமாயிருக்கவேண்டும். சரிபாதியிலுள்ள பீட பாகத்தின் வைஷ்ணவாம்சத்தைச் சமமாக வ்யாபித்திருக்கின்ற;

9. நாளத்தை (லிங்கத்தின் நடுவிலுள்ள ரேகையை) அந்த அந்த லிங்கவிஸ்தாரத்தின் மூன்று பாகங்களிலொரு பாகம் பீடத்திலிணைக்கவேண்டும். அந்த நாளத்தின் நீளம் மூலவிஸ்தாரத்தினுல் சமபரப்பளவு கொண்டதாகவும்;

10. அக்ரவிஸ்தாரம் நான்கிலொன்று குறைந்த, எஞ்சிய மூன்று பாகங்களாகவும் இருக்கலாம். அல்லது,

அதவா பஞ்சத்ர்யம்(த்வ்யம்)ஶோநமக்ரநாளவிஸ்தாரகம் ॥ ௰ ॥

தஸ்யைகாம்ஶாதிகம் வாபி பூர்வோக்தம் நாளதீர்க்கே ।
க்ரீவோர்த்வம் சோக்தமாநம் யந்நாளஸ்ய பஹளம் பவேத் ॥ ௧௧ ॥

நாள(பீட)தார த்ரிபாகைகம் ஜலதாரவிஸ்தாரகம் ।
பீடஸ்யோர்த்வ விஸ்தாரே து வேதபஞ்ச ஷடம்ஶகே ॥ ௧௨ ॥

ஏகாம்ஶேந து ஶேஷம் ஸ்யாத் வ்ருத்தவாரிவிஸ்தாரகம் ।
வ்ருத்தவாரிவிஸ்தாரே து தத்ததம்ஶவிபாஜிதே ॥ ௧௩ ॥

ஏகாம்ஶம் நிம்நவிஸ்தாரம் பட்டிகாஸஹிதம் ।
நந்த்யாவர்த்தஶிலா சோர்த்வே தஸ்மாந்நாராயணாந்தகம் ॥ ௧௪ ॥

அக்ரநாளத்தினகலம் ஐந்திலிரண்டு பாகங்கள் நீக்கி மூன்று பாகங்களுடையதாகவும் இருக்கலாம்.

11. நாளத்தின் நீளத்தில் (உயரத்தில்) முன்கூறியது ஒரு பங்கு அதிகமாகவும் இருக்கலாம். நாளத்திற்குக் கூறப்பட்ட அளவாகிய அகலம் கழுத்திற்கு மேலே இருக்க வேண்டும்.

12. ஜலதாரையின் அகலமானது; நாளத்தின் (பீடத்தின்) அகலத்தில் மூன்றிலொருபங்கு இருக்கவேண்டும். பீடத்தின் மேல்பரப்பின் அகலத்தில், நான்கு ஐந்து அல்லது ஆறில் ஒரு பங்கு இருக்கவேண்டும்.

13, 14. எஞ்சிய பாகமானது, விருதவாரியின் (ஜலம் பரந்து நிற்குமிடத்தின்) அகலமாகும். அந்த அந்த பாகங்களால் பிரிக்கப்பட்ட (பிரிக்கப்பட்டு எஞ்சிய) விருதவாரிவிசாலத்தில், ஒரு பங்கு ஓரத்திலுள்ள வரம்புடன் கூடியது. ஆகவே (எஞ்சியது) நிம்னவிஸ்தாரம். [குழிந்திருக்குமிடத்தின் பரப்பளவு.] மேலேயுள்ள இந்த விருதவாரியின் உச்சியிலிருந்து, நாராயணபாகம் முடிய நந்தியாவர்த்தசிலையாக இருக்கவேண்டும்.

𑌪𑍀𑌠𑌤𑍁𑌙𑍍𑌗𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌦𑌂𑌶𑌾𑌨𑌵𑌿𑌧𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌉𑌤𑍍𑌸𑍇𑌧𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌚𑍍𑌚𑌂 𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌿𑌕𑌮𑍍 ॥ ௧௫ ॥

𑌪𑌦𑍍𑌮𑍋𑌚𑍍𑌚𑌂 𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌕𑍍𑌷𑍇𑌪𑌣𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌕𑌨𑍍𑌧𑌰𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌕𑌮𑍍𑌪𑌮𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௧௬ ॥

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌪𑌦𑍍𑌮𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌜𑌨𑌂 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌿𑌕𑌮𑍍 ।
𑌏𑌕𑌾𑌂𑌶𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌵𑌾𑌰𑌿 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌭𑌦𑍍𑌰𑌪𑍀𑌠𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௧௭ ॥

𑌤𑌦𑍇𑌵 𑌗𑌲𑌦𑍇𑌶𑍇 𑌤𑍁 𑌕𑍁𑌮𑍁𑌦𑌂 𑌨𑌿𑌰𑍍𑌗𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌵𑌾 𑌶𑍍𑌰𑍀𑌭𑌦𑍍𑌰𑌮𑌿𑌤𑌿 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௮ ॥

15 to 17. பொதுவாக பீடத்தினுயரம் கூறப்பட்டது. இப்போது அதனம்சங்களின் அளவுகள் கூறப்படுகின்றன. பதினறு கூறுகளாக்கப்பட்ட பீடத்தினுயரத்தில்; முதல் உயரம் இரண்டு பங்குகளாம். அதற்கடுத்தத் தாமரையினுயரம் மூன்று பங்குகளாம். க்ஷேபணத்தின் உயரம் ஒரு பங்காகும். கந்தரத்தினுயரம் மூன்று பங்காகும். கம்பத்தினுயரம் ஒரு பங்காகும். ஊர்த்வபத்மத்தினுயரம் மூன்று பங்குகளாம். வாஜனத்தினுயரம் மூன்று பங்குகளாம். இதற்கு மேலே விருதவாரியினுயரம் ஒரு பங்காகும். [அம்சங்களைக் கீழிருந்து மேலே கொள்ள வேண்டும். விருதவாரியின் அளவு, பீடத்தினளவில் சேராது.] இவ்வாருகிய பீடமானது, பத்ரபீடமெனப் படுகின்றது.

18. இந்த பத்ரபீடமே, தனது களபாகமான மூன்று அம்சங்களில், வெளிவந்த குமுதத்தையும், வட்டமான கும்பத்தையும் உடையதாயின்; அது ஸ்ரீபத்ரபீடமெனப் படும்.

[illegible] ॥ ௧௯ ॥

[illegible] ॥ ௨௰ ॥

[illegible] ॥ ௨௧ ॥

[illegible] ॥ ௨௨ ॥

19. முன்கூறிய கும்பத்திற்கு மேலும் கீழுமாக சரி பாதியளவில் இரண்டு பத்மங்களைக் கல்பிக்கவேண்டும். கீழேயுள்ள பத்மமானது, சிறிதளவு குறைந்துமிருக்கலாம். எஞ்சியவற்றை முன்கூறியதுபோலவே செய்யவேண்டும். இந்த பீடமானது ஸ்ரீவிசாலமெனப்படும்.

20. அல்லது; கீழ்க்கூறிய கும்பமானது திக்பாகம் (நான்கு அல்லது எட்டு பங்குகள்) கொண்டதாகவும், பத்மத்தினுயரம் நான்கு பங்குகள் கொண்டதாகவும்; எஞ்சியது முன்போலவும் இருந்தால், இது உபபீடமாகும்.

21, 22. மேலும், எல்லா லிங்கங்களிலும் அதிஷ்டானத்தில் குக்யத்தைச் செய்யவேண்டும். அந்த குக்ய மானது, உயரத்தின் வசமான நுழையும் புழையையுடைய தாகவும்; பீடத்தின் முடிவை முடிவாகக்கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

கீழே கூறப்பட்ட அகலம்முதலியவற்ருல் அற்ற தானுல், அந்த பீடமானது; ஸகல தோஷங்களையும் விளைவிப்பதாகும். ஆகையினுல், நிர்கமத்தைச் செய்ய வேண்டும். அவ்வாறே அகலத்தைக் கல்பிக்கவேண்டும்.

𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌨𑌾𑌗𑌰𑍇 𑌲𑌿𑌂𑌗𑍇 𑌪𑍀𑌠𑌂 𑌨𑌾𑌗𑌰𑌮𑍇𑌵 𑌚 ।
𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑍇 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑍇𑌸𑌰𑍇 𑌵𑍇𑌸𑌰𑌂 𑌤𑌥𑌾 ॥ ௨௩ ॥

𑌧𑌾𑌰𑌾𑌲𑌿𑌂𑌗𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌧𑌾𑌰𑌾𑌪𑍀𑌠𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌕𑌾𑌰𑌲𑌿𑌂𑌗𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑌦𑌾𑌕𑌾𑌰𑌲𑌿𑌂𑌗𑌕𑍇 ॥ ௨௪ ॥

𑌤𑌤𑍍𑌤𑌚𑍍𑌛𑌿𑌖𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑍈𑌵𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ॥ ௨௫ ॥
[𑌯𑌦𑍍𑌯𑌦𑌾𑌕𑌾𑌰𑌕𑌂 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌤𑌤𑍍𑌤𑌦𑌾𑌕𑌾𑌰𑌲𑌿𑌂𑌗𑌕𑍇 ।
𑌤𑌤𑍍𑌤𑌚𑍍𑌛𑌿𑌖𑌰𑌕𑌾𑌕𑌾𑌰𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑍈𑌵𑌂 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ॥]

𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑍇 𑌸𑌵𑌰𑍍𑌣𑌾𑌦𑌿𑌵𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌹𑌿 𑌸𑌮𑌾𑌵𑌹𑍇𑌤𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌪𑍀𑌠𑌲𑌿𑌂𑌗𑌾𑌦𑌿 𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑌿(𑌦𑍈𑌃) 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯(𑌗𑍃𑌹𑍍𑌯)𑌤𑍇 ॥

𑌨𑌾𑌗𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌂 𑌤𑌥𑌾 ।

23, 24, 25. நாகரம் எனும் லிங்கவிஷயத்தில் நாகர பீடத்தையும், திராவிடலிங்க விஷயத்தில் திராவிடபீடத்தையும் அவ்வாறே வேஸரலிங்கவிஷயத்தில் வேஸரபீடத்தையும் செய்யவேண்டுமெனக்கூறப்பட்டிருக்கின்றது.

இவ்விதம் தாராலிங்கங்கள் அனைத்திற்கும் தாரா பீடத்தையே கல்பிக்கவேண்டும். லிங்கம் எந்த எந்த வடிவமுடையதோ; அந்த அந்த வடிவமுடைய லிங்க விஷயத்தில், அறிஞனவன், அந்த அந்த லிங்கங்களின் சிகரத்திற்கேற்ற வடிவம் கொண்டதாக (பீடத்தை)ச் செய்யவேண்டும்.

26. முன்கூறியிருப்பதற்கு மாறுபடுமாயின், அந்தணன் முதலியோருக்கு ஆபத்தை விளைவிக்கும். ஆகையினுல்தான் பீடம் லிங்கம் முதலியவை, ஹர்ம்யம் முதலியவைகளிலிருந்து அறியப்படுகின்றன.

27. இவ்வாருகிய பீடங்கள், நாகரம் திராவிடம் வேஸரம் என மூன்று வகைப்பட்டன. இவைகளுள்

𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌚 𑌵𑍇𑌸𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍇𑌤𑌤𑍍𑌪𑍀(𑌵𑌂 𑌪𑍀)𑌠𑌾𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ ௨௭ ॥

𑌧𑌾𑌰𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌪𑍀𑌠𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌧𑌾𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌪𑌤𑍍𑌕𑌰𑌂 𑌸𑌦𑌾 ॥ ௨௮ ॥

[𑌧𑌾𑌰𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑍇 𑌤𑍁 𑌪𑍀𑌠𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌧𑌾𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌃 𑌸𑌰𑍍𑌵𑍈𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌪𑌤𑍍𑌕𑌰𑌂 𑌯𑌥𑌾 ॥]

𑌸𑍍𑌵𑌯𑌂𑌭𑍂𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌂 𑌪𑍀𑌠𑌕𑍇 ।
𑌪𑍀𑌠𑌸𑍍𑌯 𑌤𑌾𑌰𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌂 𑌪𑌰𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌗𑍃𑌹𑌮𑍍 ॥ ௨௯ ॥

𑌗𑍃𑌹𑌤𑍍𑌰𑍈𑌕𑌂 𑌪𑌰𑌿𑌤𑍋 𑌬𑌹𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌤𑌾𑌰𑌤𑌃 ।
𑌗𑍇𑌹𑌤𑍍𑌤𑍁𑌶𑌾𑌯𑌾𑌮𑍃𑌤𑌂 𑌪𑍀𑌠𑌵𑌿𑌶𑌾𑌲𑌮𑍇𑌤𑌕𑌮𑍍 ॥ ௩௰ ॥

நாகரம் எனும் பீடமானது, நான்கு கோணங்களையுடைய தாகவும்; திராவிடம் எனும் பீடமானது, எட்டு கோணங் களையுடையதாகவும்; வேஸரம் எனும் பீடமானது, வட்ட வடிவமுடையதாகவும் இருக்கவேண்டுமென, இப்பீடங் களின் வடிவம் கூறப்பட்டிருக்கின்றது.

28. அவ்வாறே; தாராலிங்கவிஷயத்தில், பீடத்திற்கு தாரைகளின் (கோடுகளின்) வடிவம், சிற்பிகளைக்கொண்டு முழுமையும் செய்விக்கப்படவேண்டும். இவ்வாறு செய் விக்கப்படின் ஸகலவிதமான சம்பத்துக்களையும் அளிப்ப தாகத் திகழும்.

29, 30. பீடத்தின் விஷயத்தில், ஸ்வயம்புலிங்கத்தின் அகலம் மூன்று மடங்குள்ளதாகவும்; பரிசுத்தகிருஹ மானது, பீடத்தின் அவ்வகலம் மூன்று மடங்குடையதாக வும்; இருக்கவேண்டும். இந்த கிருஹத்தினகலம் மூன்றி லொரு பங்கு பீடத்தின் நாற்புறமும் வெளியே இருக்க

[𑌸𑍍𑌵𑌾𑌯𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌦𑍍𑌵𑌿𑌤𑌤𑌿𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌾 𑌚 𑌪𑍀𑌠𑍇
𑌪𑍀𑌠𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌿𑌤𑌂 𑌪𑌰𑌿𑌸𑌾𑌰𑍍𑌧𑌹𑌸𑍍𑌤𑍇 ।
𑌶𑍇𑌷𑍇 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌵𑌿𑌤𑌤𑌿𑌃 𑌪𑌰𑌿𑌤𑍋 𑌬𑌹𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾-
𑌦𑌾𑌯𑌾𑌮𑌤𑌸𑍍𑌤𑍁 𑌸𑌮𑌪𑍀𑌠𑌵𑌿𑌶𑌾𑌲𑌮𑍇𑌵𑌮𑍍 ॥]

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌪𑍀𑌠𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌤𑍍𑌰𑌿𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

வேண்டும். சிலர், கிருஹத்தின் நாற்புறமும் உள்ள ஆயாமத்திற்குச் சமமானதாக பீடவிசாலம் இருக்க வேண்டுமெனக் கூறுகின்றனர்.

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்து சாஸ்திரத்தில்
பீடலக்ஷணம் எனும் ஐம்பத்திமூன்ருவது
அத்தியாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌶𑌕𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮

|| 𑌅𑌥 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

𑌶𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌚𑌿𑌹𑍍𑌨𑌵𑌰𑍍𑌣𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌚 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑍀 𑌤𑌥𑌾 ॥ ௧ ॥

𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑍀 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌤𑍃 𑌦𑍁𑌰𑍍𑌗𑌾 𑌚𑍈𑌵 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌃 𑌶𑌕𑍍𑌤𑍀𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌮𑍍 ।

ஸ்ரீமானஸாரமெனும் சில்பசாஸ்திரத்தில்
சக்திலக்ஷணம் எனும்
ஐம்பத்திநான்காவது அத்தியாயம்.

—o—

1, 2. மானஸாரமெனும் இந்த வாஸ்து சாஸ்திரத்தில் சக்திலக்ஷணம் கூறப்படுகின்றது. இங்கு சக்தி தேவதைகளின் அடையாளம் நிறம் முதலிய இலக்கணம் இப்பொழுது கூறப்படுகின்றது. இவ்விலக்கணம் முறையே ஸரஸ்வதீ ஸாவித்ரீ லக்ஷ்மீ பூமிதேவீ மனோன்மநீ ஸப்தமாதாக்கள் துர்கை இவர்களுக்குக் கூறப்படுகின்றது. இந்த சக்திகள் அனைவரையும், முன்கூறப்பட்டுள்ள திரவ்யங்களாலும் வர்ணங்களாலும் செய்விக்க வேண்டும்.

3. இப்பொழுது ஸரஸ்வதீதேவிக்கு பீடம், அணிகலம், அடையாளம் முதலியவை கூறப்படுகின்றன. இந்த ஸரஸ்வதீ தேவியை; பத்மபீடமெனும் பீடத்தின் மேல், தாமரை ஆசனத்தில் வீற்றிருப்பவளாக ஸ்தாபித்து;

ஶுத்தஸ்படிகஸங்காஶாம் முக்தாபரணபூஷிதாம் ॥ ௩ ॥

சதுர்புஜாம் த்விநேத்ராம் ச கேஶபந்தாம் ச மௌளிநீம் ।
ஶுத்தஶ்வேதாங்குலோபேதாம் மகரகுண்டலபூஷிதாம் ॥ ௪ ॥

லலாடே ப்ரமரகம் ஸ்யாந்முக்திகாவடிரேவ வா ।
[லலாடே ஸப்ரமரகாம் முக்திகாவடிகாம் ததா]
கர்ணபுஷ்பே ச முக்தைஶ்ச கர்ணதாடங்கஸம்யுதாம் ॥ ௫ ॥
[ஸகர்ணபுஷ்பாம் முக்தாபி: கர்ணதாடங்கஸம்யுதாம் ॥]

ஹாரேணைகாவலீஸம்யுக்தாம் முக்தாரத்நாவலீம் ததா ।
குசபந்தநஸம்யுக்தாம் பாஹுமாலாவிபூஷணீம் ॥ ௬ ॥

சுத்தமான ஸ்படிகத்திற்கொப்பப் பிரகாசிக்கின்றவளாகவும், முத்துகளாலாகிய அணிகளாலணிவிக்கப் பெற்றவளாகவும் ;

4. நான்கு கரங்களையுடையவளாகவும், இரண்டு கண்களையுடையவளாகவும், கேசபந்தத்தையும் மௌளிபூஷணத்தையுமுடையவளாகவும், நிர்மல வெண்ணிறங் கொண்ட விரல்களுடன் கூடியவளாகவும், மகரகுண்டலங்களையணிந்தவளாகவும் ;

5. நெற்றியில் வண்டு மொய்த்ததுபோல் அலையிடும் முன் நெற்றி மயிர்களுடன் கூடியவளாகவும், அல்லது முத்துக்களாலாகிய நெற்றிப்பட்டத்தைக் கொண்டவளாகவும், முத்துக்களாலாகிய கர்ணபுஷ்பங்களை அதனில் தொங்கும் கர்ணதாமாக்களுடனணிந்தவளாகவும் ;

6. மாலை அட்டிகை முதலியவைகளுடன் கூடியவளாகவும், முத்து ரத்னங்கள் கலந்த ஒற்றைவட ஹாரமுடையவளாகவும், அவ்வாறே குசபந்தனமெனும் மார்புக் கட்டுடன் கூடியவளாகவும், பாஹுமாலையெனும் அணிகளுடையவளாகவும் ;

𑌕𑍇𑌯𑍂𑌰𑌕𑌟𑌕𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌵𑌲𑌯𑌾𑌂 𑌤𑌥𑌾 ।
𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌟𑌕𑌂 𑌵𑌾 𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌵𑍇𑌣𑌰𑍇𑌵 𑌚 ॥ ௭ ॥
[𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌟𑌕𑌾𑌂 𑌚 𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌵𑌲𑍍𑌲𑌿𑌰𑍀𑌮𑌵𑌿 ॥]

𑌮𑌧𑍍𑌯𑌾𑌂𑌗𑍁𑌲𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌮𑌣𑌿𑌕𑌰𑌤𑍍𑌨𑌾𑌂𑌗𑍁𑌲𑍀𑌯𑌕𑍈𑌃 ।
[𑌮𑌧𑍍𑌯𑌾𑌂𑌗𑍁𑌲𑍀𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌂𑌗𑍁𑌲𑍀𑌰𑌤𑍍𑌨𑌾𑌂𑌗𑍁𑌲𑍀𑌯𑌕𑍈𑌃 ।]
𑌨𑍀𑌵𑍀𑌲𑌂𑌬𑌨𑌂 𑌚𑍈𑌵 𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌾 𑌪𑌟𑍍𑌟𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾 ॥ ௮ ॥
[𑌨𑍀𑌵𑍍𑌯𑌨𑍍𑌤 𑌲𑌂𑌬𑌨𑍇𑌨𑌾𑌪𑌿 𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌪𑌟𑍍𑌟𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌮𑍍 ॥]

𑌪𑌾𑌦𑌜𑌾𑌲𑌾𑌂 𑌭𑍁𑌜𑌂𑌗𑌾𑌨𑌾𑌂 𑌗𑍁𑌲𑍍𑌫𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌵𑌧𑌿 𑌭𑍂𑌷𑌣𑍀𑌮𑍍 ।
𑌪𑌾𑌦𑌨𑍂𑌪𑍁𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌪𑌾𑌦𑌰𑌤𑍍𑌨𑌾𑌂𑌗𑍁𑌲𑍀𑌯𑌕𑍈𑌃 ॥ ௯ ॥

𑌮𑍌𑌕𑍍𑌤𑌿𑌕𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌂𑌕𑌾𑌰𑌭𑍂𑌷𑌣𑌾𑌮𑍍 ।

7. கேயூரம் கடகம் இவைகளுடன் கூடியவளாகவும், முழங்கைக்கு முன்னணியத்தக்க ப்ரகோஷ்டவளயத்தை யுடையவளாகவும், அவ்வாறே மணிக்கட்டில் அணியத் தக்க மணிபந்தகடகத்தையுடையவளாகவும், முத்துமய மான இலை கொடி செடி போன்ற பூரிமமெனுமாபரணங் களையுடையவளாகவும்;

8. நடுவிரலைத் தவிர மற்றைய விரல்களிலுள்ள ரத்னமோதிரங்களுடன் கூடியவளாகவும், தொங்கும் மாலை களுடனும் நடுவில் தொங்கும் நீவ்யமெனும் அணியுடனும் கூடிய முத்துக்களாலாகிய இடுப்புப்பட்டியின் இணைப்பை யுடையவளாகவும்;

9. பாம்புகளின் வடிவங்கொண்ட பாதஜாலமெனும் அணியை கணுக்காலுக்குமேலே அணிந்தவளாகவும், பாதச்சிலம்புடன் கூடியவளாகவும், கால் விரல்களில் ரத்ன மோதிரங்களுடன் கூடியவளாகவும்;

10. முத்துமயமான உத்தரீயத்துடன் கூடியவளாக வும், (இவ்வாறு) ஸர்வாலங்காரபூஷிதையாகச் செய்ய

[𑌶𑍁𑌕𑍍𑌲𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌮𑍍 ।]
𑌮𑌧𑍍𑌯𑌤𑌃 𑌸𑌵𑍍𑌯𑌕𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ॥ ௰ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌬𑌾𑌹𑍍𑌯𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌧𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌕𑌮𑌣𑍍𑌡𑌲𑍁𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 ॥ ௰௧ ॥

𑌅𑌥𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌂 𑌮𑌕𑍁𑌟𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌵𑌰𑌦𑌂 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌪𑌦𑍍𑌮𑌕𑌮𑍍 ॥ ௰௨ ॥

𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌹𑍇𑌮𑌵𑌰𑍍𑌣𑌪𑍍𑌰𑌭𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌯𑌥𑌾 𑌰𑌤𑍍𑌨𑌾𑌭𑌰𑌣𑌮𑍇𑌵 𑌚 ॥ ௰௩ ॥

𑌕𑌰𑍍𑌣𑌯𑍋𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌤𑌾𑌟𑌙𑍍𑌕𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌸𑍁𑌮𑌙𑍍𑌗𑌲𑌾𑌮𑍍 ।

வேண்டும். இந்த ஸரஸ்வதி தேவியானவள்; உட்கைகளுள் வலதுகரத்தில் ஞானமுத்திரையையும், இடதுகரத்தில் புத்தகத்தையும் தரிக்கவேண்டும்.

11. வெளிக்கரங்களில் வலது கரத்தில் ஜபமணிமாலையை தரிக்கின்றவளாகவும், இடது கரத்தில் கமண்டலத்தைத் தரிக்கவேண்டும்.

12. அல்லது; இரண்டு கரங்களைச் செய்யலாம். குந்தலம் எனும் மகுடத்தைச் செய்யலாம். வலதுகரத்தில் வரத்தையளிக்கும் சின்னத்தையும், இடது கரத்தில் தாமரையையும் செய்யவேண்டும்.

13. சுவர்ணவர்ணத்தினுல் திகழ்கின்ற கரண்டம் எனும் மகுடத்தையும் செய்யலாம். பீதாம்பரத்தையும் முத்துரத்னுபரணங்களையும் எவ்வாறு கூறினேமோ; அவ்வாறு செய்யவேண்டும்.

14. இந்த ஸரஸ்வதி தேவியை; காதுகளில் தங்க ஓலைகள் கொண்டவளாகவும், கழுத்தில் மங்களசூத்ரத்துடன் கூடியவளாகவும், ஸகலவிதமான ஆபரணங்களை

[illegible] ||

[illegible] |
[illegible] || ௧௫ ||

[illegible] |
[illegible] || ௧௬ ||

[illegible] |
[illegible] (ஜேவம் வா) [illegible] ||

யணிந்தவளாகவும், அருள்கொண்ட முகமுடையவளாக வும், மங்களஸ்வரூபமுடையவளாகவும், பிதாமஹனின் (பிரமதேவனின்) வலதுபுறத்தில் செய்யவேண்டும்.

15. பிதாமஹனின் வலதுபுறத்திலுள்ள ஸரஸ்வதி தேவிக்கு, ஸ்தானகம் (நின்றநிலே) ஆஸனம் (உட்கார்ந்த நிலே) இவ்விரண்டிலொன்று பொருத்தமானதாகும். [பிதாமஹனின் நிலேக்கேற்றவாறென்பது கருத்து] பிதாமஹனின் இடப்புறத்திலோ ஸாவித்ரீ தேவியை; வெண்ணிறங்கொண்டவளாகவோ, செந்நிறங்கொண்டவளாகவோ அமைக்கலாம்.

16. அல்லது, கருமையான உடல்நிறங்கொண்டவளாகவும், இரண்டு கரங்களேயுடையவளாகவும், இரு கண்களேயுடையவளாகவும் அமைக்கலாம். இந்த ஸாவித்ரீ தேவிக்கு நின்ற நிலேயோ, உட்கார்ந்த நிலேயோ இருக்கலாம். கரண்டமெனும் மகுடத்துடன் கூடியிருக்கும்படி நிறுவலாம்.

17. அல்லது கேசபந்தத்தைச் செய்யலாம். காதில் மகரகுண்டலத்தைச் செய்யவேண்டும். வெண்பட்டாடையையோ அல்லது பீதாம்பரத்தையோ இணைக்கலாம்.

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑍋𑌤𑍍𑌪𑌲𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌚𑍍𑌛𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌵𑌦𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥ ௧௮ ॥

𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌚 𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑍇𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌰𑌕𑍍𑌤𑌾𑌬𑍍𑌜𑌂 𑌪𑍀𑌠𑌤𑌶𑍍𑌚𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌦𑍇𑌵𑍀 𑌪𑌦𑍍𑌮𑌾𑌸𑌨𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௧௯ ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌮𑌕𑍁𑌟𑌂 𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌾𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌶𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌾𑌮𑍍 ॥ ௨௦ ॥
[𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌮𑌕𑍁𑌟𑌂 𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌶𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌞𑍍𑌚𑌨𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌾 ॥]

18. ஸகலவிதமான ஆபரணங்களுடன் கூடியவளாகச் செய்யவேண்டும். இடதுகரத்தில் வரமளிக்கும் அடையாளத்தையும், வலது கரத்தில் ஆம்பல் மலரையும் செய்யவேண்டும். எஞ்சியவற்றை முன்கூறியதுபோலவே இணைக்கவேண்டும்.

19. இவ்வாருகிய ஸரஸ்வதீ தேவியையும், ஸாவித்ரீ தேவியையும் தசதாளமெனும் அளவினுல் செய்விக்கவேண்டும். இனி மகாலக்ஷ்மியின் இலக்கணம் முதலியவை கூறப்படுகின்றன. பீடத்திற்கு மேலே செந்தாமரையும், அதற்குமேலே தாமரையில் வீற்றிருக்கும் லக்ஷ்மீதேவியும் இருக்கவேண்டும்.

20. இந்த லக்ஷ்மீதேவியானவள்; நான்கு கரங்களையுடையவளாகவும், மூன்று கண்களை யுடையவளாகவும், அருள்கொண்ட முகமுடையவளாகவும், சுத்தப் பசும்பொன் நிறங்கொண்டவளாகவும் இருக்க வேண்டும். இந்த தேவிக்கு குந்தளம் மகுடமாகும்.

𑌪𑍀𑌤𑌾𑌂𑌬𑌰𑌧𑌰𑌾𑌂 𑌰𑌕𑍍𑌤𑌾𑌂𑌶𑍁𑌕𑌵𑍇𑌤𑌾𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌾𑌯𑌤𑌾𑌂 𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌕𑍋𑌣𑍇 𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌨𑌾𑌮𑍍 ॥ ௨௧ ॥

[𑌪𑍀𑌤𑌾𑌂𑌬𑌰𑌧𑌰𑌾𑌂 𑌰𑌕𑍍𑌤𑌾𑌂𑌶𑍁𑌕𑍋𑌪𑍇𑌤𑌾𑌂 𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌨𑌾𑌮𑍍 ।
𑌆𑌯𑌤𑌾𑌂 𑌚 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑌂 𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑌾𑌪𑌾𑌙𑍍𑌗𑌕𑍋𑌣𑌯𑍋𑌃 ॥]

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌤𑍍𑌵𑌭𑌯𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌬𑌿𑌂𑌬𑌿𑌤𑌂 (𑌵𑌰𑌦𑌂) 𑌪𑌾𑌣𑌿𑌪𑌙𑍍𑌕𑌜𑍇 ।
𑌪𑌰𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌚𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾𑌮𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ॥ ௨௨ ॥

𑌵𑌾𑌮𑍇 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌰𑌕𑍍𑌤𑌪𑌦𑍍𑌮𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।
𑌪𑍀𑌨𑍋𑌨𑍍𑌨𑌤𑌸𑍍𑌤𑌨𑌤𑌟𑌾𑌂 𑌭𑌾𑌲𑍇 𑌭𑍍𑌰𑌮𑌰𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌮𑍍 ॥ ௨௩ ॥

𑌅𑌥𑌵𑌾 𑌰𑌤𑍍𑌨𑌪𑌟𑍍𑌟𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌤𑌾𑌟𑌙𑍍𑌕𑌂 𑌕𑌰𑍍𑌣𑌯𑍋𑌃 ।

21. இந்த தேவியை; பீதாம்பரம் தரித்தவளாகவோ அல்லது செந்நிற ஆடை உடுத்தவளாகவோ செய்யலாம். புன்னகைபூத்த முகமுடையவளாகச் செய்யவேண்டும். இந்த தேவிக்கு, அகன்ற கண்களேயும், கடைக்கண் ஓரங்களில் அவைகளே நீண்டவைகளாகவும் செய்யவேண்டும்.

22. இந்த தேவியின் நான்கு கரங்களுள்; வலது உட்கரத்தில் அபயசின்னத்தையும், இடது கரத்தில் வரமளிக்கும் சின்னத்தையும், செய்யவேண்டும். வெளிப்புற வலது கரத்தில் தாமரை மலரையோ, ஜபமணிமாலேயையோ செய்யவேண்டும்.

23. வெளியிலுள்ள இடது கரத்தில் கருநைதல் மலரையோ, செந்தாமரை தரித்தலேயோ செய்யவேண்டும். இத்தேவியை; பருத்துயர்ந்த ஸ்தனபாரம் கொண்டவளாகவும், நெற்றியில் ப்ரமரகத்துடன் கூடியவளாகவும் செய்யவேண்டும்.

24. அல்லது நெற்றியில் ரத்னபட்டமிருக்கலாம். காதுகளில் தங்கமயமான ஓலேகளோ, மகரகுண்டலங்

[अथवा रत्नबद्धं स्यात् स्वर्णदाडिमकैरेव वा ।]
तरलं कान्तं वापि कनकैः स्वर्णतारयुक् ॥ २४ ॥

हारोपग्रीवसंयुक्तां समङ्गल्यसूत्रां सुमङ्गलीम् ।
कुचपट्टं रत्नैर्वा हेमबद्धविभूषणीम् ॥ २५ ॥
[हारोपग्रीवसंयुक्तां समङ्गलसूत्रां च सुमङ्गलाम् ।
कुचपट्टं तु रत्नैर्वा हेम्ना वा बद्धभूषणीम् ॥]

रत्नानि छन्नवीरं स्वर्णोत्तरीययुक् ।
केयूरकटकस्वर्णरत्नपूरितसंयुतम् ॥ २६ ॥
[रत्नैः सह छन्नवीरं स्वर्णोत्तरीययुक् ।
केयूरकटके स्वर्णरत्नपूरितसंयुते ॥]

களோ சுவர்ணசரங்களுடன் இணைந்தவைகளாக இருக்க லாம்.

25. இந்த மஹாலக்ஷ்மியை ; மாலைகளுடனும், உப க்ரீவமெனும் கழுத்தை யொட்டித் திகழும் அட்டிகைகளுட னும் கூடியவளாகவும், மங்களஸூத்ரத்துடன் கூடியவ ளாகவும், மங்களஸ்வரூப முடையவளாகவும் செய்ய வேண்டும். மார்பில் குசபட்டத்தை ரத்னங்களாலோ தங்கத்தினுலோ செய்யவேண்டும். இவ்வாருகிய குசபட் டத்தை யணிந்தவளாக தேவியைச் செய்யவேண்டும்.

26. பொன்மயமான மேலாடையுடன் கூடிய ரத்னங் களாலாகிய சன்னவீரமெனும் அணி இருக்கவேண்டும். [இந்த சன்னவீரமானது, குறுக்கான யஞ்யஸூத்ரமிரண் டும் ஹாரமும் உபக்ரீவமும் என்றறியவேண்டும்.] கேயூர மும் கடகமும் சுவர்ணரத்னமயமான பூரிமத்துடன் கூடிய வைகளாக இருக்கவேண்டும்.

प्रकोष्ठवलयं रत्नैः कटकं मणिबन्धकैः (रत्न) ।
रत्नेन कटिसूत्रं स्यात् रत्नमालाविभूषणीम् ॥ २७ ॥

रत्नैर्हेमोत्तरं च वस्त्रेण न्यस्य मध्ये नीव्यं च लम्बयेत् ।
नळकान्तं स्व(पा)लम्बं सकलरत्नानि (रत्नैः)
शोभिताम् ॥ २८ ॥

भुजङ्गमवलयं पादयोः ऊर्ध्वाधो रत्नबन्धनम् ।
पादे नूपुरसंयुक्तां साङ्गुलीयरत्नाङ्गुलीयकाम् ॥ २९ ॥
[भुजङ्गमवलये पादयोः ऊर्ध्वाधो रत्नबन्धनम् ।
पादे नूपुरयुक्तां सा साङ्गुलीयरत्नाङ्गुलीयकाम् ॥]

27. ப்ரகோஷ்டத்திலுள்ள வலயம் எனும் அணியும், மணிக்கட்டிலுள்ள கடகம் எனும் அணியும் ரத்னங்களாலானவைகளாக இருக்கவேண்டும். அறைஞாண்கயிறும் ரத்னங்களாலாகியதாக இருக்கவேண்டும். இவ்வாறு ரத்னமாலை முதலியவற்ருல் அணிவிக்கப்பெற்றவளாக தேவியைச் செய்யவேண்டும்.

28. தங்கமயமான ஆடையுடன், இடையின் நடுவில் ரத்னங்களாலாகிய நீவ்யம் எனும் அணியைத் தொங்கவிட வேண்டும். அந்தப் பொன்னுடையானது, நளகமெனும் கண்டங்கால் முடிவுவரைத் தொங்குவதாயிருக்கவேண்டும். இவ்வாறு ஸகலவிதமான ரத்னங்களாலும் சோபிக்கின்றவளாக லக்ஷ்மியைச் செய்யவேண்டும்.

29. இரு பாதங்களும் ஸர்ப்பவடிவங் கொண்ட வலயங்களையுடையவைகளாக இருக்கவேண்டும். அந்த புஜங்கவலயங்களின் மேலும் கீழும் ரத்னபந்தனம் இருக்க வேண்டும். இவ்வாறு லக்ஷ்மிதேவியை; பாதச்சிலம்புகளுடன் கூடியவளாகவும், கால்விரல்களில் ரத்னமோதிரங்களையுடையவளாகவும் செய்யவேண்டும்.

𑌬𑌾𑌹𑍁𑌮𑍂𑌲𑌾𑌦𑌿 𑌸𑌂𑌭𑍂𑌷𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌣𑍀𑌮𑍍 ।
𑌅𑌥𑌵𑌾 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾𑌂 𑌚𑍈𑌵 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ॥ ௩௦ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌰𑌕𑍍𑌤𑌪𑌦𑍍𑌮𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌵𑌨𑍍𑌨𑌯𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌂 𑌮𑌹𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌕𑍇 ॥ ௩௧ ॥

𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌮𑍍 ।
𑌰𑌕𑍍𑌤𑌪𑌦𑍍𑌮𑍋𑌦𑍍𑌯𑌤𑌂 𑌹𑌸𑍍𑌤𑍌 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌣𑍀𑌮𑍍 ॥ ௩௨ ॥

[𑌕𑌾𑌰𑍍𑌯𑌾 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌤𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌂 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾𑌂 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌕𑌾𑌮𑍍 ।
𑌰𑌕𑍍𑌤𑌪𑌦𑍍𑌮𑍋𑌦𑍍𑌯𑌤𑍌 𑌹𑌸𑍍𑌤𑍌 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌣𑍀𑌮𑍍 ॥]

𑌶𑍇𑌷𑌂 𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍇𑌵𑍀𑌂(𑌵𑍍𑌯𑌾𑌃)𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।

30. இந்த மகாலக்ஷ்மியை; பாஹுமூலம் முதல் அலங்கரித்து, சர்வாபரணங்களாலுமலங்கரிக்கப் பெற்றவளாகச் செய்யவேண்டும். அல்லது; இரண்டுகரங்களையுடையவளாக தேவியைச் செய்யலாம். இரண்டு கரங்களில் இடது கரத்தில் துடையுடன் இணைப்பும்,

31. வலது கரத்தில் செந்தாமரையும் இருக்க வேண்டும். எஞ்சியவற்றை முன்கூறியதுபோலச் செய்ய வேண்டும். இவ்விலக்கணங்களுடன் கூறப்பட்ட மகாலக்ஷ்மியை, எல்லாவிதமான மாளிகைகளிலும் ஸ்தாபிக்கலாம்.

32. பொதுவான முறையில், மகாலக்ஷ்மியை இரண்டு கரங்களையுடையவளாகவும் இரண்டு கண்களையுடையவளாகவும் செய்யவேண்டும். கைகளிரண்டையும் செந்தாமரை தரிக்கின்றவைகளாகச் செய்யவேண்டும். லக்ஷ்மியை ஸர்வாபரணபூஷிதையாகச் செய்யவேண்டும்.

33. எஞ்சியவற்றை முன்போலச் செய்யவேண்டும். விசேஷமாக இந்த தேவிக்குப் பக்கத்தில் ஐராவதமெனும் இந்திரனின் வெள்ளையானைகளிரண்டைச் செய்யவேண்

ஸோபாநத்வயயோ: (யம்) சைவ ஸ்வயம்பாதாரத(ய)யேஷ்டயோ: ||

ஸர்வேஷாமாலயே த்வாரே மத்யரங்கே து பூஜயேத் ।
அதவா விஷ்ணுபார்ஶ்வே து ஶ்ரீலக்ஷ்மீலக்ஷணோச்யதே || ௩௪ ||

த்விபுஜாம் த்விநேத்ராம் ச கரண்டமகுடாந்விதாம் ।
அதவா கேஶபந்தம் ஸ்யாத்வாமே ஹஸ்தோத்ருதாப்ஜகம் || ௩௫ ||

தக்ஷிணம் ஹஸ்தம் வரதம் ச அதவா லம்பநம் ஸ்திதம் ।
[வரதம் தக்ஷிணே ஹஸ்தே த்வதவா லம்பநம் ஸ்திதம் ।]
ஸ்தாநகம் சாஸநம் வாऽபி ஸ்தாபயேத்விஷ்ணுதக்ஷிணே || ௩௬ ||

டும்: [பக்கத்துக்கு ஒன்று என்றறியவும்.] அறிஞன் இவ்வாறு தேவியை ஆராதிக்கவேண்டும்.

34. எல்லோருடைய இல்லத்திலும் வாயிலில் மத்யஸ்தலத்தில் இந்த கஜபூஜித லக்ஷ்மியை, பூஜிக்கவேண்டும். அல்லது; ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் பக்கத்தில் உள்ள மஹாலக்ஷ்மியின் இலக்கணம் இவ்வாறு கூறப்படுகின்றது.

35. இந்த லக்ஷ்மியை; இருகரங்களையுடையவளாகவும், இரு கண்களையுடையவளாகவும், கரண்டமெனும் மகுடத்துடன்கூடியவளாகவும் செய்யவேண்டும். அல்லது, கேசபந்தம் மகுடமாகலாம். இடது கரத்தில் உயர்த்தப்பட்ட தாமரைமலர் இருக்கவேண்டும்.

36. வலது கரத்தில் வரமளிக்கும் அடையாளமோ, அல்லது தொங்குதலோ இருக்கவேண்டும். நிலையானது; நின்ற நிலையாகவோ, உட்கார்ந்த நிலையாகவோ இருக்கலாம். இவ்வாருகிய இந்த லக்ஷ்மீதேவியை மகாவிஷ்ணுவின் வலதுபுறத்தில் ஸ்தாபிக்கவேண்டும்.

कथितानां सर्वलक्ष्मीणां मध्यमं दशतालकम् ।
सर्वाभरणसंयुक्तां हेमवर्णप्रशोभिताम् ॥ १७ ॥

एतेषां श्रियः प्रोक्ताः महीशक्तिरिहोच्यते ।
द्विभुजं च द्विनेत्रं च करण्डमकुटान्वितम् ॥ १८ ॥
[एताश्चैव श्रियः प्रोक्ताः महीशक्तिरिहोच्यते ।
द्विभुजा च द्विनेत्रा च करण्डमकुटान्विता ॥]

शुक्लवस्त्रपरीधानां (ना) मकुटं कुन्तलं तु वा ।
स्थानकं चासनं वापि विष्णोर्वामे व्यवस्थिते ॥ १९ ॥

दक्षिणे चोत्पलं धृत्वा वामहस्तं (हस्ते) प्रलम्बनम् ।

37. கீழ்க் கூறப்பட்ட ஸகலவிதமான லக்ஷ்மீதேவிமார்களுக்கும், மத்யம தசதாளம் ஏற்ற அளவாகும். இந்த லக்ஷ்மியை ஸர்வாபரணங்களுடனும் கூடியவளாகவும், பொன்னிறத் திருமேனியினுல் திகழ்கின்றவளாகவும் செய்யவேண்டும்.

38. இவ்வாறு இந்த லக்ஷ்மிதேவிகள் கூறப்பட்டார்கள். இனி இங்கு பூமிதேவி கூறப்படுகின்ருள். இந்த பூதேவி; இரண்டு கரங்களே யுடையவளாகவும், இரண்டு கண்களேயுடையவளாகவும், கரண்டமெனும் மகுடத்துடன் கூடியவளாகவும் இருக்கவேண்டும்.

39. இந்த பூதேவியானவள்; வெண்பட்டாடையுடன் கூடியவளாக இருக்கவேண்டும். இவளுக்கு குந்தளமெனும் மகுடமும் ஏற்றதாகும். நின்ற நிலேயோ, உட்கார்ந்த நிலேயோ இருக்கலாம். இந்த தேவி விஷ்ணுமூர்த்தியின் இடப்புறத்தில் இருக்கவேண்டும்.

40. இந்த தேவியின் இரண்டு கரங்களுள்; வலது கரத்தில் ஆம்பலே தரித்து, இடது பாகத்தில் தொங்கவிடு

அபயம் வா வரதம் வாமே ஶ்யாமவர்ணாங்கஶோபிதா (தா) || ௪௦ ||

மாநயேத் தஶதாலேந ஸர்வம் ஶேஷம் ச பூர்வவத் |
மகர (நக்ர) குண்டலஸம்யுக்தாம் ஸர்வாபரணபூஷிதாம் || ௪௧ ||

பூமிலக்ஷணம் ப்ரோக்தம் கௌரீலக்ஷணமுச்யதே |
த்விபுஜம் ச த்விநேத்ரம் ச கார்யமாஸநம் ஸ்தாநகம் ததா வா ||
[த்விபுஜாம் ச த்விநேத்ராம் ச கார்யா ஸ்தாநாஸநம் ததா வா ||]

கரண்டம் கேஶபந்தம் வா குந்தலம் மகுடம் பவேத் |
தக்ஷிணே சோத்பலம் வாமே வரதம் ஸ்யாத் ததைவ வா || ௪௩ ||

தலோ ; அல்லது இடது கரத்தில் வரந்தரும் அடையாளமோ இருக்கலாம். இந்த தேவி கருமைவண்ணங் கொண்டத் திருமேனியினுல் திகழ்பவள்.

41. இந்த பூமிதேவியை மகரகுண்டலங்களுடன் கூடியவளாகவும், ஸர்வாபரணபூஷிதையாகவும் செய்ய வேண்டும். தசதாளத்தினுல் அளக்கவேண்டும். எஞ்சியவையனைத்தும் முன்கூறியதுபோலாம்.

42. இதுவரை பூமிதேவியின் இலக்கணம் கூறப்பட்டது. இப்போது கௌரிதேவியின் இலக்கணம் கூறப்படுகின்றது. இந்த தேவியை; இரு கரமுடையவளாகவும், இரு கண்களுடையவளாகவும் செய்யவேண்டும். நின்ற நிலையையோ, உட்கார்ந்த நிலையையோ செய்யலாம்.

43. கரண்டம், கேசபந்தம், அல்லது குந்தளம் மகுடமாகலாம். வலது கரத்தில் ஆம்பல் மலரும், இடது கரத்தில் வரமளிக்கும் சின்னமும் இருக்கலாம். அல்லது ;

𑌸𑌵𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌦𑌣𑍍𑌡𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍋𑌵𑌾𑌲𑌾𑌕𑌾𑌰𑌵𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣𑌾𑌵𑍃𑌤𑌾𑌂 𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾𑌮𑍇𑌵 (𑌤𑍁) 𑌵𑌾 ॥ ௪௪ ॥

𑌦𑍀𑌰𑍍𑌘𑌬𑌾𑌹𑍁𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌤𑌨𑍂𑌦𑌰𑍀𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌨𑌤𑌟𑍋𑌨𑍍𑌨𑌤𑌂 𑌚 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌶𑍍𑌰𑍋𑌣𑌿𑌦𑍇𑌶𑌾 𑌦𑍍𑌵𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௪௫ ॥
[𑌦𑍀𑌰𑍍𑌘𑌬𑌾𑌹𑍁𑌂 𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌾𑌂 𑌕𑍃𑌶𑍋𑌦𑌰𑍀𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌨𑍇 𑌨𑌤𑌾𑌗𑍍𑌰𑌂 𑌚 𑌵𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑌶𑍍𑌰𑍋𑌣𑌿𑌦𑍇𑌶𑌂 𑌚 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥]

𑌕𑌟𑌿𑌦𑍇𑌶𑍋𑌰𑍁𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑍀𑌵𑍍𑌯𑌕𑌾𑌞𑍍𑌚𑍀 𑌨𑌦𑌮𑍍𑌬𑌵𑌤𑍍 ।
[𑌕𑌟𑍍𑌯𑍂𑌰𑍂 𑌚 𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑍀𑌵𑍍𑌯𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑍀 𑌨𑌦𑌮𑍍𑌬𑌵𑌤𑍍 ।]
𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌸𑍍𑌯 (𑌮𑍁𑌖𑌾𑌸𑍍𑌯𑌂) 𑌸𑍁𑌗𑍍𑌰𑍀𑌵𑌂 𑌤𑍁𑌙𑍍𑌗𑌨𑌾𑌸𑌂 𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌨𑌮𑍍 ॥

44. வரமளிக்கும் அடையாளமில்லாத பக்ஷத்தில்; தொங்கும் கரமாகவும் இருக்கலாம். இக்கரமானது, மாட்டுவாலின் வடிவம்போன்ற வடிவமுடையதாக இருக்க வேண்டும். இந்த கௌரிதேவியை; வெண் பட்டாடையுடன் கூடியவளாகவோ, பீதாம்பரத்தைத் தரிக்கின்றவளாகவோ செய்யலாம்.

45. இந்த கௌரிதேவியை; நீண்ட கரங்களையுடையவளாகவும், அகன்ற கண்களையுடையவளாகவும், கருநிறங் கொண்டவளாகவும், மெல்லிடையாளாகவும், மார்புறத்தே உயர்ந்தவளாகவும், உயர்ந்து பரந்த இடுப்பின் கீழ்புறத்தையுடையவளாகவும் செய்யவேண்டும்.

46. இந்த தேவியின் இடுப்பும் துடையும் அகன்றவைகளாக இருக்கவேண்டும். இடையானது, ஒட்டியாணமுடையதாகவும் அதனிற்தொங்கும் நீவ்யத்தையுடையதாகவும் இருக்கவேண்டும். முகம் அழகிய கழுத்தையுடையதாகவும், அகன்றதாகவும் இருக்கவேண்டும். உன்னதமான மூக்கையுடையதாகவும் புன்னகையுடன் கூடியதாகவும் முகமிருக்கவேண்டும்.

பா³லேந்த்³வாவதம்ஸம் ஸ்யாத்³ ப்⁴ரமராவ்ருதபா⁴லிகம் |
அத²வா பா³லபட்டம் ஸ்யாத் கர்ணயோர் மகரகுண்ட³லே || ௪௭ ||

கர்ணபுஷ்பஸ்ரஜம் தா³மம் ஸ்யாத்³ மங்க³ல்யம் ஸூத்ரகம் (ஸூத்ரம்) |
ஹாரைரஷ்டஸம்யுக்தாம் பா³ஹுமாலாவிபூ⁴ஷிணீம் || ௪௮ ||

கடகம் கடிஸூத்ரம் ஸ்யாத் கேயூர (ரம்) பூரிமாங்கிதம் |
ரக்தாம்ப³ரோத்தரீயம் ஸ்யான் மௌக்திகோத்தரீயமேவ ச || ௪௯ ||
[ரக்தாம்ப³ரேணோத்தரீயமத²வா மௌக்திகை: ஸஹைவ வா ||]

ப்ரகோஷ்ட²வலயம் சைவ வலயைர் மணிப³ந்த⁴கை: |

47. பிறைச்சந்திரனையணியாகக்கொண்ட நெற்றியானது; ப்ரமராவ்ருதமாக (வண்டுகளால் சூழப்பட்டது போன்றும் முன்னெற்றி மயிர்களைக்கொண்டதாக) இருக்கலாம். அல்லது; நெற்றியில் பாலபட்டம் (நெற்றிப் பட்டம்) இருக்கலாம். இரு காதுகளிலும் மகரகுண்டலங்களிருக்கவேண்டும்.

48. கர்ணபுஷ்பங்களுடன் (காதிலணியும் மலர்களுடன்) மாலையும், மங்களகரமான தங்கசூத்ரமும் இருக்க வேண்டும். கழுத்தில் ஹாரம் அட்டிகை இவைகளுடன் கூடியவளாகவும், பாஹுமாலைகள் அணிந்தவளாகவும் தேவியைச் செய்யவேண்டும்.

49. பாஹுகடகமும், இடைசூத்ரமும், பூரிமங்களுடன் கூடிய தோள்வளையும் இருக்கவேண்டும். செந்நிறங் கொண்ட ஆடையினாலோ, முத்துக்களாலோ உத்தரீயம் (மேலாடை) இருக்கவேண்டும்.

50. மணிக்கட்டையலங்கரிக்கும் வளயங்களுடன், ப்ரகோஷ்ட (முழங்கைக்கு முன்புறமுள்ள) வளயம் இருக்க வேண்டும். இரு கண்டங்கால்களும், ஸர்ப்ப வடிவங்

𑌹𑌾𑌰𑌂 𑌰𑌕𑌟𑌕𑌾𑌂𑌶𑍍𑌚 (𑌕𑌂 𑌚) 𑌪𑌾𑌦(𑌦𑍌) 𑌨𑍂𑌪𑍁𑌰-
𑌸𑌂𑌯𑍁𑌤𑌂(𑌤𑍌) ॥ ௫௦ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍 𑌰𑌤𑍍𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍀-
𑌯𑌕𑍈𑌃(𑌕𑌮𑍍) ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌪𑌾𑌦𑌵𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌿𑌤𑌮𑍍 ॥ ௫௧ ॥

𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌪𑌾𑌦𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑍇 𑌹𑌸𑍍𑌤𑌂(𑌸𑍍𑌤𑍇) 𑌪𑌾𑌦𑌪𑍀𑌠𑍇 𑌤𑌥𑌾𑌸𑌨𑍇 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌪𑌾𑌦𑌾𑌗𑍍𑌰(𑌦𑌸𑍍𑌤𑍁)𑌕𑌰𑌾𑌗𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௫௨ ॥

கொண்ட கடகங்களையுடையனவாகவும்; இரு பாதங்களும், சிலம்புடன் கூடியனவாகவும் இருக்கவேண்டும்.

51. தேவியின் எல்லா விரல்களிலேயும் முன்பு கூறப் பட்டபடி, அறிந்து, ரத்னமயமான மோதிரத்தைச் செய்ய வேண்டும். இனி கௌரிதேவியின் உட்கார்ந்த நிலையின் விசேஷங்கள் கூறப்படுகின்றன. வலதுகால் குஞ்சிதமாக (சிறிது வளைந்ததாக) இருக்கவேண்டும். அந்த குஞ்சித மான வலது காலில், இடது காலை நேரராகத் தொங்குவ தாகச் செய்யவேண்டும். இவ்வாறே காச்யபீயத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

“𑌦𑍇𑌵𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌂 𑌚 𑌸𑌮𑌾𑌸𑌨𑌾𑌮𑍍 ।
𑌸𑌾𑌯𑌨𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌪𑌾𑌦𑌵𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥” என.

52. இந்த கௌரிதேவியின் கரங்களில், நின்றநிலையிலேயும் உட்கார்ந்த நிலையிலேயும், வலது கரத்தில் உத்பலமலரும் இடது கரத்தில் வரமளிக்கும் அடையாளமும் இருக்கவேண்டும். இப்பொழுது உட்கார்ந்த நிலையில் மற்றொரு விதத்தைக் கூறுகின்றார். தேவியின், வலது கால் இடதுகாலைக்காட்டிலும், வெளியே பீடத்தில் ஊன்றப் பட்ட இடது கரத்தின் முடிவு வரை, மடக்கிவைத்துக் கொண்ட நிலையில் இருக்கவேண்டும்.

குஞ்சிதம் வாமபாதம் ஸ்யாத்தக்ஷிணம் குஞ்சிதம் து வா ।
புஷ்பயுக்தம் ப்ரலம்பஹஸ்தம் ஸ்யாத் ஸ்தானகம் ச த்ரிபங்கிகம் ॥ ௫௩ ॥

ஆஸநேஷு பராந்த்யேஷு த்வயோரபி து தக்ஷிணே ।
புஷ்பஸ்ய வாமபார்ஶ்வே ச ப்ரலம்பானாம் ச வாமகே ॥ ௫௪ ॥

ஸ்தாபயேத் ஸ்தாபனே ஶஸ்தம் ததா ஸம்ஶயேऽபி ச ।

53. இந்நிலையில் இடது காலானது குஞ்சிதமாக (சிறிது வளைந்ததாக)த் தொங்கவிடப்பட்டிருக்கவேண்டும். அல்லது, வலது கால் குஞ்சிதமாக இருந்து இடது கால் ஸ்வஸ்திகமாகவும் இருக்கலாம். உட்கார்ந்த நிலைகளில் பின்னே கூறப்பட்ட இரு நிலைகளிலும், வலது கரம் மலர் தரித்ததாகவும் இடது கரம் தொங்கவிடப்பட்டதாகவும் (அதாவது:—பீடத்தில் ஊன்றப்பட்டதாகவும்) இருக்க வேண்டும். இவ்வாறே காச்யபீயத்திலும் கூறப்பட்டிருக்கின்றது.

"வரதம் வாமஹஸ்தே து சோத்பலம் தக்ஷிணகரே ।
அதவாந்யப்ரகாரேண தேவீரூபம் வதாமி தே ॥
வாமோருபாஹ்யபீடே து வாமஹஸ்தம் ந்யஸேத் ।
அந்யத்ரோத்பலஸம்யுக்தம் தக்ஷிணம் ஹஸ்தமுச்யதே ॥" என.

ஆகவே; இந்த உட்கார்ந்தநிலைபோலவே, நின்றநிலையும் மூன்றுவிதப் பிரிவினை கொண்டதாகும்.

54. இந்த தேவியின் உடலினளவை, மத்யமதசதாளத்தில் கொளல்வேண்டும். இந்த தேவியின் மூர்த்தியை லிங்கத்தினுடையவாகிலும் விக்ரஹங்களுடையவாகிலும் இடப்புறத்தேயே, ஸ்தாபிக்கவும்.

55. அசையாத நிலையிலேயும், (மூலஸ்தானமாகவும்) அசையும் நிலையிலேயும் (உத்ஸவவிக்ரஹமாகவும்) கௌரி

𑌗𑍌𑌰𑍀𑌂 𑌚 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀𑌂 𑌚𑍈𑌵 𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௫௫ ॥
[𑌗𑍌𑌰𑍀 𑌚 𑌪𑌾𑌰𑍍𑌵𑌤𑍀 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥]

𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌂 𑌚 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌮𑍍 ।
𑌸𑌮𑌪𑌾𑌦𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 (𑌪𑌾𑌦𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂) 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑍇𑌨 𑌮𑌾𑌨𑌯𑍇𑌤𑍍 ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌾𑌭𑌯𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌵𑌰𑌦𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ।
𑌅𑌪𑌰𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌦𑍍𑌮𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌚𑍋𑌤𑍍𑌪𑌲𑌮𑍍 ॥ ௫௭ ॥

𑌶𑍍𑌵𑍇𑌤𑌂 𑌰𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌵𑌾 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌪𑍍𑌰𑌶𑍋𑌭𑌿𑌤𑌾(𑌤𑌮𑍍) ।
𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑍁 𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌨𑌿𑌭𑌂 𑌮𑌕𑍁𑌟𑌂 𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌂 𑌤𑍁 𑌵𑌾 ॥ ௫௮ ॥

தேவியை ஸ்தாபிக்கலாம். இவ்வாறு கௌரிதேவியும் பார்வதிதேவியும் கூறப்பட்டார்கள். இனி மனோன்மணி தேவி கூறப்படுகிறாள்.

56. சமமான பாதங்களுடன் நின்றநிலையிலிருக்கும் இந்த மனோன்மணிதேவியை; நான்கு கரங்களையுடையவளாகவும், மூன்று கண்களையுடையவளாகவும், ஜடாமகுடத்தாலலங்கரிக்கப்பட்டவளாகவும் செய்து, தசதாளத்தினால் அளவு கொளல்வேண்டும்.

57. இந்த தேவியின் உட்கரங்களுள்; வலது கரத்தில் அபயமுத்திரையும், இடது கரத்தில் வரமளிக்கும் முத்திரையும் இருக்கவேண்டும். வெளிக் கரங்களுள்; வலது கரத்தில் தாமரை மலரும், இடது கரத்தில் ஆம்பல் மலரும் இருக்கவேண்டும்.

58. இந்த தேவியின் உடலுக்கு, வெண்ணிறத்தையோ செந்நிறத்தையோ கருநிறத்தால் உடலின் சோபையையோ செய்யலாம். சிலர்; குந்தளாகாரமான மகுடத்தையோ, அல்லது கூந்தலினாலாகிய குந்தளத்தையோ செய்யலாமெனக் கருதுகிறார்கள்.

𑌵𑌾𑌮𑍇 𑌬𑌾𑌲𑌶𑌶𑌿𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾𑌮𑍇 𑌤𑌤𑍍𑌰 𑌯𑌥𑌾(𑌯𑌥𑌾)𑌨𑌿𑌤𑌮𑍍 ।
𑌦𑍁𑌕𑍂𑌲𑌵𑌸𑌨𑍋𑌪𑍇𑌤(𑌾)𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤(𑌾)𑌮𑍍 ॥ ௫௭ ॥

𑌤𑌦𑍇𑌵 𑌵𑍃𑌷𑌭𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌵𑍃𑌷𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌦𑍇𑌵𑍀(𑌵𑍍𑌯𑌾𑌃) 𑌤𑍍𑌰𑌿𑌸𑌾𑌮𑌿𑌕𑌮𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌚 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ॥ ௫௮ ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑍋 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌾𑌗𑍍𑌰(𑌶𑍃)𑌂 𑌶𑌿𑌰𑌸𑍋𑌯𑌾(𑌸𑍍𑌯𑍋)𑌪𑌰𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍇𑌷𑌂 𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍(𑌵𑌦𑍍)𑌦𑍇𑌵𑍀𑌂 (𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌃) 𑌚𑍋𑌤𑍍𑌪𑌲𑌂 𑌵𑌰𑌦𑌾(𑌵𑌰𑌦𑌾)𑌭𑌯𑌮𑍍 ॥ ௫௯ ॥

59. இந்த தேவியின் மகுடத்தில், இடது புறத்தில் பிறைச்சந்திரனைச் செய்யவேண்டும். வலது புறத்திலோ இணைக்கவேண்டிய முறைப்படி எல்லாவற்றையுமிணைக்கலாம். இந்த தேவியின் வடிவம் வெண்பட்டாடையுடன் கூடியதாகவும், சர்வாபரணபூஷிதமாகவுமிருக்கவேண்டும்.

60. காளைமாட்டின் முதுகில் உட்கார்ந்திருக்கும் மனோன்மணிதேவியின் வடிவம், மூன்றுவிதமான நிலை கொண்டது. அவைகளில் முதலாவது வகையானது அதுவே. [முன் நின்றநிலையிற் கூறியவண்ணமேயாம். ஆனால் காளைமேல் உட்கார்ந்திருப்பதுமட்டும் விசேஷமாகும்.] இரண்டாவது வகையானது; வலது பாதம் ஸ்வஸ்திகமாயிருக்க வேண்டும். (மடக்கப்பட்டிருக்க வேண்டும்). இடது கால் குஞ்சிதமாக (சிறிது வளைந்ததாக)த் தொங்கவேண்டும்.

61. நான்கு கரங்களுள் உட்கரங்களிரண்டில் இடது கரமானது, விருஷபத்தின் தலையின்மேல் ஊன்றப்பட்டிருக்கவேண்டும். மற்ற மூன்று கரங்களிலும் உத்பலம் வரதம் அபயம் என்பன அடையாளங்களாக முன்கூறியது போலவே இருக்கவேண்டும்.

𑌤𑌥𑍈𑌵 𑌪𑌦𑍍𑌮𑌹𑌸𑍍𑌤𑌂(𑌸𑍍𑌤𑍇) 𑌚 𑌵𑌾𑌮𑍇 𑌰𑌕𑍍𑌤𑌾𑌬𑍍𑌜𑌧𑌾𑌰𑌿𑌣𑍀 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌅𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌾(𑌂) 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌃 ॥௬௨॥

𑌏𑌵𑌂 𑌮𑌨𑍋𑌨𑍍𑌮𑌨𑍀𑌂 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌚𑍍𑌛𑌿𑌵𑌸𑌦𑍍𑌮𑌕𑍇 ।
𑌵𑌾𑌰𑌾𑌹𑍀 𑌚𑍈𑌵 𑌕𑍌𑌮𑌾𑌰𑍀 𑌚𑌾𑌮𑍁𑌣𑍍𑌡𑍀 𑌭𑍈𑌰𑌵𑍀 𑌤𑌥𑌾 ॥ ௬௩ ॥

𑌮𑌾𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍀 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀 𑌚𑍈𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍀 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌤𑌰𑌃 ।
𑌸𑌤𑌾𑌸𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌨𑌵𑌤𑌾𑌲𑍇𑌨(𑌲𑌂 𑌤𑍁) 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।

𑌭𑌦𑍍𑌰𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑌾𑌸𑌨𑌾(𑌸𑍍𑌥𑌾𑌨𑌾)𑌸𑌨𑍇 𑌸𑌪𑍍𑌤𑌮𑌾𑌤𑌰𑌃 ।
𑌶𑌯𑌨𑍇(𑌨𑌂) 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑌾𑌦𑌾(𑌦𑍇)𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥

62. மூன்ரும் வகையானது; இரண்டாம் வகை போன்றதேயாம். ஆனல்; வெளிக்கரங்களில் இடது கரத்தில் செந்தாமரை தரிப்பதையும், வலது கரத்தில் ஜபமணி மாலை தரிப்பதையும் செய்யவேண்டும். இவ்வாறு முன்னேர்களால் கூறப்பட்டிருக்கின்றது.

63, 64. சிவாலயத்தில் மனேன்மணி தேவியை இவ்வாறு ஸ்தாபிக்கவேண்டும். இனி ஸப்தமாதாக்களைக் கூறுவோம். வாராகி, கௌமாரி, சாமுண்டி, பைரவி, மாகேந்திரி, வைஷ்ணவி, பிரம்ஹாணி என்ற எழுவரும்; ஸப்தமாதாக்கள் எனப்படுவர். ஸகலவிதமான இந்த சக்தி தேவதைகளுக்கும், தசதாளம் கிடையாது. நவதாளம் எனும் மாநத்தையே செய்யவேண்டும்.

65. இந்த எழு மாதாக்களும்; பத்ரபீடத்தின்மேலே வீற்றிருக்கும் நிலையில் ஸ்தாபிக்கப்படவேண்டியவர். இவர்களின் வலதுகாலில் சயநமும், (சாய்ந்து மடக்கப்பட்டிருத்தலும்) அவ்வாருகிய வலது பாதத்தில் தொங்கவிடப்பட்ட இடது கால்களையும் செய்யவேண்டும்.

[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible] ॥ ௬௮ ॥

[illegible]
[illegible]
[illegible] ॥

[illegible]

66. சாமுண்டீ ருத்ராணீ மற்றுமுள்ள எல்லா சக்தி தேவதைகளும், மூன்று கண்களுடையவர். இவர்கள் நான்கு கரங்களுடனும் மூன்று கண்களுடனும் ஸர்வா பரணபூஷிதைகளாக இருக்கவேண்டும்.

67. ப்ரம்ஹாணி யென்ற மாதாவும் ருத்ராணியும், ஜடாமகுடங்களால் அலங்கரிக்கப்பட்டவர்கள். வாராகி யெனும் சக்தியானவள் பன்றியின் முகமுடையவள். இந்த மாதா கிரீடமகுடத்துடன் கூடியவள்.

68. கௌமாரி யென்பவள், கரண்டமகுடமுடையவள். வைஷ்ணவி யெனும் மாதா கிரீடமகுட முடையவள். சாமுண்டியென்பவள் சுடர்மயமான மகுடமுடையவள். பைரவியென்னும் மாதா, வண்டுகள் போன்றும் சுருண்டு பரந்த மயிர்களையுடையவள்.

69. சாமுண்டீ பைரவீ இவ்விரண்டு சக்திகளுடைய வும், உட்புறக் கை வெளிப்புறக் கை யிரண்டுகளிலும், வலதுபுறத்தில் முறையே சூலம் டமரு (உடுக்கை) இவ்

𑌕𑌪𑌾𑌲𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌪𑌾𑌶𑌂 𑌚𑌾𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑌕𑌂(𑌕𑍇) ॥ ௬௯ ॥

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌵𑌾 𑌨𑌵𑍀(𑌲𑌕𑍍𑌷𑌣𑍀)𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯 𑌚𑌾𑌮𑍁𑌣𑍍𑌡𑍀 𑌭𑍈𑌰𑌵𑍀 𑌉𑌭𑍇 ।
𑌚𑌾𑌮𑍁𑌣𑍍𑌡𑍀 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌾 𑌭𑍈𑌰𑌵𑍀 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑍀 ॥ ௭௦ ॥

𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑍁 𑌭𑍈𑌰𑌵𑍀𑌂 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌰𑍍 𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌕𑌾𑌮𑍍 ।
𑌶𑍂𑌲𑌂 𑌡𑌮𑌰𑍁𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌸𑌵𑍍𑌯𑌾𑌪𑌸𑌵𑍍𑌯𑌕𑌰𑍇𑌷𑍁 𑌵𑌾 ॥ ௭௧ ॥

𑌰𑌕𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌾 𑌰𑌕𑍍𑌤𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌾 ।
[𑌰𑌕𑍍𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍁𑌨𑍍𑌤𑌾 𑌵𑌾 𑌰𑌕𑍍𑌤𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌾 ।]
𑌚𑌾𑌮𑍁𑌣𑍍𑌡𑍀 𑌚 𑌶𑌿𑌰𑍋𑌮𑌾𑌲𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌣𑍀 ॥ ௭௨ ॥

விரண்டையும் ; இடது புறத்தில் முறையே மண்டையோடு பாசக் கயிறு இவ்விரண்டையும் செய்யவேண்டும்.

70. இவ்வாருகிய இலக்கணத்தைக் கொண்டு. சாமுண்டீ பைரவீ இவ்விருவரையும் செய்யவேண்டும், இவ்விருவருள் ; சாமுண்டீ கருநிறவொளி கொண்டவள். பைரவியோ செந்நிறங் கொண்டவள்.

71. சிலர் பைரவியின் இலக்கணத்தை மேற்கண்டவாறும் கூறுகின்றனர். அதாவது :—பைரவியின் வலது இடது உட்கரங்களிரண்டும் முறையே வரமளிக்கும் அடையாளத்தையும், அபயமளிக்கும் அடையாளத்தையும் கொண்டவை யெனவும், வெளிப்புறத்திலுள்ள வலது இடது கரங்களில் முறையே, சூலத்தையும் டமருவையும் செய்யவேண்டுமெனவும் கூறுகின்றனர்.

72. மற்றும் ; சாமுண்டிதேவியானவள் ; செந்நிறங் கொண்ட ஆடையுடுத்தவளாகவும், தோள்களிலிருந்து பக்கலிலே முன்புறந் தொங்கும் கூந்தலையுடையவளாகவும், செந்நிறங் கொண்ட ரவிக்கை யுடையவளாகவும், தலைகளை மாலையாகக் கொண்டவளாகவும், ஸர்வாலங்கார பூஷிதையாகவு மிருக்கவேண்டும்.

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑍀(𑌰𑌾) 𑌕𑍃𑌷𑍍𑌣𑌕𑌮𑍍𑌬𑌲𑌕𑌞𑍍𑌚𑍁𑌕𑌾(𑌚) 𑌭𑍈𑌰𑌵𑍀 ।
𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀 𑌚𑍈𑌵 𑌵𑌾𑌰𑌾𑌹𑍀 𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌾 𑌵𑌿𑌶𑍋𑌭𑌿𑌨𑍀 ॥ ௭௩ ॥

𑌚𑌕𑍍𑌰𑌂 𑌚 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌶𑌙𑍍𑌖𑌂 𑌵𑌾𑌮𑌕𑌰𑍇 𑌤𑌥𑌾 ।
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌵𑌰𑌦𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌾𑌭𑌯(𑌯𑌂 𑌕𑌰𑍇) ॥

𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌚 𑌰𑌕𑍍𑌤𑌾(𑌕𑍍𑌤𑌂) 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌣𑍀 ।
𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑍀 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌵𑌾𑌰𑌾𑌹𑍀 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌹𑌲𑌮𑍍 ॥௭௫॥

𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑌥𑌾 𑌪𑌾𑌶𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚𑌾𑌭𑌯𑌂 𑌕𑌰𑍇 ।
𑌵𑌰𑌦𑌂 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌣𑍀 ॥ ௭௬ ॥

73. பைரவிதேவியானவள்; கருப்பு ஆடை தரித்தவளாகவும், கருநிற லம்பகூர்ச்சத்தை (ரவிக்கையை) உடையவளாகவும், இருக்கவேண்டும். வைஷ்ணவியும், வாராஹியும் நீலநிறங் கொண்டவர்களாகவும் விசேஷ சோபையுடன் கூடியவர்களாகவுமிருக்கவேண்டும்.

74. வைஷ்ணவி தேவியின்; வெளிக்கரங்களுள் வலது கரத்தில் சக்ராயுதத்தையும், இடது கரத்தில் சங்கத்தையும் செய்யவேண்டும். உட்கரங்களுள்; இடது கரத்தில் வரமளிக்கும் அடையாளத்தையும், வலது கரத்தில் அபயமளிக்கும் அடையாளத்தையும் செய்யவேண்டும்.

75, 76. மஞ்சளாடையையோ செந்நிறமுள்ள ஆடையையோ அணிவிக்கலாம். ஸர்வாலங்காரபூஷிதையான வைஷ்ணவி தேவி இவ்வாறு கூறப்பட்டாள். வாராகியெனும் தேவியானவள்; வெளிப்புறக் கரங்களுள் வலது கரத்தில் கலப்பையையும், இடது கரத்தில் பாசத்தையும், உட்புறக் கரங்களுள்; வலது கரத்தில் அபயத்தையும், இடது கரத்தில் வரமளிக்கும் சின்னத்தையும் தரிப்பவளாய் ஸர்வாபரணபூஷிதையாக இருக்கவேண்டும்.

𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾 𑌚𑍈𑌵 ; 𑌕𑍌𑌮𑌾𑌰𑍀 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌿𑌨𑍀 ।
𑌵𑌰𑌦𑌂 𑌚𑌾𑌭𑌯𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌤𑍁 𑌚𑌾𑌰(𑌦𑌕𑍍𑌷𑌿𑌣)𑌹𑌸𑍍𑌤𑌯𑍋(𑌕𑍇)॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌚 𑌵𑍍𑌯𑌾𑌹𑍃𑌤𑌂 𑌚 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌯𑍋𑌃 ।
[𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌚𑌾𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ।]
𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑌰𑌾 𑌚𑍈𑌵 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌣𑍀 ॥ ௭௮ ॥

𑌕𑍌𑌮𑌾𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍀 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑍀 ।
𑌵𑌰𑌦𑌾𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌾 𑌚 𑌕𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾 𑌸𑌾𑌕𑍍𑌷𑌮𑌾𑌲𑌿𑌕𑌾 ॥ ௭௯ ॥

𑌵𑌾𑌮𑍇 𑌶𑍍𑌵𑌾𑌮𑌸𑌵𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌚𑌾(𑌕𑍍𑌷𑌮𑌾)𑌲𑌯𑌾 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌶𑍁𑌦𑍍𑌧𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌮𑍍𑌬𑌰(𑌰𑌾) 𑌯𑍁𑌕𑍍𑌤𑌾(𑌶𑍁𑌦𑍍𑌧𑌾) 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌣𑍀 ॥

77, 78. இந்த வாராகிதேவி பீதாம்பரத்தையே உடுத்திருக்கவேண்டும். இனி கௌமாரியைப் பற்றிய இலக்கணம். இந்தக் கௌமாரிதேவி செந்நிறமுடையவள். இத்தேவியின் உட்கரங்களுள் இடக் கரத்தில் வரமளிக்கும் அடையாளத்தையும், வலக்கரத்தில் அபயமளிக்கும் அடையாளத்தையும், வெளிக்கரங்களுள் வலது கரத்தில் கோழியையும், இடது கரத்தில் சக்தியெனும் வேலையும் செய்யவேண்டும். இந்த தேவி நீலநிற ஆடை தரித்தவளாய் ஸர்வாபரணபூஷிதையாக இருக்கவேண்டும்.

79. இவ்வாறு கௌமாரியின் இலக்கணம் கூறப்பட்டது. ப்ரம்ஹாணி தேவியானவள், நான்கு முகங்களையுடையவள். வரதம் அபயம் கமண்டலம் ஜபமாலை இவைகளைக் கைகளிலுடையவள்.

80. வரதமும் அபயமும் முறையே இடது வலது உட்கரங்களிலும்; ஜபமாலையும் குண்டிகையும் முறையே வலது இடது வெளிக்கரங்களிலும் இருக்கவேண்டும். இந்த தேவி தூய ஆடை உடுத்தவளாகவும், தூயவடிவங் கொண்டவளாகவும், ஸர்வாபரணபூஷிதையாகவும் இருக்கவேண்டும்,

ஏவமுக்தா ததா ப்ராஹ்மீ ருத்ராணீ ஶ்வேதவர்ணிநீ ।
வரதாபயஹஸ்தா ச வாமேதரே ச வாமதக்ஷிணே ॥ ௮௧ ॥

வாமே ச ஹரிணம் ஸவ்யே **பரஶும் பர**ஹஸ்தகே ।
சர்மாம்பரதரா ரௌத்ரா ஸர்வாபரணபூஷிணீ ॥ ௮௨ ॥

வாமே து ஶங்கபத்ரம் ஸ்யாத்தக்ஷிணே கர்ணகுண்டலம் ।
ருத்ராணீலக்ஷணம் ப்ரோக்தம் சாமுண்டீ வாமகர்ணகே ॥ ௮௩ ॥

ஶங்கபத்ரம் வாமே து ஶங்ககுண்டலமாஶ்ரிதம் ।
அந்யாஸாம் ஸர்வஶக்தீநாம் மகரகுண்டலபூஷணம் ॥ ௮௪ ॥

ஹாரோபக்ரீவஸம்யுக்தம் கேயூரகடகாந்விதம் ।

81. இவ்வாறு ப்ராம்ஹீ தேவி கூறப்பட்டாள். ருத்ராணி தேவியானவள் வெண்ணிறமுடையவள். உட்கரங்களுள் முறையே இடது வலது கரங்களில், வரதம் அபயம் இவைகளை யுடையவள்.

82. வெளிப்புறக் கரங்களுள் ; இடது கரத்தில் மானை யும், வலது கரத்தில் பரசுவையும் செய்யவேண்டும். இந்த ருத்ராணி தோலாடையுடுத்தவள். எல்லாவிதமான ஆபரணங்களையுமுடையவள்.

83. இந்த ருத்ராணியின் இடது காதில் சங்கு ஓலையும், வலது காதில் குண்டலமும் இருக்கவேண்டும். இவ்வாறு ருத்ராணியின் இலக்கணம் கூறப்பட்டது. சாமுண்டி தேவியின் இடது காதிலோ ;

84. சங்கு ஓலையும், வலது காதில் சங்கினாலாகிய குண்டலமும் இருக்கவேண்டும். மற்ற சக்தி தேவிகளுக்கு மகரகுண்டலம் எனும் அணியே ஏற்றதாகும்.

85, 86. கீழே கூறப்பட்ட எல்லா சக்திதேவதைகளுக்கும் ; ஹாரம், உபக்ரீவம் இவைகளுடன் கூடியதாக

மணிப³ந்தே⁴ து வலயம் ஸர்வரத்நாங்கு³லீயகை: ॥ ௮௫ ॥

பா³ஹுமால்யாதி³ஸம்ஸக்தை: ஸாகம் பரிஷ்கரணிதம் ।
உக்தாநாம் ஸர்வஶக்தீநாம் ஸர்வாப⁴ரணபூ⁴ஷிதம் ॥ ௮௬ ॥

ப⁴த்³ரபீடோ²பரி சே²தே³ மஹிஷஸ்ய ஹத: ஶிர: ।
[ப⁴த்³ரபீடோ²பரிஷ்டாத்து மஹிஷஸ்ய ஹதம் ஶிர: ।]
தது³பர்யேவ தாரகாம் தே³வீம் ஸ்தா²நகாம் ருஜும் ஸ்தா²பயேத் ॥ ௮௭ ॥
[தது³பர்யேவ தாரகாம் தே³வீம் ருஜுஸ்தா²நே விஸ்தா²பயேத் ॥]

சதுர்பு⁴ஜாம் த்³விநேத்ராம் ச ஶ்யாமவர்ணாம் ப்ரஶோபி⁴தாம் ।
கிரீடமகுடோபேதாம் ஸர்வாப⁴ரணபூ⁴ஷிணீம் ॥ ௮௮ ॥

வும், கேயூரகடகங்களுடன் கூடியதாகவும், ரத்னமயமான எல்லாவித மோதிரங்களுடன், மணிக்கட்டில் வளையலைச் செய்யவேண்டும். பாஹுமாலை முதலிய பூஷணங்களுடன், சூடகத்துடன் கூடிய ஸகலவிதமான நகைகளின் அலங்காரத்தைச் செய்யவேண்டும்.

87. இனி துர்க்கையெனும் காத்யாயநியின் இலக்கணம் கூறப்படுகின்றது. பத்ரபீடத்தின் மேலே கொல்லப்பட்ட மகிஷாஸுரனுடைய சிரம் இருக்கவேண்டும். அதன் மேலே தாரகாதேவியான துர்க்கையை ருஜுஸ்தானத்தில் (நேரே நின்ற நிலையில்) கருதி ஸ்தாபிக்கவேண்டும்.

88. இந்த காத்யாயநியை; நான்கு கரங்களுடையவளாகவும், இரு கண்களையுடையவளாகவும், கருநிறத் திருமேனியுடன் விளங்குகின்றவளாகவும், கிரீடமெனும் மகுடத்துடன் கூடியவளாகவும், ஸர்வாபரணபூஷிதையாகவும் செய்யவேண்டும்.

தக்ஷிணேऽபயம் கரே ஸவ்யே சக்ரம் வாமதக்ஷிணே ।
ஸாரூபநிரூபிதம் வாமே வரதம் கரவிந்யஸேத் || ௮௯ ||

வாமே வாந்யகரே ஶங்கம் பீதாம்பரதரா ஹ்வேகம் ।
ஏவம் காத்யாயநீ ப்ரோக்தா ஶேஷம் பூர்வோக்தவத்பவேத் ॥ ௯௰ ॥

உஷ்ணீஷே ச மத்யே லலாடமத்யே
நாஸாக்ரமத்யே சாபி தேஹநாபேஃ ।
ஸ்கந்தயோ பாதத்வயமத்யகுல்பே
காயஸூத்ரம் ஸமத்ரம் து ஸர்வாஸநே ச || ௯௧ ||

[உஷ்ணீஷே மத்யே ச லலாடமத்யே
நாஸாக்ர மத்யே ஹிக்கா தேஹநாபேஃ ।
மத்யேபத்யோஃபாதயோர்குல்பயோர் குல்பே
காயஸூத்ரம் ஸமத்ரம் து ஸர்வாஸநே ச ||]

89. இந்த துர்க்கை தேவியின் வலது புறத்திலுள்ள உள் வெளிக்கரங்களில் முறையே அபயமுத்திரையையும் சக்ராயுதத்தையும் செய்யவேண்டும். இடதுபுறத்திலுள்ள உட்கரத்தில் வரமளிக்கும் முத்திரையை அடித்துடையைச் சார்ந்திருக்கும்படி செய்யவேண்டும்.

90. இடதுபுறத்திலுள்ள வெளிக்கரத்தில் சங்கத்தைச் செய்யவேண்டும். தேவியானவள் பீதாம்பரத்தைத் தரித்திருக்கவேண்டும். காத்யாயநி தேவி, இவ்வாறு கூறப்பட்டிருக்கின்ருள். எஞ்சியவற்றை முன்கூறியதைப் போலும் செய்யவும்.

91. சுகாஸநத்தில், மத்யமசூத்ரம் எவ்வாறு இருக்க வேண்டுமென்ற நிலேயைக் கூறுகின்ருர். உச்சித்தலேயின் நடுவிலேயும், நெற்றியின் நடுவிலேயும், மூக்குநுனியின் நடுவிலேயும், கழுத்திலிருந்து நாபியின் நடுவிலேயும், செலுத்தியவாறு; கீழே இரு பாதங்களுக்கும் நடுவில் கணுக்காலிலிருக்கும்படி சூத்திரத்தைச் செய்யவேண்டும்.

𑌤𑌥𑍈𑌵 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌕𑌾𑌯𑌦𑍇𑌶𑍇
𑌊𑌰𑍁𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑍇 𑌚 𑌸𑍂𑌤𑍍𑌰𑍇 ।
𑌜𑌾𑌨𑍁𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌗𑌪𑌾𑌦𑌯𑍋𑌶𑍍𑌚
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑍃𑌜𑍁𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍇 𑌤𑌤𑍍 ॥ ௯௨ ॥

[𑌤𑌥𑍈𑌵 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌕𑌾𑌯𑌦𑍇𑌶𑍇
𑌊𑌰𑍁𑌦𑍍𑌵𑌯𑍇 𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑌂 𑌚 𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌜𑌾𑌨𑍁𑌦𑍍𑌵𑌯𑍇 𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑌂 𑌚 𑌪𑌾𑌦-
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑌦𑍃𑌜𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥]

𑌭𑌙𑍍𑌗𑌦𑍍𑌵𑌯𑍇 𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑍀 𑌲𑌲𑌾𑌟𑌦𑍇𑌶𑍇
𑌨𑌾𑌭𑌾𑌵𑌧𑍇 𑌸𑌵𑍍𑌯𑌕𑌵𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌮𑌧𑍍𑌯𑍇 ।

92. ருஜுஸ்திதம் என்ற நின்ற நிலையில், மத்ய ஸூத்ரம் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதைக் கூறுகின்ருர். அந்த உச்சித் தலையினின்று வரும் மத்யசூத்திரமே, நடு உடலிலேயும், துடைகளிரண்டிலேயும் நடுவை யடைந்ததாக இருக்கவேண்டும். முழங்கால்களிரண்டிற்கும் நடுவிலேயும், பாதங்களிரண்டிற்கும் நடுவிலேயும் இருக்க வேண்டும். இவ்வாருயின், இது; நேரே நின்ற நிலையாம்.

93. இப்பொழுது நின்ற நிலையிலும், உட்கார்ந்த நிலையிலும், இரண்டு நெளிவுள்ள நிலையில் மத்யம சூத்ரம் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதைக் கூறுகின்ருர். இந் நிலையில் நெற்றியின் வலது புறத்திலும், நாபியின் வலது புறத்திலும் இரண்டு பங்கங்கள் (நெளிவுகள்) ஏற்படுகின் றன. அப்போது மத்யசூத்ரமானது, தலை உச்சியிலிருந்து;

𑌨𑌾𑌭𑍌 𑌤𑍁 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑍇
𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌹𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌭𑌾𑌵𑌨𑍇𑌨 𑌚 ॥ ௯௩ ॥

[𑌹𑌂𑌸𑌦𑍍𑌵𑌯𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌸𑌵𑍍𑌯𑍇
𑌨𑌾𑌸𑌾𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌸𑌵𑍍𑌯𑌕𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑌧𑍍𑌯𑍇 ।
𑌨𑌾𑌭𑍌 𑌤𑍁 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑍇
𑌶𑌕𑍍𑌤𑌿𑌂 𑌹𑌿 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍 𑌪𑌰𑌿𑌪𑍂𑌰𑍍𑌣𑌭𑌾𑌵𑌨𑍇𑌨 𑌵𑌾 ॥]

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌶𑌕𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮

𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌦𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

வலது நெற்றியிலும், வலது நாசியைச் சார்ந்தவாறு வலது கண்ணின் நடுவிலும், வலது நாபியின் பார்ச்வத்தி லும், தோய்ந்து, நின்ற நிலையிலுள்ள இடது பாதத்தில் தங்கிநிற்கும் என்றறியவும்.

ஸ்ரீ மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்

சக்திலக்ஷணவிதானம் என்ற

ஐம்பத்திநான்காவது அத்யாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌜𑍈𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮

|| 𑌪𑌞𑍍𑌚𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

——o——

𑌸𑍁𑌗𑌤𑌜𑍈𑌨𑌕𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌮𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 |
𑌸𑌂𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑍍 || ௧ ||

𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑌂 𑌲𑌮𑍍𑌬𑌮𑌾𑌨𑌕𑌂(𑌚 𑌲𑌮𑍍𑌬𑌨𑌮𑍍) |
𑌉𑌨𑍍𑌮𑌾𑌨𑍋𑌪𑌮𑌾𑌨𑌂 𑌚 𑌮𑌾𑌨𑌂 𑌷𑌟𑍍𑌕𑌂 𑌸𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 || ௨ ||

𑌮𑌾𑌦𑍍𑌯𑌂𑌤𑍁𑌷𑌟𑍍(𑌷𑌾𑌡𑍍)𑌵𑌿𑌶𑍇𑌷(𑌕)𑌂 𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 |

ஸ்ரீமானஸாரமெனும் சில்பசாஸ்திரத்தில்

ஜைனலக்ஷணமெனும்

ஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

——o——

1. இப்பொழுது, சுகதஜைனர் முதலியோர்களின் இலக்கணம், அவரவர்களின் அளவை முன்னிட்டதாகக் கூறப்படுகின்றது. அதனிலும்; மானஸாரத்தின் (அளவு நுணுக்கத்தின்) சங்கிரஹமும், இங்கு சுருக்கித் தெரிவிக்கப்படுகின்றது.

2. மானம், பிரமாணம், பரிமாணம், லம்பமானம், உன்மானம், உபமானம் என; அளவு ஆறுவிதமுள்ளதாகக் கூறப்படுகின்றது.

3. இந்த மானம் முதல் உபமானம் வரையுள்ள அறுவகையளவு விசேஷங்களின் இலக்கணம் கூறப்படுகின்

ப்ரமாணம் விஸ்த்ருதம் ப்ரோக்தம் பரித: பரிமாணகம் || ௩ ||

தத்(ய)ஸூத்ராலம்பமாநம் ஸ்யாதுந்நதம் மாநமுச்யதே |
கநத்வ(ம்)சோபமாநம் ஸ்யாத்(ஸ்தவ-பிம்போதயாதிஷு) || ௪ ||

மாநமேவம் து ஷட்விதம் மாநேநாங்காநி மாநயேத் |
ஆதிமாநவிதி: ஸம்யக்லக்ஷணம் ச ப்ரோச்யதே || ௫ ||

றது. கால் கட்டைவிரல் முதற்கொண்டு, உச்சித்தலை வரையுள்ள அளவிற்கு மானம் எனப் பெயர் கூறப்படுகின்றது. அந்த அந்த விஸ்தார அளவு, பிரமாணம் எனக் கூறப்பட்டிருக்கின்றது. சுற்றளவு, பரிமாணம் எனக் கூறபட்டிருக்கின்றது,

4. சூத்திரங்களைத் தொங்கவிடுதலால் கிடைக்கும் யாதாமொரு அளவுண்டோ, அது லம்பமானம் எனப்படும். அந்த அந்த பள்ளத்தின் யாதாமொரு அளவுண்டோ, அந்த வுயரத்திற்கு உன்மானமெனப் பெயர் சொல்லப் படுகின்றது. இரண்டு பொருள்களுக்கு யாதாமொரு இடைவெளியுண்டோ, அந்த வொன்றுக் கொன்றைச் சார்ந்த இடைவெளியளவு உபமானமெனப்படும். இந்த அளவுகள் சகலவிதமான பிம்பங்களின் உதயம் முதலிய வற்றில் ஏற்பட்டனவாம்.

5. இவ்வாறு அளவு, ஆறுவகைத்தது. இத்தகைய அளவினால் அங்கங்களை அளக்கவேண்டும். இப்பொழுது; முதலாவதான மானத்தின் முறையும், அதனிலக்கணமும் இங்கு நன்கு கூறப்படுகின்றது.

हर्म्यतारवशान्मानं गर्भगेहवशोदयम् ।
द्वारमानवशात्तुङ्गमधिष्ठानवशोदयम् ॥ ६ ॥

हस्तमानवशान्मानं तालमानवशोदयम् ।
अङ्गुलेनापि वोत्तुङ्गं यजमानवशोदयम् ॥ ७ ॥

मूर्तिबेरवशान्मानमुत्तमादि त्रयं त्रयम् ।
एवं तु नव देशे च मानानां तु(सं) संक्षेपम् ॥ ८ ॥

हर्म्यादीनां चतुर्णां भोगमोक्षार्थकामदाः ।
[हर्म्याद्यं च चतुर्णां भोगमोक्षार्थकामदम् ।]

6, 7, 8. இப்பொழுது மகாமானமென்ற பேரத்தின் மானமானது, ஒன்பது விதமாகக் கூறப்படுகின்றது. அதாவது:—ஹர்ம்யத்தின் அகலத்தின் வசத்தால் ஏற்படும் அளவு, கர்பக்ருஹத்தின் உயரத்தால் ஏற்படும் அளவு, வாயிலின் அளவால் (உயரத்தால் அல்லது அகலத்தால்) ஏற்படும் அளவு, அதிஷ்டானத்தின் உயரத்தால் ஏற்படும் அளவு, கரங்களின் அளவால் ஏற்படும் அளவு, தாளத்தால் ஏற்படும் உயர அளவு, அங்குலத்தினால் ஏற்படும் உயர அளவு, யஜமானவசத்தால் ஏற்படும் உயர அளவு, மூலவிக்ரஹவசத்தால் ஏற்படும் அளவு என, இந்த ஒன்பது வகைகளுள்; முறையே மும்மூன்றும். உத்தம மத்யம அதமமெனப்படும். இவ்வாறு அளவிடும் தேசத்தைப்பற்றியவாறு, மகாமானத்தின் சுருக்கம் ஒன்பதாம். [இவைகளுள் மூலபேரவசத்தால் ஏற்படும் அளவு, உத்ஸவாதி பேரங்களுக்கென்றறியவும்.]

9. இந்த ஒன்பது வகைத்த மானங்களுக்குப் பயன் கூறப்படுகின்றது. ஹர்ம்யமானம் முதல் அதிஷ்டான மானம் வரையுள்ள நான்கு மானங்களும், முறையே போகம், மோக்ஷம், பொருள், காமம் இவைகளை யளிப்பன

𑌹𑌸𑍍𑌤𑌤𑌾𑌲𑌵𑌶𑌾𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌭𑍋𑌗𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌕𑌮𑍍 ॥ ௯ ॥

𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌯𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌮𑍋𑌕𑍍𑌷𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 ।
[𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌯𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌮𑍍 ।]
𑌕𑌰𑍍𑌤𑍃𑌬𑌿𑌮𑍍𑌬𑌵𑌶𑌾𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌦𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௰ ॥

𑌕𑌰𑍍𑌤𑍃𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌤𑍇𑌤 𑌕𑌾𑌯𑌮𑌾𑌨𑌾𑌦𑌿 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌚𑍈𑌵𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌨𑌵 𑌮𑌾𑌨𑌮𑌿𑌹𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௰௧ ॥

வாம். [அதாவது ;—இந்த அளவுகளால் அளக்கப்பட்டு, பூஜிக்கப்படும் பேரங்களால் ஏற்படும் பயன்கள் இவை யெனக் கருத்து. மேலேயும் இவ்வாறே பொருள் கொளத்தக்கது.] இவ்வாறே; அளவுகளுள் ஹஸ்த மானம் தாளமானம் இவ்விரண்டுகளால் ஏற்படும் அள வானது, முறையே போகம் மோக்ஷம் இவ்விரண்டையும் அளிப்பதாம்.

10. அங்குலங்களால் ஏற்படும் யாதாமொரு அள வுண்டோ அது, மோக்ஷத்தை விரும்புவோருக்குச் செய் யப்படவேண்டும். மோக்ஷத்தை யளிப்பதெனக் கருத்து. யஜமானனின் சரீரத்தின் அளவால் ஏற்படும் அளவா னது சகலவிதமான சித்திகளையும் அளிக்கக் கூடியதென அறிஞர் அறிகின்றனர். [இங்கு கர்த்தா என்ற பதமா னது ஏவல்வினையாளனை எஜமானனைக் குறிக்கின்றது.]

11. இந்த சரீரத்தினுல் ஏற்படும் அளவு முதலியவை, செய்வினையாளனாகிய (ஏவப்படுகின்ற) சில்பியினிடத்தே யும், ஏற்றதாகத் தொடர்ந்ததேயாம். இவ்வாருகிய அந்த அளவிலிருந்து, ஒவ்வொன்றும், ஒன்பது வகையளவு கொண்டதெனக் கூறப்படுகின்றது.

ஹர்ம்யதாரம்(ர) நவாம்ஶேந சைகைகம் பேரதுங்ககம் ।
ஸ்தாவரம் ஜங்கமம் சைவ கந்யஸாதி த்ரயம் த்ரயம் ॥ ௧௨ ॥

கர்பகேஹஸமம் ச்ரேஷ்டம் நவாம்ஶைகாம்ஶகந்யஸம் ।
த்வாரதுங்கவிஸ்தாரே து நவதா நம் து பசிவைவக ॥ ௧௩ ॥

அதிஷ்டாநஸமம் ச்ரேஷ்டம் கந்யஸாத்யம் நவோதயம் ।
ஹஸ்தாதி நவஹஸ்தாந்தம் கந்யஸாதி த்ரயம் த்ரயம் ॥ ௧௪ ॥

12. ஹர்ம்யத்தினகலத்தை ஒன்பது பாகங்களாக்கி, அதனிலொவ்வொன்றும் பேரத்தினுயரமெனக் கொளல் வேண்டும். இவைகளில் முறையே மும்மூன்றும், அதம மத்யம உத்தமமென மூன்று வகைத்ததாகும். இவ்வாருகிய ஒன்பது வகை பேதங் கொண்டது, ஸ்தாவரம் (மூல விக்ரஹம்) ஜங்கமம் (உத்ஸவ விக்ரஹம்) இவ்விரண்டுமே யாம்.

13. இம்மாதிரியே; கர்பக்ருஹத்திற்குச் சமமான பேரமானது, ச்ரேஷ்டமாம். அதனுடைய ஒன்பது பாகங்களிலொரு பாகமுடையது, அதமமாம். வாயிலின் உயரத்திலோ அல்லது அகலத்திலோ ஒன்பது வகைத்த அளவைக் கொள்ளலாம். இதன் பிரிவுகள் முன்கூறியது போன்றவையாகும்.

14. அதிஷ்டானத்திற்குச் சமமான பேரத்தினுயரம், சிரேஷ்டமாம். இந்த பேரத்தினுயரமும், அதமம் ஈருக ஒன்பது விதமான உயரம் கொண்டதாகும். ஒரு கரம் தொடங்கி ஒன்பது கரங்கள் முடிவாக, பேரத்தினுயரம்; ஒன்பது வகைகள் கொண்டதாம். இவைகளுள் முறையே மும்மூன்றும் அதம மத்யம உத்தமமென மூன்று வகைத்ததாம்.

𑌏𑌕𑌤𑌾𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌜𑌮𑌾𑌨𑍋𑌦𑌯𑌂 𑌵𑌰𑌮𑍍 ॥ ௧௫ ॥

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰 𑌨𑌾𑌸𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌬𑌾𑌹𑍁𑌸𑍀𑌮𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌨𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑍇𑌢𑍍𑌰𑌸𑍀𑌮𑌕𑌮𑍍 ॥ ௧௬ ॥

𑌨𑌵𑌧𑌾 𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂(𑌚) 𑌜𑌙𑍍𑌗𑌮𑍋𑌚𑌿𑌤𑌮𑍍 (𑌦𑍇𑌵𑍀 𑌵𑌾) ।
𑌉𑌤𑍍𑌸𑌵𑌬𑍇𑌰𑌵𑌶𑌂 𑌮𑌾𑌨𑌂 𑌮𑍂𑌲𑌬𑍇𑌰𑌾𑌧𑍀𑌨𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௭ ॥

𑌉𑌤𑍍𑌸𑌵𑌬𑍇𑌰𑍋𑌦𑌯𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

15. தாளக்கணக்கினுல் ஏற்படும் இந்த பேரமான மானது; ஒரு தாளம் தொடங்கி, ஒன்பது தாளங்கள் முடியும் வரை ஒன்பது வகை கொண்டதாம். இந்த ஒன்பதும் முறையே அதமம் முதல் உத்தமம் வரையாகும். இனி யஜமானனின் உயரத்தினுல் ஏற்படும் பேரமானத்தைக் கூறுவோம்.

16. இந்த பேரத்தினுயரமானது; கேசாந்தம், நேத்ராந்தம். நாஸாந்தம், ஹந்வந்தம் (தாடை வரையுள்ளது) தோள்வரையுள்ளது, ஸ்தனுந்தம், இருதயம் வரையுள்ளது, நாபிவரையுள்ளது, ஆண்குறியளவுள்ளது.

17. என, ஒன்பது வகைப்பட்டது. இவ்வொன்பதும் முறையே அதமம் ஈருகவுள்ளன. இவை ஸ்தாவரத்திலும், ஜங்கமத்திலும் ஏற்றவைகளாம். உற்சவவிக்ரஹத்தினுயரமானது, மூலவிக்ரஹத்திற்கு அதீனமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

18. இனி உத்ஸவ விக்ரஹத்தின் உயரம் கூறப்படுகின்றது. உத்ஸவ விக்ரஹத்தினுயரம் மூன்றுவகைப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கின்றது அதாவது :—மூலவிக்ர

𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌭𑌾𑌗𑌾𑌰𑍍𑌧𑌂 𑌕𑌨𑍍𑌯𑌸𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌚𑍋𑌤𑍍𑌸𑌵𑍋𑌦𑌯𑌮𑍍 ॥ ௧௮ ॥

𑌅𑌥𑌵𑌾 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌂 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌨𑌵𑍈𑌕𑌾𑌂𑌶𑌕𑌂 𑌤𑌥𑌾 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑌕𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௯ ॥
[𑌅𑌥𑌵𑌾 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌨𑌵𑌧𑌾 𑌤𑍁 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌨𑌵𑍈𑌕𑌾𑌂𑌶𑌕𑌂 𑌤𑌥𑌾 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ॥]

𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌵𑌮𑌾𑌨𑍍𑌤(𑌨𑍋)𑌤𑍍𑌸𑌵𑍋𑌦𑌯𑌮𑍍 ।
𑌅𑌥𑌵𑌾 𑌮𑍂𑌲𑌬𑍇𑌰𑌸𑍍𑌯 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌭𑍍𑌰𑍂𑌵𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ॥ ௨௰ ॥

𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌬𑌾𑌹𑍁𑌸𑍀𑌮𑌕𑌮𑍍 ।
𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌨𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌨𑌵𑍋𑌦𑌯𑌮𑍍 ॥ ௨௧ ॥

𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌵𑌧𑌾 𑌚𑍋𑌤𑍍𑌸𑌵𑍋𑌦𑌯𑌮𑍍 ।

ஹத்திற்குச் சமவுயரமுடையது, முக்காலுயரமுடையது, அரை பாகமுயரமுடையது என. இவை முறையே ச்ரேஷ்டம் மத்யமம் அதமம் எனப்படும்.

19. அல்லது; அதே அளவினல், ஒன்பது பாகங்களாக்கிக்கொண்டு, அதனின்றும் ஒவ்வொரு பங்கும் முன் கூறியதுபோலவே, அதமம் ஈருகவுள்ளதெனக் கொள்ளலாம்.

20, 21. இவ்வாறு ஏற்பட்ட ஒன்பது விதமான உத்ஸவோதயமும், அதமம் முதல் உத்தமம் வரை ஏற்பட்டதாகின்றது. அல்லது; மூலவிக்ரஹத்தின்; கேசாந்தம், ப்ருவந்தம் (புருவத்தை முடிவாகக்கொண்டது) நேத்ராந்தம், நாஸிகாக்ராந்தம், ஹந்வந்தம் (தாடையை முடிவாகக் கொண்டது) பாஹுஸீமகம், ஸ்தநாந்தம், ஹ்ருதயாந்தம், நாப்யந்தம் என ஒன்பதுவிதமான உயரம் கொண்டதாகவும் உத்ஸவபேரம் இருக்கலாம்.

22. இந்த ஒன்பது விதமான உத்ஸவோதயமும், அதமம் முதல் உத்தமம் ஈருக வுள்ளதாகும். இந்த

𑌉𑌤𑍍𑌸𑌵𑍇 𑌵𑌾𑌰𑍍𑌧𑌮𑌾𑌨𑍇𑌨 𑌕𑍌𑌤𑍁𑌕𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௨௨ ॥

𑌤𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌵𑌾𑌂𑌶(𑌨𑌵)𑌭𑌾𑌗𑍈𑌕𑌂 𑌨𑌵𑌭𑌾𑌗𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌮𑍍 ।
𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌵 𑌮𑌾𑌨𑌂 (𑌯𑌾) 𑌕𑍌𑌤𑍁𑌕𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌮𑍍 ॥

𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑌿 𑌨𑌵𑌧𑌾 𑌮𑌾𑌨𑌮𑌾𑌯𑌾𑌦𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌤𑍁 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌯𑌦𑍍𑌵𑌾 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌮𑌾𑌨𑍇𑌨𑍍𑌦𑍍𑌵 𑌶𑌤𑌭𑌾𑌗𑌂 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥ ௨௪ ।
[𑌯𑌦𑍍𑌵𑌾 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍍𑌯 𑌮𑌾𑌨𑍇𑌨 𑌤𑍁 𑌶𑌤𑌭𑌾𑌗𑌂 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥]

𑌏𑌕𑍈𑌕𑌾𑌂𑌶𑌾𑌧𑌿𑌕𑌂 𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌚𑍍𑌛𑌤𑌭𑌾𑌗𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌮𑍍 ।

உத்ஸவ விக்ரஹத்தின் அரைப்பங்கு அளவினல், கௌதுக விக்ரஹத்தின் உயரத்தைக் கொள்ளவேண்டுமெனக் கூறப் பட்டிருக்கின்றது.

23. அந்த அளவை, ஒன்பது பாகங்களாக்கிக் கொண்டு, அதனிலொரு பாகம் தொடங்கி ஒன்பதாவது பாகம் முடிவாக, கௌதுகவிக்ரஹத்தின் உயரம் ஒன்பது வகை யுள்ளதாகின்றது. இது முறையே, அதமம் முதல் உத்தமம் முடிவாக வுள்ளதாம்.

24, 25. இப்பொழுது; ஹர்மியாதிகளை பேரமானத்தின் பொருட்டு, ஒன்பது வகைகளாகப் பிரித்ததின் பயனைக் கூறுகின்ருர். இந்த ஹர்மியாதிகளின் மாநத்தை ஆயாதிகளை நிர்ணயிப்பதன் பொருட்டு, ஒன்பது வகைத்ததாகச் செய்யவேண்டும். அதன்பின்னர், ஒன்பதில் யாதாவதொரு மாநத்தை நூறு பாகங்களாக்கிக்கொண்டு, நூறு பாகங்களாக்கப்பட்ட அந்த மாநத்தில், முப்பதாவது பாகம் தொடங்கி நூருவது பாகம் முடிய ஒவ்வொரு பாகம் அதிகமாகக் கூட்டும் முறையைப் பற்றிக்கொண்டு, எவ்வாறு சுபமான ஆயாதிகளின் நிகழ்ச்சி, ஸ்தாவரபேரத்திலோ ஜங்கமபேரத்திலோ தனக்கு நிகழுமோ; அந்த

ஸ்தாப(ரே) ஜம்ம... மாநம்(மேவாபி) ஶுபாயாதி(க)ஸம்பவம் ||

ததூர்த்வே ஜாத்யம்ஶஸம்யுக்தம்(ஸம்யோகே ச) விதீயதே ।
மூலபேராங்குலம் சைவ மாநாங்குலமேவ(மேவாபி) வா ॥

மாத்ராங்குலம் தத: ப்ரோக்தம் அங்குலம் த்ரிவிதம் பவேத் ।
சதுர்விம்ஶச்சதாம்ஶைகம் மூலபேரோதயம் பவேத் || ௨௭ ||

மூலபேராங்குலை(லே)ர்(நை)வ நயேதுத்ஸவோதயம் ।
யவானாமஷ்டகாத்ரம் விஸ்தாரம் மாநாங்குலமிதி ஸ்ம்ருதம் ॥ ௨௮ ॥

முறையில் அந்த பாகத்தை அளவாகக் கொளல்வேண்டும். (இவ்வாறு ஒருவகை மாநத்தின் கூறுகளில் சுபமான ஆயாதி ஏற்படாவிடில், மற்றொரு மாநத்தை நாட வேண்டும்.)

26, 27. இவ்வாறு சுபமான ஆயாதிகளையுடைய யாதாமொரு அளவு ஏற்கப்படுமோ; அதன்மேல் அறிஞன ஒருவன் ஜாத்யம்சத்தை (அந்த அந்த ஜாதிக்குக் கூறப்பட்ட அதிகாம்சத்தை) முன்னளவுடன் கூடியதாகச் செய்யவேண்டும். கீழே கூறப்பட்ட அங்குலம் மூவகைப் படும். அதாவது:—மூலபேராங்குலம் (மூலபேரத்தினளவினின்றும் ஏற்படும் அங்குலம்) மாநாங்குலம் (பொதுவாகக் கூறப்பட்ட அளவினின்றும் ஏற்படும் அங்குலம்) மாத்ராங்குலம் (அளப்பவனுடைய சரீரத்தால் ஏற்படும் அங்குலம்) என. இந்த மூவகைப்பட்ட அங்குலங்களுள், மூலபேராங்குலமென்பது; மூலபேரத்தினுயரத்தில், நூற்றிருபத்திநான்கு பாகங்களில், ஒரு பாகமாகும்.

28. உத்ஸவவிக்ரஹத்தினுயரத்தை, இந்த மூல பேராங்குலத்தினலேயே அளவிடவேண்டும். மாநாங்குள மென்பது; யவையெனும் தானியங்கள் எட்டு அகல அளவினற் சேர்க்கப்படுமானல், அவைகளின் அகலச் சேர்க்கையளவு மாநாங்குலமாம்.

𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌮𑌧𑍍𑌯𑌮𑍇(𑌮𑌮𑍍) ।
𑌪𑌰𑍍𑌵𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌤𑌥𑌾 𑌨𑌾𑌹𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௨௯ ॥

𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 (𑌤𑌤𑍍) 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌹𑍀𑌨𑌕𑌮𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌕𑌨𑍍𑌯𑌸𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨𑌵𑌭𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௩௰ ॥

𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂 𑌜𑌙𑍍𑌗𑌮𑌂 𑌮𑌾𑌨𑌂 𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌮𑌾𑌨𑌯𑍇𑌤𑍍 ।
𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌚𑌾𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌂 𑌬𑍇𑌰𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௩௧ ॥

𑌸𑌕𑌾𑌯𑌪𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑌿𑌷𑍍𑌯𑌂𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
[𑌸𑌕𑌾𑌯𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌶𑌿𑌷𑍍𑌯𑌂𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।]

29. கர்த்தாவின் வலதுகரத்தின் நடுவிரலின் நடுவேயுள்ள பர்வாவின் (கணுவரையின்) நீளம் அகலம் சுற்றளவு இம்மூன்றும், மாத்ராங்குலமெனக் கூறப்பட்டிருக்கின்றது.

30. இம்மூன்றுவித'மான மாத்ராங்குலமும்; பூர்ணமாயிருப்பின் சிறந்ததெனவும், எட்டிலொருபங்கு குறைந்திருப்பின் நடுத்தரமானதெனவும், காற்பங்கு குறைந்திருப்பின் அதமமானதெனவும், ஆக ஒன்பது வகையுடையதாகக் கூறப்பட்டிருக்கின்றது.

31. கீழே கூறியுள்ள அங்குலமாநங்களில், பரார்த்தமானல், ஸ்தாவரஜங்கமபேரங்களை, மாநாங்குலத்தினல் கணக்கிடவேண்டும். இந்த பேரமானத்தை, ஆத்மார்த்தமானல் மாத்ராங்குலத்தினல் கற்பிக்கவேண்டும்.

32. ஆத்மார்த்தமானல், மாத்ராங்குலத்தினலேயே அளவிட வேண்டுமெனக் கூறியபிறகு; பிறர்பொருட்டு அங்குலமானங்கள் ஏற்கப்படுமாயின், அதன் முறைகளை யிங்கே கூறுகின்ருர். பதினென்று அங்குலங்கள்

𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌚𑍍𑌛𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍇𑌹𑌲𑌬𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍈𑌰𑍍𑌨 𑌵𑌾 ॥ ௩௨ ॥

𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑌯𑍋𑌵𑌿𑌂𑌶𑌚𑍍𑌛𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌸𑌾𑌧𑌯𑍇𑌤𑍍 ॥ ௩௩ ॥

𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌶𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍇𑌨 𑌸𑌾𑌧𑌯𑍇𑌤𑍍 ॥ ௩௪ ॥

𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌜𑌾𑌤𑍍𑌯𑌂𑌶𑌕𑌂(𑌶𑍁)𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌯𑌾𑌦𑌿𑌷𑌡𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌚𑍍𑌛𑌿𑌲𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ ௩௫ ॥

𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂 𑌜𑌙𑍍𑌗𑌮𑌂 𑌚𑍈𑌵 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।

தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டும் முறையே, நூற்றுமுப்பத்திமூன்று அங்குலங்கள் முடியும் வரை தேகலப்தாங்குலமானத்தால் ஏற்கலாம்.

33. ஒன்பது அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டும்முறையே, நூற்றுஇருபத்திமூன்று அங்குலங்கள் முடியும்வரை மாநாங்குலத்தினல் பேரபேதங்களை ஏற்கலாம்.

34. ஏழு அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டும் முறையே, நூற்றுப்பதின்மூன்று அங்குலங்கள் முடியும்வரை ஏற்படும் பேதங்களை, மாத்ராங்குலத்தினல் கொள்ளலாம்.

35. இந்த அங்குலமாநங்கள் அனைத்திற்குமே ஜாத்யம்சத்தைக் கூட்டலாகாது. தள்ளிவிடவேண்டும். சிற்பிச் சிரேஷ்டன், ஆயாதிஷட்வர்க்கத்தை முன்கூறியது போலவே செய்யவேண்டும்.

36. இப்பொழுது, ஸ்தாவரம் ஜங்கமம் எனும் இவ்விருவகை பேரங்களைச் சார்ந்த இலக்கணம் கூறப்படுகின்

த்³விபு⁴ஜம் ச த்³விநேத்ரம் ச உந்நதாரம் ச ஶீர்ஷகம் ॥ ௩௬ ॥

ருஜ்வாயதநகஸம்யுக்தம் ததா² சாஸநமேவ ச ।
ஸமம் ச ருஜ்வாகாரம் ஸ்யாத் ப்ரலம்ப³ஹஸ்தத்³வயம் ததா² ॥ ௩௭ ॥

பத்³மாஸநம் ச விந்யஸ்ய ப³த்³தா⁴ஸநம் து ஸம்யுதம் ।
ருஜுகம் ச ஶரீரம் ச யோக³ம் த்⁴யாநார்த²கம் ॥ ௩௮ ॥
[பத்³மேந ச விந்யஸ்ய ஸ்யாத்³ ப³த்³தா⁴ஸநஸம்யுதம் ।
ருஜுகம் ச ஶரீரம் ச யோக³ம் த்⁴யாநார்த²கம் ॥]

ஸவ்யாபஸவ்யஹஸ்தம் ச ஊர்த்⁴வோர்த்⁴வமுக²ம் கரம் ।

றது ஸ்தாவரத்திலோ ஜங்கமத்திலோ இந்த ஜைநபிம்ப மானது; இரண்டு கரங்களையுடையதாகவும், இரண்டு நேத்ரங்களையுடையதாகவும், அகன்ற மொட்டையான தலையுடையதாகவும் இருக்கவேண்டும்.

37. நேரான நின்ற நிலையுடன் கூடியதாகவோ, உட்கார்ந்த நிலையிலுள்ளதாகவோ இருக்கலாம். இந்த நேரானநின்ற நிலைவடிவம் கொண்ட பேரமானது, சமமான பாதங்களையுடையதாகவும், அவ்வாறே தொங்கும் இருகரங்களையுடையதாகவும் இருக்கவேண்டும்.

38, உட்கார்ந்த நிலையிலோ; இரு பாதங்களும் பத்மாசனத்துடன் நன்கு இணைந்திருக்கவேண்டும். உடல் நேராக நிமிர்ந்த நிலையிலிருக்கவேண்டும். இந்த நிமிர்ந்த நேரான தன்மையில் பரமாத்மாவை தியானிக்கின்ற யோகநிலையைச் செய்யவேண்டும்.

39. இந்த உட்கார்ந்த நிலையில் இருகரங்களையும்; வலது இடது ஹஸ்தங்கள் (கரதலங்கள்) மூலோர்த்வமாயும் ஊர்த்வமுகமாயும் (மணிக்கட்டிலிருந்து மேனேக்கியவைகளாகவும், மேனேக்கிய அகங்கையை யுடையவைக

स्थानकं चासनं वापि सिंहासनोपरि न्यसेत् ॥ ३९ ॥

उपरे तु वितानं च मकरतोरणम् ।
तदूर्ध्वं कल्पवृक्षं स्यात् सगजेन्द्रैः सुरैः सह ॥ ४० ॥
[उपर्यपि तु वितानं च मकरतोरणम् ।
तदूर्ध्वं कल्पवृक्षं च सगजेन्द्रं सुरैः सह ॥]

नारदाद्यानृषीन्देवान्देवा(स्त्रा)ङ्गनाभिः सह(स्व)सेवितान्।
यक्षविद्याधरैर्यैस्तु पार्श्वे न्यस्त नृपावलिम् (तैः) ॥ ४१ ॥

न(ना)गेन्द्रादि च दिक्पालान्यक्षैस्तु सहसेवितान् ।

ளாகவும்) இருக்கும்படி அமைக்கவேண்டும். இந்த ஜைந பிம்பத்தை, நின்ற நிலையிலுள்ளதாயினும் உட்கார்ந்த நிலையிலுள்ளதாயினும் சிங்காஸநத்தின்மேல் வைக்க வேண்டும்.

40. இவ்வாறு சிங்காஸநத்தில் வீற்றிருக்கும் பிம்பத்திற்கு மேலேயோ; விதாநத்தையும் மகரதோரணத்தையும் செய்யவேண்டும். அதற்கு மேலே; ஐராவதம் முதலிய கஜேந்திரங்களுடன் கூடிய கல்பக விருக்ஷத்தை, தேவர்களுடன் கூடியதாகச் செய்யவேண்டும்.

41. ஆங்கு ஓர் புறத்திலே நாரதாதி மகாரிஷிகளையும், தன் மனைவிகளுடன் கரங்குவித்து ஸேவிக்கின்ற தேவர்களையும், மற்றொரு புறத்தில் யக்ஷர்களுடனும் வித்யாதரர்களுடனும் அரசர்களின் மண்டலத்தையும் செய்யவேண்டும்.

42. ஸர்ப்ப அரசர்கள் முதலியவற்றையும், யக்ஷர்களுடன் ஸேவிக்கின்ற திக்பாலர்களையும் (இந்திரன் முதலியோரையும்)சாமரம் எடுத்து வீசுகின்றவர்களாகச் செய்ய வேண்டும். சமீபத்தில் இருபக்கங்களிலும் ராக்ஷஸாதி

𑌯𑌕𑍍𑌷(𑌰𑌕𑍍𑌷𑍋) 𑌯𑌕𑍍𑌷𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌣𑌾𑌂 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚 𑌵𑌾𑌮𑍇𑌨𑌾𑌸𑍁𑌰𑌤𑌤𑍍𑌸𑍇𑌵𑌿𑌤𑌾𑌨𑍍 ॥

𑌪𑌤𑌤𑍍𑌰𑌿 (𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂)𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌿(𑌸𑌾𑌨𑍍𑌤𑌰𑌿)𑌕𑍍𑌷𑍇 𑌤𑌸𑍍𑌯𑌾𑌧𑍋
𑌜𑌿𑌨𑌦𑍈(𑌦𑍇)𑌵𑌤𑌾𑌨𑍍 ।

𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌶𑍍𑌵𑍇𑌤𑌰𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌪𑍀𑌤𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌨𑌿𑌭𑌂 𑌤𑌥𑌾 ॥ ௪௩ ॥

𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌦𑌿𑌶𑍍𑌚 𑌸𑍁𑌗𑌨𑍍𑌧𑌶𑍍𑌚 𑌜𑌿𑌨𑌶𑍍𑌚𑌾𑌰𑍍𑌹𑌤𑍍𑌸𑍁𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑌃 ।
𑌏𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑍀𑌨𑌾𑌂 𑌪𑌞𑍍𑌚𑌬𑍇𑌰𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥ ௪௪ ॥

𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑍇𑌨 𑌦𑍇𑌵𑌾𑌙𑍍𑌗𑍈𑌸𑍍𑌸𑌹 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌤𑍀𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌦𑌶𑌤𑌾𑌲𑍇𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ॥ ௪௫ ॥

𑌨𑌿𑌰𑌾𑌭𑌰𑌣𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌨𑌿𑌰𑍍𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌂 𑌮𑌨𑍋𑌹𑌰𑌮𑍍 ।

பதியையும் யக்ஷர்களுக்கு அதிபதியான குபேரனையும் செய்யவேண்டும்.

43. இவ்வாறு முப்பத்திமுக்கோடி (முப்பத்திமூன்று) தேவர்களையும் அந்தரிக்ஷத்தில் இருப்பவர்களாகச் செய்து, அதன் கீழே ஜிநதேவர்களை முறையே, ஸ்படிகநிறம் வெண்ணிறம் செந்நிறம் மஞ்சள்நிறம் கருநிறம் கொண்டவர்களாகச் செய்யவேண்டும்.

44, 45. சித்தாதி, சுகந்தன், ஜினன், அர்ஹன், சுபார்ச்வன் இந்த பரமேஷ்டிகளின் ஐந்து விக்ரஹங்களையும் முறையே முன்கூறிய நிறங்களில் செய்யவேண்டும். இவ்வைந்தையும், தேவாங்கங்களோடு உத்தமதசதாளத்தினால் கணக்கிடவேண்டும். இருபத்திநான்கு தீர்த்தர்களின் விக்ரஹத்தையும் தசதாளத்தினால் கணக்கிடவேண்டும்.

46. இந்த ஜைனவிக்ரஹமானது, ஸகலவிதமான அவயவங்களிலும் ஆபரணமற்றதாகவும், ஆடையற்ற

𑌸𑍍𑌤𑌨𑌵𑌕𑍍𑌷𑌸𑍍𑌥𑌲𑍇 𑌹𑍇𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌮𑍍 ॥ ௪௬ ॥
𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌚𑌣𑍍𑌡(𑌣𑍍𑌡𑌂) 𑌮𑌹𑌾𑌚𑌣𑍍𑌡𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌵𑍍𑌯𑌾𑌪𑌸𑌵𑍍𑌯𑌕𑍇 ।
𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌜𑌿(𑌜𑍈)𑌨𑌬𑌿𑌮𑍍𑌬𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌮𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍
(𑌤𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍) ॥ ௪௭ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌜𑍈𑌨𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌪𑌞𑍍𑌚𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

தாகவும், மனோஹரமாக இருக்கவேண்டும். இதன் சமமான மார்புறத்தில் சுவர்ண நிறங்கொண்ட ஸ்ரீவத்ஸமெனும் மறு இருக்கவேண்டும்.

47. வாயிற்படியில் வலது இடது புறங்களில் முறையே, சண்டனையும் மகாசண்டனையும் வாயிற்காப்போர்களாகச் செய்யவேண்டும். இவ்வாறு ஜைனவிக்ரஹம் கூறப்பட்டது. எஞ்சியவை ஆகமங்களினின்றும் அறியத்தக்கவை.

மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
ஜைனலக்ஷணவிதானமெனும்
ஐம்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌬𑍌𑌦𑍍𑌧𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮

॥ 𑌷𑌟𑍍𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

—o—

𑌬𑍌𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍 𑌚 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾𑌧𑍁𑌨𑌾 ।
𑌜𑌿𑌨𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌬𑍌𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥ ௧ ॥

𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌚𑌾𑌸𑌨𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌲𑍍𑌪𑌵𑍃𑌕𑍍𑌷𑌂 𑌤𑌥𑌾 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥ ௨ ॥

ஸ்ரீ மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில் பௌத்தலக்ஷணமெனும் ஐம்பத்தாருவது அத்தியாயம்

1. புத்ததேவருடையதான பிம்பத்தினிலக்கணத்தை முறையுடனிப்பொழுது, நன்கு கூறுகின்றேன். புத்தருடைய மூலவிக்ரஹமல்லாத விக்ரஹம், ஜினதேவருடையது போன்றதேயாகும். புத்ததேவரின் விக்ரஹத்திற்கு விசேஷம் யாதெனில்;

2. நிலை; நின்றதாகவோ, உட்கார்ந்ததாகவோ இருக்கலாம். ஸிம்ஹாசநம் முதலியவற்றுடன் கூடியிருக்கவேண்டும். பின்னேயுள்ள கல்பகவிருக்ஷத்தை அரசமரத்துடன் கூடியதாக நிறுவவேண்டும்.

𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌸𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑌾𑌲𑌾𑌨𑌨𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌲𑌂𑌬𑌕𑌰𑍍𑌣𑌾𑌯𑌤𑌾𑌕𑍍𑌷𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁𑌂𑌗𑌘𑍋𑌣𑌂 𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌨𑌨𑌮𑍍 ॥ ௩ ॥

𑌦𑍀𑌰𑍍𑌘(𑌰𑍍𑌘𑍌) 𑌬𑌾𑌹𑍁(𑌹𑍂)𑌵𑌿𑌶𑌾𑌲𑌾(𑌲𑍌) 𑌚 𑌵𑌕𑍍𑌷𑌃𑌸𑍍𑌥𑌲𑌂 𑌚
𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌮𑍍 ।

𑌮𑌾𑌂𑌸𑌲𑌾𑌂𑌗𑌂 𑌸𑍁𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌲𑌂𑌬𑍋𑌦𑌰𑌵𑌿𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ॥ ௪ ॥

[𑌮𑌾𑌂𑌸𑌲𑌾𑌂𑌗𑌂 𑌸𑍁𑌸𑌂𑌪𑍂𑌰𑍍𑌣𑌂 𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑍋𑌦𑌰𑌂 𑌚 𑌤𑌤𑍍 ॥]

𑌸𑌮𑌪𑌾𑌦𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌲𑌂𑌬𑌹𑌸𑍍𑌤𑌂 𑌸𑍁𑌖𑌾𑌸𑌨𑌮𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌨𑍇𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌸𑍋𑌷𑍍𑌣𑍀𑌷𑍋𑌜𑍍𑌜𑍍𑌵𑌲𑌮𑍌𑌲𑌿𑌕𑌮𑍍 ॥ ௫ ॥

3. இந்த புத்தவிக்ரஹமானது, தூயவெண்ணிறமுடையதாகவும், அகன்ற முகத்துடன் கூடியதாகவும், தொங்கும் காதுகளையும் நீண்ட கண்களையுமுடையதாகவும், உன்னதமான மூக்கையுடையதாகவும், புன்முறுவல் முகத்தையுடையதாகவும் இருக்கவேண்டும்.

22. கருடன் விஷயத்தில் உத்தமநவதாளம் ஏற்றதாகும். இந்த கருடனின் துங்கத்தில்; கேசாந்தம்

[illegible]
[illegible] ‖ ௨௨ ‖

[[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥]

[illegible] ॥ ௨௩ ‖

[[illegible] ‖]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖ ௨௪ ‖

நான்கு அங்குலங்களாம். முகம், பன்னிரண்டு அங்குலங்களாம். கழுத்து, நான்கு அங்குலங்களாம். இருதயம் பன்னிரண்டு அங்குலங்களாம். வயிறு, பன்னிரண்டு அங்குலங்களாம். ஆண்குறி முடிய, பன்னிரண்டு அங்குலங்களாம். துடை, இருபத்தினன்கு அங்குலங்களாம். முழங்கால் நான்கு அங்குலங்களாம். கண்டங்கால் இருபத்தினன்கு அங்குலங்களாம். பாதத்தினுயரம், நான்கு அங்குலங்களாம். இம்முறையே நவதாளம் ஏற்றதாகும்.

23. பாததலத்தின் நீளம், பதினைந்து அங்குலங்களாம்.

24. முகத்தின் நீளத்தில் இரண்டு மடங்கு கொண்டவை பாஹுக்கள், முழங்கை, இரண்டங்குல நீளமுடையதாகும். முழங்கைக்குமுன் மணிக்கட்டுவரையுள்ள பிரகோஷ்டத்தின் நீளம், பதினெட்டு அங்குலங்களாம். இவ்வாறு பெரியோரான வித்வான்களால் கூறப்பட்டிருக்கின்றது.

[ஷட்விஶிரங்குளா பாஹோ: கண்டோऽஷ்டகம் வ்யக்தோऽஷ்டாஷ்டமம் ।
காதரூப்ய தத்க்ஷிதம் ஆதிஸம்பாரணஸமீரிதா ||]

ஸ நவவிதாளே கண்டோऽஷ்டாம்ஶதாரம்
விஸ்த்ருதம் ஶதயாஹ்ராம்ஶம் கக்ஷயோரந்தரம் ஸ்ம்ருதம் ।
ஹ்ருதயவிஸ்த்ருதம் ஸப்தாதிகதஶயாம்ஶம்
உதரே தத்யாஹஷம் ஶ்ரோணிதார்யம் ச தாரம் || ௨௫ ||

[நவவிதஸ்துகதாளே கண்டோஷ்டாம்ஶதாரம்
விததிஸ்யாஹ்ராம்ஶம் கக்ஷயோரந்தரம் ஸ்ம்ருதம் ।
ஹ்ருதயவிததிஸப்தாதிகதஶயாம்ஶம்
ஹ்ருதரததியாஹஷம் ஶ்ரோணிதாரம் தந்த்ருதம் ||]

தஸ்யாத: கடிவிஸ்தாரம் ஸப்தஸம்க்யாம்ஶம் ஸ்மரேத்
ஊருத்வம் தத்விஸ்தாரம் த்வாதஶாம்ஶம் பிம்பாஷ்டகம் ।

25. இந்த நவதாளத்தில், அவயவங்களின் அகலம் கூறப்படுகின்றது. கழுத்து எட்டு அங்குலங்கள் அகல முடையது. இரண்டு பாஹுக்களின் இடையிலுள்ள அகலமானது, இருபது அங்குலங்களாகும். மார்பி னகலம், பதினேழு அங்குலங்களாம். வயிற்றினகலம், பன்னிரண்டு அங்குலங்களாம். தொப்புளுக்குக் கீழே யுள்ள அடிவயிற்றினகலமும், பன்னிரண்டு அங்குலங் களேயாகும்.

26. அந்த அடிவயிற்றின் கீழேயுள்ள் இடுப்பின், அகலம் பதினேழு அங்குலங்களுடையதாகும். சமவட்ட மான துடைகளினகலமானது, அடித்துடையில் பன்னி ரண்டு அங்குலங்களாம். முழங்கால், அகலத்தில் எட்டு அங்குலங்களுடையதாகும். கண்டங்காலி னடிப்புறம்,

[illegible]
[illegible] || உசு ||

[[illegible] |
[illegible] ||
[illegible] |
[illegible] ||]

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] || உஎ ||

[[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ||]

அகலத்தில் எட்டு அங்குலங்களுடையதாகும். அவ்வாறே; கண்டங்காலின் நடுவினகலம், ஆறு அங்குலங்களாகும். குல்பமெனும் நளகையினகலம், நான்கு அங்குலங்களுடையதாகும்.

27. பாதத்தின் அகலம், ஐந்து அங்குலங்களாம். அதன் கட்டைவிரலின் நீளம், மூன்று அங்குலங்களாகும். கட்டைவிரலுக்கு அடுத்த விரலின் நீளமும், அதற்குச் சமமாகவே கூறப்பட்டிருப்பதை ஊகித்துக்கொள்ள வேண்டும். மற்றைய இரண்டு விரல்களும், நகத்தின் மூலத்திற்குச் சமமான நீளமுடையவை. மற்றொன்றாகிய சிறுவிரல்களில் நான்காவதும், அவ்வாறே தனது முன் விரலின் நகமூலத்திற்குச் சமமான நீளமுடையதாம். இவ்வாறாகிய இந்த அளவானது, மனிதனுக்குப் போலும் சில்பி வித்வான்களால் கூறப்பட்டிருக்கின்றது.

* த்³விரஸஶரபா⁴கா³ம்ஶம் பா³ஹுஸங்க்²யாப்⁴ருதேஶம்
ப்ருத²க்³வரவிபா⁴கை³ர்த்⁴யர்த⁴ருத்³ரேண ।
சந்த்³ரணிவிஶாலாம் தத்²யாதிஷஷ்டி:
ப்ருதுதரஸமபா⁴கா³ம்ஶம் த³த்⁴யர்த⁴காயதஞ்ச ॥ ௨௮ ॥

ஶரயுக³பா⁴வாஷிகாம்ஶா நாஸிகா தஜ்ஜநீயா
க³ணத³(ந)ஶும் க²ண்டி³ஷ்டீவத்³தா⁴ம்ஶகாயா த³தேதஸ் ।
த்³ரயக்ருததஸ²விதே³ஜ்ஞ: ஸாயதே வாக்ஷிகாஞ்சம்
ஸ்தூடதி த³ஷ்டி: வெம்பே³த்³ருஷ்டு ஸத³ரக தாரஜ ॥ ௨௯ ॥

ஶ்ருவயுதநயநகேஶாஞ்சயோர்த்⁴யர்த⁴தே³வ
க³ணயுதநயநதே³வம் தத்³வ்யாஞ்சயோஸ்தஸ் ।
யுக³யவவிஸ்த்ருதீவத்ரம் தகோ³ஜிதோ³ராத்தா நாஸி
தத³யவிவர்தித³ம்ஶம் விஸ்த்ருதஸ்யாத³ம்ஶம் ॥ ௩௦ ॥

விஶாலாயிகமோஜிகாக்³ரவோத்தரத³ஷாயகா³ர்த்³ரம்
விஸ்த்ருதவித³வ்யும் வெத³தா³த்⁴யாயதம் வ ।
ஸயரவிஸ்த்ருதவாதத்³ரீம் தாம்யுக்³மாயதாஞ்சம்
விஸ்த்ருதீவத்³பே⁴ஷத³ங்ம் தத் யுக்த்யா ॥ ௩௧ ॥

வக்ஷாயாமம் தஸ்த³ம் நாஸிகாக்³ரம்
யுக்த்யா தா³நம் க²ண்ட³ரஞ்ஜாவஸாநம் ।
ஹநுஸம்தம் ஶ்ரோத்ரதாம்ரம் தத³யத்ரம்
தத³யத்ரம் விஸ்தாரம் நாஸேவம் தயைவ ॥ ௩௨ ॥

ஏவம் ப்ராக்தாநுக்தாநம் த ஸவத்ரம்
தா³நம் கா²யதா³ந்வம் க்ஷிதாலோக்தவஸ் ।
ஹாவ(ரம்) யாவத்கவேத்³ரஜாலகாஞ்சம்
பா³ஹுர்வக்ஷள வாம்க³ஸம் க²ஞ்ஜகேந ॥ ௩௩ ॥

---

* இது முதல் இவ்வத்தியாயம் முடியும் வரை; தெளிவு படாத பாடல்களானமையாலும், வேறு சில்ப புத்தகங்களின் துணை யற்றமையாலும். மொழிபெயர்க்கப்படவில்லை.

𑌨𑌾𑌸𑌿𑌕𑌾 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌤𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌂 𑌪𑌦𑍍𑌮𑌾𑌗𑍍𑌰𑍇
𑌹𑌂𑌸𑌕𑌾𑌵𑍍𑌯𑍂𑌹𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌵𑌤𑍍𑌕𑌾𑌰𑍍𑌯𑌕𑌾𑌃 ।
𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌂 𑌨𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌿 𑌵𑌕𑍍𑌷𑌯𑍋𑌃
𑌶𑍍𑌯𑌾𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌿𑌤𑌰𑍍𑌦𑍍𑌵𑌾𑌰𑌾 𑌗𑌤𑍇 ॥ ௩௪ ॥

𑌅𑌷𑍍𑌟𑌨𑌾𑌭𑌿𑌹𑍃𑌤𑍍𑌷𑌣𑍍𑌮𑌵𑌕𑍍𑌷𑌿𑌵 𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌯𑍋𑌃
𑌉𑌦𑌰𑍇 𑌶𑍍𑌰𑍁𑌙𑍍𑌗𑌕𑌰𑍍𑌪𑌂 𑌸𑌕𑌾𑌰𑌂𑌭𑌕𑌮𑍍 ।
𑌵𑌰𑍍𑌣𑌨𑍀𑌲𑌸𑌮𑌾𑌰𑌨𑍍𑌤𑍍𑌰𑌂𑌭𑌮𑌂 𑌕𑍃𑌤𑌮𑍍
𑌤𑌤𑍍𑌵𑌹𑍋𑌮𑌨𑌿𑌸𑌂 𑌪𑌰𑌰𑍍𑌭𑌂 𑌸𑌵𑍇𑌤𑍍 ॥ ௩௫ ॥

𑌪𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌣𑌸𑌮𑌞𑍍𑌜𑌿 (𑌞𑍍𑌚𑌿) 𑌤𑌪𑌕𑍍𑌷𑌯𑍋𑌃
𑌅𑌂𑌕𑌾𑌰𑌵𑌤𑍍𑌕𑌰𑍍𑌣𑌶𑌿𑌰𑌾𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 ।
𑌕𑌰𑍍𑌣𑌿𑌤𑌃 𑌸𑌹𑌿𑌤𑌮𑌨𑍍𑌦𑌵𑌿 𑌚
𑌸𑌞𑍍𑌜𑌿𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌹𑌾𑌵𑌤𑌿𑌤𑌿 𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ॥ ௩௬ ॥

𑌦𑌨𑍍𑌤𑌾 𑌪𑌞𑍍𑌚 𑌕𑍍𑌷𑍀𑌰𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌃
𑌵𑌾𑌮𑍇 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌪𑌦𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌾𑌭𑌵𑌦𑍍𑌮𑌾 (𑌦𑍍𑌮𑌮𑍍) ।
𑌸𑌵𑍍𑌯𑍇 𑌕𑌰𑍍𑌣𑍇 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌦𑍍𑌮𑍇𑌵
𑌯𑌨𑍍𑌮𑌵𑌰𑍍𑌣𑌂 𑌹𑌾𑌰𑌕𑌾𑌕𑍇𑌶𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ॥ ௩௭ ॥

𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌕𑍍𑌲𑍇𑌶𑍌 𑌯𑍁𑌗𑍍𑌮𑌯𑍋𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑌂
𑌵𑍍𑌯𑌾𑌯𑌾𑌕𑍍𑌵𑌰𑍍𑌣𑌂 𑌵𑌾 𑌸𑌂𑌶𑌿𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌸𑌮𑌤𑍍𑌰𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌗𑌂 𑌪𑌰𑍍𑌕𑍍𑌵𑌰𑍍𑌣𑌮𑌾𑌹𑌂 𑌵𑌾𑌮𑍇𑌵 𑌕𑍋𑌷𑍍𑌠𑍇
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌾𑌕𑍍𑌷𑍍𑌰𑍍𑌯𑌕𑌸𑍍𑌯 𑌕𑌟𑌕𑌮𑍍 ॥ ௩௮ ॥

𑌕𑍇𑌶𑌿𑌤𑌦𑍍𑌵𑌯𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌾𑌕𑍍𑌷𑍍𑌰𑍍𑌯 𑌵𑌰𑍍𑌣𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌕𑍇𑌶𑌾𑌗𑍍𑌰𑌕𑌰𑍍𑌣𑌸𑍀𑌮𑌾𑌙𑍍𑌗𑌂 𑌶𑍍𑌯𑌾𑌮𑌨𑍀𑌲𑌾𑌗𑍍𑌰 𑌸𑍀𑌮𑌕𑌮𑍍 ॥ ௩௯ ॥

𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌕𑌾𑌗𑍍𑌨𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑍋𑌰𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍋 𑌕𑌮𑌲𑌵𑌰𑍍𑌣𑌾𑌙𑍍𑌗𑌕𑌾𑌃 ।
𑌪𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌣𑌸𑌮𑌂 𑌶𑍍𑌰𑍀𑌤𑌪𑌕𑍍𑌷𑌕𑌾𑌂𑌶𑌕𑌰𑍍𑌣𑌕𑍀 ॥ ௪௦ ॥

𑌹𑍃𑌦𑌯𑌾𑌤𑍍𑌕𑌟𑌿𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑌂 𑌪𑍃𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌯𑍋𑌃 ।
𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌦𑍍𑌭𑌾𑌜𑌾𑌨𑍁𑌕𑌾𑌙𑍍𑌗𑌕𑌮𑍍 ॥ ௪௧ ॥

ரக்தவர்ணம் து வா ஸாந்தம் ஶ்வேதவர்ணநிபம் பவேத் ।
பிஹ்வாஜாக்ரம் ச வக்த்ரம் ச பிவா ஸ கா ர்ணிதஸ பவேத் ॥ ௪௨ ॥

ஸ்தா நகம் சாஸநம் வாபி விஷ்ணும் த்யாத்வா க தாஜ்ஞயா ।
ஸர்வாபரணஸம்யுக்தம் ப்ராஸே ஶ்ராவ்யம் ஸ்ததக்ருகம் ॥ ௪௩ ॥

ஸாவயோஶ்ச யதாவிதி: ஸத்ரா த்தாந்யைரப்யகைஸ்ஸ்ஸதை: ।
கபிவாதாதிகாத்யாயம் தாக்ஷ்யோர்ரூபம் விஶேஷத: ॥ ௪௪ ॥

வாத (த ஞ) ஸ்தாநகம் கா யகம் ஆஸநம் (ந) ஹாம்த: ।
ஸவர்ணம் ஸுவர்ணவர்ணம் ஸத்வ தக்ஷ கஞ்சிவயவகம் ॥ ௪௫ ॥

பவர்ஷம் து நிவர்ணயோ ஹஸ்தஸ கருதாஜ்ஞயா ।
ஶீர்ஷம் ச பிஹ்வைஶ்ரு ஸம்யுக்தம் ஸுவர்ணயுக்ம் ॥ ௪௬ ॥

நாபிஷேகம் ஶிரோத்வே து கக்ஷவத்ய ஶிரோக்ரவத் ।
ரக்தவர்ணம் து வஸ்த்ராக்ரம் ஸுவர்ணாங்கம் (த்ரம்) தஸதம் ॥ ௪௭ ॥

ஸ நம் வோத்வக்ஷம் ச ந ஸூஸ நஸவத்யகம் ।
ஸவாஷவஸ்வவஸ்த்ரம் வைவர்ணவைவயம் விஸ்ருத: ॥ ௪௮ ॥

ஸஸ ப்ராஸே க்ஷேத்ர ஶீலஞ்சே சாந்த்ர நிரீக்ஷணம் ।
க்ஷணிகாபம் ஸம்ஸ்தாப்ய பூஜயேத்தஞ்சித்த: ॥ ௪௯ ॥

த்ரி நாபி த்ரிநேத வாபி த்ரிவக்ஷ வா த்ரி ஸாஸகே ।
நித்யம் த்ரி காலம் ஸம்பூஜ்ய ஶத நாஶம் ந ஸம்ஶய: ॥ ௫௦ ॥

ஶிவாஸம் ப்ராணாயம் சேஜஸ்ஸ ராத்ரஸ ச காரயேத் ।
யாகாக்ரே ஶிவஸ்ஸம்ஹம் ஸம்ஹம் ஹஸ்தஸ ச பந்தநம் ॥ ௫௧ ॥

ஶிவாத்யாயே வாபி ஶாரஜே கபிலகர்ணா ।
ஸதேஷாம் வைநதேயம் ச ஸுவர்ணஸம்ஸாரமேவ ச ॥ ௫௨ ॥

த்ரிம்ஶத்யம்ஶத்ர வக்ஷம்
தஸ்பாத ஏகே(ஶய:)வக்ஷகேகாம்ஶஹீநம் ।
தஸ்ரே ஶரீரதாரம் ஶராம்ஶம்
வக்ஷஸ்ஸவேஶ்ராக்ரதாரம் யஜேஷ்ட ॥ ௫௩ ॥

பாஹ்யாபாஹ்யே பக்ஷஸம்யுக்தே தத:
பாஹ்யாஸ்து (ஹ்யவா) த்ர ஸம்யுக்தம் பாதுர்வத்ர ழ ।
ஜ்ஞானம் கூரகவா பஞ்சபக்ஷே: ப்ரயாணம்
ஜ்ஞானாந்தம் கந்யஸா ஸோஹநாய ழ || ௫௪ ||

வீதம் ஸ்வேதம் ஸ்யாமளம் ச கூரஷ்ணம்
ஜம்பூராக் ரக்தம் பஞ்சவர்ணம் க்ரமேண || ௫௫ ||

ஜாம்பவர்ணம்ஸ (ஸாம்ஸ்) வக்ஷ கண்டஸம்யுக்தம்
ப்ராணாஞ்ச பக்ஷே: பஞ்சக்ஷிதா: பக்ஷயா வஸ்யாக்ஷ ।
வக்ஷம் தம்ஹம் விஸ்ருதம் விஹீநகே
கதஜ்ஞானம் ந ஸம்ஸய: || ௫௬ ||

யத்ர ஜ்ஞானம் விபிவக்ஷ்வகாரயேக்ஷ பாத்ரவ்ருத்தி: || ௫௭ ||

ஸ்ரீஜ்ஞானஸாரே பாஞ்சராத்ரே
ஹரஜ்ஞானவியானம் நாம

|| ஏகஷஷ்டிதமோ(அ)த்யாய: ||

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌵𑍃𑌷𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮

|| 𑌦𑍍𑌵𑌿𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

—— o ——

𑌵𑍃𑌷𑌭(𑌵𑍃𑌷)𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 𑌵𑌿𑌧𑌿𑌨𑌾𑌧𑍁𑌨𑌾 |
𑌵𑌾𑌪𑍋 (𑌶𑌂𑌭𑍋) 𑌰𑌭𑌿𑌮𑍁𑌖𑌂 𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 (?) 𑌪𑍀𑌠𑍇 𑌵𑌾𑌪𑍋𑌦𑍍𑌧𑌪𑍀𑌠𑌕𑍇𑌽𑌪𑌿
𑌵𑌾 (𑌵𑍃𑌷𑌪𑍀𑌠𑌕𑍇) || 𑌧 ||
𑌵𑌿𑌮𑌾𑌨𑍇 𑌮𑌣𑍍𑌡𑌪𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌾𑌂 (𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌣𑌾𑌂) 𑌵𑌾
𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 |
𑌦𑍍𑌵𑌾𑌰𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑌮𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 || 𑌨 ||
𑌕𑌨𑍍𑌯𑌸𑌂 (𑌤𑍁) 𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍃𑌤𑍀𑌯𑌂 𑌵𑍃𑌷𑍋𑌦𑌯𑌮𑍍 |

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
விருஷபத்தினிலக்கணமெனும்
அறுபத்து இரண்டாவது அத்தியாயம்.

—— o ——

1–2½. இப்பொழுது, இடபத்தினிலக்கணமானது; முறையுடன் நன்கு கூறப்படுகின்றது. இவ்விடபமானது, ஈசனுக்கு எதிர்முகமாக பீடத்திலோ பத்மபீடத்திலோ நிறுவத்தக்கதாம். மேலும்; இவ்விடபத்தை விமானத்திலும் மண்டபத்திலும் நான்கு வாயில்களின் மேற்புறத்திலும் அமைக்கவேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் இடபமானது; வாயிலினுயரத்திற்குச் சமவுயரமுடையதானல் சிரேஷ்டமாகும், மூன்று பாகவுயரமுடையதானல் நடுத்தரமாகும். இரண்டு பாகவுயரமுடையதானல் அதமமாகும். இவ்வாறு இடபத்தினுயரம் மூன்றுவிதமாம்.

ஏகஹஸ்தம் ஸமாரப்ய ஏகஹஸ்தேந வர்த்தநாத் । ௩ ॥

நவஹஸ்தாவஸாநாந்தம் கந்யஸாதி த்ரயம் த்ரயம் ।
பஞ்சவிம்ஶாங்குலாத்யம் (ப்ரதிமாத்ராதி) மாத்ரஸ்ய த்விதவ்யங்குலாத்யம்
விவர்த்தநாத் ॥ ௪ ॥

ஏகத்ரிம்ஶதிமாத்ராந்தம் ய: (யத்) ப்ராப்தாயாதிஸம்பதம் ।
பேரோத்ஸேதஸமம் ஶ்ரேஷ்டம் கர்ணாந்தம் மத்யமம் பவேத் ॥ ௫ ॥

பாஹ்வந்தம் கந்யஸம் ப்ரோக்தமுத்ஸேதம் வ்ருஷபோதயம் ।
பீடாயாமே த்ரிபாகைகம் (கம் வா) பீடதாரஸமம் து வா ॥ ௬ ॥

பீடதாரம் த்ரிபாகம் ஸ்யாத் (வா) த்ரிவியம் வ்ருஷபோதயம் ।
பாதாத்யுஷ்ணீஷபர்யந்தம் ஸ்தாநகம் மாநஸம்க்ரஹம் ॥ ௭ ॥

3–4½. ஒரு அடி தொடங்கி, ஒவ்வொரு அடி கூட்டுவதனல் ஒன்பது அடிமுடிவாகவுள்ள உயரம்; முறையே அதமம் மத்யமம் உத்தமம் எனப்படும் மூன்றுவகைத்த மூன்ரும் இருபத்தைந்து அங்குலங்கள் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனல் முப்பத்தொன்று அங்குல முடிவு வரையுள்ள பேதங்களில்; எது சுபமான ஆயாதிகளுக்குப் பொருத்தமானதோ அது ஏற்கத்தக்கதாம்.

5-7. விருஷபத்தின் உற்சவ விக்ரஹத்தின் உயரமானது; பேரத்தினுயரத்திற்குச் சமமானல் சிரேஷ்டமெனவும், காதின் முடிவளவானல் நடுத்தரமெனவும், பாஹுவின் முடிவளவானல் அதமம் எனவும் கூறப்பட்டிருகின்றது. அல்லது; பீடத்தின் நீளத்தில் மூன்றுபாகம் கொண்டதாகவோ, பீடத்தினகலத்திற்குச் சமமாகவோ, பீடத்தினகலத்தில் மூன்று பாகமுடையதாகவோ விருஷபத்தினுயரம் இருக்குமானல், இம்மூன்றும் முறையே உத்தம மத்யம அதமமெனப்படும். இந்த இடபத்தின் அளவு, நின்ற நிலையில் பாதம் முதல் உஷ்ணீஷம் முடிய அறியத்தக்கது.

स्थानकं शयनं वापि लोहजे वा शिलेष्टये वा (दारुजे)।
दारुजे मृन्मये वा (इष्टये वापि) सुधायां शर्करायां वा
(शर्कराजे) ॥

शयनं वाप्यासनं वापि कर्तव्यं शिल्पवित्तमैः।
सर्वं तु वृषभोत्सेधं पञ्चाशदङ्गुलं भवेत् ॥ ९ ॥

उष्णीषात्तु गलाग्रान्तं दशमात्रं प्रशस्यते।
तस्याधो वसुमात्रं स्याद् ग्रीवतुङ्गमिति स्मृतम् ॥ १० ॥

तस्याधो चो(यत्रो)रुपर्यन्तं षोडशांशं तथैव च।
षडंशं चोरुदैर्घ्यं स्याद् द्विमात्रं जानुतुङ्गकम् ॥ ११ ॥

जङ्घा चोरुसमा (ना) दीर्घं (र्घे तु) खुरोत्सेधं
द्विमात्रकम्।
ग्रीवान्त(न्ताः)पुच्छपर्यन्तं चत्वारिंशाङ्गुलायतम् ॥ १२ ॥

8. இந்த இடபத்தை நின்ற நிலையிலோ படுத்த நிலையிலோ, உலோகத்தினலாவது சிலையினலாவது மரத்தினலாவது சுண்ணம்பினலாவது மண்கூட்டத்தினலாவது சுக்கானினலாவது செய்யலாம்.

9. சில்பிசிரேஷ்டன் இதனை கனமாகவோ அவ்வாறல்லாததாகவோ செய்யலாம். இவ்வாறு விருஷபத்தினுயரம் ஐம்பதங்குலமுடையதாம்.

10–12. தலையின் நுனி பாகத்திலிருந்து (கொம்பு நீங்கலாக) கழுத்தின் அக்ரபாகம்முடிவாக பத்து அங்குலங்கள். அதன் கீழே கழுத்தினுயரம், எட்டு அங்குலங்கள், அதன் கீழே துடையின் முடிவுவரை, பதினறு அங்குலங்களாம். துடையின் நீளம் ஆறு அங்குலங்களாம். முழங்காலின் உயரம் இரண்டங்குலங்கள். கண்டங்கால் உயரத்தில் துடைக்குச் சமமானதாகும். (அதாவது ஆறு அங்குலவுயரமுடையது). குளம்பினுயரம், இரண்டங்குலமாகும். கழுத்திலிருந்து வால்முடிவுவரை நாற்பதங்குல நீளமாகும்.

ஶ்ருங்காயாமம் சதுரங்கு³ல்யம் ஶ்ருங்காதாரம் த்ரிமாத்ரகம் |
தத³ஷ்டாம்ஶைகமாநம் ஸ்யாச்ச்ருங்காக்³ரஸ்ய விஸ்தாரகம் ॥ ௧௩ ॥

பா²லதாரம் நவாங்கு³ல்யம் முக²தாரம் ஶராங்கு³லம் |
தத்ஸமோந்நத்யம் சக்ஷுஷோராயாமம் த்³வ்யங்கு³லம் ॥ ௧௪ ॥

அர்தா⁴ங்கு³லோர்த்⁴வமுத்ஸேத⁴ம் நிர்க³மம் பார்ஶ்வ(ர்ஶ்வ)யுக்³மாத்ரகம் |
நேத்ரமத்⁴யே முகா²யாமோऽஷ்டாங்கு³ல இதி ஸ்ம்ருத: ॥ ௧௫ ॥

தஸ்மாத் க்ரக(காடி)காங்கம் ஸ்யாத் ஷட³ங்கு³லம் ததா³ஹ்ருதம் |
ஶ்ருங்கமத்⁴யம் சதுரங்கு³ல்யம் பா²லோச்சம் ததை²வ ச ॥ ௧௬ ॥

நேத்ராந்தா(நேத்ரைவ மூ)மூலாந்தம் வேத³மாத்ராந்தரம் ப⁴வேத் |
கர்ணாயாமம் பஞ்சமாத்ரம் ஸ்யாந்மூலமூலம் த்³விமாத்ரகம் ॥ ௧௭ ॥

தத்ஸமம் விஸ்த்ருதம் சைவ மத்⁴யதாரம் சதுரங்கு³லம் |

13-18. கொம்பின் நீளம் நான்கு அங்குலங்களாம். கொம்பின் அகலம் மூன்று அங்குலங்கள். கொம்புநுனியினகலம், அதனிலெட்டிலொருபாகமாகும். நெற்றியினகலம் ஒன்பதங்குலங்களாம். முகத்தினகலம் ஐந்தங்குலங்கள். முகத்தினுயரமும், அதற்குச் சமமானதே. கண்ணின் நீளம் இரண்டங்குலங்கள். அரையங்குலத்திற்குமேல் அதனுயரமாகும். இருபுறமும் விழியின் நிர்கமம் (வெளிநீளம்) அரையங்குலமாம். இருகண்களினிடையில் முகத்தின் நீளம் எட்டு அங்குலங்களெனக் கருதப்பட்டிருக்கின்றது. அதனின்றும் பொட்டுக்குழி ஆறு அங்குலங்களெனக் கூறப்படுகின்றது. கொம்புகளின் நடுயிடைவெளி நான்கு அங்குலங்களாம். நெற்றியினுயரமும், அவ்வாறே. நேத்திராந்தத்திலிருந்து நேத்திரமூல முடிவுவரையுள்ளயிடைவெளி நான்கு அங்குலங்களாம். காதின் நீளம், ஐந்து அங்குலங்களாகும். காதின் அடிப்பாகம் இரண்டுஅங்குலங்களாம். அகலமும் அதற்குச் சமமானதே. நடுவினகலம்

𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌾𑌰𑍍𑌧𑌾𑌗𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌥𑌾 𑌸𑌾𑌰𑍍𑌧(𑌨𑌾𑌹)𑌽𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌕𑌮𑍍
(𑌮𑌤𑌮𑍍) ॥ ௰௮ ॥

𑌅𑌧𑍍𑌯𑌰𑍍𑌧𑌾(𑌧𑍍𑌯𑌰𑍍𑌧)𑌂𑌶𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌯𑌾𑌮𑌮𑍇𑌵 𑌚 ।
𑌅𑌂𑌶𑌂 𑌪𑍁𑌟𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௰௯ ॥
[𑌨𑌾𑌸𑌾𑌗𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌮𑌂𑌶𑌂 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑌕𑌮𑍍 ॥]

𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌂 𑌚𑌾𑌯𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑍋𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌅𑌧𑌰𑍋𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌮𑌂 𑌗𑍁𑌣𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௨௰ ॥

𑌤𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌤𑌦𑍍𑌘𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌗𑍍𑌰𑍀𑌵𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌤𑌾𑌰𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌂 𑌮𑍂𑌲𑌤𑌾𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௨௰௧ ॥

𑌪𑍃𑌷𑍍𑌠𑌗𑍍𑌰𑍀𑌵𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑍇 𑌤𑍁 𑌘𑌨𑌮𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌅𑌗𑍍𑌰𑌂 𑌷𑌡𑌂𑌶𑌮𑍇𑌵𑌂 𑌤𑍁 𑌕𑌕𑍁𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌮(𑌵𑍍𑌯𑌾𑌸)𑌂 𑌷𑌡𑌂𑌶𑌕𑌮𑍍 ॥

𑌤𑌦𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌂 𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯𑍇𑌵 (𑌯𑌾𑌂) 𑌗𑍁𑌮𑍍𑌫𑌬𑌨𑍍𑌧𑌕𑌃 ।
𑌮𑍂𑌲𑌮𑌧𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌵𑍇𑌦𑌬𑌾𑌣(𑌮𑍂𑌰𑍍𑌤𑌿)𑌕𑍍𑌰𑌮𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௨௰௩ ॥

நான்கு அங்குலங்கள். நுனியினகலம் ஓரங்குலமாகும். சுற்றளவு அரையங்குலமாம்.

19–23. மூக்கின் நீளம் ஒன்றரையங்குலமெனக் கூறப்பட்டிருக்கின்றது. மூக்கின் ஓட்டையின் அகலம் ஒரு அங்குலமாகும். மூக்கின் அக்ரபாகம் ஐந்து அங்குல நீளமுடையதாகும். மேல் உதடு மூன்று அங்குல நீளமுடையது. கீழுதடு மூன்றங்குல நீளமுடையது. நாக்கின் நீளம் மூன்றங்குலங்களாம். அதன் அகலம் இரண்டங்குலமாகும். அதன் கனம் ஓரங்குலமாகும். மேற்கழுத்தினகலம் ஐந்தங்குலங்களாகும். அடிக்கழுத்தினகலம் மூன்றங்குலங்கள். பின்கழுத்தின்மூலத்தில் கனம் எட்டு அங்குலங்கள். அக்ர(நுனி) பாகத்தில் ஆறு அங்குலங்கள். தோளில் (கழுத்தில்) திமிலின் அகலம் ஆறு அங்குலங்கள் அதனுயரம் நான்கு அங்குலங்கள். கழுத்திலுள்ள துப்பட்டியின் மூலம் நடுநுனிகளின் அகலம் முறையே, நான்கு மூன்று இரண்டு அங்குலங்களாம்.

𑌘𑌨𑌮𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌣𑍍𑌠𑌾𑌗𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌤𑌥𑍈𑌵 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ।
𑌗𑍍𑌰𑍀𑌵𑌾𑌯𑌾𑌃 𑌪𑍁𑌰𑌤𑍋 𑌬𑌿𑌮𑍍𑌬𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍 𑌵𑍍𑌯𑌾𑌸𑌦𑍍𑌵𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௨௪ ॥

𑌹𑍃𑌦𑌯𑌾𑌤𑍍 𑌸𑌨𑍍𑌧𑌿(𑌸𑌨𑍍𑌧𑍀)𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌚𑌂 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌪𑍃𑌷𑍍𑌠𑍋𑌚𑍍𑌚𑌂 𑌮𑌨𑍁𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑌾𑌰𑌂 𑌰𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௨௫ ॥

𑌪𑍃𑌷𑍍𑌠𑍋𑌰𑍁𑌮𑍂𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑌧𑍍𑌯𑌂 𑌚𑌾𑌷𑍍𑌟𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌗𑍍𑌰𑍇 𑌚 𑌚𑌤𑍁𑌰𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௨௬ ॥

𑌶𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌚𑍋𑌰𑍁𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌜𑌾𑌨𑍂𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌦𑍍𑌵𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌜𑌙𑍍𑌘𑌾𑌯𑌾𑌮𑌂 𑌶𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌪𑌾𑌦𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௨௭ ॥

𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌜𑌾𑌨𑍁𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌰𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ।
𑌪𑌾𑌦𑌾𑌯𑌾𑌮𑌂 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍁𑌚𑍍𑌛𑌮𑍂𑌲𑌂 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௨௮ ॥

24–25. ஆங்கு கழுத்திற்கு முன்பு எட்டு அங்குல கனத்தில் பிம்பத்தைச் செய்யவேண்டும். (இது மாமிசச் சதை). இதனடியினகலம் இரண்டங்குலம். இருதயத்திலிருந்து சந்திவரையில் அதனுயரம், பதிஞேரங்குலங்கள். பிருஷ்டத்தினுயரம் பதினன்கு அங்குலங்கள். பிருஷ்டத்தினகலம் பன்னிரண்டு அங்குலங்கள்.

26–27. பின்புறத்துத் துடைகளின் அடிப்புறத்தினகலம், பத்து அங்குலங்களாகும். நடுவினகலம், எட்டு அங்குலங்களாம். நுனியினகலம், நான்கு அங்குலங்களாம். துடையின் நீளம், ஐந்து அங்குலங்கள். முழங்காலினுயரம், இரண்டங்குலங்கள். கண்டங்காலின் நீளம், ஐந்து அங்குலங்கள். குளம்பினுயரம், இரண்டங்குலங்கள்.

28–31. முழங்காலின் சுற்றளவு, மூன்றரையங்குலங்களெனக் கூறப்பட்டிருக்கின்றது. குளம்பின் நீளம் இரண்டங்குலங்களாகும். வாலின் அடிப்புறம் இரண்டங்குல அளவுள்ளதாம். பின்புறத்துத் துடைகளிரண்டின் நடுவில், வயிற்றைச் சார்ந்து, அண்டகோசமும் ஆண்குறியுமிருக்க வேண்டும். தோளின் அகலம் ஆறு அங்குலங்கள். அதற்கு

ஊர்வோரந்தயோர்மத்⁴யே முஷ்கஶேஷா(ஷோ)ந்நதாங்கிதம் ।
ஸ்கந்தாரம் ஷட்³ங்கு³ல்யம் தஸ்யாயாமவிஶாலகம் ॥ ௨௯ ।

மூலம் வேதாங்கு³லம் ப்ரோக்தமக்³ரம் ஸார்த்³த⁴த்ர்யங்கு³லம் ।
ஜாநுதாரம் கு³ணாங்கு³ல்யம் ததா² ஜங்கா⁴விஶாலகம் ॥ ௩௰ ॥

ஸார்த்³த⁴த்³வயாங்கு³லம் மத்⁴யம் தத³க்³ரம் தத்ஸமம் ப⁴வேத் ।
ஶேஷம் யுக்த்யா ச ஸம்யுக்தம் ஶ்வேதவர்ணேந ஶோபி⁴தம் ॥ ௩௧ ॥

ஶ்வேதவர்ணாக்ருதிம் ஸர்வம் ஶ்ருங்கே³ க்ருஷ்ணமயம் ப⁴வேத் ॥ ௩௨ ॥
[ஶ்வேதவர்ணாக்ருதிம் ஸர்வம் ஶ்ருங்கே³ க்ருஷ்ணம் மயீ ப⁴வேத் ॥]
தூ⁴ம்ரவாலகு²ரேஷ்வபி கர்ணயோ꞉ ஶ்வேதரக்தஸம-
ந்நாஹதம் ।
[தூ⁴ம்ரவர்ணம் வாலே ச கர்ணயோ꞉ ஶ்வேதரக்தகம் ॥]

கீழுள்ள துடையின் அகலம், அடிப்பாகத்தில் நான்கு அங்குலங்களெனவும் நுனிபாகத்தில் மூன்றரையங்குலங்களெனவும் கூறப்பட்டிருக்கின்றது. முழங்காலினகலம் மூன்றங்குலங்கள். கண்டங்காலின் அகலமும், அவ்வாறே. (மூன்றங்குலங்கள் அகன்றது அடிப்புறத்தில்). கண்டங்காலின் நடுப்பாகம், இரண்டரையங்குலங்கள் அகன்றது. அக்குளம்புகளுள்ள நுனிபாகமோ, அதற்குச் சமமானது. (நுனிக்கண்டங்காலினகலம் இரண்டங்குலங்களெனக் கருத்து.) எஞ்சியவற்றை யுக்தியுடனிணைந்ததாகச் செய்ய வேண்டும். இடபத்தை வெண்ணிறத்துடன் சோபிக்கின்றதாக நிறுவவேண்டும்.

32. பரமமங்களமான இந்த விருஷபத்தை; வெண்ணிறங்கொண்டதாகவும், கொம்புகளில் கருநிறங்கொண்டதாகவும், நான்கு கால்களின் குளம்புகளிலும் வாலின் மயிரிலும் புகைநிறமுடையதாகவும், இருகாதுகளிலும் வெளிர்சென்னிறங்கொண்டதாகவும் அமைக்கவேண்டும்.

33–34. மேலும்; கொம்பைச் சார்ந்த பொட்டுப் பிரதேசத்தில் நன்கு செந்நிறங்கொண்ட சிறந்த மலர்

ஸம்வ்யஸவ்யேது க்ஷௌமஸூத்ரம் ச மாலா
கண்டேபத்தேஷு கண்டமூலே ருத்ராக்ஷமாலா ।
ப்ருஷ்டே ந்யஸ்தம் கிம்ஶுகபுஷ்பமாலை:
ஸம்ஶோப்யாலம்ப்ய வ்யாக்ரசர்மாதிராஜம் ॥ ௩௩ ॥

ப்ருங்ககோலாங்கலலாடபட்டயுக்
பத்ரவல்லீப்ரபாரத்நஶோபிதம் ।
கர்ணயோர்தேஹ (ஷி) பார்ஶ்வசாமரை:
பாதே நூபுரஹம்ஸபூஷணாந்விதம் ॥ ௩௪ ॥

[ஸம்வே ஸவ்யாக்ஷீணவம்ஶத்ரமாலாம்
கண்டே பத்தை: கண்டமூலே ருத்ராக்ஷஜாலை:
ப்ருஷ்டே ந்யஸ்தம் கிம்ஶுகை: புஷ்பஜாலை:
ஸம்ஶோப்யாலம்ப்ய வ்யாக்ரசர்மாதிராஜம் ॥ ௩௩ ॥]

இதி மாநஸாரே வாஸ்துஶாஸ்த்ரே
வ்ருஷப லக்ஷணவிதாநம் நாம

॥ த்விஷஷ்டிதமோ(அ)த்யாய: ॥

மாலையுடையதாகவும், கழுத்தில் ருத்ராக்ஷங்களாலாகிய மாலைகளையுடையதாகவும் புரசம்பூக்களாலாகிய மாலைகளையுடையதாகவும், முதுகின்மேல் விரித்த புலித்தோலினாலழகியதாகவும் செய்யவேண்டும், வண்டுகளும் பன்றிகளும் திகழும் நெற்றிப்பட்டத்தில் பிரகாசிக்கும் இலைகொடிகள் போன்ற பல ரத்தினங்களால் சோபிக்கின்றதாகவும்; காதுகளிலும் உடலிலும் இருபுறங்களிலும் சாமரங்களுடன் கூடியதாகவும்; பாதங்களில் தண்டை முதலிய அணிகளுடன் கூடியதாகவும் செய்யவேண்டும்.

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
இடபத்தின் இலக்கணமெனும்
அறுபத்தியிரண்டாவது
அத்தியாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌸𑌿𑌂𑌹𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌨𑌾𑌮

॥ 𑌤𑍍𑌰𑌿𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

—o—

𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾𑌹𑌨𑌂 𑌸𑌿𑌂𑌹𑌂(𑌹𑍋)𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌖𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ॥ ௧ ॥

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌮𑍁𑌖𑌾𑌯𑌤𑌮𑍍 ।
𑌉𑌤𑍍𑌤𑌰𑍋𑌷𑍍𑌠𑌂 𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌪𑌾𑌦𑌂 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௨ ॥

𑌉𑌤𑍍𑌤𑌰𑌾𑌧𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌪𑍁𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌮𑌂 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ।
[𑌓𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑍁 𑌪𑍁𑌚𑍍𑌛𑌾𑌨𑍍𑌤𑌾𑌯𑌾𑌮𑌂 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂]
𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌪𑌾𑌦𑌂 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௩ ॥

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
ஸிம்மலக்ஷணமெனும்
அறுபத்திமூன்ருவது அத்தியாயம்.

—o—

1–2. ஸிம்ஹம் என்பது தேவர்களுக்கு வாகனமாயிருப்பது. ஆகவே அதனிலக்கணம் இப்பொழுது கூறப்படுகின்றது. உச்சித்தலையிலிருந்து நகம்முடிவாக சிங்கத்தின் துங்கம் (உயரம்) இருபத்தைந்து அங்குலங்களாம். நெற்றியின் மேற்புறமான உச்சித்தலை, இரண்டங்குலவுயரமுடையது. முகத்தின் நீளம் ஏழு அங்குலங்கள். மேல் உதடு பத்துஅங்குல நீளமுடையது. அதனின்றும் கால் ஆறு அங்குலவுயரம்.

3–6. சிங்கத்தின் உதட்டின் முடிவிலிருந்து வாலின் முடிவுவரையுள்ள நீளம், பதினைந்து அங்குலங்கள். பின்கால் ஐந்து அங்குல நீளமுடையது. இதனை யுக்தியுடன் இணைக்கவேண்டும். கன்னங்களின் முடிவுவரையுள்ள முகத்தினகலம், ஒன்பது அங்குலங்களாகும். இது இரு

முகதாரம் கபொலாந்தம் நவாம்ஶாந(த்ர)ம் ப்ரகத்யதே ।
கர்ணமூலத்வயொர்(யாவத்)த்தம் முகதாரம் விஶாலகம் ॥ ௪ ॥

தத்த்ர்யம்ஶம் ஶாலவிஸ்தாரம் முகதாரம் ஶராங்குலம் ।
லலாடொச்சம் ஶிவாம்ஶம் ஸ்யாத் ப்ரூவொச்சம் தத்ஸமம் பவேத் ॥ ௫ ॥

அக்ஷிதாரொச்சமேகாம்ஶம் நாஸாமூலம் ஶிவாம்ஶகம் ।
விஸ்தாரம் தத்ஸமம் நாஸாபுடமர்த்தாங்குலம் பவேத் ॥ ௬ ॥

நேத்ரஸூத்ராததோ த்யக்த்வா த்வ்யங்குலம் தத்ப்ரகீர்த்திதம் ।
கர்ணாயா(முகா)யாமம் ஶராம்ஶம் ஸ்யாத்தத்ஸ்யம் ஸா (பா)கோ-
ன்னதம் ॥ ௭ ॥

அதரோஷ்டைகமாத்ரம் (த்ரகம்) ததோர்த்தாம்ஶாவஸாநகம் ।
அக்ஷிஸூத்ராதயொம்ஶாந்தேத்தரோஷ்டம் ப்ரகல்பயேத் ॥ ௮ ॥

கபோலம் ச த்விமாத்ரம் ஸ்யாத் கர்ணாயாமம் ஶிவாம்ஶகம் ।

காதுகளின் மூலத்திலிருந்து கூறப்பட்டது. முகத்தினகலம் எவ்வளவோ, அதற்குச்சமமானது நெற்றியின் விஸ்தாரம். முகத்தினகலம் ஐந்து அங்குலங்கள். நெற்றியினுயரம் ஓரங்குலம். புருவத்தினுயரம் அதற்குச் சமமானதாம். கண்விழியினுயரம் ஓரங்குலமாகும். மூக்கின்மூலம் ஓரங்குலமாகும். அகலம் அதற்குச் சமமாகும். மூக்கின் புடம் (ஒவ்வொரு பகுதியும்) அரையங்குலமாகும்.

7–8. நேத்திரஸூத்திரத்திற்குக் கீழே இரண்டங்குலங்கள் நீக்கி, முன்கூறப்பட்ட முகத்தின் நீளத்தை ஐந்தங்குலங்கள் செய்யவேண்டும். அந்தபாகத்தினுயரம் அரையங்குலமாகும். இதற்குக் கீழே அரையங்குலத்திற்கப்பால், கீழுதடு ஒரு அங்குலவுயரம் கொண்டதாகும். அக்ஷிஸூத்திரத்திற்கு ஒரு அங்குல முடிவிற்றொடங்கி, மேலுதட்டைக் கல்பிக்கவேண்டும்.

9–11. கன்னம் இரண்டங்குலமுடையதாம். காதின் நீளம் ஓரங்குலமாகும். காதினகலம் அரையங்குலம்.

கர்ணமூலாயதம் ஶ்ரோத்ரம் கர்ணமூலம் ச தத்ஸமம் ॥ ௧௦ ॥

த³ந்ததை³ர்க்⁴யம் ஶிவாம்ஶம் ஸ்யாத் தத³தோ⁴ऽர்த⁴விஸ்தரம் ।
அக்³ரம் சந்த்³ரார்த⁴வத் தேஷாம் ஸங்க்²யா ஷட் ச காரயேத் ॥ ௧௧ ॥

(ததா²) பூர இதி ப்ரோக்தம் ரக்தஸ்ராவாயநம் ப⁴வேத் ।
ஜிஹ்வாயாமம் த்ர்யங்கு³லம் ஸ்யாத் தத்³விஸ்தாரம் ஶிவாம்ஶகம் ॥ ௧௨ ॥

விஸ்தாரார்த⁴ம் க⁴நம் ப்ரோக்தம் நாஸிகாக⁴நம் தத்ஸமம் ।
நேத்ரயோர்மத்⁴யவிஸ்தாரம் ஶிவாங்கு³லம் தது³ச்யதே ॥ ௧௩ ॥

நாஸிமூலே முகா²க்³ரே (ததா²) ஶ்ரு ச கர்ணமூலே கபோலகே ।
பத்ரவல்ல்யாதி³ஸம்யுக்தம் ஸிம்ஹவக்த்ரமிதி ஸ்ம்ருதம் ॥ ௧௪ ॥

காதின் அடிப்புறமும் அதற்குச் சமமானதே. பற்களின் நீளம் ஓரங்குலமாகும். அதனடிப்புறத்தினகலம் அதனிற் பாதியாம். பற்களின் முன்பாதி அரைச்சந்திரனைப்போன்றதாம். இவ்வாறு ஆறு பற்களைச் செய்விக்கவேண்டும். அவ்வாறே புரமென்று கூறப்பட்ட இரத்தம் பீரிடும் ஜன்னலைச் செய்யவேண்டும். நாக்கின் நீளம் மூன்றங்குலங்களாம். அதனகலம் ஓரங்குலமாகும்.

12–13. சிங்கத்தின் நாக்கின் கனம் அரையங்குலமாகும். மூக்கின் கனமும் அதற்குச் சமமானதேயாம். இரு கண்களின் இடைவெளியினகலம் ஓரங்குலமெனக் கூறப்படுகின்றது. சிங்கத்தின் மூக்கின் அடியிலும் முகத்தின் நுனியிலும் காதினடியிலும் கன்னத்திலும் இலைகொடி முதலியவற்றுடன் கூடியதாகச் செய்வது, ஸிம்மவக்திரமெனக் கருதப்பட்டிருக்கின்றது.

வக்த்ரஸ்ய பூர்வதேஶே து ப்ரமரம் காரயேத்ஸுதீ: |
அம்ஸகேஶாவ்ருதம் சைவ ஸ்தநயோரர்தலம்பிதை: || ௧௪ ||

நவாங்குலம் து வக்ஷஸ்ஸ்யாத் விஸ்தாரம் பரிகீர்திதம் |
த்ர்யங்குலம் பாதவிஸ்தாரம் ஜங்கா(ஜா)யாமம் ஶராங்குலம் || ௧௫ ||

(தல)தாரம் த்ர்யங்குலம் ஸ்யாதாயாமா(யாமே)ர்தாங்குலாதிகம் |
வ்யாக்ர பாதவதாகாரம் காரயேத் பாதசதுஷ்டயம் || ௧௬ ||

ப்ருஷ்டதாரம் தஶாம்ஶம் ஸ்யாத் ப்ருஷ்டோத்ஸேதம் ஷடங்குலம் |
ஶராங்குலோருவிஸ்தாரம் ஜாநுதேஶே த்ர்யம் த்ர்யங்குலம் ||

பஞ்சாம்ஶம் கக்ஷிவிஸ்தாரம் தஸ்மாந் மத்யே து |
ஸிம்ஹாஸ்தேயவஸாநம் வக்ஷ்ஸே த்ர்யம் தாரம் ஶிவாங்குலம் ||

ஹஸ்தாக்ரநகமூலாந்தம் ஸ்யாந்நகமூலாந்தகக்ஷயம் க்ரமாத் |

14–16. இந்த சிங்கத்தின் முகப்பிரதேசத்தில், அறிஞன் பிரமரத்தை (சுருண்டமயிர்க்கத்தைகளை)ச் செய்யவேண்டும். தோள்களில் ஸ்தனங்களின் பாதிவரையில் தொங்கும் பிடரிமயிர்களால் சூழப்பட்டதாகச் செய்ய வேண்டும். மார்பைச் சார்ந்த பரப்பளவு ஒன்பதங்குலங்களெனக் கூறப்பட்டிருக்கின்றது. காலினகலம் மூன்றங்குலங்களாம். அதன் நீளம் ஐந்தங்குலங்கள். பாததலத்தின் அகலம் மூன்றங்குலங்கள். இது நீளத்தில் அரையங்குலம் அதிகமாகும். சிங்கத்தின் நான்கு கால்களையும், புலியின் கால்களைப்போல் வடிவங்கொண்டவைகளாகச் செய்ய வேண்டும்.

17-19. முதுகின் அகலம் பத்து அங்குலங்கள். அதனுயரம் ஆறு அங்குலங்கள். துடையினகலம் ஐந்து

𑌵𑌾𑌲𑌾𑌗𑍍𑌰𑍇 𑌬𑌾𑌲𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌅𑌣𑍍𑌡𑌕𑌾𑌯𑌾𑌮𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 || ௧௯ ||

𑌅𑌣𑍍𑌡𑌤𑌾𑌰𑌂 𑌶𑌿𑌵𑌾𑌂 𑌮𑍂𑌲𑍇𑌽𑌪𑍍𑌯𑌗𑍍𑌰𑌤𑌾𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 |
𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌯𑌾𑌮𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 || ௨௦ ||

𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌨𑌿𑌭𑌂 𑌸𑌿𑌂𑌹𑌂 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌂 𑌚 𑌕𑍇𑌸𑌰𑌮𑍍 |
𑌕𑌣𑍍𑌠𑌾𑌸𑍍𑌯𑍇(𑌮𑍁𑌖𑍇)𑌤𑌥𑍈𑌵𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌣𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌸𑌿𑌤𑌰𑌕𑍍𑌤𑌕𑌮𑍍 ||

𑌬𑌾𑌲𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌨𑌖𑌂 𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 || ௨௨ ||

அங்குலங்கள். துடையின் நீளம் பத்து அங்குலங்கள். வயிற்றின் அகலம் ஐந்து அங்குலங்கள். அதன் கனமும் அதற்குச் சமமானதே. வாலின் நீளம் ஸிம்மத்தினுயரத்திற்குச் சமமானதாம். அதனகலம் ஓரங்குலமாகும். வால் அடியிலிருந்து நுனி அரையங்குலமாயிருக்கவேண்டும். அடியிலிருந்து முறையே குறைந்திருக்கவேண்டும். வாலின் நுனியில் மயிர்களுடன் கூடியிருக்கவேண்டும். அண்டத்தின் நீளம் மூன்று அங்குலங்களாம்.

20-22. சிங்கத்தின் அண்டகோசத்தின் அடிப்புறத்தின் அகலம் ஓரங்குலமாகும். நுனியினகலம் மூன்றங்குலங்களாம். ஆண்குறியின் நீளம் மூன்றங்குலங்களாம். அதனகலம் அரை அங்குலமாகும். சிங்கத்தை வெண்ணிறங்கொண்டதாக அமைக்கவேண்டும். பிடரியைச் செந்நிறங்கொண்டதாகச் செய்யவேண்டும். கழுத்தினுட்புறத்திலும் வாயிலும் காதினுட்புறத்திலும் கருஞ்சிவப்பு நிறமுடையதாயிருக்கவேண்டும். அதனுடைய நகம் பிறைச் சந்திரன் வடிவங்கொண்டதாயிருக்கவேண்டும், பற்களின் வடிவமும் அவ்வாறே.

ஏவம் ப்ரோக்தம் ஸிம்ஹரூபம் ச நாநாம் (ஏகைநாஞ்சம்)
தேவாநாம் (தேவே) கல்பயேத்வாஹநம் ஸ்யாத் (ச) ।
மாநம் ஸர்வம் ப்ரோக்தவத் க்ராஹ்யமேவம்
ஶயாநம் வா ஸ்தாநகம் வாஸநம் வா ॥ ௨௩ ॥

இதி மாநஸாரே வாஸ்துஶாஸ்த்ரே
ஸிம்ஹலக்ஷணம் நாம

॥ த்ரிஷஷ்டிதமோऽத்யாய: ॥

23. இவ்வாறு சிங்கத்தின் வடிவம் அழகிய முறையில் கூறப்பட்டது. இதனை தேவர்களுக்கு வாகனமாகக் கல்பிக்கவேண்டும். முன்பு கூறியதெவ்வாறோ; அவ்வாறே அளவனைத்தும் அறியத்தக்கதாம். இதனைப் படுத்த நிலையிலோ நின்ற நிலையிலோ உட்கார்ந்த நிலையிலோ அமைக்கலாம்.

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்த்திரத்தில்
ஸிம்மலக்ஷணமெனும்
அறுபத்திமூன்ருவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீமாநஸாரே வாஸ்துஶாஸ்த்ரே

ப்ரதிமாவிதாநம் நாம

|| அத சதுஷ்ஷஷ்டிதமோऽத்யாய: ||

—o—

ஶைவப்ரதிமாதீநாம் விஷ்ணுவிஶ்வ (விஷ்ண்வாதீநாம் ச) மாநத: |
உஷ்ணீஷாத் பாதபர்யந்தம் மாநம் ஸங்க்ஷிப்யதே (கீர்த்யதே) அதுநா ||

லிங்கமாநவஶாத் விஷ்ணோர் மூலபேரவஶாத் க்ரமாத் |
உத்தமம் மத்யமம் சாத்ய (நீசம்) கர்ப்பகேஹவிஶாலகே || 2 ||

ஹர்ம்யதாரவஶாத் த்வாரம் வம்ஶாதிஷ்டாநபாதுகே |
[ஹர்ம்யதாரவஶாத் த்வாராதிஷ்டாநபாதுகாவஶாத் |]
ஹஸ்தமாநவஶாத் க்ராஹ்யம் தாலமாநவ(நவ)தாலகே(ஶாதபி) ||

யஜமாநவஶாந்மூலபேரலிங்காங்குலம் (லைஸ்:) ததா |

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்த்திரத்தில்
பிரதிமாவிதாநம் எனும்
அறுபத்திநான்காவது அத்யாயம்

—o—

1–4. இப்பொழுது விஷ்ணு முதலிய பதினாறு பிரதிமைமுதலியவைகளுடைய, உஷ்ணீஷம் (உச்சி) முதல் பாதம் வரையுள்ள அளவானது; கூறப்படுகின்றது. லிங்கமானவசத்தாலும், விஷ்ணுவின் மூலவிக்ரஹவசத்தாலும் ஏற்படும் இந்த அளவானது; முறையே உத்தமம் மத்யமம் அதமம் என மூவகைத்ததாகும். அவ்வளவானது கர்பகிருஹத்தினகலத்தினுலும் ஹர்ம்யத்தினகலத்தினுலும் த்வார (வாயிற்படி) வசத்தினுலும் அதிஷ்டான (கர்பகிருஹமேடை) வசத்தினுலும் பாதுகை (தளவரிசை) வசத்தினுலும் ஹஸ்தமான வசத்தினுலும் தாளமான வசத்தி

மாநாங்குலவஶாந்மாநம் மாந (மாநவம்) ப்ரகீர்திதம் ॥ ௪ ॥

லிங்கமாநாதிஷண்மாநம் ஹோமமாநம் (மோக்ஷாயவை) புக்தி(முக்தி)தம் ।
ஹஸ்தாதிவஶாந்மாநம் (து) காமமோக்ஷம்(க்ஷம்) ப்ரஶம்ஸிதம் ॥ ௫ ॥

அங்குலம் முக்திகாமஸ்ய கர்துரிச்சாவஶாந்நயேத் ।
தஸ்மாத்தந்மூலலிங்காதிமாநம் மாநயந்த(வ)முச்யதே ॥ ௬ ॥

லிங்கே ஸ்வ(ஸ்வா)யம்புவே ஜ்ஞாத்வா (மாநம்) மாநுஷே ச த்விதா
பவேத் ।
ஸ்வயம்புலிங்கே து பரிணாமாநம் ச ஸங்க்ரஹம்
(யத்நஸ்ய ஸங்க்ரஹ:) ॥ ௭ ॥

பரிணாஹே ஶிரோதேஶே விஸ்தாரம் மாநயேத் புத: ।
மாநுஷே லிங்கமத்யே து தஸ்மிநா மாநகம் த்யஜேத் ॥ ௮ ॥

விஸ்தாரே பரிணாஹே வா யதிஷ்டம் தேஹம் (யதிஷ்டம் தத்து)
க்ருஹ்யதே ।

னாலும் யஜமானமான வசத்தினுலும் மூலவிக்ரஹவசத்தினுலும் லிங்கவசத்தினுலும் அங்குளமானவசத்தினுலும் மானங்குளவசத்தினுலும் பன்னிரண்டு பேதமுடையதாம்.

5–6. இவைகளில் லிங்கமானதிகளான ஆறு அளவுகள், தர்மம் அர்த்தம் காமம் மோக்ஷம் என்ற நான்கு புருஷார்த்தங்களேயும் அளிக்கக்கூடியவை. ஹஸ்தாதிகளான அளவுகள் காமமோக்ஷங்களேயளிக்கக்கூடியவை. அங்குளவசத்தினலே ஏற்படும் அளவு மோக்ஷத்தை மட்டிலும் அளிக்கக்கூடியது. ஆகவே அளவுகள் கர்த்தாவின் இஷ்டப்படி செய்யத்தக்கனவாம். ஆகையினல் அந்த மூலலிங்காதிமானத்தினல் ஏற்படுவது, மானவம் எனப்படுகின்றது.

7–9. இந்த லிங்கமானமானது, ஸ்வயம்புலிங்கத்திலும் மானுஷலிங்கத்திலும் இரண்டு பேதமுடையதாகும். அறிஞன் ஸ்வயம்புலிங்கத்தில் சுற்றளவில் சிரோமானத்

𑌏𑌵𑌂 𑌲𑌿𑌂𑌗𑌦𑍍𑌵𑌯𑍋𑌸𑍍𑌤𑍁𑌂𑌗𑍇 𑌪𑍀𑌠𑌮𑌾𑌨𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍍 𑌬𑍁𑌧𑍈𑌃(𑌧𑌃) ॥

𑌲𑌿𑌂𑌗𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑍋𑌦𑌯𑌂 𑌵𑌾𑌥 𑌤𑌤𑍍𑌤𑌨𑍍𑌨𑌾𑌹𑌸𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌷𑍋𑌡𑌶𑌾𑌂𑌶𑌵𑌿𑌹𑍀𑌨𑌿𑌤𑌮𑍍 ॥ ௰ ॥

𑌤𑌤𑍍𑌤𑌦𑌂𑌶𑍇𑌨 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌹𑍍𑌰𑌾𑌸𑍋𑌨𑌂 𑌵𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍
(𑌏𑌕𑌾𑌦𑌶𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍) ।
𑌅𑌥𑌵𑌾 𑌤𑌤𑍍𑌤𑌦𑌂𑌶𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌕𑌹𑍍𑌰𑌾𑌸𑌿𑌤𑌤𑌯𑍋𑌃 (𑌤𑍍𑌵𑌯𑌾𑌂) 𑌶𑌕𑌮𑍍 ॥ ௰௧ ॥

𑌨𑌵𑌸𑌪𑍍𑌤𑌕𑌪𑌞𑍍𑌚𑍈𑌵 𑌤𑍍𑌰𑍍𑌯𑌧𑌿𑌕𑌂 𑌵𑌾𑌥 𑌹𑍀𑌨𑌕𑌮𑍍 ।
𑌏𑌵𑌂 𑌲𑌿𑌂𑌗𑌵𑌶𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌬𑍇𑌰𑌵𑌶𑍋𑌚𑍍𑌯𑌤𑍇
(𑌶𑌾𑌦𑍍𑌯𑌥𑌾) ॥ ௰௨ ॥

தையும் (தலையின் சுற்றளவையும்) பருத்தபிரதேசத்தில் விஸ்தாரத்தையும் அளந்துகொள்ளவேண்டும். மானுஷ லிங்கத்திலோ அந்த சிரோமானத்தை விட்டுவிடவேண்டும். பருத்ததேசத்திலுள்ள விஸ்தாரத்திலோ சுற்றளவிலோ யாதாமொன்றை விருப்பப்படி கொள்ளலாம். இவ்வாறாகிய இருவகைத்த லிங்கங்களின் உயரத்திலும் பீடமானத்தைத் தகர்த்துவிடவேண்டும்.

10-12. லிங்கத்தின் சுத்தமானவுயரமானது, அந்த அந்த லிங்கத்தின் சுற்றளவிற்குச் சமமானதாம். சிலர் அந்தச் சுற்றளவின் மூன்று மடங்கு அளவைப் பதினாறு கூறுகளாக்கிக்கொண்டு, அந்த அந்தப் பகுதியின் ஓர் அம்சத்துடன் கூட்டுதலையோ குறைப்பதையோ பதினோராவது அம்சம் வரைக் கொள்வது, லிங்கதுங்கமென்பர். அல்லது அந்த அந்த அம்சத்துடன் இரண்டைக் கூட்டியோ குறைத்தோ, ஏழு ஐந்து மூன்று ஒன்பது பதினொன்று என்பவைகளைக் கொள்வது லிங்கதுங்கமென்பர். இவ்வாறு லிங்கவசத்தினால் ஏற்படும் அளவு கூறப்பட்டது. இப்பொழுது விஷ்ணுபேர (ஸகுணமூர்த்தி) வசத்தினால் ஏற்படும் அளவு கூறப்படுகிறது.

𑌮𑍂𑌲𑌬𑍇𑌰𑌸𑌮𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑌾 𑌪𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌬𑌾𑌹𑍁𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ॥ ௧௩ ॥

𑌨𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑍇𑌢𑍍𑌰𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌵𑌮𑌾𑌨𑌂 (𑌨𑌵𑌧𑌾) 𑌵𑍋𑌤𑍍𑌸𑌵𑍋𑌦𑌯𑌮𑍍 ।
𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌕𑍌𑌤𑍁𑌕𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ ௧௪ ॥

𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌗𑍃𑌹𑌂 𑌚𑌰𑌕𑍍𑌵𑌾 𑌨𑌵𑌨𑌵𑍋𑌦𑌯𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
[𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌗𑍃𑌹𑌂 𑌮𑌾𑌨𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨𑌵𑌾𑌂𑌶𑌕𑌂 𑌬𑍁𑌧𑌃]
𑌤𑌥𑍈𑌵 𑌨𑌵𑌮𑌾𑌨𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌭𑌵𑌤𑍀𑌵𑌿𑌧𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௧௫ ॥
[𑌤𑌥𑍈𑌵 𑌨𑌵𑌮𑌾𑌨𑌂 𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥]

𑌏𑌵𑌂 𑌗𑌰𑍍𑌭𑌗𑍃𑌹𑌮𑌾𑌨 (𑌦𑍍𑌵𑌾𑌰) 𑌵𑌶𑌾𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।

13–14. மூலவிக்ரஹத்தின் வசத்தினுல் ஏற்படும் உத்ஸவவிக்ரஹத்தின் உயரமானது, மூலபேரத்திற்குச் சமமாகவோ கண் முடிவுகொண்டதாகவோ புடத்தை முடிவாகக்கொண்டதாகவோ தாடையை முடிவாகக்கொண்டதாகவோ பாஹுவை முடிவாகக்கொண்டதாகவோ ஸ்தனத்தை முடிவாகக்கொண்டதாகவோ இருதயத்தை முடிவாகக்கொண்டதாகவோ தொப்புளை முடிவாகக்கொண்டதாகவோ ஆண்குறியின் முடிவை முடிவாகக்கொண்டதாகவோ ஒன்பது வகைத்ததாகின்றது. கௌதுகமெனும் (ஆலிலைக் கிருஷ்ணன் முதலிய) லீலா விக்ரஹத்தின் உயரம், அதனிற்பாதியாகும். இந்த ஒன்பது வகைகளில் மும்மூன்றும் முறையே உத்தம மத்யம அதமமென மூவகைத்ததாகும்.

15–16. கர்பக்ருஹத்தின் யாதாமொரு சுத்தமான முண்டோ; அந்த அளவை அறிஞன் ஒன்பது பாகங்களாக்கிக்கொள்ளவேண்டும். அந்த ஒன்பது வகைத்த அளவுகளே, கர்பக்ருஹவசத்தாலேற்படும் ஒன்பது அளவுகளாம். இவை முன்கூறியதுபோலவே மும்மூன்றும் முறையே உத்தமாதிகளாகும். கர்பக்ருஹத்தின் துவார (வாயிற்படி) வசத்தினுல் ஏற்படும் அளவையும், இவ்வாறே

𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑍇𑌽𑌰𑍍𑌧𑌂 𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌵𑌤𑍍 ॥ ௧௬ ॥

𑌦𑍍𑌵𑌾𑌰𑌶𑌾𑌲𑍋𑌦𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌚𑍈𑌵 𑌵𑌾 ।
[𑌦𑍍𑌵𑌾𑌰𑌶𑌾𑌲𑍋𑌦𑌯𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌵𑌾 ।]
𑌤𑌦𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌹𑍀𑌨𑌂 𑌵𑌾 𑌤𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌕𑍇 ॥ ௧௭ ॥
[𑌤𑌦𑍍𑌵𑌾𑌧𑌿𑌕𑌹𑍀𑌨𑌂 𑌵𑌾 𑌤𑌯𑍋𑌰𑍍𑌵𑌾 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ॥]

𑌸𑌮𑌂 (𑌨𑍍𑌯𑍂𑌨𑌂) 𑌵𑌾 𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌮𑌾𑌨𑌂
𑌉𑌦𑍋 (𑌨𑌵𑍋)𑌦𑌯𑌮𑍍 ।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍋𑌦𑌯𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌾𑌦𑌤𑍁𑌙𑍍𑌗𑌮𑌥𑌾𑌪𑌿 𑌤𑌤𑌃 ॥ ௧௮ ॥
[𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍋𑌦𑌯𑌂 𑌨𑍍𑌯𑍂𑌨𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑌂 𑌤𑌥𑌾 ।]

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌨𑌵𑌧𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌨𑌯𑌨𑌾𑌨𑍍𑌯𑍁𑌦𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌹𑌸𑍍𑌤𑌾𑌦𑌿 𑌨𑌵𑌹𑌸𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑌸𑍍𑌤𑌮𑌾𑌨𑌵𑌿𑌧𑍋𑌦𑌯𑌮𑍍 ॥ ௧௯ ॥

𑌤𑌾𑌲𑌾𑌦𑌿 𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌦𑌿𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 ।

கல்பித்துக்கொள்ளவேண்டும். பிராசாதத்தின் அகலத்தினல் ஏற்படும் அளவானது, கர்பக்ருஹத்தின் அளவைப் போன்றதாகும்.

17–20. அல்லது; துவாரத்தின் (வாயிலின்) சுத்தமான உயரத்தையோ அகலத்தையோ, காற்பங்கு அதிகமாகவோ குறைந்ததாகவோ, சுத்தமானவுயரம் அகலம் இவ்விரண்டிற்கும் நடு அளவாகவோ, அதனைக் காற்பங்கு அதிகமாகவோ குறைந்ததாகவோ செய்துகொள்வதால்; துவாரமானத்தால் ஏற்படும் உயரம், ஒன்பது வகைத்ததாகும். இவ்வாறே அதிஷ்டானவசத்தினல் ஏற்படும் உயரமும்; காற்பங்கு குறைத்துக்கூட்டியயிருவகையுடையதாகவும், ஒவ்வொன்றையும் ஒன்பது பங்கு ஆக்குவதனல் ஏற்படும் ஒன்பது அளவுகளுடையதாகவும் கூறப்பட்டிருக்

𑌮𑍁𑌷𑍍𑌟𑍍𑌯𑌾𑌦𑌿 𑌨𑌵𑌮𑍁𑌷𑍍𑌟𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌮𑍁𑌷𑍍𑌟𑌿𑌮𑌾𑌨𑌂 𑌨𑌵𑍋𑌦𑌯𑌮𑍍 ॥ ௨௦ ॥

𑌕𑌰𑍍𑌤𑍁𑌶𑍍𑌚 𑌤𑍁𑌙𑍍𑌗𑌸𑌮𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ।
𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ॥ ௨௧ ॥

𑌨𑌾𑌭𑌿𑌮𑍇𑌢𑍍𑌰𑌾𑌵𑌧𑌾(𑌵𑌸𑌾)𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌮𑌾𑌨𑌂 𑌨𑌵𑍋𑌦𑌯𑌮𑍍 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌵𑌾(𑌵𑍇)𑌷𑍍𑌟𑌮𑌾𑌨𑌂 𑌤𑌜𑍍𑌜𑌾𑌤𑍍𑌯𑌂𑌶𑍈𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥

𑌤𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍈𑌃 (𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂) 𑌷𑌡𑍍𑌵𑌿𑌧𑌾𑌯𑌾𑌦𑌿 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍
(𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍)

கின்றது. ஹஸ்த மானவசத்தினுல் ஏற்படும் உயரம், ஒரு கரம் தொடங்கி ஒன்பது கரங்கள் முடிய ஒன்பது வகைத்ததாகும். தாளவசத்தால் ஏற்படுவதும், ஒன்று தொடங்கி ஒன்பது தாளங்கள் முடிய ஒன்பது வகைத்த தாகும். முஷ்டியினுல் (மடக்கிய விரல்களையுடைய கரதலத்தினுல்) ஏற்படும் உயரமும், ஒன்று தொடங்கி ஒன்பது முஷ்டிகள் முடிய ஒன்பது வகைத்ததாகும்.

21–22. கர்த்தாவினுடைய அளவின் வசத்தால் ஏற்படும் உயரமானது, கர்த்தாவின் உயரத்திற்குச் சமமானது கண்களை முடிவாகக்கொண்டது புடத்தை முடிவாகக் கொண்டது தாடையை முடிவாகக்கொண்டது தோள்களை முடிவாகக்கொண்டது ஸ்தனங்களை முடிவாகக்கொண்டது இருதயத்தை முடிவாகக்கொண்டது தொப்புளை முடிவாகக் கொண்டது ஆண்குறியை முடிவாகக்கொண்டது என, ஒன்பது வகைத்ததாகும். இவைகளுள் பிடித்தமான அளவை ஏற்று, அதனை ஜாத்யம்சங்களுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

23–24. அந்த அளவானது, சில்பிகளைக்கொண்டு ஆறுவகைத்ததான ஆயாதிகளுடன் கூடியதாக ஏற்கத் தக்கதாம். இவைகளில் சுலபமான ஆயாதிகளை ஏற்க

𑌶𑍁𑌭𑌾𑌯𑌾𑌦𑌿𑌕𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 (𑌤𑍍𑌯𑌾𑌜𑍍𑌯𑌂) 𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌭𑌾𑌗𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥௨௩॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌕𑍈𑌕𑍇𑌨 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍁𑌭𑌾𑌯𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 (𑌯𑍁𑌤𑌮𑍍) ।
𑌸𑌕𑌲𑌂 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌮 𑌯𑌚𑍍𑌛𑍁𑌭𑌾𑌂𑌶𑌾𑌵𑌸𑌾𑌨𑌕𑌮𑍍 ॥ ௨௪ ॥

𑌅𑌂𑌶𑌕𑌂 𑌤𑌾𑌵𑌦𑍇𑌵𑍋𑌕𑍍𑌤𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍍𑌵𑌧𑍁𑌨𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌯𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑌂𑌹𑍃𑌤𑍍𑌯 (𑌹𑍃𑌤𑍍𑌯) 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌦𑍍𑌭𑌾𑌗𑌤𑌾𑌂𑌤
(𑌶)𑌕𑌮𑍍 ॥ ௨௫ ।

𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌬𑍇𑌰𑌂 𑌤𑌾𑌲𑌵𑌶𑌾𑌦𑌪𑌿 ।
𑌭𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌬𑍇𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

வேண்டும். அசுபங்களை விலக்கவேண்டும். பேரத்தின் அளவை முப்பது பாகங்களாக்கிக்கொண்டு, ஒவ்வொரு பாகமாகக் கூட்டிக்கொள்ளவேண்டும். அப்போது எந்த அம்சமானது, சுபமான ஆயாதிகளுடன் கூடியதாயிருக்கின்றதோ; அதனை ஏற்கவேண்டும். உத்ஸவாதிவிக்ரஹங்களுக்கும், ஸகல விக்ரஹத்தின் அம்சங்களில், எது சுபாயாதிகளுடன் கூடிய அம்சமோ; அதை முடிவாகக் கொண்டு அளவைக்கொள்ளலாம்.

25–26. இதுவரை அம்சத்தினுல் ஏற்படும் அளவு, கூறப்பட்டது. இனி அங்குலங்களால் ஏற்படும் அளவு கூறப்படுகின்றது. ஒரு லிங்கத்தின் உயரம் யாதாமொன்றுண்டோ; அதனை இருபத்திநான்குப் பகுதிகளாக்கிக்கொண்டு, அதனில் ஒவ்வொரு பகுதியையும் அங்குலமாகக் கொள்ளவேண்டும். இது லிங்காங்குலம் எனக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு பேரத்தை (ஸகுணமூர்த்தத்தை)த் தாளவசத்தினுலும் பகிர்ந்து கொண்டு, அவைகளில் ஒவ்வொன்றும் அங்குலமெனக் கொள்ளலாம். இது பேராங்குளமெனக் கூறப்பட்டிருக்கின்றது. (தாளமென்பது, கரதலத்தின் கட்டைவிரல் முதல் நடுவிரல் நுனி முடியவுள்ள பரப்பளவாகும்). இனி மாநாங்குளம் கூறப்படுகின்றது.

𑌯𑌵𑌤𑌾𑌰𑌾𑌷𑍍𑌟𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 (𑌮𑌾𑌨𑌂) 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍇𑌨 𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌿𑌯𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌷𑌡𑍍𑌯𑌵𑌾(𑌯𑌵𑌂)𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌯𑌤𑌮𑍍
(𑌕𑌨𑍍𑌯𑌸𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍) ॥ ௨௭ ॥

𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌦𑍇𑌹𑌲𑌬𑍍𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂(𑌯𑌥𑌾) 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌜𑌾𑌤𑍍𑌯𑌂𑌶𑌸𑌵𑌿𑌨𑌾𑌶𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௮ ॥

𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌹𑌸𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾 𑌨𑌯𑍇𑌤𑍍 ।
[𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌜𑌾𑌤𑍍𑌯𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌨𑌾𑌶𑌯𑍇𑌤𑍍 ।]
𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌸𑌮𑌾𑌰𑌭𑍍𑌯 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௨௯ ॥

𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌤𑍁𑌤𑍍𑌤𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍁𑌭𑌾𑌯𑌾𑌦𑌿𑌸𑌂𑌭𑌵𑌮𑍍 ।
𑌨𑌾𑌗𑌂 𑌬𑌾𑌣𑌂 𑌗𑍁𑌣𑌂 𑌵𑌾𑌥 𑌨𑌵 𑌵𑍇𑌦𑌗𑍁𑌣𑌂 𑌤𑌥𑌾 ॥ ௩௦ ॥

𑌸𑌾𑌨𑍁𑌵𑌂𑌶𑌤𑍍𑌰𑌯 𑌹𑌸𑍍𑌤𑌿 (𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑍍𑌤𑌿) 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌯𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।

27–31. யவையெனும் தானியங்களின் எட்டை அடுக்கி வரிசையாக வைத்து; அவைகளின் பரப்பளவை ஒரு மானங்குலமெனக் கொள்ளவேண்டும். இது உத்தமமாகும். இவ்வாறு ஏழுயவைகளின் பரப்பளவு, மத்யம மானங்குலமாகும். இவ்வாறு ஆறுயவைகளின் பரப்பளவு, அதமமானங்குலமாம். இவ்வாறு மானங்குலம் கூறப்பட்டது. இனி தேஹலப்தாங்குலம் கூறப்படுகின்றது. இரண்டு அங்குலங்கள் தொடங்கி, ஜாத்யம்சத்துடன் கூட்டிக்கொண்டு உயரத்தைக் கணக்கிடவேண்டும். மூன்று அங்குலங்களில் தொடங்கினால், ஜத்யம்சத்தை நீக்கி உயரத்தைக் கணக்கிடவேண்டும். இதன் முறையாவது :—ஏழு அங்குலங்களில் தொடங்கி, இரண்டிரண்டு அங்குலங்கள் கூட்டுவதனால், நூற்றுஇருபத்தைந்து அங்குலங்கள் முடியும்வரை ஏற்படுபவைகளில் எந்த அளவு சுபாயாதிகளுக்குப் பொருந்துமோ; அதனை ஏற்கவேண்டும் என்பதாம். சுபாயாதிகள் கண்டுபிடிக்கும் முறை

ஶேஷகாயம் வ்யயம் யோநி நக்ஷத்ரம் வாரகாம்ஶகம் || ௩௧ ||

தாரித்ர்யம் தாரநாஶம் ச ஶ்ரீகரம் விஜயாத்புதம் |
புக்திர்முக்திஶ்ச காமஸ்யார்த்தலாபஶ்ச தர்மார்த்தஸஞ்சயாவஹம் || ௩௨ ||

கீர்த்திஶ்ச பூர்ணத்வஶ்சைவ ஆத்யாயாம்ஶகம் உச்யதே |
ஹஸ்தக்ரஹம் விஜயஞ்சைவ ஶ்ரீகரம் த்ரவ்யநாஶகம் || ௩௩ ||

போகம் ஶத்ருநாஶஞ்ச சக்ஷுரோகம் தநாகமம் |
ஸந்தோஷம் ஸௌக்யமேவைவ தஶதா வ்யயஜம் உச்யதே || ௩௪ ||

ஆயம் ஸமாதிகம் ஶ்ரேஷ்டம் வ்யயம் ஸமாஹீனம் ஶுபம் |

கூறப்படுகின்றது :—ஆயம் வ்யயம் யோநி நக்ஷத்ரம் வாரம் அம்சம் எனும் இவ்வாறுகளின் எண்களை; முறையே எட்டு ஒன்பது மூன்று எட்டு ஒன்பது நான்கு இவ்வெண்களால் பெருக்கி, அவ்வாறே முறையே பன்னிரண்டு பத்து எட்டு இருபத்தியேழு ஏழு ஒன்பது இவ்வெண்களால் வகுக்கவேண்டும். மீதி வருவது முறையே, ஆயம் வ்யயம் யோநி நக்ஷத்ரம் வாரம் அம்சம் எனக் கொள்ளப்படவேண்டும்.

32–34. பன்னிரண்டு வகைத்த ஆயாம்சங்களின் பயன்கள், முறையே; தரித்ரத்தன்மை, மனைவிநாசம், ஐச்வர்யம், வெற்றி, ஆச்சரிய நிகழ்ச்சி, புக்தி, முக்தி, காமானுபவம், பொருளின் லாபம், தர்மார்த்தங்களின் சேமிப்பு, புகழ், நிறைவு என்பனவாம், இவ்வாறே பத்து விதமான வியயங்களின் பயன்கள் முறையே; கைகூடுதல், வெற்றி, ஐச்வர்யம், பொருள் நஷ்டம், போகம், சத்ரு நாசம், கண்ணின் வியாதி, பொருள் கிடைத்தல், சந்தோஷம், சுகம் என்பனவாம்.

35–36. எந்த அளவில் ஆயாதிகளைக் கணக்கிடும் பொழுது, ஆயம் அதிகமாக இருக்கின்றதோ அது சுபகர

[𑌆𑌯𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌸𑍌𑌖𑍍𑌯𑌕𑌰𑌂 𑌵𑍍𑌯𑌯𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌦𑍂𑌷𑌿𑌤𑌮𑍍 ।]
𑌆𑌯𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌵𑍍𑌯𑌯𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌤𑍍𑌕𑌰𑌂 𑌸𑌦𑌾 ॥ ௩௫ ॥

𑌯𑌤𑍍𑌸𑍍𑌵𑌂 𑌸𑍌𑌖𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑍇𑌦𑌾𑌯𑌹𑍀𑌨𑌂 𑌤𑌦𑍂𑌷𑌣𑌮𑍍 ।
𑌵𑌣𑌿𑌜𑍍𑌯𑌂 𑌵𑍍𑌯𑌯𑌂 𑌸𑌦𑍈𑌵𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍋𑌷𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௩௬ ॥
[𑌵𑍍𑌯𑌯𑌾𑌧𑌿𑌕𑌂 𑌚𑌾𑌯𑌹𑍀𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌥𑌾 𑌨𑌿𑌨𑍍𑌦𑌿𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌆𑌯𑌂 𑌵𑍍𑌯𑌯𑌂 𑌸𑌮𑌾𑌨𑌂 𑌵𑍈 𑌤𑌤𑍍𑌰 𑌦𑍋𑌷𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥]
𑌜𑌨𑍍𑌮𑌦𑍍𑌵𑌯𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌠𑌿𑌰𑌷𑍍𑌟𑌨𑌵 𑌸𑍌𑌖𑍍𑌯𑌦𑌮𑍍 ॥ ௩௭ ॥

𑌧𑍍𑌵𑌜𑌃 𑌸𑌿𑌂𑌹𑍋 𑌵𑍃𑌷𑍋 𑌹𑌸𑍍𑌤𑍀 𑌸 𑌤𑍇𑌷𑌾𑌂 (𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂)
𑌸𑍌𑌖𑍍𑌯𑌯𑍋𑌨𑌯𑌃 ।

[𑌜𑌨𑍍𑌮𑌦𑍍𑌵𑌯𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌠𑌾𑌷𑍍𑌟𑌨𑌵𑌰𑍍𑌕𑍍𑌷𑌕𑌂 𑌸𑍌𑌖𑍍𑌯𑌮𑍍 ॥]

𑌨𑌾𑌮𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑌿 𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌂 𑌗𑌣𑌯𑍇𑌨𑍍𑌨𑍇𑌤𑍍𑌰 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑌾𑌮𑍍𑌯𑌾𑌦𑌿 𑌨𑌾𑌮𑍍𑌯𑌞𑍍𑌚 𑌸𑍇𑌨𑌾𑌧𑌿𑌦𑍀𑌯𑌾𑌜𑍍𑌞𑌕𑌮𑍍 ॥ ௩௮ ॥

[𑌨𑌾𑌮𑌰𑍍𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌵𑌾 𑌜𑌨𑍍𑌮𑌰𑍍𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌗𑌣𑌨𑌂 𑌤𑍁 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌾𑌦𑌾𑌰𑌭𑍍𑌯 𑌗𑌣𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥]

𑌤𑍃𑌤𑍀𑌯𑍇 𑌮𑌾𑌨𑌜𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌰 𑌪𑌞𑍍𑌚𑌵𑍇𑌦𑌗𑌣𑍇𑌨𑍍𑌨𑍇𑌤𑍍𑌰 𑌵𑌾 ।

மாகும். வியயம் அதிகமாயிருந்தால் அது நிந்திக்கப்பட்ட தாகும். ஆயம் அதிகமாகவும் வியயம் குறைவாகவுமிருந் தால் அது எப்பொழுதுமே ஸம்பத்துக்களைத் தருவதாகும். வியயம் அதிகமாயிருந்து ஆயம் குறைவாயிருந்தால் அது, முற்றிலும் நிந்திக்கப்பட்டதாகும். ஆயமும் வியயமும் சமமானல், ஆங்கு தோஷமில்லை.

37-39. யோநிகளுள் கொடி சிங்கம் இடபம் யானை இவைகள் எல்லோருக்கும் சுபமானவை. நக்ஷத்திரங் களுள் ஜன்மம் இரண்டு நான்கு ஆறு எட்டு ஒன்பது இவை சுபமானவை. நாமநக்ஷத்திரத்திலிருந்தும் ஜன்ம நக்ஷத்திரத்திலிருந்தும் எண்ணிக்கை விதிக்கப்படுகின் றது. கர்த்தாவின் நக்ஷத்திரம் தொடங்கி முறையே

तस्मात्तृतीयपर्यायशेषः पूर्वशुभावहः ॥ ३९ ॥
[ततस्त्वपि पर्यायमेवं द्वितीयं गणयेद्बुधः ।
तस्मात्तृतीयं गणयेत् पूर्वोक्तं सकलं शुभम् ॥]

गुरुशुक्रबुधचन्द्रवारं प्रशस्यते ।
तस्करोऽधनषण्ढश्च प्रेष्यान्तानि शुभांशकम् ॥ ४० ॥
[गुरुशुक्रबुधेन्दूनां वाराः शुभफलप्रदाः ।
तस्करोऽधनः षण्ढः प्रेष्यश्चाशुभदाः स्मृताः ॥]

वर्ज्यौ षष्ठाष्टमौ राशी चान्यत्सर्वं शुभं भवेत् ।
मध्यः सर्वशुभं प्रोक्तं मानुषासुरं वर्जयेत् ॥ ४१ ॥
[देवासुरं मध्यमं स्यात् वर्जयेन्मानुषासुरम् ॥]

एकनेत्रं विनेत्रं वा संध्यग्रांशं विवर्जयेत् ।
शुभयोगं शुभं चैव दद्यात्ययोगविनाशनम् ॥ ४२ ॥

[एकनेत्रं हीननेत्रं संध्यग्रांशं विवर्जयेत् ।
शुभयोगं तु शुभदं दद्यात्ययोगं विनाशनम् ॥]

यत्र दोषो गुणाधिक्यं तत्र दोषो न विद्यते ।

எண்ணவேண்டும். அதனின்றும் முன்போலவே இரண்டாம் பர்யாயத்தையும் எண்ணவேண்டும். அதனின்றும் மூன்றும் பர்யாயத்தையும் எண்ணவேண்டும். முன்கூறிய படி எல்லாம் சுபமேயாம்.

40–41. நாட்களில் வியாழன் வெள்ளி புதன் திங்கள் இவை சுபமானவை. தஸ்கரம் அதனம் ஷண்டம் பிரேஷ்யன் இவை அசுபமெனக் கருதப்பட்டவை. ராசிகளில் ஆறு எட்டு ராசிகளைத் தவிர மற்றவை எல்லாம் சுபமானவை. தேவாஸுரம் நடுத்தரமானது. மானுஷாஸுரத்தைத் தகர்க்கவேண்டும்.

42–43. ஒற்றைக்கண்ணுடையது கண்ணற்றது அம்சங்களின் சேர்க்கையுடையது இவைகளைத் தவிர்க்க வேண்டும். சுபயோகமுடையது சுபத்தை யளிப்பதாகும்.

தோஷாதிககுணம் வா'ந்யம் ஸர்வதோஷகரம் பவேத் || ௪௩ ||

[ந்யூநதோஷே குணாதிக்யே தத்ர தோஷோ ந வித்யதே ।
தோஷாதிகம் குணைர்ந்யூநம் ஸர்வதோஷகரம் பவேத் ।]

தஸ்மாத்பரிஹரேத் வித்வாந் ஜநஶ்சைவம் ப்ரகல்பயேத் ।
தந்மாத்ராங்குலஜாதோத்ஸேதாயாமம் ப்ர ... யத் || ௪௪ ||
[தோஷாந் பரிஹரேத் வித்வாந் குணாநேவ து ஸங்க்ரஹீ ।
தந்மாத்ராங்குலஜாதோத்ஸேதாயாமம் து ப்ரகல்பயேத் ||]

குர்யாதாயாதி ஸர்வேஷாம் ப்ரோக்தவத் பிம்பவித்தமஃ ।
அந்யாந்யந்யதோ க்ராஹ்யம் ப்ரோக்தவத் தத்ர வித்தமஃ || ௪௫ ||
[அநுக்தமந்யதோ க்ராஹ்யம் ப்ரோக்தமேவம் ப்ரகல்பயேத் ||]

மரணயோகமுடையது அழிவையுண்டுபண்ணுவதாகும் தோஷங்கள் குறைந்து குணங்கள் நிறைந்திருப்பின், அது குற்றமற்றதாகும். தோஷங்கள் நிறைந்து குணங்கள் குறைந்திருந்தால், அது ஸர்வதோஷங்களேயும் விளே விப்பதாகும்.

44–45. அறிஞனை மனிதன் தோஷங்களே விலக்க வேண்டும். குணங்களேயே தேர்ந்தெடுக்கவேண்டும். தன் விஷயத்தில் அந்த மாத்ராங்குலமானத்திஞல் ஏற்படும் உயரத்தையே கல்பிக்கவேண்டும். சில்பிசிரேஷ்டன் எல்லா விக்ரஹங்களுக்கும் கூறியபடி ஆயாதிகளேச் செய்ய வேண்டும். கூருதவைகளே மற்ற கிரந்தங்களிலிருந்து தெரிந்துகொள்ளவேண்டும். கூறியவற்றை இவ்வாறே கல்பிக்கவேண்டும்.

𑌕𑌰𑍍𑌯𑌶𑍍𑌚𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌮𑌾𑌨𑌵𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌤𑍍𑌤𑌃 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑍍𑌯𑌦𑌨𑍍𑌯𑌤𑍋 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌮𑌾𑌨𑌵𑌤𑍍𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌤𑍍𑌤𑌃 ॥ ௪௫ ॥
[𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌤𑌦𑌨𑍍𑌯𑌤𑍋 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌮𑌾𑌨𑍇𑌨𑍈𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌚 ।
𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑍁......𑌚...............𑌮𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑍍 ॥ ௪௬ ॥

[𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌮𑌹𑍇𑌶𑌾𑌨𑌾𑌂 𑌬𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌜𑌿𑌨𑌸𑍍𑌯 𑌚 ।
𑌅𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌮𑌾𑌨𑌮𑍇𑌵𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑍇𑌤𑍍 ॥]

𑌏𑌵𑌂 𑌤𑍂𑌤𑍍𑌸𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌂 𑌜𑌂𑌗𑌮𑌾𑌦𑌿𑌨𑌃 ।
[𑌏𑌵𑌂 𑌤𑍂𑌤𑍍𑌸𑌵𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑍇 𑌜𑌂𑌗𑌮𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾]

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌚𑌤𑍁𑌷𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

46½. பிரமன், விஷ்ணு, மஹேசுவரன், புத்தன், ஜினன் இவர்களுடையவும் மற்றவர்களுடையவும், பிரதிமைகளின் அளவை, இவ்வாறே கொள்ளல் வேண்டும். உத்ஸவாதி விக்ரஹங்களில் ஸ்தாவரமாயினும், ஜங்கமமாயினும், இவ்வாறே அளவைக் கொள்ளல் வேண்டும்.

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
பிரதிமாவிதாநமெனும்
அறுபத்திநான்காவது அத்தியாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌉𑌤𑍍𑌤𑌮𑌦𑌶𑌤𑌾𑌲𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮

|| 𑌪𑌞𑍍𑌚𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ||

—— o ——

𑌉𑌤𑍍𑌤𑌮𑌂 (𑌤𑍁) 𑌦𑌶𑌤𑌾𑌲𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌹𑍁 (𑌤𑍁) 𑌯𑌾𑌵𑌦𑌾𑌪𑌾𑌦𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌤𑌾𑌵𑌨𑍍𑌮𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௧ ॥

𑌅𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌂 𑌶𑌤𑌂 𑌤𑌯𑍈𑌵(𑌤𑍇𑌨𑍈𑌵)𑌾𑌂𑌶𑍇𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌾𑌤𑍍𑌕𑍇𑌶𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௨ ॥

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌦𑍍(𑌦𑍍𑌰𑍁𑌕𑍍) 𑌹𑌨𑍁𑌵𑌂 𑌵𑍈𑌕𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌂𑌶𑌂 𑌮𑍁𑌖𑌾𑌯𑌤𑌮𑍍 ।
𑌗𑌲𑌾𑌂𑌶𑌂 𑌮𑍁𑌖𑌮𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌮𑍁𑌖𑌤𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ ௩ ॥

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
உத்தம தசதாளவிதானமெனும்
அறுபத்திஐந்தாவது அத்தியாயம்.

—— o ——

1-6. இப்பொழுது உத்தமதசதாள லக்ஷணமானது கூறப்படுகின்றது. இந்த உத்தம தசதாளத்தின் உயரமானது, உச்சித்தலை முதல் உள்ளங்கால் வரையிலுள்ள உயரமாகும். இந்த உயரத்தை நூற்று இருபத்திநான்கு பாகங்களாகச் செய்துகொண்டு, அந்த அம்சங்களிலேயே அங்கங்களின் அளவுகளைக் கல்பித்துக்கொள்ள வேண்டும். [இந்த அம்சங்களே அங்குலங்களாம்.] உஷ்ணீஷம் முதல் கேசாந்தம் வரை (உச்சிமண்டையிலிருந்து முன்பக்கத்தில் சிரத்தின் மயிர் இருக்கும் இடம் வரையில்) நான்கு அங்குலங்களாகும். கேசாந்தம் முதல் தாடை முடிவாக முகத்தினுயரம், பதிமூன்று அங்குலங்களாகும். களத்தின் (கழுத்தின்னடுவேயுள்ள முண்டின்)

गलाद्धृदयान्तस्तु उ(णो)दरं (नाभं) नाभिरीरितम् ।
नाभेर्मेढ्रसीमान्तं त्रयोदशांशकम् ॥ ४ ॥

मेढ्रान्ता(ज्जान्व)न्तमूरुदैर्घ्यं सप्तविंशाङ्गुलं भवेत् ।
जानुतुङ्गं युगाङ्गुल्यं जङ्घा चोरुसमायता ॥ ५ ॥

पादं जानुसमोत्तुङ्गं मुखायामं त्रिधा भवेत् ।
अक्षिसूत्रावसानं च तस्याधो(यस्तु) पुटान्तकम् ॥ ६ ॥
[केशान्तादक्षिसूत्रान्तं पुटान्तं हनुमीरितम् ॥]

உயரம், அரையங்குலமாம். கழுத்தினுயரம், நான்கு அங்குலங்களாகும். கழுத்தின் முடிவிலிருந்து இருதய முடிவு வரையும், அங்கிருந்து உதராந்தமான தொப்புள் வரையும், தொப்புளிலிருந்து மேட்ரமூலம் (ஆண்குறி முடிவு) வரையிலும் இவ்வகளின் ஒவ்வொன்றினுயரமும், பதின்மூன்றரை அங்குலங்களாகும். ஆண்குறி முடிவிலிருந்து துடையின் நீளம், இருபத்தியேழு அங்குலங்களாகும். முழங்காலின் உயரம், நான்கு அங்குலங்களாகும். கண்டைக்காலின் நீளம் துடையினளவேயாகும். கணுக்காலிற்குக் கீழே பாதத்தினுயரம் முழங்காலினுயரத்துக்குச் சமமாகும். (ஆக உச்சித்தலை முதல் பாதம் முடிய உயரம்; $4+13+\frac{1}{2}+4+13\frac{1}{2}+13\frac{1}{2}+13\frac{1}{2}+27+4+27+4=124$ அங்குலங்களாகும்.)

முகத்தின் நீளமானது; கேசாந்தத்திலிருந்து அக்ஷிஸூத்ராந்தம், அங்கிருந்து புடாந்தம், அங்கிருந்து ஹந்வந்தம் என்று, மூன்று பாகங்களுடையதாகும். (அக்ஷிஸூத்ரம் = நேத்திரமத்யம். புடம் = நாசியின் துவாரம். ஹநு = தாடை.)

ஹிக்காஸூத்ராததோ பாஹோர்தைர்க்யம் ஸப்தக்ருதாங்குலம் பவேத் ।
கூர்பரம் ச த்விமாத்ரம் ஸ்யாந்மணிபந்தாவஸாநகம் ॥ ௭ ॥

ப்ரகோஷ்டைகவிம்ஶாம்ஶம் தீர்கம் தலஸ்ய ததாயதம் ।
மத்யாங்குல்யக்ர பர்யந்தம் ஸார்த்தத்ரயோதஶாம்ஶகம் ॥ ௮ ॥

தந்மத்யமா(மா)ங்குல்யா(ல்யா)யாமம் ஸார்த்தம் ஷடங்குலம் பவேத் ।
ஶேஷம் பாணிஸ்த(ஹஸ்த)தலாயாமம் பாத(ம்) ஸார்த்தஶதாம்ஶகம் ॥ ௯ ॥

அங்குஷ்டாத்பார்ஷ்ணிபர்யந்தம் ஸப்தாதஶாங்குலம் (தஸ்ய பா)ங்குஷ்டாயதம் ।
ஸார்த்தவேதாங்குலம் ப்ரோக்தம் தத்விஸ்தாரம் ததர்த்தகம்
பவேத் ॥ ௰ ॥

தத்தர்த்தம் நகவிஸ்தாரம் தத்வாம்ஶோநாயதம் ததா ।
நகம் வ்ருத்தாயதம் சைவ பாதம் தத்ர ஸமம் ॥ ௰௧ ॥

7-15½. ஹிக்கா ஸூத்திரத்திலிருந்து (கழுத்திற்கும் தோளுக்குமுள்ள எலும்பிலிருந்து) கீழே பாஹுவின் தீர்க்கமானது (மேல்கையின் நீளம்) இருபத்தியேழு அங்குலங்களாகும், முழங்கையின் நீளம் இரண்டங்குலமாகும். மணிக்கட்டு முடிவான பிரகோஷ்டத்தின் (முன்கையின்) நீளம் இருபத்தியோரு அங்குலங்களாகும். நடுவிரலின் நுனிவரையில் உள்ளங்கையின் நீளம் பதின்மூன்றரை அங்குலங்களாகும். அந்த பதின்மூன்றரை அங்குலங்களில் நடுவிரலின் நீளம் ஆறரை அங்குலங்களாகும். அதுபோக (ஆறு அங்குலங்கள்) உள்ளங்கையின் நீளமாகும், பெருவிரல் முதல் குதிகால் வரையுள்ள பாதத்தின் நீளம் பதினேழு அங்குலங்கள். அதன் கட்டைவிரலின் நீளம் நாலரை அங்குலங்களாகும். அதனகலம் அதனிற் பாதியாகும். (இரண்டேகால் அங்குலம்.) அதன் நகத்தினகலம் அதனிற் பாதியாகும். அந்த நகத்தின் நீளம், அந்த அளவிற் காற்பங்கு குறைந்ததாகும்.

नखं तु वृत्तायामयोश्चैव शेषं तु तत्समं स(म)म् ।
[नखं वृत्तायतं चार्धं तत्पार्श्वं चाङ्गुलं भवेत् ॥
नखस्य पार्श्वयोश्चैव शेषं यत्तत्समं भवेत् ।]
पदाङ्गुष्ठायामवेदांशं तज्जं दीर्घकं भवेत् ॥ ௧௬ ॥

पादाङ्गुलं चतुर्यवं मध्यमं त्रियवाधिकम् (दीर्घकम्) ।
यवद्वयांशकं चैव नासिकायामिष्यते । ௧௭ ॥

अ(ना)मांशकद्वयं युक्तं कनिष्ठं च(दि)दीर्घकम् ।
पादाङ्गुष्ठांशकं मानं (मानं) पदाङ्गुलांशकं तथा ॥ ௧௮ ॥

पादादिकं नवार्धं च त्रिवार्धं तत् (तु) यथाक्रमम् ।
प्रादेशिन्यादि(प्रदेशिन्यः) कनिष्ठान्तं विस्तारं
तत्प्रमाणमिष्यते ॥ ௧௯ ॥

स्वस्वतारायविस्तारं नखं प्राग्वद्भवेत् ।

நகமானது, வட்டமாய் நீண்டிருக்கவேண்டும். அதன் முகம் அரை அங்குலம் சதைப்பற்றுள்ளதாயிருக்க வேண்டும். நகத்தின் பக்கங்களும் அவ்வாறே இருக்கவேண்டும். மிஞ்சிய பாகம் சமமாக இருக்கவேண்டும். கட்டைவிரலுக்கு அடுத்த விரலின் நீளம் நான்கு அங்குலம் மூன்று யவைகள். அதற்கு அடுத்த விரலின் நீளம் மூன்று அங்குலம் ஏழு யவைகள். அதற்கு அடுத்த விரலின் நீளம் மூன்று அங்குலம் ஒரு யவை. அதற்கு அடுத்த விரலின் நீளம் இரண்டு அங்குலம் நான்கு யவைகளாகும். இந்த விரல்களின் அகலம் முறையே, ஒன்பது ஏழரை ஏழு ஆறு யவைகளாகும். விரல்களின் நகங்கள் அந்த அந்த விரல்களின் அகலத்தில் சரிபாதி அளவு அகலமுள்ளவைகளாய், முன்பு கூறப்பட்டிருப்பது போலவே இருக்க வேண்டும்.

16-20. கணுக்கால் முண்டின் நடுவிலிருந்து உள்ளங்கால் நுனிவரையில் பததலத்தின் நீளம் எட்டு அங்

𑌗𑍁𑌲𑍍𑌫𑌾𑌕𑍍𑌷𑌿𑌂(𑌕𑍍𑌷𑌿)𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 (𑌨𑍍𑌤𑌾𑌤𑍍) 𑌤𑌤𑍍 𑌤𑌲𑌾𑌗𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂
𑌤𑌲𑌾𑌯𑌤𑌮𑍍 ॥ ௰௬ ॥

𑌷𑌡𑍍𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌮𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌂 𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌦𑍍𑌵𑌾 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌮𑌧𑍍𑌯𑌮𑌕𑌮𑍍 ।
𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌚𑌾𑌯𑌤𑌂(𑌷𑌡𑍍𑌯𑌵𑌂) 𑌤𑌾𑌰𑌂 𑌯𑌵𑍋𑌪𑍇𑌤𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௰௭ ॥

𑌪𑌕𑍍𑌷𑌾(𑌰𑍍𑌶𑍍𑌵𑌾)𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌕𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌪𑌤𑍍𑌰𑍍𑌯𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌕𑌮𑌾𑌯(𑌤)𑌤𑌮𑍍 ।
𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌮𑌧𑍍𑌯𑌂 𑌷𑌡𑌂𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌗𑍁𑌲𑍍𑌫𑌾𑌧𑌸𑍍𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇 ॥ ௰௮ ॥

𑌤𑌲𑌮𑌧𑍍𑌯𑌮𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌷𑌡𑌂𑌶𑌂 𑌷𑌡𑍍𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌮𑍍 ।
𑌅𑌗𑍍𑌰𑌤𑌾𑌰𑌂 𑌷𑌡𑌂𑌶𑌂 𑌤𑌤𑍍 𑌤𑌦𑍍𑌘𑌨𑌂 𑌚 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑌮𑍍 ॥ ௰௯ ॥

𑌪𑌾𑌦𑌮𑌧𑍍𑌯𑍋𑌦𑌯𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌰𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௰ ॥

குலம் ஆறு யவைகளாகும். அந்த முண்டு நடுவிலிருந்து குதிகால் அடி வரையில் நீளம் நான்கு அங்குலங்கள் (ஆறு யவைகளும்) ஆகும். அதன் அகலம் ஐந்து அங்குலங்களும் ஒரு யவையுமாகும். இரு பக்கங்களும் (பின் பக்கத்தில்) குதிகால் வரையில் நீளம் (அகலம்) மூன்றரை அங்குலமாகும். கணுக்காலுக்குக் கீழே குதிகாலின் அகலம் ஆறு அங்குலங்களாகும். உள்ளங்கால் மத்யத்தினகலம் ஆறு அங்குலம் ஆறு யவைகளாகும். பாதத்தின் முன்பக்கத்தின் அகலம் ஆறு அங்குலங்களாகும். (?) அதன் கனம் மூன்று அங்குலங்களாகும். பாதமத்யத்தினுயரம் நாலரையங்குலங்களெனக் கொண்டாடப்படுகின்றது. விரல்கள் இரண்டு கணுக்களும் மூன்று கணுக்களுமுடையவைகளாகும். (பெருவிரலுக்கு இரண்டு கணுக்கள் மற்ற விரல்களுக்கு மூன்று கணுக்கள் எனப் பொருள் கொள்ளவேண்டும்.) மற்றவைகளை யுக்தியுடனமைக்க வேண்டும்.

ஸபாதபஞ்சாம்ஶகம் ச ஜங்காக்ரமிதி ஸ்ம்ருதம் ।
ஸபாதவேதாம்ஶகம் ச நாலி(நல)கா விஸ்த்ருதம் பவேத் ॥ ௨௧ ॥

ஜங்காமத்யே ச (த்ய)விஸ்தாரம் ஸார்தஷட்காங்கு(ங்குலீமிதம்)
ஸமாநயேத் ।

ஜங்காமூலஸ்ய விஸ்தாரம் வஸ்வங்குலம் ப்ரஶஸ்யதே ॥ ௨௨ ॥

நவாம்ஶகம் ப்ரகர்த்தவ்யம் ஜாநுநோர்விஸ்தாரகம் ।
ஊருமத்யவிஸ்தாரம் து த்வாதஶாம்ஶகமீரிதம் ॥ ௨௩ ॥

ஸார்தத்ரயோதஶாம்ஶம் ஸ்யாதூருமூலவிஸ்தாரகம் ।
விம்ஶாம்ஶம் ச கடீதாரமத்யே ஶ்ரோணிவிஸ்தாரகம் ॥ ௨௪ ॥

ஸார்தாஷ்டாதஶாம்ஶகம் மத்யோதரவிஸ்தாரகம் ।
ஷோடஶாம்ஶம் பவேத்தஸ்மாத் ஹ்ருதயாவதி தாரகம் ॥ ௨௫ ॥

ஸார்தாஷ்டநவாம்ஶம் ஸ்யாத் வக்ஷஃஸ்தலவிஸ்தாரகம் ।

21–23½. கணுக்காலின் அகலம் ஐந்தேகால் அங்குலமாகும். நளகை (கண்டைக்காலின் நுனி, பாதஸரம் முதலியவைகள் அணியுமிடம்) யின் விஸ்தாரம் நாலேகால் அங்குலமாகும். கண்டைக்கால் மத்தியினகலம் ஆறரை அங்குலமாகும். கண்டைக்காலடியினகலம் எட்டு அங்குலங்களாம். முழங்காலினகலம் ஒன்பது அங்குலங்களாகும். நடுத்துடையினகலம் பன்னிரண்டு அங்குலங்களாம். அடித்துடையினகலம் பதின்மூன்று அங்குலங்களாகும்.

24–26¾. இடுப்பின் அகலம் இருபது அங்குலங்களாகும். அதற்குமேலே சுரோணியின் (அடிவயிற்றின்) அகலம் பதினெட்டரை அங்குலங்களாகும். நடுவயிற்றின் அகலம் பதினாறு அங்குலங்களாகும். அதற்குமேலே இருதயத்தினகலம் பதினெட்டரை அங்குலங்களாகும். மார்பினகலம் இருபத்தியொரு அங்குலங்களாகும். அதற்கு

த்வாவிம்ஶாம்ஶகம் ப்ரோக்தம் கக்ஷயோரந்தராம்ஶகம் || ௨௬ ||

சத்வாரிம்ஶா(ர்த)கம் ப்ரோக்தம் சத்வாரிம்ஶாயதாந்து ச |
பாஹ்வாயதவிஸ்தாரம் பாஹ்வந்தரவிஶாலகம் || ௨௭ ||

நாஸாம்ஶம் ப்ரூவிஸ்தாரம் தத்ஸமம் தச்ச (து) விதீயதே |
ஊர்த்வவிஸ்தாரம் நாஸாம்ஶம் வக்த்ரஸ்தாநம் ப்ரதேஶகே || ௨௮ ||

கேஶாந்தோபரி மாநே (ஸாமே) து ஶிரஸ்தாரம் தஶாம்ஶகம் |
கேஶாந்தாந்நேத்ராந்தம் த்விபாகம் து விபாஜிதே || ௨௯ ||

ததேகாம்ஶம் லலாடோச்சம் ஶேஷம் த்ருஷ்டிப்ரதேஶகம் |
த்ருஷ்டிலலாடயோர்மத்யே ப்ரூஸ்தாநம் ப்ரகல்பயேத் || ௩௦ ||

ப்ரூவாயாமம் ஶதாம்ஶகம் ப்ருதாராயதாந்து ச |
தத்பூர்வம் மத்யதாரம் வ்யாஸேந ப்ராந்தம் க்ஷயம் க்ரமாத் || ௩௧ ||

மேலே இரு முக்கட்டுகளின் நடுப்பிரதேசத்தினகலம் இருபத்திரண்டு அங்குலங்களாகும். அதற்குமேலே பாஹுக்களின் சுற்றளவுள்பட்ட அகலம் நாற்பதரை அங்குலங்களாகும்.

27–33. புஜமூலத்தினகலம் ஒன்பது அங்குலங்களாகும். கழுத்தினகலமும் அதுவேயாம். கழுத்திற்கு மேலே முன்பக்கத்தில் முகத்தின் விஸ்தாரம் பன்னிரண்டு அங்குலங்களாகும். கேசாந்தத்திற்குமேலே சிரஸ்ஸின் விஸ்தாரம் பத்து அங்குலங்களாகும். கேசாந்தத்திலிருந்து நேத்ராந்தம் வரையிலுள்ள அளவை இரண்டு பாகங்களாகச் செய்துகொண்டு அவைகளில் ஒரு பாகத்தை நெற்றியின் உயரமாகவும், மற்றொரு பாகத்தை திருஷ்டி பிரதேசமாகவும் (கண்ணைச் சார்ந்த இடமாகவும்) கல்பித்துக்கொள்ளவேண்டும். கண் நெற்றி இவ்விரண்டின் நடுவில் புருவத்தின் இடத்தை அமைத்துக்கொள்ள

𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌮𑌾𑌯𑌾𑌮𑌂 (𑌮𑌂) 𑌪𑌾𑌦𑌾𑌂𑌶𑌂 𑌷𑌡𑍍𑌯𑌵𑌾(𑌧𑌿𑌕𑌂)𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑌂 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍(𑌤𑍍𑌰)
𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ॥ ௩௨ ॥

𑌨𑍇𑌤𑍍𑌰𑌯𑍋𑌰𑌨𑍍𑌤𑌰𑌂 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍 (𑌤𑍍𑌰) 𑌪𑍍𑌰𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑍍𑌰𑌿𑌂(𑌤𑍍𑌰𑍍𑌯𑌂)𑌦𑍍𑌵𑌿𑌪𑌞𑍍𑌚𑌯𑌵𑌮𑍇𑌵 𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍂𑌲𑌾𑌗𑍍𑌰-
𑌪𑌕𑍍𑌷𑍍𑌮𑌯𑍋𑌃 ॥ ௩௩ ॥

[𑌤𑍍𑌰𑌿𑌦𑍍𑌵𑌿𑌪𑌞𑍍𑌚 𑌯𑌵𑌾𑌯𑌾𑌮𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑍂𑌲𑌾𑌗𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌨𑌾𑌮𑍍 ॥]

𑌶𑍇𑌷𑌮𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌕𑍍𑌷𑌿 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍇𑌕𑌾𑌂𑌶𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌤𑌚𑍍𑌛𑍁𑌕𑍍𑌲𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 ॥ ௩௪ ॥

𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌣𑍍𑌡𑌲𑌸𑌂𑌕𑌾𑌶𑌂 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌮𑌣𑍍𑌡𑌲𑌕𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ॥ ௩௫ ॥

வேண்டும். புருவத்தின் நீளம் ஐந்து அங்குலங்களாகும். புருவத்தினகலம் அரை அங்குலமாகும். அந்த அரை அங்குலமானது புருவத்தின் நடுபாகத்தினகலமாகும். புருவமானது அடியிலிருந்து நுனி வரையிலும் முறையே சிறுத்திருக்கவேண்டும். இரு புருவங்களின் நடுவின் நீளம் ஆறு யவைகள் அதிகமான காலங்குலமாகும். கண்ணின் நீளமானது மூன்று அங்குலங்களாம். அதன் அகலம் ஒரு அங்குலமாகும். இரண்டு கண்களுக்கும் மத்யபாகத்தின் அளவானது இரண்டங்குலங்களெனக் கூறப்படுகின்றது. (நேத்திரத்தின் அடி நுனி இமை இவைகளின் நீளம் முறையே, மூன்று இரண்டு ஐந்து யவைகளாகும்.)

34–37. அது நீங்கியது, கண்ணின் உள்பக்கமாகும். கண்ணின் உள்பிரதேசத்தை மூன்று பாகங்களாகச் செய்துகொள்ளவேண்டும். அவைகளில் (மத்தியிலுள்ள)

नेत्रत्रये तथा कृष्णज्योतिर्भागैकभागकम् ।
[कृष्णमध्ये तु ज्योतिरेकांशकम् ।]
दृष्टिर्मध्य(कं यवका)मेवोक्तं ज्योतिर्मध्ये तु यूकवत् ॥ ३६ ॥

ऊर्ध्वाधोवर्त्मविस्तारं द्व्यङ्गुलं त्रि(द्वि)मात्रकम् ।
मत्स्याकाराक्षिमात्रं स्याद् भ्रुवः कोदण्डवत्स्थिताः ॥ ३७ ॥
[मत्स्याकारं भवेदक्षि भ्रुवः स्युः कोदण्डवत्स्थिताः ॥]

श्रोत्रायामं तु वेदांशं नालायामोऽर्धाधिकम् ।
भ्रूसमं(म)स्तकं श्रोत्रमूलं चैवं प्रकल्पयेत् ॥ ३८ ॥

पिप्पल्यायामविस्तारं (एकांशं) तदर्धं विस्तृतं भवेत् ।
नालायामं त्रिमात्रं स्यात्तदर्धं श्रोत्र(विस्तृतम्)
वक्ष्यते ॥ ३९ ॥

ஒரு பாகம் கருவிழியாகும். மற்ற இரண்டு பாகங்கள் (கருவிழியின் இருபக்கங்களிலுமுள்ள) வெண்விழியாகும். இந்தக் கருவிழியையே ஜ்யோதிர்மண்டலமாகக் கூறுகின்றனர் அறிஞர் கருவிழியின் நடுவே ஜ்யோதிர்மண்டலத்தை அறிவார். கருவிழியின் நடுவில் ஒளியின் முக்கிய ஸ்தானமானது, ஒரு யவை அளவுள்ளதாகும். ஜ்யோதிர் மண்டலத்திற்குள் பார்வை சக்தியானது ஒரு யூகையின் அளவுள்ளதாகும். மேலிமை கீழிமைகளின் விஸ்தாரமானது, இரண்டரை அங்குலமும் இரண்டங்குலமுமாகும். கண்ணானது மீனின் வடிவம் போன்ற வடிவம் கொண்டதாகவும் புருவமானது வில்லின் வடிவம் போன்ற வடிவம் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

38–40. காதின் நீளமானது நான்கு அங்குலங்களாகும். கர்ணநாளத்தின் நீளம் அரை அங்குலம் அதிகமாகும். காதின் நுனியைப் புருவமட்டமாகக் கல்பிக்க வேண்டும். கர்ணபிப்பலியின் (சிறு காது அல்லது குறுட்டுக்காது) நீளமானது, ஒரு அங்குலமாகும், அதனகலம்

ஶ்ரோத்ரதாரம் த்வ்யர்தாம்ஶம் ஶேஷமூஹ்யம் விசக்ஷணை: ।
நேத்ராந்தாத்கர்ணஸீமாந்தரம் ஸப்தமாத்ரகம் ॥ ௪௦ ॥

ஸார்தாம்ஶம் நாஸாவிஸ்தாரமக்ரமேகாங்குலம் பவேத் ।
புடதாரார்தமாத்ரம் ஸ்யாத் தீர்கம் ஷட்யவம் பவேத் ॥ ௪௧ ॥

ஸுஷிரம் நாஸாரந்த்ரம் ஸ்யாத்தாரம் பஞ்சயவம் பவேத் ।
புஷ்கரோத்ஸேதமம்ஶம் ஸ்யாத்விஸ்தாரம் தத்த்வயம் பவேத் ॥ ௪௨ ॥

ஸைகாம்ஶம் த்வியவாதிக்ய (த்வியவாதிக்யம்) நாஸாமத்யம் து விஸ்த்ருதம் ।
ததர்தம் மூலவிஸ்தாரம் துங்கமேவம் யதாக்ரமம் ॥ ௪௩ ॥

கோஜிமூலம் ததக்ராங்கம் நாஸாதுங்கம் ஸமாம்ஶகம் ।
ப்ருஷ்டம் ஸ்யாததோ கோஜி தீர்கம் த்விதாயவம் பவேத் ॥ ௪௪ ॥

அரை அங்குலமாகும். கர்ணநாளத்தின் மத்யமானது, மூன்று அங்குலங்களாகும். காதின் கனமானது, அதில் சரிபாதி அளவாகும். காதின் அகலமானது இரண்டரை அங்குலங்களாகும். மற்றவைகளை ஸமர்த்தர்கள் ஊகித்துக்கொள்ளவேண்டும். நேத்திராந்தத்திலிருந்து காது வரையில் ஒதுக்கம், ஏழு அங்குலங்களாகும்.

41–45. நாஸிகையின் அகலமானது இரண்டரை அங்குலமாகும். அதன் நுனியானது ஒரு அங்குலமாகும். புடத்தின் அகலம் அரை அங்குலமாகும். அதன் நீளமானது ஆறு யவைகளாகும், நாசியின் துவாரமானது ஒன்றரை அங்குலமாகும். அதன் அகலமானது ஐந்து யவைகளாகும். புஷ்கரத்தின் (மூக்குத்தண்டின் உயரமானது ஒரு அங்குலமாகும். அதன் விஸ்தாரம் அதைப் போல் இரண்டு மடங்காகும். நாசி மத்யத்தின் விஸ்தாரமானது, ஒரு அங்குலம் இரண்டு யவைகளாகும். நாசி மூலத்தின் விஸ்தாரமானது அதில் சரிபாதி ஆகும். உயரம் முறைப்படி இவ்விதமேயாம். கோஜியின் அடிப்

तस्) निम्नन्तु यवं चैव विस्तारं त्रियवं तथा ।
तस्मात्तदोत्तरा वाटी यवमेवं विधीयते ॥ ४५ ॥

तस्याधस्तादोष्ठं च (तस्) तारं षड्यवं भवेत् ।
स्वार्धक्वा (स्वार्धकं च) यवं चैव तथा पाया(धाय)र-
याङ्कं [सर्वान्तेच] ॥ ४६ ॥
[स्वस्थाङ्गं साधयवयवास्त्री च नं भवेत् ॥]

अधरोष्ठं शिवांशं स्याद्विस्तारं चोक्तवत् ।
[अधरोष्ठस्य विस्तारं शिवांशं समुन्नतम् ।]
स्वस्यायामं चतुर्मात्रं स्वाङ्गं तु कारयेत् ॥ ४७ ॥

பக்கமானது நாசியின் நுனிவரையிலுள்ளதாகும். (கோஜி மேலுதட்டில் மூக்கின் கீழேயிருக்கும் தண்டைச்சார்ந்த சதை) இதனடியிலிருந்து நுனிவரை நாசியின் உயரம் இரண்டரை அங்குலங்களாகும். புஷ்கரமென்பது கோஜிக்குக் கீழேயுள்ளது. (இது மேலுதட்டில் நடுவிலுள்ள மூக்கைச்சார்ந்த பள்ளம்.) இதன் நீளம் நான்கு யவைகளாகும். இதன் பள்ளம் ஒரு யவை அளவாகும். இதனகலம் மூன்று யவைகளாகும். இதின் நின்றும் மேலுதட்டின் வரம்பு ஒரு யவையாகும் என்றும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

46–48. அதற்குக் கீழே மேலுதடு. அதனகலம் ஆறு யவைகளாம். கீழுதட்டினுடைய வரம்பின் கனமானது ஒன்றரை யவையாகும். இது கடைவாய் முடிவு வரையுள்ளதாகும். கீழுதட்டின் அகலமானது ஒரு அங்குலமாகும். இங்கு அகலமென்பது சமமான உயரமாகும். வாயின் நீளம் நான்கு அங்குலங்கள். இதனைக் கடைவாய் முடிவுவரைக் கல்பிக்கவேண்டும். கீழுதட்டின் நீளமானது மூன்றரை அங்குலங்களாம், அதன் வடிவ

𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 (𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂) 𑌭𑌾𑌗𑌾𑌰𑍍𑌧(𑌭𑌾𑌗𑌾𑌰𑍍𑌧)𑌮𑌾𑌨𑌯𑌾𑌰𑍍𑌧𑌂 𑌮𑌰𑍍𑌧𑍇𑌨𑍍𑌦𑍁𑌵𑌦𑌾𑌕𑍃𑌤𑌿 ।
𑌤𑍍𑌰𑌿𑌵𑌕𑍍𑌰𑌂 (𑌵𑌕𑍍𑌰𑌾) 𑌚𑍋𑌤𑍍𑌤𑌰𑌾 𑌪𑌾𑌲𑍀 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌰𑌕𑍍𑌤𑌕𑌮𑍍 ॥௪௮॥

𑌅𑌯𑌂 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌿 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 𑌚𑌾𑌯𑌤𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 । (?)
𑌅𑌧𑌰𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌦𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌦𑌨𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௪௯ ॥

𑌅𑌧𑌰𑍋𑌷𑍍𑌠𑌾(𑌷𑍍𑌠𑌾)𑌧𑍋𑌦𑍇𑌶𑍇 𑌚𑌿𑌬𑍁𑌕𑌂 𑌚 𑌏𑌕𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌶𑍇𑌷𑌂 𑌯𑌨𑍍𑌮𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌕𑍇 ॥ ௫௦ ॥

𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾(𑌵𑌾𑌪𑌿) 𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌕𑌰𑍍𑌣𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌂 𑌅𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௫௧ ॥

𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌨𑌿𑌮𑍍𑌨𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌏𑌕𑌾𑌯𑌤𑌮𑍍 ।
𑌹𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌮𑌾𑌯𑌤𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌰𑍍𑌧𑍋𑌨𑍍𑌨𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௫௨ ॥

மானது அரைச் சந்திரனுடையது போன்றதாகும். மேலுதட்டின் வரம்பானது, மூன்று நெளிவு கொண்டதாகும். இரண்டு வரம்புகளின் உட்புறம் செந்நிறம் கொண்டது.

49–50, கீழ்வரிசையிலும் மேல்வரிசையிலுமுள்ள பற்கள் முப்பத்தி இரண்டாகும். கீழுதட்டிற்குக் கீழே சிபுகமானது ஒரு அங்குலமாகும். (சிபுகம் = முகவாய்க் கட்டை) எஞ்சியதான மற்றைய உயரம் அப்பிரதேசத்தில் ஹந்வந்தமாகும். (தாடையைச் சார்ந்ததாகும்.)

51–53. ஹந்வந்தத்தின் விஸ்தாரமானது மூன்றரை அங்குலங்களாகும். ஹந்வந்தமென்பது கர்ணபந்தம் முடிவாகப் பத்து அங்குலங்கள் ஒதுக்கமுடையது. ஹந்வந்தம் இரண்டிற்கும் இடையேயுள்ள பள்ளத்தினுயரம் ஓரங்குலமாகும். ஹந்வந்தமானது, நீண்ட வட்ட வடிவமாகவும். உயரத்தில் பாதியகலமுடையதாகவும் ஆகும். ஹந்வந்தத்திலிருந்து கோஜியைப் போன்றுமுள்ள இட

𑌷𑌡𑍍𑌯𑌵𑌾𑌧𑌿𑌕𑌲𑌾𑌂𑌶𑌂 𑌚 𑌹𑌸𑍍𑌤𑌾𑌗𑍍𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌤𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌹𑌸𑍍𑌤𑌂 (𑌷𑍍𑌠𑌂) 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌂 𑌤𑌤𑍍 𑌸𑌪𑌾𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌕𑌮𑍍 || ௫௩ ||

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌮𑌾𑌨𑌾𑌂𑌶𑌂 𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌾𑌰𑍍𑌧𑌯𑌾𑌂𑌶𑌂 𑌗𑌲𑌾𑌂𑌶𑌂 (𑌭𑌵𑍇𑌤𑍍)
𑌬𑌾𑌹𑍍𑌯𑌕𑍇 |
𑌗𑌲𑌂 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌮𑌾𑌨𑌕𑌮𑍍 || ௫௪ ||

𑌕𑌣𑍍𑌠𑌂 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌚 𑌚𑌾𑌤𑍍𑌯𑌂 𑌵𑌾𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑌿𑌯𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌸𑌂𑌹𑌾𑌰𑌂 𑌚 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑍍𑌯𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌦𑌾𑌷𑍍𑌟𑌿𑌰𑍇𑌵𑌂 𑌪𑌿𑌵𑌸𑍍𑌯 𑌚 || ௫௫ ||

𑌗𑌵𑌤𑍍𑌯𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌷𑍍𑌟𑍀𑌨𑌾𑌂 𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌵𑌾 𑌪𑌿𑌬𑍍𑌬𑌿𑌵𑌿𑌤𑍍𑌤𑌕𑌃 |
𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑍋𑌤 𑌯𑌥𑌾 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌮𑌾𑌨𑌂 𑌨 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 || ௫௬ ||

மானது ஒண்ணேகால் அங்குலமாகும். ஹந்வந்தத்தின் மத்தியில் அடிப்புறத்தில் அது களமெனப்படும், அந்த களமானது இரண்டு அங்குலங்களாம்.

यथा युक्त्या तथा वक्ष्ये कूर्परात्तु तदूर्ध्वके ।
द्वियवाधिकमष्टांशं बाहुमध्यविस्तृतम् ॥ ५७ ॥

कूर्परं तद्विस्तारं स्यात् सप्तमात्रं प्रशस्यते ।
प्रकोष्ठमध्यविस्तारं यवोपेतशरांशकम् ॥ ५८ ॥

मणिबन्धविस्तारं तु सार्धत्र्यङ्गुलं भवेत् ।
तत्तले मूलविस्तारं सप्तमात्रं तु कारयेत् ॥ ५९ ॥

तन्मध्यविस्तारे(रं) तु सार्धषण्मात्रकं भवेत् ।
तदग्रे तारमर्धाधिक्यं पञ्चाङ्गुलं विधीयते ॥ ६० ॥
[तदग्रे तारमधिकार्धं पञ्चाङ्गुलं भवेत् ॥]

बहिः सार्धषडङ्गुल्यं मणिबन्धात् तलायतम् ।
तदग्रात्तु चाङ्गुलीनां च दीर्घं युक्त्या बहिर्भवेत् ॥ ६१ ॥

57-60. பாஹுமத்யத்தின் விஸ்தாரமானது, எட்டு அங்குலங்களும் இரண்டு யவைகளுமாகும். (பாஹு - மேல்கை) கூர்ப்பரத்தின் அகலமானது, ஏழு அங்குலங்களாகும். (கூர்ப்பரம் - முழங்கை.) பிரகோஷ்டத்தின் மத்யவிஸ்தாரமானது, ஐந்து அங்குலங்களும் ஒரு யவையுமாகும். (பிரகோஷ்டம் - முன்கை.) மணிக்கட்டின் அகலமானது, மூன்றரை அங்குலங்களாகும். கைத்தலத்தின் மூலவிஸ்தாரமானது, ஏழு அங்குலங்களாகும். உள்ளங்கை நடுவின் அகலமானது, ஆறரை அங்குலங்களாகும். அதன் நுனியினகலமானது, ஐந்தரை அங்குலங்களாகும்.

61-67. மணிக்கட்டிலிருந்து வெளிப்புறத்தில் தலத்தின் நீளம், (புறங்கையின் நீளம்) ஆறரை அங்குலங்களாகும். அதனின்றும் வெளியில், விரல்களின் நீளம், யுக்தியினால் ஏற்படவேண்டும். முன்பு கூறப்பட்ட விரல்களின் யாதாமொரு நீளமுண்டோ, அதுவே அவைகளின்

𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌂𑌗𑍁𑌲𑍀𑌨𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑌦𑌾𑌯𑌤𑌮𑍍 |
[𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌯𑌦𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌮𑌂𑌗𑍁𑌲𑍀𑌨𑌾𑌂 𑌤𑌦𑌾𑌯𑌤𑌮𑍍 |]
𑌸𑌪𑌾𑌦𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌂𑌶𑌂 𑌵𑌾𑌨𑌾𑌮𑌿𑌕𑌾𑌂𑌗𑍁𑌲𑌦𑍀𑌰𑍍𑌘𑌕𑌮𑍍 || ௯௨ ||

𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌿𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌂 𑌭𑍂𑌤𑌾𑌂𑌶𑌂 𑌸𑌵𑍇𑌦𑌾𑌂𑌗𑍁𑌷𑍍𑌠𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌕𑌮𑍍 |
𑌅𑌂𑌗𑍁𑌷𑍍𑌠𑌮𑍂𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑌪𑌾𑌦𑌾𑌂𑌗𑍁𑌲𑌮𑍇𑌵 𑌵𑌾 || ௯௩ ||

𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌨𑌾𑌮𑌿𑌮𑍂𑌲𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 |
𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂𑌗𑍁𑌲𑌿𑌮𑍂𑌲𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 (𑌯𑌵𑌾𑌂)𑌶𑌕𑌮𑍍 || ௯௪ ||

𑌷𑌡𑍍𑌯𑌵𑌂 𑌤𑍁 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑌕𑍇 |
𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌤𑌦𑍇𑌕𑌾𑌂𑌶𑌵𑌿𑌹𑍀𑌨𑌕𑌮𑍍 || ௯௫ ||

𑌶𑍇𑌷𑌾𑌂𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌵𑌿𑌭𑌜𑍇𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 (𑌤𑍁 𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌂)𑌶𑌕𑌮𑍍 |
𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌨𑌖𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌤𑍂𑌭𑌯𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌃 || ௯௬ ||

ஆயதமாகும். மோதிரவிரலின் நீளமானது, நாலேகாலங்குலமாகும். சுட்டுவிரலின் நீளமானது, ஐந்து அங்குலங்களாகும். சுண்டுவிரல் கட்டைவிரல்களின் நீளம், நான்கு அங்குலங்களாகும். கட்டைவிரலின் அடியினகலமானது ஒன்றேகாலங்குலமாகும். சுட்டுவிரல் மோதிரவிரல்களின் அடியினகலம், ஓரங்குலமுடையதாகும். நடுவிரலினடியினகலம், ஓரங்குலமும் மூன்று யவைகளுமாகும். சுண்டுவிரலின் அடியினகலமானது, ஆறு யவைகளாகும். அந்த அந்த விரல்களினடியினகலத்தை இரண்டு மடங்கு, செய்துகொண்டுவந்ததில், நாலிலொரு பங்கை நீக்கி, எஞ்சிய மூன்று பாகங்களை, அந்த அந்த விரல்களின் நுனியினகலமாகக் கொள்ளவேண்டும். விரல் நுனிக்குக் கூறப்பட்ட இந்த அளவில், இரண்டு பாகங்களை நகங்களின் விஸ்தாரமாகவும், ஒரு பாகத்தை அவைகளினிரு பக்கங்களின் விஸ்தாரமாகவும் கொள்ளவேண்டும். நகத்திற்

𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌂(𑌷𑍍𑌠𑍇) 𑌨𑌖𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌤𑌤𑍍𑌪𑌾𑌦𑌾𑌧𑌿𑌕𑌦𑍀𑌰𑍍𑌘𑌕𑌮𑍍 ।
𑌨𑌖𑌾𑌯𑌾𑌮𑌮𑌿𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌹𑍁𑌃 𑌦𑍍𑌵𑌿𑌯𑌵𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ॥ ௬௭ ॥

𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌨𑌾𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
[𑌤𑌰𑍍𑌜𑌨𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।]
𑌪𑌰𑍍𑌵𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 𑌤𑌦𑍇𑌕𑌾𑌂𑌶𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ॥ ௬௮ ॥
[𑌪𑌰𑍍𑌵𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌤𑌦𑍇𑌕𑌾𑌂𑌶𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑍀𑌨𑌾𑌂 𑌤𑍍𑌰𑌿𑌪𑌰𑍍𑌵𑌤𑌾 ॥]

𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑍇(𑌷𑍍𑌠𑌂) 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌪𑌰𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑌦𑌾𑌯𑌾𑌮𑍇 𑌦𑍍𑌵𑌿𑌧𑌾𑌕𑍃𑌤𑌃 ।
𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌮𑍂𑌲𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌅𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌮𑍂𑌲𑌕𑌾𑌵𑌧𑍀 ॥ ௬௯ ॥
[𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌮𑍂𑌲𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌾𑌦𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌤𑌨𑍍𑌮𑍂𑌲𑌕𑌾𑌵𑌧𑌿 ॥]

𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌦𑍀𑌰𑍍𑌘𑌂(𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂) 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌶𑌂 (𑌤𑍁) 𑌤𑌦𑍍𑌘𑌨𑍇 ।
𑌶𑍇𑌷𑌂 𑌤𑌨𑍍𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌂 𑌦𑍀𑌰𑍍𑌘𑌂(𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂) 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌦𑍍𑌵𑌿 (𑌯𑍁𑌕𑍍) 𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௭௰ ॥

குக் கூறப்பட்ட அகலத்தில், நான்கிலொரு பங்கு அதிகங் கொண்டதாக, நகத்தின் நீளம் இருக்கவேண்டும். சதைப் பற்றைத் தாண்டிய நகத்தின் நுனியிரண்டு யவைகளாம்.

68–73. சுட்டுவிரல் முதலிய விரல்களின் நீளம், மூன்று அங்குலங்களுடையதாம். ஒரு கணுவின் நீளம் ஓர் அங்குலமாகும். ஒரு விரலுக்கு மூன்று கணுக்கள், கட்டைவிரல் மட்டிலும், இரண்டு கணுக்களுடையது. அதனல் அதன் நீளத்தை இரு பாகங்களாக்கிக் கொள்ள வேண்டும். சுட்டுவிரலினடிப்புறத்திலிருந்து பக்கத்தில், கட்டைவிரலுக்கு மேலேயுள்ள சுட்டுவிரலினடிமுடியவுள்ள, மத்யபாகத்தின் நீளவொதுக்கம்; மூன்று அங்குலங்களாம். அதன் கனம், இரண்டு அங்குலங்களாம். அவ்வொதுக்க பாகத்திலிருந்து மணிக்கட்டின் முடிவுவரையுள்ள எஞ்சிய பாகமானது, நீளத்தில் நாலரை அங்குல

தஸ்யா(ஶ)ம் ஶ்ருஷ்டாஶயோர்மத்யே மானம்(ஞ்ச) த்ர்யம் ஶோபனம்
ஸந்நதம் ।
ததிஸாரம் ஶோணாம்ஶம் ஸ்யாத் ப்ருஷ்டே தாரம் யவாம்ஶகம் ॥எக॥

தத்வநம் ச த்ரியம் (த்ர்யாம்)ஶம் ஸ்யாத் ஶ்ருஞ்ச தத் த்வியவாம்ஶகம் ।
அங்குஷ்டம் த்விமாத்ரம் ஸ்யாத் த்விஸாரம் நிம்நயவேத் ॥ எஉ ॥
[அங்குஷ்டம் த்ரிமாத்ரம் ஸ்யாந்நிம்நம் தத்ர சதுர்யவேத் ॥]

சக்ரம் த்ரிஶூலவஜ்ரம் ச பத்மம் சாக்ஷமாலயா ।
ஶேஷம் யுக்த்யா ததா ஹஸ்தே ப்ரதேஶம் கல்பயேத் புந: ॥எங॥

ஶிர: ப்ருஷ்டே விஸாரம் ஸ்யாத் நவமாத்ரம் ப்ரகீர்த்திதம் ।
கர்ணாந்தம்(ந்தாத்) நாஸிகாக்ராந்தம் மானம் த்ரயோ-
தஶாம்ஶகம் ॥ எச ॥

ஹிக்காஸூத்ராவதி ஸ்கந்தம்(ந்த) ஶ்ருங்கஸந்தி(:)யவாம்ஶகம்(:) ।
ஶ்ருங்கஸந்த்யா(ந்தே:) கக்ஷாந்தம் ஷண்மாத்ரம் ப்ரகீர்த்திதம் ॥ எரு ॥

முடையதாகும். இந்த பாகமானது, கட்டைவிரலினடிப் புறத்தில் இரண்டரை அங்குல கனமுடையதாம். அதனகலம் மூன்றங்குலமுடையதாம். புறங்கையினகலம் நான்கு அங்குலங்களாம். அதன் கனம் மூன்றங்குலங்களாம். இப்புறங்கையின் நுனிபாகத்தின் கனம், இரண்டு யவை கூடிய ஓரங்குலமாகும். உள்ளங்கை மூன்றங்குல முடையதாகும். ஆங்குள்ள பள்ளம் நான்கு யவைகளாகும். எஞ்சியப் பிரதேசங்களைக் கரத்தில் யுக்தியுடன் கல்பிக்கவேண்டும். கரத்தினில் மெல்லிய ரேகையினுல் சங்கம் சக்கரம் பத்மம் முக்கவரி சூலம் முதலியவற்றையும் கல்பிக்கவேண்டும்.

74-78. தலையின் பின்புறத்தில் அகலம், ஒன்பது அங்குலங்களாகும். காதின் முடிவாகிய பின்புறமிருந்து மூக்கின் நுனி முடிய பதின்மூன்றரை அங்குலங்களாகும்,

तस्मात्तु कटिसूत्रान्तं सप्तविंशाङ्गुलं भवेत् ।
तस्मात्तु पायुसीमान्तं सार्धत्रयोदशाङ्गुलम् ॥ ७६ ॥

पृष्ठे तत्रैकविंशत्यंशं तदङ्गुलविस्तृतम् ।
सप्तदशाङ्गुलं पृ(ष्ठात्)श्रोणिदेशे विशालकम् ॥ ७७ ॥

तदूर्ध्वे मध्यकायं तु विशालं श्रोणिविशालकम् ।
एकविंशाङ्गुलं चैव तदूर्ध्वे च स्तनावधि ॥ ७८ ॥

सप्तविंशाङ्गुलं चैव कक्षयोरन्तरं स्मृतम् ।
वंशरन्ध्रं शिवांशं स्यात् कटिमध्यान्तरायतम् ॥ ७९ ॥

विस्तारं तु शिरान्तं स्यादर्धार्धं तत्रैव कारयेत् ।
तस्मात्तु कुक्षि(क्ष्यो)र्वसानं स्याद्बाह्वंशं षट्कायतम् ॥ ८० ॥

ஹிக்காவெனும் கண்டபிரதேசத்தின் சூத்திரத்திலிருந்து. தோள் கழுத்துக்களின் சந்தி நான்கு அங்குலங்களாம், கழுத்தின் சந்தியிலிருந்து கருத்தெனும் பின் கழுத்தி னளவு ஐந்து அங்குலங்களாம். அங்கிருந்து கடிஸூத்திரம் வரை (இடுப்பு வரை) இருபத்தி ஏழு அங்குலங்களாம். அங்கிருந்து ஆஸனத்துவாரம் வரையில் பதின் மூன்றரை அங்குலங்களாம். இடுப்புக்குக் கீழ்ப்புறத்தின் விஸ்தாரமானது, இருபத்தியோரங்குலங்களாகும். பின் புறத்தில் ச்ரோணியெனும் சப்பைக் கிண்ணத்தினகலம், பதினேழு அங்குலங்களாகும். இதற்கு மேலேயுள்ள நடுவுடலினகலம் (இடுப்பிற்குமேலே) ச்ரோணியினளவே யாகும். அதற்குமேலே ஸ்தனங்களுக்குப் பின்புறத்தி னகலம், இருபத்தியோரங்குலமாம்.

79-84. இரு கமுக்கட்டுக்களின் நடுவிலுள்ள விஸ் தாரமானது, இருபத்தி ஏழு அங்குலங்களாகும். இடுப்பின் நடுவரை மத்தியில் நீண்டிருக்கும் முதுகெலும்பின் பள்ள

जत्रुकाक्षयोः(कक्ष्य)मध्ये (च) अर्ध(हस्त)तारं वेदमात्रकम् ।
जत्रुकांसे तु स्कन्धविस्तारं बाणायामं समन्वितम् ॥ ८१ ॥
[जत्रुका स्कन्धविस्तारा बाणायामं समन्विता ॥]

बृहती स्तनान्तकं (का च) कक्षान्तरसमापितं(ता) ।
बृहती स्तनविस्तारं(रा) सार्धाष्टमात्रकं(का) ॥ ८२ ॥

त्रयोदशांशकं चैव कटिसूत्रं तु विस्तृतम् ।
ऊरुमूलं बहिर्देशं च तत्तुल्यं तु युगांगुलैः ॥ ८३ ॥

विस्तारं (तु) नवांशं स्याद्वृत्तपिण्डाः समन्विताः ।
स्तनपीठं द्विमात्रं स्याद्विस्तारं तत्समन्वितम् ॥ ८४ ॥

மானது, ஒரு அங்குலமுடையதாகும். இதனகலம் இரண்டங்குலங்களாம். இதனை யுக்தியுடனமைக்கவேண்டும். அவ்விடமிருந்து வயிற்றின் முடிவுவரை, முதுகுப் பலகைகளின் நீளம், பன்னிரண்டங்குலங்களாம். இரு பலகைகளின் மத்தியிலிடைவெளி, மூன்றங்குலங்களாம். இப் பலகை, தோள்களின் முடிவைச் சார்ந்து, இரண்டரை அங்குலங்கள், உயர்ந்திருக்கும். பிருஹதியானது (மார்பிலும் பின்புறத்திலும் கமுக்கட்டுக்குக் கீழேயுள்ள சதைப் பத்தை) கமுக்கட்டு வரை நீண்டிருப்பது, ஏழு அங்குலங்களுடையதாகவும்; ஸ்தனம் வரை நீண்டிருப்பது, பதினறரை அங்குலங்களுடையதாகவும் இருக்கவேண்டும். கடி ஸூத்திரமானது, பதின்மூன்றங்குலங்கள் அகன்றிருப்பதாகும். துடையின் மூலமும் அதன் வெளிப்புறமும், ஒன்றுக்கொன்று சமமாக நான்கு அங்குலங்களுடையனவாம். துடையிலுள்ள வட்டமான சதைப் பிண்டங்கள், ஒன்பதங்குலங்கள் அகன்றவைகளாம். ஸ்தனங்களின் அடித்தடமானது, வட்டமாக இரண்டங்குலங்கள் பரவியதாகும்.

𑌸𑍍𑌤𑌨𑌪𑌕𑍍𑌷𑌦𑍍𑌵𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 𑌚𑍋𑌦𑌯𑌂 𑌤𑌥𑌾 ।
𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌾 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌚𑍈𑌵 𑌨𑌿𑌮𑍍𑌨𑌕𑌂 𑌚 𑌯𑌵𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂
(𑌚𑌤𑍁𑌰𑍍𑌯𑌵𑌮𑌿𑌤𑌿) ॥ ௮௫ ॥

𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌤𑌨𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌧𑌿𑌕𑍍𑌕𑌾 𑌕𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑌥𑌾 ।
𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌂𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍 𑌦𑍍𑌵𑌿𑌯𑌵𑌂 𑌨𑌾𑌭𑌿𑌨𑌿𑌮𑍍𑌨𑌕𑌮𑍍 ॥ ௮௬ ॥

𑌨𑌾𑌭𑌿(𑌂)𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣(𑌂) 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌉𑌤𑍍𑌤𑌮𑌵𑌤𑍍𑌕𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑍈𑌃 ।
𑌨𑌾𑌭𑍍𑌯𑌧𑌃 𑌕𑌟𑌿𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌕𑍁𑌕𑍍𑌷𑌿𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௮௭ ॥

𑌨𑌾𑌭𑍍𑌯𑌧𑍋 𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍀𑌮𑌾𑌨𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑌟𑌿𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌂 𑌤𑌦𑌨𑍍𑌤𑌂 𑌮𑍇𑌢𑍍𑌰𑌮𑍂𑌲𑌕𑌮𑍍 ॥ ௮௮ ॥

85–91. ஸ்தனங்களின் இரு பக்கங்களின் முடிவும் உயரமும், அவ்வாறே அதற்குச் சமமானதாகும். ஹிக்கையிலிருந்து (தொண்டைக்கருகிலுள்ள தோள் எலும்பிலிருந்து) மார்பு, ஒரு யவை (நான்கு யவைகள்) தாழ்த்திருப்பதாகும். ஹிக்கையிலிருந்து ஸ்தனம் முடியும் வரையும் ஹிக்கையிலிருந்து கமுக்கட்டு முடியும் வரையும்; பதின்மூன்றரை அங்குலங்கள் ஒதுக்கமாகும். தொப்புளின் பள்ளம், இரண்டு யவைகளுடையதாம். இத்தொப்புளை வலம் சுழித்தமுறையில் வட்டமாகச் செய்விக்க வேண்டும். தொப்புளுக்குக் கீழே, இடுப்பின் முடிவு வரை, வயிற்றின் நீளம் ஆறு அங்குலங்களாம். தொப்புளுக்குக் கீழே ஆடை தரிக்குமிடம், நான்கு அங்குலங்களில் உள்ளதாம். இடுப்பின் உயரம், ஏழரை அங்குலங்களுடையதாகும்; அதன் முடிவே ஆண்குறியின் அடிப்பாகம், ஆண்குறியினடிப்பாகத்தின் பரப்பளவு, நான்கு

𑌕𑍋𑌶𑌂 𑌵𑍀𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌪𑌾𑌦𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌂𑌶𑌂 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥௮௯॥

𑌮𑍁𑌷𑍍𑌕𑌾𑌯𑌾𑌮𑌂 𑌅𑌰𑍍𑌧𑌾𑌰𑍍𑌧𑌾𑌂𑌶𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌦𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑌾𑌰𑌂 𑌪𑌰𑌿𑌵𑌾𑌂𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌤𑍋 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ॥௯௰॥

𑌤𑌦𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌹𑍀𑌨𑌂 𑌵𑌾 𑌶𑍋𑌭𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚𑍈𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌉𑌕𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑌕𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑍈𑌸𑍍𑌤𑍁 𑌦𑍋𑌷𑍋 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௯௧ ॥

𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌚𑌾𑌧𑌿𑌕𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌦𑍋𑌷𑌸𑌮𑍁𑌦𑍍𑌭𑌵𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌚𑍍𑌛𑌿𑌲𑍍𑌪𑌿𑌵𑌰𑍈𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌤𑍀𑌮𑌾𑌨𑌂 𑌤𑍁 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௯௨ ॥

அங்குலங்களாகும். அவ்விடமிருந்து ஆண்குறியின் நீளம், பன்னிரண்டங்குலங்களென விதிக்கப்பட்டிருக்கின்றது. பீஜகோசத்தின் நீளம், இரண்டரை அங்குலங்களாம். அவ்விடமிருந்து ஆண்குறியின் நீளம், பன்னிரண்டங்குலங்களாம்; அதனகலமும் அவ்வளவேயாகும். ஆண்குறியினகலம், ஓரங்குலமாகும். அதனிலெஞ்சியவற்றை யுக்தியினுலிணைக்கவேண்டும். கூறிய இவ்வளவையே, ஓரங்குலம் கூட்டியோ குறைத்தோ அழகின் பொருட்டமைத்துக்கொள்ளலாம். எல்லா உறுப்புக்களும், கூறப்பட்ட முறையான அளவுகொண்டிருந்தால். ஆங்கு யாதொரு குற்றமுமில்லை.

92–94. அதற்குமேலே அதிகமாகவோ குறைவாகவோ அளவை கல்பிக்கக்கூடாது. அப்படிச் செய்தால், ஸகல தோஷங்களுமுண்டாக ஹேதுவாகும். ஆகையினுல் சில்பியானவன் எப்பொழுதும் விபரீதமான அளவை

ப்ரஹ்மாவிஷ்ணுஶ்ச ருத்ராணாம் மானயோகாந்வித: |
[ப்ரஹ்மவிஷ்ணுமஹேஶானாம் மானயோகாந்வித: |]
அன்யேஷாம் சைவ தேவானாம் மானம் ஶுபாதிஸம்யுதம் || ௩௩ ||

ஏவம் து சோத்தமம் தஶதாலம் ப்ரோக்தம் முனீஶ்வரை: ||௩௪

இதி மானஸாரே வாஸ்துஶாஸ்த்ரே உத்தமதஶதாலவிதானம் நாம
பஞ்சஷஷ்டிதமோऽத்யாய: ||

நீக்கவேண்டும். அளவை அறிந்தவன், பிரமன், விஷ்ணு ருத்திரன் இவர்களை உத்தம தசதாளத்தால் கணக்கிட வேண்டும். மற்றையதேவர்களினளவை, சுபம் விளை விக்கும் முறையில் அமைக்கவேண்டும். இவ்வாறு, மக ரிஷி சிரேஷ்டர்களால், உத்தம தசதாளம் கூறப்பட்டது.

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
உத்தம தசதாளவிதானமெனும்
அறுபத்திஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஶ்ரீமானஸாரே வாஸ்துஶாஸ்த்ரே மத்யமதஶதாலவிதானம் நாம

॥ ஷட்ஷஷ்டிதமோऽத்யாய: ॥

—o—

ஸ்த்ரீணாம் (ந) மத்யதாலம் ச (ஸு) லக்ஷணம் வக்ஷ்யதேऽதுனா ।
பாதாதுஷ்ணீஷஸீமாந்தம் ஸவிம்ஶதிஶதாங்குலம் ॥ ௧ ॥

ததேகாஷ்டாம்ஶகம் சைவ யவமானமுதீரிதம் ।
உஷ்ணீஷாத் கேஶபர்யந்தம் சதுர்மாத்ரம் ஶிரோதயம் ॥ ௨ ॥

தஸ்யாதோ நேத்ரஸூத்ராந்தம் பஞ்சாங்குலமிதி ஸ்ம்ருதம் ।
புடாந்தம் நாஸிகைவ ஸ்யாத் தஸ்மாதேமாத்ரம் ப்ரஶஸ்யதே ॥ ௩ ॥

ஸ்ரீமானஸார வாஸ்துசாஸ்திரத்தில்
மத்யமதசதாளவிதியெனும்
அறுபத்தாருவது அத்தியாயம்.

—o—

1–7. இப்பொழுது ஸ்திரீவிக்ரஹத்தின் அளவைக் காட்டும் தசதாளத்தின் (மத்யம தசதாளத்தின்) இலக்கணம், கூறப்படுகின்றது. இந்த மத்யம தசதாளத்தில் பாதம் முதல் உச்சித் தலைவரையுள்ள அளவு; நூற்றிருபது அங்குலங்களாம். அந்த நூற்றிருபது பாகங்களிலோர் பாகமங்குலமெனவும், அவ்வங்குலத்திலெட்டிலொரு பாகம் யவையெனவும், அளவு கூறப்பட்டிருக்கின்றது. உச்சித் தலைமுதல் மயிர்களின் முடிவான நெற்றிவரையுள்ள, தலையினுயரம் நான்கு அங்குலங்களாகும். அதன்கீழே, நேத்திரஸூத்திரம் முடியும் வரை; ஐந்து அங்குலங்களெனக் கருதப்பட்டிருக்கின்றது. நேத்திர

புடாந்தாத்³ஹநுபர்யந்தம் ஸார்த⁴த்ர்யங்கு³லம் ப⁴வேத் ।
அர்தா⁴ங்கு³லம் க³லஸந்தி⁴꞉ க்³ரீவோத்ஸேத⁴ம் சதுரங்கு³லம் ॥ ௪ ॥

ஹிக்காயா ஹ்ருத³யாந்தம் ச த்ரயோத³ஶாங்கு³லம் ப⁴வேத் ।
தஸ்மாத் (து) நாபி⁴ஸீமாந்தம் மேட்⁴ராந்தம் தத்ஸமம் ப⁴வேத் ॥ ௫ ॥
மேட்⁴ராந்தாதூ³ருதை³ர்க்⁴யம் ஸ்யாத் ஷட்³விம்ஶதி(த்ய)ங்கு³லம்
ப⁴வேத் ।
ஜாந்வந்தம் வேத³மாத்ரம் ஜங்கா⁴ சோருஸமம் (மா)
ப⁴வேத் ॥ ௬ ॥

பாதோ³ச்ச்²ரயம் சதுர்மாத்ரம் பார்ஷ்ண்யாத்³யங்கு³ஷ்டா²வஸாநகம் ।
தலம் ஷோட³ஶமாத்ரம் ஸ்யாதா³யாமமிதி கத்²யதே ॥ ௭ ॥

ஸூத்ரமுடிவிலிருந்து புடமெனும் மேலுதட்டின் முடிவு வரை, நாசியின் நீளம்; நான்கு அங்குலங்களாகும். புடாந்தத்திலிருந்து ஹநுவெனும் கீழ்த்தாடையின் முடிவு வரை, மூன்றரை அங்குள நீளமாகும். சிரத்திற்கும் கழுத்திற்குமுள்ள ஸந்தியானது, அரை அங்குலமாகும். கழுத்தினுயரம், நான்கு அங்குலங்களாம், கழுத்தையொட்டியுள்ள ஹிக்கையெனும் தோள் எலும்பிலிருந்து, மார்பு முடிவு வரை பதின்மூன்று அங்குலங்களாகும். அதனின்றும் நாபிமுடிவு வரையும், நாபியிலிருந்து ஆண்குறி முடிவு வரையும், அதற்குச் சமமான அளவுடையதே ஆகும். ஆண்குறி முடிவிலிருந்து துடையினுயரம், இருபத்தியாறு அங்குலங்களாகும். முழங்காலினுயரம் நான்கு அங்குலங்களாம். கணுக்காலுக்கு மேலும் முழங்காலுக்குக் கீழுமுள்ள கண்டங்காலினுயரம், துடையினுயரத்திற்குச் சமமானதாகும். பாதத்தினுயரம், நான்கு அங்குலங்களாம். குதிகால் முதல் கட்டைவிரல் முடிவு முடியவுள்ள பாததலத்தின் நீளம், பதினாறு அங்குலங்களாகும். (பாததலத்தின் நீளத்தை நீக்கிய உயரம், நூற்று இருபது அங்குலங்களாகும்.)

ஹிக்காஸூத்ராதயோ பாஹுர்தைர்க்யம் ஷட்விம்சதங்குலம் ।
கூர்பரம் ச த்விமாத்ரம் ஸ்யாத் விம்சாம்சம் ப்ரகோஷ்டாயதம் ॥ ௮ ॥

மத்யாங்குல்யக்ர பர்யந்தம் தலம் த்ரயோதசாம்சகம் ।
தத்தலே (மத்ய) ஷடம்சம் மத்யாங்குலிதீர்க்ககம் ॥ ௯ ॥

சேஷம் து தலதைர்க்யம் ஸ்யாத் ஸப்தாங்குஷ்டாயதம் ।
ஸார்தவேதாங்குலாயாமம் தர்ஜநீ அநாமிகாயதம் ॥ ௰ ॥

கநிஷ்டாங்குலாயதம் சைவ (ச) வேதமாத்ரம் ப்ரகீர்த்திதம் ।
ரவிதாரம் கர்ணாந்தம் ஸ்யாத் கர்ணவ்யாப்தமேவ வா ॥ ௰௧ ॥

தஸ்யாதோ முகவிஸ்தாரம் கர்ணாந்தம் ருத்ராம்சகம் ।
ஸ்கந்தாங்குலம் கண்டதாரம் மத்யம் மத்யம் தத்ர து கம் ॥ ௰௨ ॥

8–10½. ஹிக்கா சூத்திரத்திற்குக் கீழேயுள்ள முழங்கைக்கு மேலேயுள்ள பாஹுவின் நீளம், இருபத்தியாறு அங்குலங்களாகும். முழங்கையின் நீளமானது, இரண்டு அங்குலங்களாகும். பிரகோஷ்டமெனும் முழங்கைக்கு முன்னுள்ள கையின் நீளமானது, இருபது அங்குலங்களாகும். நடுவிரலின் நுனி முடிவுவரையுள்ள கரதலத்தின் நீளமானது, பதின்மூன்று அங்குலங்களாகும். இக்கரதலத்தின் நீளத்தில், நடுவிரலின் நீளம் ஆறு அங்குலங்களாம். எனவே, எஞ்சிய ஏழு அங்குலங்கள் தலத்தின் (உள்ளங்கையின்) நீளமாகும், கட்டைவிரலின் நீளம், நான்கு அங்குலங்களாகும். சுட்டுவிரல் மோதிரவிரல்களின் நீளம், ஐந்தரை அங்குலங்களாம். சிறு விரலின் நீளம், நான்கு அங்குலங்களாம்.

11–17½. காதுகளின் முடிவுவரையுள்ள முகத்தினகலம், பன்னிரண்டங்குலங்களாகும். அதன்கீழ் காதுவரை முகத்தினகலம், பதினோரங்குலங்களாம். கழுத்தின் நடு

பஞ்சதஶாங்குலம் ப்ரோக்தம் கக்ஷயோரந்தரம் ததா ।
தஸ்யாதஸ்ஸ்தநதேஶே து தாரம் பஞ்சதஶாங்குலம் ‖ ௧௬ ‖

ப்ரத்யேகம் ஸ்தநவிஸ்தாரமர்தாதிகநவாங்குலம் ।
வேதாயாமாங்குலம் த்ர்யங்குலம் ஸமுச்ச்ரயாங்குலம் பவேத் । ௧௭ ।

விஸ்தாரம் (த்வே) த்வ்யங்குலம் ப்ரோக்தம் ஸ்தநசூசுகமண்டலம் ।
ஸ்தநாந்தம் ஹ்ருதயாந்தம் ஸ்யாத் தாரம் த்ரயோதஶாங்குலம் ‖ ௧௮ ‖

உதரம் மத்யவிஶாலம் ஸ்யாதேகாதஶாங்குலம் பவேத் ।
தஸ்யாதோ நாபிதேஶே து தாரம் த்ரயோதஶாங்குலம் ‖ ௧௯ ‖

நாபிதேஶாததோதேஶே தாரம் பஞ்சதஶாங்குலம் ।
தஸ்யாத: ஶ்ரோணிவிஸ்தாரம் விம்ஶத்யங்குலமேவ ச ‖ ௨௦ ‖

அடிநுனி இவை மூன்றும், ஏழு அங்குலங்கள் அகன்றதாம். இரு கமுக்கட்டுகளின் மத்தியத்தலத்தினகலம், பதினைந்து அங்குலங்களாம். அதன் கீழேயுள்ள ஸ்தனப்பிரதேசத்தினகலமும், பதினைந்து அங்குலங்களேயாகும். ஸ்தனங்களின் விஸ்தாரம், தனித்தனியே ஒன்பதரை அங்குலங்களாகும், ஸ்தனங்களின் உயரமானது மூன்று அங்குலங்களாம். இவ்வுயரத்தில் கண்போன்ற கருப்பான ஸ்தனப்பிரதேசம், ஓரங்குலமாகும். இதன் விஸ்தாரம், இரண்டங்குலங்களாகும். மூன்றங்குல உயரமுள்ள இப்பிரதேசம், ஸ்தனசூசுகமண்டலமெனக் கூறப்பட்டது. ஸ்தநாந்தமான ஹ்ருதயாந்தத்தின் விஸ்தாரமானது, பதின்மூன்று அங்குலங்களாகும். நடுவயிற்றினகலமானது, பதினொரு அங்குலங்களாகும். அதன்கீழே நாபிதேசத்தினகலம், பதின்மூன்றங்குலங்களாகும். நாபியின் கீழ்ப்பிரதேசத்தினகலம், பதினைந்து அங்குலங்களாம். அதன் கீழே ச்ரோணியின் (அடிவயிற்றின்) அகலம், இருபது அங்குலங்களாம். இடுப்பின் கீழே ச்ரோணியினகலம், இருபத்தினன்கு அங்குலங்களாம்.

पञ्चविंशाङ्गुलं श्रोण्यादि(ण्याश्च) यः कटिविस्तारकम् ।
त्रयोदशांशं प्रत्येकं ऊरुमूलविस्तारकम् ॥ ௰௮ ॥

ऊरुमध्यविस्तारं स्यात् द्वादशाङ्गुलसम्मितम् ।
नवाङ्गुलं (लं) चाग्र विस्तारं सप्तांशं जानु-
विस्तृतम् ॥ ௰௯ ॥

जङ्घामूलं रसाङ्गुल्यं मध्यतारं शराङ्गुलम् ।
नलकाग्रं युगाङ्गुल्यं गुल्फं सार्धयुगाङ्गुलम् ॥ ௨௰ ॥

तारं स्यात्तलविस्तारं पञ्चमात्रं प्रशस्यते ।
अग्रतारं शराङ्गुल्यं पार्ष्णितारं युगाङ्गुलम् ॥ ௨௧ ॥
अन्ये तु तलविस्तारं रसमात्रं प्रशस्यते ।
मध्यतारं शराङ्गुल्यं पार्ष्णितारं युगाङ्गुलम् ॥]

अङ्गुष्ठायामवेदांशं तर्जनी तत्समं(मा) भवेत् ।
मध्यमाङ्गुलिरेव स्यात् (तु) सार्धं वह्न्यङ्गुलं
भवेत् ॥ ௨௨ ॥

18–24. ஒவ்வொரு துடையினுடையவும் அடியினகலம், பதின்மூன்றங்குலங்களாம். துடைகளின் நடுவினகலம், பன்னிரண்டங்குலங்களுடையதாம். துடைகளின் நுனியினகலம், ஒன்பதங்குலங்களாகும். முழங்காலினகலம், ஏழு அங்குலங்களாகும். கண்டைக்காலின் அடியினகலம், ஆறு அங்குலங்களாம். கண்டைக்காலின் நடுவினகலம் ஐந்து அங்குலங்களாம். கண்டைக்காலின் நுனியினகலம், நான்கு அங்குலங்களாம். கணுக்காலினகலம், நாலரை அங்குலங்களாகும். பாததலத்தின் நுனியினகலம், ஆறு அங்குலங்களாகும். நடுவினகலம், ஐந்து அங்குலங்களாகும். குதிகாலினகலம், நான்கு அங்குலங்

अङ्गुष्ठादिकायामं कनिष्ठं विंशतिः क्रमात् ।
दीर्घाङ्गुलं मध्यमं च विस्तारं त्र्यंगुलेनांशकं तर्जनी ॥ ௨௩ ॥

[त्र्यंशं च नाडिकायामं मध्यमाद्र्यंशं कनिष्ठके ।
अंगुष्ठतारं त्र्यंशं तत् तर्जनीतारकं तथा]

तारं मध्यमं षड्यवं मध्यनाङ्गुलं त्रयम् ।
अनामाङ्गुल्यकनिष्ठाख्यं विस्तारं यवकीर्तितम् ॥ ௨௪ ॥
[क्रमेण मध्यमं षड्यवं मध्यनाङ्गुलिकं त्रयम् ।
अनामाङ्गुल्याः कनिष्ठाख्यं विस्तारं यवकीर्तितम् ॥]

बाहुमूलविस्तारं च बाहुं (बाहुं) नवाङ्गुलं भवेत् ।
अध्यर्धषण्मात्रं तारं षडङ्गुलम् ॥ ௨௫ ॥

कूर्परं मध्यमांशं विस्तारं यवकीर्तितम् ।
प्रकोष्ठमूलविस्तारं यवाङ्गुलमिति स्मृतम् ॥ ௨௬ ॥

களாகும். கட்டைவிரலின் நீளம், நான்கு அங்குலங்களாம். சுட்டுவிரலின் நீளம், நான்கு அங்குலங்களாம். நடுவிரலின் நீளம், மூன்றரை அங்குலங்களாம். அணிவிரலின் நீளம், மூன்று அங்குலங்களாம். சுண்டுவிரலின் நீளம், இரண்டரை அங்குலங்களாகும். கட்டைவிரலினகலம், இரண்டங்குலங்களாகும். சுட்டுவிரலினகலம் ஓரங்குலமாகும். மற்றைய விரல்களினகலம், முறையே ஏழு, ஆறு, ஐந்து யவைகளாகும். இவ்வாறு நடுவிரல் முதல் சுண்டுவிரல் முடியவுள்ள மூன்று விரல்களினகலம் கூறப்பட்டது.

25–29. பாஹுமூலத்தினகலமானது, ஒன்பது அங்குலங்களாகும். பாஹுமத்யத்தினகலம், ஆறரை அங்குலங்களாம். பாஹுவின் நுனியினகலம், ஆறு அங்குலங்

𑌮𑌧𑍍𑌯𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑌾𑌰𑌂 𑌚𑌾𑌗𑍍𑌰𑍇 𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌶𑌾𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ॥ ௨௭ ॥

𑌤𑌲𑌤𑌾𑌰𑌂 𑌶𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌮𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ।
𑌷𑌡𑍍𑌯𑌵𑌂 𑌤𑌰𑍍𑌜𑌨𑍀𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍𑌤𑍁𑌲𑍍𑌯𑌂(𑌤𑍁𑌲𑍍𑌯𑌂 𑌵𑌾) 𑌨𑌾𑌮𑌿𑌕𑌾-
𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤(𑌤𑌤)𑌮𑍍 ॥ ௨௮ ॥

𑌸𑌾𑌰𑍍𑌧𑌪𑌞𑍍𑌚𑌯𑌵𑌂 𑌤𑌾𑌰𑌂 𑌕𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌮𑍂𑌲𑌕𑍇 ।
𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌮𑍂𑌲𑍇 𑌸𑌪𑍍𑌤𑌯𑌵𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௯ ॥

𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌭𑍍𑌰𑍁𑌵𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ।
𑌏𑌕𑌾𑌂𑌶𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌮𑌂 𑌗𑍁𑌣𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௩௰ ॥

𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌵𑌸𑌾𑌨𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌨𑌾𑌸𑌿𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑌾𑌰𑌂 𑌶𑌿𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌤𑌦𑍍𑌯𑌵𑌂 𑌮𑍂𑌲𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌮𑍍 ॥ ௩௧ ॥

களாம். முழங்கையினகலம், ஐந்தரை அங்குலங்களாம். பிரகோஷ்டமெனும் முன்கையினடிப் பிரதேசத்தினகலம், ஐந்தங்குலங்களாம். பிரகோஷ்டத்தின் நடுவினகலம், நாலரை அங்குலங்களாம். அதன் நுனியினகலம், நான்கு அங்குலங்களாம். மணிக்கட்டினகலம், மூன்றங்குலங்களெனக் கருதப்பட்டிருக்கின்றது. உள்ளங்கையினகலம் ஐந்தங்குலங்களாகும். கட்டைவிரலினகலம், ஓரங்குலமாகும். சுட்டுவிரலினகலம், ஆறு யவைகளாம். மோதிர விரலினகலமும், இதற்குச் சமமானதே. சுண்டுவிரலினடிப்பாகத்தில் அதனகலம். ஐந்தரை யவை அளவாம், நடுவிரலினகலம், அதனடிப்பாகத்தில் ஏழு யவை அளவு கொண்டதாம்,

30–33½. கேசாந்தம் நேத்திர ஸூத்திராந்தம் இவ்விரண்டின் மத்தியில். புருவத்தின் நிலையாகும். கண்ணினகலம், ஓரங்குலமாகும். கண்ணின் நீளம், மூன்றங்கு

[illegible] 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 [illegible] ([illegible]) [illegible] 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
[[illegible] 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑌤𑍍 [illegible] 𑌭𑌵𑍇𑌤𑍍 ।]
𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯𑌂 𑌚 [illegible] ॥ ௩௨ ॥

𑌭𑍍𑌰𑍂𑌵𑌾𑌯𑌾𑌮𑌂 𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌭𑍍𑌰𑍂𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌅𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌯𑌾𑌮𑌂 𑌤𑍍𑌰𑌿𑌧𑌾 𑌭𑌕𑍍𑌤𑌂 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 ॥ ௩௩ ॥

𑌚𑌾𑌪𑌾𑌕𑌾𑌰𑌂 𑌭𑍍𑌰𑍂𑌵𑌾𑌕𑌾𑌰𑌂 𑌮𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌮𑌕𑍍𑌷𑌿𑌕𑌂 𑌤𑌥𑌾 ।
𑌪𑍁𑌟𑌤𑌾𑌰𑍋𑌦𑌯𑌂 𑌚𑌾𑌰𑍍𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌯𑍋𑌜𑌯𑍇𑌤𑍍 ॥ ௩௪ ॥

𑌤𑌿𑌲𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌕𑍃𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌸𑌾 𑌪𑍁𑌟𑌂 𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌵𑌬𑍀𑌜𑌵𑌤𑍍 ।
𑌸𑍃𑌕𑍍𑌵𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌾𑌸𑍍𑌯𑌾𑌯𑌤𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌸𑍃𑌕𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌵 𑌚 ॥ ௩௫ ॥

𑌉𑌤𑍍𑌤𑌰𑍋𑌷𑍍𑌠𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌯𑌵𑌯𑍁𑌗𑍍𑌮𑌮𑍇𑌵 𑌚 ।
𑌅𑌧𑌰𑍋𑌷𑍍𑌠𑌂 𑌷𑌡𑍍𑌯𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌾𑌯𑌾𑌮𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௩௬ ॥

லங்களாகும். நாஸாபுடங்களின் வெளிப்புற முடிவுவரை நாசியினகலம், இரண்டங்குலங்களாகும். நடுவினகலம், ஓரங்குலமாகும். நாசியின் மூலத்தினகலம், அதனிற் பாதியாகும். இரு கண்களுக்கும் மத்தியிலுள்ள இடைவெளியானது, ஒன்றேமுக்கால் அங்குலமாகும். இரு புருவங்களின் மத்தியிலுள்ள ஒதுக்கமானது, ஓரங்குலமாகும். புருவத்தின் நீளம், ஒன்பது அங்குலங்களாம். புருவத்தினகலம், இரண்டங்குலங்களாம். கண்ணின் நீளத்தை மூன்று பாகங்களாக்கிக்கொண்டு, அதன் நடுவிலொரு பாகம் கருவிழி மண்டலத்தைச் செய்யவேண்டும். புருவத்தை வில்லின் வடிவங்கொண்டதாகவும், கண்ணை மீன் வடிவங் கொண்டதாகவும் செய்யவேண்டும்.

34-39. நாஸாபுடத்தின் (மூக்கின் வெளிப்புறக் கதுப்பின்) அகலமும், உயரமும்; அரை அங்குலமாகும். இதனை யுக்தியுடன் இணைக்கவேண்டும், மூக்கு எள்ளுப் பூவின் வடிவங்கொண்டதாகவும், நாசியின் புடம் பாகை வித்தின் வடிவங் கொண்டதாகவும், இருக்கவேண்டும், கடைவாய் முடிவான வாயின் நீளத்தை, நான்கு அங்குலங்களுடையதாகச் செய்யவேண்டும். மேலுதட்டின் அக

𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌾𑌣𑍍𑌡𑌸𑌮𑌾𑌕𑌾𑌰𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌭𑍍𑌰𑍂𑌮𑌧𑍍𑌯(𑌮)𑌸𑌮𑌂 𑌕𑌰𑍍𑌣𑌂 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌤𑌾𑌰𑌂 𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௧௭ ॥

𑌤𑌤𑍍𑌸𑌮𑌂 𑌨𑌾𑌲𑌲𑌮𑍍𑌬𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌘𑌨𑌮𑌰𑍍𑌧𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌅𑌶𑍍𑌵𑌤𑍍𑌥𑌪𑌤𑍍𑌰𑌵𑌤𑍍 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑍋𑌨𑌿(𑌂)𑌤𑌾𑌰𑌂 𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௧௮ ॥

𑌦𑍀𑌰𑍍𑌘𑌂 (𑌸𑍈𑌵 𑌸𑍍𑌯𑌾𑌂) 𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌤𑌾𑌰𑌾𑌯𑌤𑌂 𑌸𑌮𑌮𑍍 ।
𑌶𑍇𑌷𑌂 𑌤𑍂𑌤𑍍𑌤𑌮𑌵𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑌾𑌲𑌵𑌤𑍍 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌸𑍁𑌧𑍀𑌃 ॥ ௧௯ ॥
[𑌶𑍇𑌷𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌵𑌤𑍍𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑍈 𑌤𑌾𑌲𑌵𑌤𑍍𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌸𑍁𑌧𑍀𑌃 ॥]

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌮𑌧𑍍𑌯𑌮𑌦𑌶𑌤𑌾𑌲𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌷𑌟𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

லம், ஐந்து யவைகளளவாகும். கீழுதட்டினகலம், ஆறு யவைகளளவுடையதாம். இதன் நீளம் இரண்டங்குலங்களாம். முகத்தைக் கோழிமுட்டையின் வடிவங்கொண்டதாக யுக்தியுடன் செய்விக்கவேண்டும். புருவத்தின் நடுவிற்குச் சமவுயரமுடையதான காதினுயரம், நான்கு அங்குலங்களாம். கர்ணநாளத்தின் தொங்கலும், உயரத்திற்குச் சமமானதாம். (நான்கு அங்குலங்களெனக் கருத்து.) கர்ணநாளத்தின் கனம், அரை அங்குலமாகும். யோநியை அரசிலையின் வடிவங் கொண்டதாகச் செய்யவேண்டும். யோனியின் அகலம் நான்கு அங்குலங்களாம். அதன் நீளம் ஏழு அங்குலங்களுடையதெனவும்; மேலே செல்லும் அகலநீளம் சமமானதெனவும்; கூறப்பட்டிருக்கின்றது. புத்திமானாகிய ஒருவன் மற்றவைகளை, உத்தம தசதாளத்திற் கண்டதுபோலும் செய்விக்கவேண்டும்.

மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
மத்யமதசதாளவிதியெனும்
அறுபத்தி ஆருவது அத்தியாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇

𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬(𑌸𑍂𑌤𑍍𑌰)𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮

॥ 𑌸𑌪𑍍𑌤𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌂 𑌜𑌙𑍍𑌗𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍇 𑌵𑌾𑌸𑌨𑍇 ।
[𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍇 𑌵𑌾𑌸𑌨𑍇 𑌤𑌥𑌾 ।]
𑌮𑌾𑌨𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌂(𑌧𑍇𑌃)𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ॥ ௧ ॥

𑌪𑍀𑌠𑌪𑌾𑌦𑌸𑌮𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌤𑍍𑌰𑌿𑌪𑌾𑌦𑌂 𑌪𑌾𑌦𑌮𑍇𑌵 𑌵𑌾 ।
𑌅𑌰𑍍𑌧𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌤𑌦𑍁𑌚𑍍𑌚𑌵𑌿𑌶𑌾𑌲𑌕𑌮𑍍 ॥ ௨ ॥

𑌦𑍇𑌵(𑌹)𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌂 𑌗𑌣𑍍𑌡𑌂 𑌪𑌾(𑌪𑍇𑌨𑍍𑌦𑍇)𑌵 𑌮𑌧𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌗𑌣𑍍𑌡𑌂 𑌵𑌦𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌸𑍂𑌤𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑌥𑌾𑌶𑍍𑌰𑍁𑌤𑌕𑌮𑍍 ॥ ௩ ॥

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்

பிரலம்பஸூத்திரலக்ஷணமெனும்

அறுபத்தி ஏழாவது அத்தியாயம்.

1–6. இப்பொழுது நின்ற நிலையிலோ அல்லது உட்கார்ந்த நிலையிலோ இருக்கின்ற தேவர்களுடையவும் தேவிமார்களுடையவும், விக்ரஹங்களின், மானஸூத்திர விதியின் இலக்கணம்; நன்கு கூறப்படுகின்றது. பிரலம்ப பலகமானது பேரத்தினுயரத்திற்குச் சமவுயரமுடைய தாகவோ, அதனில் முக்கால் பங்கு உயரமுடையதாகவோ, அரைப் பங்கு உயரமுடையதாகவோ இருக்கலாமென அதனுயரம் மூன்றுவிதமாகக் கூறப்பட்டிருக்கின்றது,

தத்ஸமம் சாஸநம் கல்ப்யம் கநம் மாநாங்குலேந ச |
சதுஷ்பாதம் த்ரிபாதம் வா த்விபாதைகாங்க்ரிகைவ வா ॥ ௪ ॥

ஆஸநஸ்யோர்த்வமத்யே து (ஸ்தாப்ய) பேரம் (ப்ரதிமாம்) விநிக்ஷிபேத் |
ஆஸநபாதோத்ஸேதம் பாதாந்தம் (பாதாந்தம்) ஸார்த்தாம்ஶகம் ॥ ௫ ॥

பாதகாரம் யதாயுக்த்யா காரயேத் தக்ஷகேந து |
தத்பீடே ஸப்த (ஏழு) ஸூத்ராணி (ஸூத்ரம்) ஆஸநாந்தம் ப்ரலம்பயேத் ॥ ௬ ॥

கீழிருந்து மேலே செல்லும் அகலமும், அதனிற்கேற்ற வாறே ஆகும். அதன் கனமானது, தேவதையின் தேஹ லப்தாங்குலத்தினல் நான்கு மூன்று அல்லது இரண்டு அங்குலகனமுடையதாக இருக்கவேண்டும். மேலும் இப் பலகை சச்சதுரமாக இருக்கவேண்டும். இவ்விதம் பிர லம்பபலகத்தினிலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. அதற் குச் சமமாக (ஏற்றதாக) ஆஸநத்தை கல்பிக்கவேண்டும். அதன் கனமானது மாநாங்குலத்தினல் கல்பிக்கப்பட வேண்டும். இவ்வாஸநத்தை; நான்கு கால்களுடன் கூடியதாகவோ, மூன்று கால்களுடன் கூடியதாகவோ, இரண்டு கால்களுடன் கூடியதாகவோ, அல்லது ஒரே காலுடன் கூடியதாகவோ கல்பித்துக்கொள்ளலாம். இவ் வாஸநத்தின் மேல்பக்கத்தில் மத்தியில் பேரத்தை வைக்க வேண்டும். ஆஸநத்தின்-காலின் உயரமானது, பேரத் தின் பாதாந்தமான உயரமுடையதாகவாவது அல்லது ஒன்றரைப் பங்கு உயரமுடையதாகவாவது இருக்க வேண்டும். தச்சனைக்கொண்டு யுக்தியினல் ஏற்றவாறு பாதத்தினகலத்தைச் செய்விக்கவேண்டும். அதன்மேலே யுள்ள பலகையில் (ஏழு) ஸூத்திரங்களைக் கோர்த்து அவைகளை ஆஸநம் முடியும்வரைத் தொங்கவிடவேண்டும். (ஸூத்திரம் – கயிறு.)

𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌚 𑌪𑌾𑌦𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌫𑌲𑌕𑌾𑌂 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌗𑍍𑌰𑍇 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾𑌕𑌾𑌰𑌂 𑌲𑍋𑌹𑍇 𑌪𑌾𑌷𑌾𑌣𑌕𑍇𑌽𑌥𑌵𑌾 ॥ ௭ ॥

𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑍁𑌷𑌿𑌰𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌬𑌨𑍍𑌧𑌯𑍇𑌤𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌵𑌿𑌸𑍍𑌤𑍃𑌤𑌃 ।
𑌫𑌲𑌕𑍇 𑌯𑍋𑌜𑌯𑍇𑌦𑍍𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑍇 ॥ ௮ ॥

𑌪𑍁𑌰𑌃𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌯𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
[𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌦𑍇𑌶𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌶𑍍𑌚 𑌕𑌾𑌯𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।]
𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍇 𑌚𑌾𑌸𑌨𑍇 𑌵𑌾𑌪𑌿 𑌪𑌞𑍍𑌚𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑌿𑌤𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ॥ ௯ ॥

𑌮𑍁𑌖𑌾𑌨𑍍𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌲𑍍𑌲𑌮𑍍𑌬𑌂 𑌸𑌪𑍍𑌤𑌮𑌿𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍 ।
[𑌮𑍁𑌖𑌾𑌨𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌲𑍍𑌲𑌮𑍍𑌬𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌸𑌪𑍍𑌤𑌕𑌮𑍍 ।]
𑌤𑌤𑍍𑌪𑍃𑌷𑍍𑌠𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵(𑌯𑍋)𑌃 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 (𑌮𑍇)𑌢𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥ ௰ ॥

7–11. இவ்விதம் யுக்தியாகச் செய்து, அப்பாதத்திற்குமேலே, பிரலம்ப பலகையை வைக்கவேண்டும். அதன்பிறகு; சில்பிசிரேஷ்டனாகிய ஒருவன், உலோகத்தினாலோ கருங்கல்லினாலோ பந்து போன்ற வடிவத்தில் உருண்டையாகச் செய்து, அதன் நடுவில் துவாரமிட்டு, ஸூத்திரத்தின் நுனியில் இணைக்கவேண்டும். அதன் பிறகு அதனைப் பலகையில் கட்டவேண்டும். சூத்திர மனைத்தும் இவ்வாறே கூறப்படுகின்றது. நின்ற நிலையிலுள்ள விக்ரஹமாயினும்; உட்கார்ந்த நிலையிலுள்ள விக்ரஹமாயினும்; அதனுடைய முன்பின்புறமாகிய பார்சுவங்களில் (பக்கபாகங்களில்) நான்கு ஸூத்திரங்களையும், உடலின் நடுவில் ஒரு ஸூத்திரத்தையும் தொங்கவிடவேண்டும். இது பஞ்சசூத்திரமெனக் கூறப்பட்டதாம். முகத்தின் முடிவில் (இருபுறத்திலும்) இரண்டு சூத்திரங்களைத் தொங்கவிடவேண்டும். இவ்விரண்டுடன் ஏழு சூத்திரங்களாயின. முகாந்த சூத்திரங்களுக்குப் பின்

நவஸூத்ரமிதி ப்ரோக்தமேகாதஶமிஹோச்யதே ।
கக்ஷாந்தரம் த்வயோ ஸூத்ரம் லம்பயேத்து த்விஸூத்ரகம் ॥ ௰௧ ॥
[கக்ஷாந்தர த்வயே ஸூத்ரம் லம்பயேத் த்வித்விஸூத்ரகம் ॥]

அதவா ப்ருஷ்டமத்யே து ஸூத்ர(ம்)ச(ஹ)ந்வ(ம்) லம்பயேத் ।
முகாந்திகக்ஷா முகாமத்யே(த்யம்) மத்யஸூத்ரம்
ப்ரதானகம் ॥ ௰௨ ॥

அந்யதா பார்ஶ்வதோ தேஶே ஸர்வஶம் ச்யுத்யாதி லம்பயேத் ।
பார்ஶ்வயோர் மத்யயோர்வா கர்(க)க்ஷேர் வா பாஹு-
மூலயோ: ॥ ௰௩ ॥

லம்பயேத்ஸூத்ரமித்யுக்தமேதேகாதஶம் ததா ।
பரஹஸ்தே பார்ஶ்வயோர் ஸூத்ரம் த்ரிகக்ஷா மத்யமே ஸ்யாத் ॥ ௰௪ ॥

புறத்தில் சிரத்தின் பக்கங்களில் இரண்டு சூத்திரங்களைத் தொங்கவிடவேண்டும். இவ்விரண்டுடன் ஒன்பது சூத்திரங்கள் கூறப்பட்டன. இரண்டு கக்ஷங்களின் மத்தியில் இரு சூத்திரங்களைத் தொங்கவிட வேண்டும். இப்பொழுது பதினொரு சூத்திரங்களெனக் கூறப்படுகின்றது.

12–15. அல்லது; பின்புறத்தின் மத்தியில் சூத்திரத்தைச் செய்யலாம். அப்பொழுது முகாந்த சூத்திரமெனும் ஹந்வந்த சூத்திரங்களுடனும், பின்புறத்தில் சிரத்தின் பார்சுவத்திலுள்ள ஹந்வந்தசூத்திரங்களுடனும், நான்கு திசைகளிலும் நான்கு சூத்திரங்களுடன் கூடிய மத்யசூத்திரமானது பிரதானமாகின்றது. இதுவும் பஞ்சசூத்திரமாகும். அவ்வாறில்லாவிடில்; முன்புறத்தில் பிரதானசூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். சூத்திரங்களெல்லாவற்றையும், மத்தியசூத்திரத்தை முதலாகக் கொண்டதாகவே தொங்கவிடவேண்டும். ஆகவே; நாஸாபுடபார்ச்வ சூத்திரங்கள் இரண்டு, முகாந்த சூத்திரங்கள்

ஶேஷம் து ஸப்தஸூத்ரம் ஸ்யாதாஸநே ச ப்ரகல்பயேத் ।
ஸ்தாநகே ருத்ரஸூத்ரம் ஸ்யால்லம்பயேத்து விசக்ஷண: ॥ ௧௫ ॥

ஶிகாமணிஸ்(ணே:) து மௌள்யக்ரே மத்யமே (கேஶாந்தே)
மௌளிமத்யமே ।
மௌளிமூலம்(லே) ச பட்டம் (ட்டே) ச லலாடஸ்ய து மத்யமே ॥௧௬

ப்ருவயோ(வோர்)மத்யமே நாஸிமத்யமே ஹநுமத்யமே ।
ஹிக்கா ச (யா) மத்யமே சைவ ததா ஹ்ருதயமத்யமே ॥ ௧௭ ॥

தஸ்யாயோ நாபிமத்யே ச மேட்ரமத்யம்(த்யே) ததைவ ச ।
ஊருமத்யயோ(யோ)ர்மத்யே ஜாநயோ(ந்வோ)ர்மத்யமே
ததா ॥ ௧௮ ॥

இரண்டு, கக்ஷசூத்திரங்கள் இரண்டு, பரபாஹு சூத்திரங்கள் இரண்டு, பார்ச்வ(பக்க) சூத்திரங்களிரண்டு, இவை: மத்யசூத்திரத்துடன் பதினொன்று எனவும் இவைகளை முறையே தொங்கவிடவேண்டுமெனவும் கூறப்பட்டிருக்கின்றது. கூறப்பட்ட பதினோரு சூத்திரங்களில் பரஹஸ்த சூத்திரங்கள் புடபார்ச்வ சூத்திரங்கள் இவை நான்கையும் நீக்கி, எஞ்சிய ஏழு சூத்திரங்களை, உட்கார்ந்த நிலையிலுள்ள விக்ரஹவிஷயத்தில் கல்பிக்கவேண்டும். நின்ற நிலையிலுள்ள விக்ரஹவிஷயத்திலோ, பதினோரு சூத்திரங்களும் ஏற்றவைகளாம். சூத்திரவிஷயங்களைக் கற்றறிந்தவன், இவைகளைத் தொங்கவிடவேண்டும்.

16-19½. இப்பொழுது மத்திய சூத்திரத்தைத் தொங்கவிடும் முறை கூறப்படுகின்றது. சிகாமணியின் மத்தியத்திலும், மௌள்யக்கிரமான கேசாந்தத்திலும், மௌளிமத்யத்திலும், மௌளிமூலமாகிய பட்டத்திலும், நெற்றியின் நடுவிலும், புருவங்களின் நடுவிலும், மூக்கின் நடுவிலும், முகவாய்க்கட்டையின் நடுவிலும், கழுத்தைச்

𑌨𑌾𑌡𑍀𑌕𑌾𑌜𑌯𑍋(𑌯)𑌃 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍀𑌮𑌧𑍍𑌯𑍋(𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑍋𑌸𑍍𑌤𑍁)𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌤𑌥𑌾 ।
𑌤𑌲𑌮𑌧𑍍𑌯𑌜𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌤𑌥𑌾 ॥ ௰௯ ॥
[𑌤𑌲𑌜𑌙𑍍𑌘𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌤𑌥𑌾 ॥]

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍𑌤𑌜𑍍𑌞𑍋 𑌨𑌾𑌸𑌾𑌗𑍍𑌰𑍇 𑌸𑍍𑌪𑍃𑌶𑍍𑌯𑌯𑍇𑌚𑍍𑌚 𑌪𑌾𑌯𑍁𑌃 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌚𑍍𑌛𑌿𑌖𑌾𑌮𑌣𑌿𑌂 𑌯𑌾𑌵𑌤𑍍 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂 𑌅𑌰𑍍𑌕𑌭𑌾𑌗𑌕𑌮𑍍 ॥ ௨௰ ॥
[𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌚𑍍𑌛𑌿𑌖𑌾𑌮𑌣𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌅𑌰𑍍𑌕𑌭𑌾𑌗𑌕𑌮𑍍 ॥]

𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 (𑌤𑍁) 𑌮𑍌𑌲𑌿𑌮𑍂𑌲𑌾𑌨𑍍𑌤𑌂 𑌰𑌸𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑌂(𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍)𑌲𑌲𑌾𑌟𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤(𑌮𑌧𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑍇)𑌮𑌨𑍍𑌤𑌰𑌂 𑌅𑌂𑌶𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௧ ॥

𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌅𑌨𑍍𑌤(𑌰𑌾𑌨𑍍𑌤)𑌰𑌂 𑌤𑍁 𑌷𑌡𑌂𑌶𑌕𑌮𑍍 ।
𑌤𑌤𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌸𑍍𑌤𑌨𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌚 𑌅𑌨𑍍𑌤(𑌰𑌾𑌨𑍍𑌤)𑌰𑌂 𑌯𑌵𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௨௨ ॥

சுற்றிய தோள் எலும்பின் நடுவிலும், மார்பின் நடுவிலும், அதன்கீழ் நாபியின் நடுவிலும், ஆண்குறியின் நடுவிலும், அடித்துடைகளின் நடுவிலும், முழங்கால்களின் நடுவிலும், நளகைகளின் நடுவிலும், குதிகால்களின் நடுவிலும், பததலங்களின் நடுவிலும், கட்டைவிரல்களின் நடுவிலும், இருக்கும்படியும்; மூக்கின் நுனியையும், வயிற்றையும் ஸ்பரிசிக்கும்படியும்; மத்யசூத்திரத்தை அறிஞன் தொங்கவிடவேண்டும்.

20–28. இப்பொழுது மத்திய சூத்திரத்திலிருந்து, அந்த அந்த ஸ்தானங்களுக்கு ஏற்படும் இடைவெளியான, ஒதுக்கம் கூறப்படுகின்றது. அதாவது:—சூத்திரத்திலிருந்து சிகாமணி வரையில் உள்ள ஒதுக்கம். பன்னிரண்டு அங்குலங்களாகும். சூத்திரத்திலிருந்து மௌளிமூலம் முடியவுள்ள ஒதுக்கம், ஆறு அங்குலங்களாகும். சூத்திரத்திலிருந்து நடுநெற்றி முடியவுள்ள ஒதுக்கம்,

தத்ஸூத்ரான்நாபிஸீமாந்தம் அங்(கு)லம் து ஶிவாம்ஶகம் ।
தத்ஸூத்ரான்மேட்ரமூலாந்தம் அங்(கு)லம் து
குணாம்ஶகம் ॥ 23 ॥

ஸ்தானகே சாஸனே சாபி ஸ்தானகேஷு (து) விஶேஷத: ।
பார்ஶ்வஸூத்ரத்வயம் கார்யம் அங்(கு)லம் ததிஹோச்யதே ॥ 24 ॥

தத்ஸூத்ராத்பாதமூலாந்தம் அங்(கு)லம் தத் த்விமாத்ரகம் ।
ஸூத்ரம் ச (த்ராத்) ஜானுமத்யம் தத்ஸார்தவேதாம்ஶ-
காங்குலம் ॥ 25 ॥

தத்ஸூத்ராஜ்ஜங்கயோர்மத்யம் அங்(கு)லம் து ஷடம்ஶகம் ।
ஸூத்ராந்தம் (து) நளகாந்தம் ஸ்யாத் (து) ஸார்த-
ஸப்தாம்ஶகம் பவேத் ॥ 26 ॥

இரண்டு அங்குலங்களாகும். சூத்திரத்திலிருந்து ஹிக்கையின் நடுப்பிரதேசத்தின் ஒதுக்கம், ஆறு அங்குலங்களாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து ஹிருதயம் முடியவுள்ள ஒதுக்கம், அரை அங்குலமாகும். அந்த சூத்திரத்திலிருந்து தொப்புள் முடியவுள்ள ஒதுக்கம், ஓரங்குலமாகும். அந்த சூத்திரத்திலிருந்து ஆண்குறியினடி முடியவுள்ள ஒதுக்கம், மூன்றங்குலங்களாகும். இவை யாவும் ஸ்தானகமூர்த்தி யானாலும் ஆஸனமூர்த்தி யானாலும் பொதுவிதியாகும். ஸ்தானகமூர்த்தத்திலோ, பார்ச்வ சூத்திரங்களிரண்டு விசேஷமாகக் கூறப்பட்டுள்ளன. அதனாலேற்படும் ஒதுக்கம், இப்பொழுது கூறப்படுகின்றது. அந்த சூத்திரத்திலிருந்து அடித்துடை முடிவான ஒதுக்கம், இரண்டங்குலங்களாம். சூத்திரத்திலிருந்து முழங்கால் நடுமுடிவான ஒதுக்கம், நாலரை அங்குலங்களாம். அந்த சூத்திரத்திலிருந்து கண்டைக்கால்களின் நடுமுடிவான ஒதுக்கம், ஆறு அங்குலங்களாம். சூத்திரத்தி

𑌸𑌮𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 [illegible] 𑌕𑌾𑌯𑌞𑍍𑌚𑌰𑍍𑌜𑍍𑌵𑌾𑌯𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑌾𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮(𑌧𑍍𑌯𑌂)𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵(𑌹𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂
𑌅𑌷𑍍𑌟𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ॥ ௨௭ ॥

𑌤𑌲𑌯𑍋𑌰𑍍𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮(𑌧𑍍𑌯𑌂)𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵(𑌹𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑍁 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ।
𑌤𑌤𑍍𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮(𑌷𑌿𑌕𑍍𑌤𑌯𑍋𑌃)𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵(𑌹𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂
𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ॥ ௨௮ ॥

𑌨𑌲𑌕𑌂(𑌕𑍇)𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵(𑌹𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑍁
𑌰𑌸𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ।
𑌜𑌙𑍍𑌘𑌾𑌮𑌧𑍍𑌯𑌂 (𑌧𑍍𑌯𑍇) 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵(𑌹𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑍁
𑌶𑌰𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ॥ ௨௯ ॥

𑌜𑌾𑌨𑍁𑌮𑌧𑍍𑌯(𑌧𑍍𑌯𑍇) 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵(𑌹𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 ।
𑌊𑌰𑍁𑌮𑌧𑍍𑌯𑌂 (𑌧𑍍𑌯𑍇) 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌪𑌾𑌨𑍍𑌤𑌰𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௩௰ ॥

லிருந்து நளகை முடிவான ஒதுக்கம், ஏழரை அங்குலங்களாம். நின்ற நிலையிலுள்ள இந்த விக்ரஹத்தை; சமமான பாதங்களை உடையதாகவும், நிமிர்ந்து நேரான உடலுடையதாகவும் செய்யவேண்டும். (ஆகவே) அந்த சூத்திரத்திலிருந்து கால் கட்டைவிரல்களின் நடுமுடிவான ஒதுக்கம், எட்டு அங்குலங்களாம். அந்த சூத்திரத்திலிருந்து பததலங்களின் நடுமுடிவான ஒதுக்கம், ஆறு அங்குலங்களாம். அதனின்றும் குதிகால்களின் நடுமுடிவான ஒதுக்கம், நான்கு அங்குலங்களாம்.

29-30½. இப்பொழுது அந்த அந்த ஸ்தானங்களிரண்டிற்கும் நடுவிலுள்ள ஒதுக்கம், கூறப்படுகின்றது. கணுக்காலுக்கு மேல்பாகமான கண்டைக்காலின் சிறுத்த பாகமான நளகைகளிரண்டிற்கும் நடுவிலுள்ள ஒதுக்கம், ஆறு அங்குலங்களாகும். நடுகண்டைக்கால்களிரண்டிற்கும் நடுவிலுள்ள ஒதுக்கம், ஐந்து அங்குலங்களாம். நடு

𑌜𑌾𑌨𑍁𑌨𑍋(𑌰𑍍𑌨𑍋) 𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑍇𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌊𑌰𑍍𑌵𑍋𑌶𑍍𑌚 𑌯𑍁𑌗𑍍𑌮𑌂 𑌮𑍂𑌲𑌸𑍍𑌥𑍇 𑌤𑍍𑌵𑍇𑌕𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑌿𑌹𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௩௧ ॥

𑌶𑍍𑌰𑍋𑌣𑍍𑌯𑌾(𑌃)𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚 𑌅(𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤)𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑍁
𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।

𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌾𑌤𑍍𑌕𑌟𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌂 𑌅(𑌪𑍃𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌤)𑌨𑍍𑌤𑌰𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
(𑌭𑌵𑍇𑌤𑍍) ॥ ௩௨ ॥

𑌅𑌥𑌵𑌾 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌮𑌣𑌿𑌬𑌨𑍍𑌧(𑌂) 𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂(𑌲𑌯𑍋𑌃) 𑌚 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌚 𑌅(𑌮𑌧𑍍𑌯𑌾𑌵𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂
𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௩௩ ॥

𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑍇 𑌚𑌾𑌸𑌨𑍇𑌽𑌪𑌿 𑌵𑌾 ।

முழங்கால்களிரண்டிற்கும் நடுவிலுள்ள ஒதுக்கம், நான்கு அங்குலங்களாகும். நடுத்துடைகளிரண்டிற்கும் நடுவிலுள்ள ஒதுக்கம், இரண்டு அங்குலங்களாம். அடித்துடைகளிரண்டிற்கும் நடுவிலுள்ள ஒதுக்கம், ஓரங்குலமாகும்.

31-33½, இரு கைகளையும் தொங்கவிடவேண்டும். அவ்வாறு தொங்கும் கைகளின் ஒதுக்கம், கூறப்படுகின்றது. சுரோணியிலிருந்து (பிருஷ்டபாகத்திலிருந்து) முழங்கைப் பக்கம் முடிவான ஒதுக்கம், ஆறு அங்குலங்களாகும். பிரகோஷ்டத்திலிருந்து (முழங்கைக்கு அடுத்த முன்கரத்திலிருந்து) இடுப்பு வரையுள்ள ஒதுக்கம், மூன்று அங்குலங்களாகும். அல்லது இரண்டங்குலமுடையதும் ஆகலாம். (இடுப்பிலிருந்து) மணிக்கட்டு வரையுள்ள ஒதுக்கம், பத்து அங்குலங்களாகும். நடுவிரலுக்கும் பார்சுவத்திற்கும் நடுவான ஒதுக்கம், பத்து அங்குலங்களாம். நின்ற நிலையிலோ உட்கார்ந்த நிலையிலோ, தேவர்களுடையவும் தேவிகளுடையவும், விக்ரஹங்களின் ஒதுக்கம், இவ்வாறு கூறப்பட்டது.

ஊர்த்வகாயஸமம் கார்யம் ஸ்திதாஸநவிஶாலகம் || ௩௪ ||

ஜாநு(நூ)ர்த்வாத் கேஶபர்யந்தம் யத்தத்ஸமம் த்ரி ஸர்ஜாவிதி (தத்
த்ரிகோணகம்) |

ஏகஜாநுபாஹ்யே து பாஹுபாஹ்யம் து தத்ஸமம் ||௩௫||

பாஹுஜாநுத்வயம் சைவ ஸவ்யாபஸவ்யம் ஏகதஃ |

மேட்ராந்தம் குல்பஶீர்ஷாந்தம் அ(நி)ம்நம் து
ஷடங்குலம் || ௩௬ ||

ப்ருஷ்டாத் கூர்பராந்தே து பார்ஶ்வம் து ஷடங்குலம் !

ப்ரகோஷ்டாக்ரம் தலம் சைவ பஞ்சாம்ஶம் வர்திவிந்யஸேத் || ௩௭ ||

34–38. உட்கார்ந்த நிலையிலுள்ள மூர்த்தியாயிருந்தால்; வீற்றிருக்கும் பத்மாஸனத்தின் அகலத்தை, மேலுடலின் அளவுக்குச் சமமான அளவுடையதாகச் செய்யவேண்டும். முழங்காலுக்கு மேலே கேசாந்தம் முடியவுள்ள யாதாமொரு அளவுண்டோ, அதற்குச் சமமாய் முக்கோண வடிவமுடையதாய் இருக்கவேண்டும். ஒருபுறத்து முழங்காலுக்கு வெளியிலிருந்து, மற்றொரு புறத்து பாஹுபாஹ்யம் (தோளின் வெளிப்புறம்) வரையில் இடமிருந்து வலமும் வலமிருந்து இடமுமாக அளக்கவேண்டும். இந்த அளவானது, மேலுடலின் அளவிற்குச் சமமாக இருக்கவேண்டும். வீற்றிருக்கும் மூர்த்தியின்; ஆண்குறி முடிவிலிருந்து கணுக்காலின் கணு முடிவாயுள்ள ஒதுக்கம், ஆறு அங்குலங்களாம். பிருஷ்டபாகத்திலிருந்து முழங்கைவரையுள்ள பார்ச்வ ஒதுக்கம், ஆறு அங்குலங்கள்ாகும். முழங்கைக்கு முன்னுள்ள பிரகோஷ்டமும் (மணிக்கட்டுவரையுள்ள பாகமும்) நுனிமுடியவுள்ள கரதலத்தின் பாகமும், ஐந்தங்குலங்களுடையனவாம். (இவைகளைச் சமமாக நிறுவவேண்டுமெனக் கருத்தாம்). இவ்வாறு வீற்றிருக்கும் மூர்த்தியானது, அர்த்தாஸன

𑌮𑌧𑍍𑌯𑌮𑌂(𑌮𑌧𑍍𑌯𑌂) 𑌤𑌸𑍍𑌯𑌾𑌸𑌨𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌪𑍀𑌠𑌪𑌾𑌦𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌜𑍍𑌜𑌾𑌨𑍍𑌵𑌾𑌸𑍍𑌵𑌜𑌿𑌕𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌗𑍁𑌲𑍌 𑌨𑌚𑍈𑌵 𑌚 ॥ ௩௮ ॥
[𑌤𑌜𑍍𑌜𑌾𑌨𑍍𑌵𑌾𑌸𑍍𑌵𑌜𑌿𑌕𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌗𑍁𑌲𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁 𑌵𑌾 ॥]

𑌤𑌤𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌲𑍍𑌲𑌮𑍍𑌬𑌪𑌾𑌦𑌾𑌗𑍍𑌰 𑌦𑍍𑌯(𑌹𑍍𑌯)𑌨𑍍𑌤𑌰𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌂𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 (𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑌾𑌂) 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍀𑌨𑌾𑌮𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂
𑌤𑌦𑌾𑌸𑌨𑌮𑍍 ॥ ௩௯ ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑍇 𑌚 𑌮𑌧𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌪𑍃𑌷𑍍𑌠𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌦𑍇𑌵 𑌮𑍌𑌲𑍍𑌯𑌗𑍍𑌰 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑍌𑌲𑌿𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 ॥ ௪௦ ॥

𑌤𑌤𑍍𑌕𑌨𑍍𑌧𑌰 (𑌤𑌦𑌧𑌸𑍍𑌚) 𑌕𑌕𑍍𑌷𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌂𑌶𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
𑌜𑌙𑍍𑌘𑌸𑍍𑌯 𑌦𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑍋𑌶𑍍𑌚 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 ॥ ௪௧ ॥
[𑌜𑌙𑍍𑌘𑌸𑍍𑌥𑌿𑌤𑌯𑍇 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍀𑌸𑍍𑌥𑌿𑌤𑌯𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 ॥]

முடையது (பாதி வீற்றிருக்கும் நிலைகொண்டது). ஆனால்; அந்த விக்ரஹத்தின் ஒரு காலைத் தொங்கவிடவேண்டும். அவ்வாறு தொங்கவிட்ட பாதமானது, மடக்கிய மற்றொரு பாதத்தின் பார்சுவத்தில், இரண்டு அல்லது மூன்று அங்குலங்களில் திகழ்வதாகும்.

39-42. அந்த மத்திய சூத்திரத்திலிருந்து தொங்கும் காலின் நுனித்தலத்தின் முடிவளவான ஒதுக்கம், பன்னிரண்டு அங்குலங்களாகும் ஸகலவிதமான தேவர்களுடையவும் தேவிகளுடையவும், உட்கார்ந்தநிலையிவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது. முன்புறத்திலுள்ள மத்யமஸூத்திரமானது கூறப்பட்டது. இதுபோலும் பிருஷ்டசூத்திரத்தை (பின்புறம் கூறப்பட்ட மத்யமசூத்திரத்தை)த் தொங்கவிடவேண்டும். அதன் முறையாவது :—உச்சித்தலையின் நடுவிலும், அடித்தலையின் நடுவிலும், அதன்கீழ் பின்கழுத்தின் நடுவிலும், வம்சத்தின் (முதுகெலும்பின்) நடுவிலும், பிருஷ்டங்களிரண்டின் நடுவிலும், இரு

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ ௪௨ ॥

[illegible]
[illegible] ॥ ௪௩ ॥

[illegible]
[illegible]
[illegible] ॥ ௪௪ ॥

* [illegible]
[illegible]

துடைகளின் நடுவிலும், முழங்கால் பின்புறமிரண்டின் நடுவிலும், குதிகாலிரண்டின் நடுவிலும் தொங்கவிட வேண்டும். இவ்வாறு பரஸூத்திரம் கூறப்பட்டது. (முன் புறமுள்ள மத்யசூத்திரத்திற்கு பூர்வசூத்திரமெனவும், பின் புறமுள்ள மத்யசூத்திரத்திற்கு பரசூத்திரமெனவும் பெய ரென, அறியத்தக்கது). இனி பார்ச்வசூத்திரம் கூறப் படுகின்றது.

43-47. பக்கத்து சூத்திரங்களைத் தொங்கவிடும் முறையாவது :—இரு காதுகளின் துவாரமத்யத்திலும், பக்கத்து உடலின் நடுவிலும், கணுக்காலின் கணுவின் நடுவிலும், தொங்கவிடவேண்டும். கர்ணபாஹ்யமெனும் பக்கத்து சூத்திரத்தின் முறையாவது :—கர்ணபிப்பலீ யெனும் குருட்டுக் காதிற்கு வெளிப்புறத்திலும், மூலக் காம்பின் நடுவிலும், துடையின் நடுவிலும், முழங்காலின் நடுவிலும், காலின் கட்டைவிரலுக்கும் அதற்கடுத்த விர லுக்கும் நடுவிலும் சூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (இது கர்ணபாஹ்யசூத்திரமெனக் கூறப்படுவதாம்.) பர ஹஸ்தத்தின் கக்ஷத்திலிருந்து சூத்திரத்தைத் தொங்க

* [illegible]

[illegible] ॥ ௪௫ ॥

[illegible] ॥ ௪௬ ॥

[illegible] ॥ ௪௭ ॥

[illegible] ॥ ௪௮ ॥

விடவேண்டும். இந்த சூத்திரம், அபரபாஹுவின் வெளியில் எட்டு அங்குலங்களிலிருப்பதாகும். இந்த கக்ஷசூத்திரமானது, இடுப்பின் பார்சுவத்திலும் சுண்டுவிரலிலும் சம்பந்தித்ததாய் இருக்கவேண்டும். சக்திதேவதைகளானல் இடுப்பிலேயே நடுவிலேயோ அல்லது வெளியிலேயோ இருக்கலாம். ஆண் தேவர்களானல், இடுப்பின் பக்கத்திலேயே தொங்கவிடவேண்டும். இவ்வாறு சில்பிசிரேஷ்டன் சரீரசூத்திரங்களைத் தொங்கவிடவேண்டும். பரஹஸ்தத்திலுள்ள பார்ச்வசூத்திரத்தையும் முழங்காலில் தொங்கும் பார்ச்வ சூத்திரத்தையும் கொண்டு கணக்கிட்டு; முழுவுடலையும் நேராகச் செய்யவேண்டும். இதன் ருஜுபாவத்தை (நேரான தன்மையை)ப் பூர்வாபரசூத்திரங்களின் சேர்க்கையினலறியவேண்டும்.

48–49. இவ்வாறு நேராக நிமிர்ந்து அழகாக அமைந்திருக்கின்ற தன்மைக்குக் கூறிய முறையானது,

सूत्रं मध्यसूत्रं च स (वाच्य)मिह मध्यसूत्रयाभिधः ।
त्रिविधाभङ्गमार्गं स्यात् (सं)भङ्गाभिः सूत्रकः ॥ ४९ ॥

उष्णीषमध्यमे चैव ललाटं मध्य(मध्ये) च मध्यमे ।
नासिकाग्रस्य मध्ये तु हिक्कापार्श्वे(पार्श्वा)स्त-
वामलके ॥ ५० ॥

पार्श्वे ऊरुकस्थाने नाभिपार्श्वे तु पार्श्वकः ।
पार्श्वसूत्रं तु मूलस्य पादम(मध्य)मध्यसूत्रं
लम्बयेत् ॥ ५१ ॥

आभङ्गं समसूत्रं स्यात्समभङ्गं प्रवक्ष्यते ।

பொதுவிதியெனக் கூறப்பட்டதாகும். இனி ஸகல தேவ மூர்த்திகளுடையவும் தேவிமூர்த்திகளுடையவும் பங்க மானத்தை (நெளிந்த நிலையினால் ஏற்படும் அளவை)க் கூறுவோம். பங்கமென்பது; ஆபங்கம் ஸமபங்கம் அதி பங்கம் யென மூன்றுவிதமாகும். இவைகளின் பங்க மானம் (நெளிவினால் குறைந்த அளவானது) முறையே, மூன்று நான்கு ஐந்து அங்குலங்களாகும்.

50–51½. ஆபங்கசூத்திரத்தின் முறையும், அதன் ஸ்தானங்களும் கூறப்படுகின்றன. உஷ்ணீஷத்தின் மத்தியிலும், நெற்றியின் மத்தியிலும், மூக்கின் நுனியின் மத்தியிலும், ஹிக்கையெனும் கழுத்துயெலும்பின் பார்சுவத்திலும், மூலக்காம்பின் முடிவிலும், நாபியின் பார்சுவத்திலும், துடை கணுக்கால்களின் பார்சுவத்திலும், மத்ய சூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். இவ்வாறு ஆபங்க சூத்திரம் கூறப்பட்டது. இனி ஸமபங்கசூத்திரம் கூறப் படுகின்றது.

உஷ்ணீஷாத்து யதா பார்ஶ்வே லலாடஸ்ய து பார்ஶ்வகே ॥ ௫௨ ॥

யத்தக (யயோக்த)பார்ஶ்வே து ஸ்தநசூசுகமத்யமே |
நாப்யூர்வோஸ்ததா ஜங்கா யதோக்தம் குல்பபார்ஶ்வகே ॥ ௫௩ ॥

ஸமம் து பங்கமித்யுக்தம் ஸமபங்கமிதி ஸ்ம்ருதம் |
உஷ்ணீஷாத்பார்ஶ்வபார்ஶ்வே து யதோக்தம் நேத்ரமத்யமே ॥ ௫௪ ॥
[உஷ்ணீஷாத்பார்ஶ்வதோ பார்ஶ்வே யதோக்தே நேத்ரமத்யமே ॥]

ஸ்தநபார்ஶ்வே ஊருமத்யே ஜாநுஜங்கா(ஜங்கே ச) மத்யத: |
* [ஸமம் து பங்கமித்யுக்தம் அதிபங்கமிதி ஸ்ம்ருதம் ॥]
தத்ராபங்கஸமயோர்மத்ய(யே மத்யே) அதி(ஹ்ய)பங்கம் து
குணாநாம் குபவத் ॥ ௫௫ ॥

52-53½ உஷ்ணீஷத்திலிருத்து பார்சுவத்திலிருக்கும்படியும், நெற்றியின் பார்சுவத்திலும், நாஸாபுடத்தின் பார்சுவத்திலும், முலைக்காம்பின் மத்யத்திலும், நாபி துடை கண்டைக்கால்களின் பார்சுவத்திலும், கணுக்காலின் பார்சுவத்திலும், சூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். இது ஸமபங்கஸூத்திரமெனக் கருதப்பட்டதாம்.

54½. முன் கூறப்பட்டதுபோலவே உஷ்ணீஷத்திலிருந்து பார்சுவத்திலிருக்கும்படி, கண்ணின் நடுவிலும், முலையின் பக்கத்திலும், துடையின் நடுவிலும், முழங்காலிலும் கண்டைக்காலிலும் நடுவிலும் சூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (இது அதிபங்கசூத்திரமெனக் கருதப்பட்டதாம்.)

55-57. இனி ஆபங்கம் ஸமபங்கம் அதிபங்கம் என்ற மூன்றுவித பங்கநிலைகளிலும், கால் கட்டைவிரல் முதல் துடையினடிவரையிலுள்ள, ஒதுக்கங்கள் முறையே

* இதமதிகம் யோஜநீயம் |

ஜாந்வோர(யோ)ரந்தரம் சாஷ்டமாத்ரம் யுக்த்யா ப்ரயோஜயேத் ।
ஊர்வாதிமூலயோர்மத்யே(த்யே) ப்ய(ஹ்ய)ந்தரம் த்வ்யர்த்த-
மாத்ரகம் ॥ ௫௬ ॥

அங்குஷ்டாக்ரத்வயோர்மத்யே(த்யே) ப்ய(ஹ்ய)ந்தரம் த்வாதஶாங்குலம் ।
ஶ்ரேஷ்டம் மாந(மேகமா)ந்தரம் ப்ரோக்தம் ஸமபங்கமிஹோச்யதே ॥ ௫௭ ॥

தத்ராங்குஷ்டயோர்மத்யே ப்ய(ஹ்ய)ந்தரம் ஷோடஶாங்குலம் ।
பார்ஷ்ண்யந்தரம் சதுர்மாத்ரம் தஶாங்குல(ஶாங்குல)ம் ஜாநு-
காந்தகம் ॥ ௫௮ ॥

ஊர்வாதிமூலயோர்மத்யே(த்யே) ப்ய(ஹ்ய)ந்தரம் சைகாங்குலம் பவேத் ।
ஏவம் து ஸமபங்கம் ஸ்யாததிபங்கமிஹோச்யதே ॥ ௫௯ ॥

கூறப்படுகின்றன. முதலாவதாக ஆபங்கநிலையில், அதன் கணுக்கால்களிரண்டின் நடுவில் ஒதுக்கம், மூன்று அங்குலங்களாம். முழங்கால்களிரண்டின் நடுவில் ஒதுக்கம், எட்டு அங்குலங்களாம். இதனை யுக்தியுடன் உபயோகிக்க வேண்டும். அடித்துடைகளிரண்டின் நடுவில் ஒதுக்கம், இரண்டரையங்குலங்களாகும். கால் கட்டைவிரல்களிரண்டின் நடுவில் ஒதுக்கம், பன்னிரண்டங்குளங்களாம். இவ்வாறு ஆபங்கத்தின் ஒதுக்கம் கூறப்பட்டது. இனி ஸமபங்கம் கூறப்படுகின்றது.

58–59. இந்த ஸமபங்க நிலையில்; அதன் கால் கட்டைவிரல்களிரண்டின் நடுவில் ஒதுக்கம், பதினாறு அங்குலங்களாகும். இரு குதிகால்களின் நடுவில் ஒதுக்கம், நான்கு அங்குலங்களேயாகும். இரு முழங்கால்களின் நடுவில் ஒதுக்கம், பத்து அங்குலங்களாகும். அடித்துடைகளிரண்டின் நடுவில் ஒதுக்கம், ஓரங்குலமாகும். இவ்வாறு ஸமபங்கத்தின் ஒதுக்கம் கூறப்பட்டது. இனி அதிபங்கம் கூறப்படுகின்றது.

பார்ஷ்ண்யோரந்தரம் ஶராங்குல்யம் தத்பாதாங்குஷ்டயோ-
ர(ஷ்கா)ந்தகே ।
தத்யோரந்த்யே விம்ஶத்யங்குல்யம் அ(ஹ்ய)ந்தரம் பவேத் ॥ ௬௦ ॥

தஜ்ஜாநுநோரந்தரே (விதயோ:)யே அ(ஹ்ய)ந்தரம்
த்வாதஶாங்குலம் ।
ஊர்வோர்மூலயோரந்தரே(யோ:)யே ஸார்தத்வ்யங்குல-
காந்தக(ர)ம் ॥ ௬௧ ॥

ஏவம்(ஏவா)திபங்கம் ஸ்யாதே தானி யுக்திதோ ந்யஸேத் ।
ஏவம் த்ரிபங்கஸூத்ரம் து (த்ராத்து) அ(ஹ்ய)ந்தரம்
மாநதோऽப்யதே ॥ ௬௨ ॥

ஸூத்ராத்து லலாடாந்தம் அ(ஹ்ய)ந்தரம் ச த்விமாத்ரகம் ।
தத்ஸூத்ராஜ்ஜா(ஜ)நுகாந்தம் ச அ(ஹ்ய)ந்தரம் து
ஷடங்குலம் ॥ ௬௩ ॥

தத்ஸூத்ராத்க்ஷுத்ரயாந்தம் ச அ(ஹ்ய)ந்தரம் பஞ்சாங்குலம் பவேத் ।
தத்ஸூத்ரான்னாஸிகாக்ராந்தம் ஷோடஶாங்குலகாந்தக(ர)ம் ॥ ௬௪ ॥

60–61½. இந்த அதிபங்கநிலையில்; அதன் குதிகால்களிரண்டின் நடுவில் ஒதுக்கம், ஐந்து அங்குலங்களாம். கால் கட்டைவிரல்களிரண்டின் நடுவில் ஒதுக்கம், இருபது அங்குலங்களாம். அதன் முழங்கால்களிரண்டின் நடுவில் ஒதுக்கம், பன்னிரண்டு அங்குலங்களாம். அடித்துடைகளிரண்டின் நடுவில் ஒதுக்கம், இரண்டரையங்குலங்களாம். இவ்வாறு அதிபங்கத்தின் ஒதுக்கம் கூறப்பட்டது. இவைகளை யுக்தியுடன் அமைக்கவேண்டும்.

62–67. இவ்வாறே ஆபங்கம் முதலிய மூன்று நிலைகளிலும், அவைகளின் மத்யம சூத்திரத்திலிருந்து மற்றைய அவயவங்களுக்குள்ள, ஒதுக்கத்தின் அளவு இங்கே கூறப்படுகின்றது. சூத்திரத்திலிருந்து நெற்றியின் முடிவளவான ஒதுக்கம், இரண்டங்குலங்களாகும். அந்த

தத்ஸூத்ராச்சிபுகாந்தம் ஸ்யாத் ஷட(ஷ)ங்குலம் து ஹ்ருதந்தமேககம் ।
தத்ஸூத்ராந்நாபிபர்யந்தம் து அத்ய(ஷ)ங்குலம் ச ஶிஷ்யதே ॥ ௬௫ ॥

தத்ஸூத்ராஜ்ஜாநுகாந்தம் ஸ்யாத் (ச) ரஸமாத்ராங்குலம் ஹி தத் ।
தத்ஸூத்ரம் (த்ராத்) நளகாந்தம் ஸ்யாத் அஷ்ட(ஷ்ட)ங்குலம்
வாஸுமாத்ரகம் ॥ ௬௬ ॥

ஸ்ரீதவாத்யாங்குலம் சைவ கார்யமுக்தம் வயஷ்டிஸ்தயா ।
நாஸாக்ரே குக்ஷிதேஶே (ச) ஸூத்ரம் து (ஸ்யாத்)
ஸ்பர்ஶனம் ஹிதம் ॥ ௬௭ ॥

ஶக்தீநாம் குக்ஷிமத்யே து ம(மே)காம்ஶமாத்ராங்குலம் து வா ।
ஶக்தீநாம் வக்ஷஸ்ஸ்தநம் து ஸ்தநாந்த கடிகாந்தகம் ॥ ௬௮ ॥

சூத்திரத்திலிருந்து தாடையின் முடிவளவான ஒதுக்கம், ஆறு அங்குலங்களாகும். அந்த சூத்திரத்திலிருந்து மார்பு முடிவளவான ஒதுக்கம், ஓரங்குலமாகும், அந்த சூத்திரத்திலிருந்து நாபியின் எல்லை முடிவான ஒதுக்கம், ஒன்றரை அங்குலமாகும். அந்த சூத்திரத்திலிருந்து ஆண்குறி முடிவான ஒதுக்கம், மூன்று அங்குலங்களாகும். அந்த சூத்திரத்திலிருந்து துடைகளினிடையில் ஒதுக்கம், இரண்டங்குலங்கள். அந்த சூத்திரத்திலிருந்து முழங்கால் முடிவான ஒதுக்கம், ஆறு அங்குலங்களாம். அந்த சூத்திரத்திலிருந்து நளகை முடிவான ஒதுக்கம், எட்டு அங்குலங்களாகும், சில்பியானவன் அவ்வாறான ஒதுக்கத்தை, நிலைபெற்ற பாதத்தில் கணக்கிட வேண்டும். மூக்கின் நுனியிலும் வயிற்றிலும் சூத்திரத்தின் தொடுதல் இருக்க வேண்டும்.

68-73. சக்திமூர்த்திகளுக்கு; மத்ய சூத்திரத்திற்கும் வயிற்றிற்கும் மத்தியில், ஒரு அங்குலம் ஒதுக்கம் இருக்க வேண்டும். (சக்திகளின் வயிறு சிறுத்திருப்பதனாலென்

தத்ஸம்பூர்ணாவஸாநாங்கம் ஹ்ர(ஹ்ர)ஸ்வம் பஞ்சாம்ஶம் ஸம்ஸ்ம்ருதம் ।
தர்ஜந்யா(:) ஸர்வபர்வாங்கம் தத் ஹ்ர(ஹ்ர)ஸ்வம் தத்
ஷட³ம்ஶம் ஸம்ஸ்ம்ருதம் ॥ ௬௯ ॥

ஸம்ஸார்த்³ரம்யம் ஹஸ்தம் ஹ்ர(ஹ்ர)ஸ்வம் ஸர்வபர்வஸு ஸர்வஶ: ।
தத்தத்ஸ்தி²தம் ஸர்வாங்கு³ஷ்டா²தை³ர்ஸ்ம்ருதம் ॥ ௭௦ ॥

ஸர்வேஷாம் வாஸ்துவஸ்தூநி ப்ரதிமாதி³ யதோ²க்தவத் ।
காரயேத்ஸர்வஸம்பத்த்யை போ⁴க³மோக்ஷப்ரஸித்³த⁴யே ॥ ௭௧ ॥

அஜ்ஞாநாத்³வாஸ்துவஸ்த்வாதி³விபரீதம் விபத்ப்ரத³ம் ।
தஸ்மாத்ஸர்வப்ரயத்நேந ஸர்வமேதத் (விபரீதம் வ)
ஸர்வத: ॥ ௭௨ ॥

பது கருத்து) சக்திதேவிகளின் கடகாக்ர ஹஸ்தமும் (வரமளிக்கும் கரமும்) புஷ்ப ஹஸ்தமும் (மலரணிந்த கரமும்) ஸ்தநங்களை முடிவாகக் கொண்டிருக்க வேண்டும். அக்கரங்களின் பெருவிரல் முடிவான ஒதுக்கம், நான்கு அங்குலங்களாகும், சுரோணியிலிருந்து அக்கரங்களின் முழங்கை முடிவளவான ஒதுக்கம், ஆறு அங்குலங்களாகும். தோளிலிருந்து தொங்கும் கரத்தின் ஒதுக்கம், முன் கூறியது எவ்வாறே, அவ்வாறேயாகும். மலர் முதலிய அந்த அந்த விசேஷ சின்னங்களுடனும் நிறம் முதலியவற்றுடனும் அணிகலம் முதலியவற்றுடனும் அலங்கரிக்கப்பெற்றிருக்கவேண்டும். எல்லோருக்கும் ஸகல சம்பத்துக்களும் ஏற்படுவதின்பொருட்டு, போகம் மோக்ஷம் இரண்டையும் அளிக்கும் முறையில் வாஸ்துவையும் அதற்கேற்ற பொருள்களையும் பிரதிமை முதலியவற்றையும், கூறியதுபோலவே செய்விக்கவேண்டும். அறியாமையினுல் வாஸ்து வஸ்து முதலியவை மாறுபட்டு, அமையுமாஞல், அது விபத்துக்களை விளைவிப்பதாகும். ஆகவே

𑌏𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾(𑌵)𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑍈𑌶𑍍𑌚
𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌮𑌣𑍍𑌡𑌪𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌶𑌾𑌲𑌾(𑌃) ।
𑌸𑌚𑌿𑌹𑍍𑌨𑌾𑌙𑍍𑌗𑌂 𑌭𑍂𑌪𑌤𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌲𑌿𑌙𑍍𑌗𑍈𑌃
𑌦𑍈𑌵𑌾𑌨𑌾𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌸𑌂𑌪𑌦𑌰𑍍𑌥𑌾(𑌰𑍍𑌥)𑌯𑌥𑌾 ॥ ௭௬ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬 (𑌸𑍂𑌤𑍍𑌰) 𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌸𑌪𑍍𑌤𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

அறிஞுன சில்பி, முற்றிலும் விபரீதமுறையைத் தவிர்க்க வேண்டும். இவ்வாறு கூறப்பட்ட வாஸ்துவையோ, அதற்குரிய வஸ்து முதலியவற்றையோ ஹர்மியங்களுடனும் பிராகாரம் முதலியவற்றுடனும் மண்டபம் முதலியவற்றுடனும் கூடிய சாலைகளையோ, அரசர்க்குரிய அடையாளங்களுடன் அரசனுடலமைப்பையோ, தேவாதிகளின் உடலமைப்பையோ, ஐச்வர்யங்கள் ஏற்படும் முறையில் செய்விக்கவேண்டும்.

மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
பிரலம்ப (ஸூத்ர) லக்ஷணவிதியெனும்
அறுபத்தி ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

ஸ்ரீமாநஸாரே வாஸ்துஶாஸ்த்ரே

மதூச்சிஷ்டவிதாநம் நாம

|| அஷ்டஷஷ்டிதமோऽத்யாய: ||

—o—

பிம்பாநாம் து மதூச்சிஷ்டம் க்ரியாம் ஸம்யக்வக்ஷ்யதேऽதுநா |
[பிம்பாநாம் து மதூச்சிஷ்டக்ரியா ஸம்யக் ப்ரவக்ஷ்யதே |]
ஶைவம் பாஶுபதம் சைவ காலாமுகம் மஹாவ்ரதம் || ௧ ||

வாமம் ச பைரவம் சைவ தந்த்ரவர்ஜ்யாதி: ஷட் க்ரமாத் |
[வாமம் ச பைரவம் சைவ தந்த்ராண்யேதாநி ஷட் க்ரமாத் |]
அகஸ்த்ய: காஶ்யபஶ்சைவ ப்ருகுர்கௌதமபார்கவா: || ௨ ||

காலவஶ்சேதி ருஷய: ப்ரோக்தா: ஶாஸ்த்ராதிநாயகா: |
[காலவஶ்சேதி ருஷய: ப்ரோக்தாஸ்தந்த்ராதிநாயகா: |]
தத்தத்தந்த்ரவஶாத்தேஷாம் க்ரியா: ஷட் ஸம்ப்ரதாயத: || ௩ ||

ஸ்ரீமானஸார வாஸ்துசாஸ்திரத்தில்

தேன்மெழுகுமுறை யெனும்

அறுபத்தி எட்டாவது அத்தியாயம்.

—o—

1–4. இப்பொழுது பிம்பங்களுக்குத் தேன்மெழுகு முறை நன்கு கூறப்படுகின்றது. இதனைக்கூறும் தந்திரங்கள் (சாஸ்திரங்கள்) சைவம் பாசுபதம் காலாமுகம் மகாவ்ரதம் வாமம் பைரவம் என ஆறு பேதங் கொண்டன. முறையே இவைகளுக்கு; அகஸ்தியர், காச்யபர், பிருகு, கௌதமர், பார்கவர், காலவர் என சாஸ்திரங்களின் பாராட்டுதலின் பொருட்டு ஆறு ரிஷிகள் கூறப்பட்டிருக்

𑌤𑌤𑍍𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌹𑌿𑌤𑌂 𑌚𑍇𑌤𑌿𑌵𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍋𑌵𑌹𑍇𑌤𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 (𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇 𑌤𑍁) 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌂 𑌦𑍋𑌷𑍋
𑌨 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௪ ॥

𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌾 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶 (𑌵𑌿𑌶𑍍𑌵𑍇𑌶𑌃) 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑌾𑌰𑌂(𑌃) 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌕𑌃 ।
𑌵𑍃𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌯𑌶𑍍𑌚𑍈𑌵 𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌚𑍈𑌵 𑌮𑌨𑍁𑌰𑍍𑌨𑌲𑌃 ॥ ௫ ॥

𑌮𑌾𑌨𑌵𑌿𑌨𑍍𑌮𑌾𑌨𑌕𑌲𑍍𑌪𑌶𑍍𑌚 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍋 𑌬𑌹𑍁𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 ।
𑌪𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌚 𑌮𑌾𑌨𑌬𑍋𑌧𑌶𑍍𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌬𑍋𑌧𑍋 𑌨𑌯𑌶𑍍𑌚 (𑌨𑌯𑌃) 𑌤𑌥𑌾 ॥ ௬ ॥

𑌆𑌦𑌿𑌸𑌾𑌰𑍋 𑌵𑌿𑌶𑌾𑌲𑌶𑍍𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑌾𑌶𑍍𑌯𑌪 𑌏𑌵 𑌚 ।
𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌬𑍋𑌧𑍋 𑌮𑌹𑌾𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍋 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑌤𑌿𑌸𑍍𑌤𑌥𑌾 ॥ ௭ ॥

கின்றனர். ஸகலவிதமான சம்பத்துக்களுக்கும் இருப்பிடமான எல்லா முறைகளையும், மேற்கூறிய அறுவகைத் தந்திரங்களைக் கொண்டும் செய்யலாம்; ஆனல், அந்த அந்த தந்திரங்களில் கூறப்பட்டபடியே அதனை முழுவதும் செய்யவேண்டும். அல்லாது, அந்த தந்திரத்திற்கு மாறுபட்டதாயிருக்குமானல்; எப்பொழுதும் ஆபத்தை விளைவிக்கும். நாம் மேற்கொண்ட தந்திரத்திற் கூறப்படாத விஷயமானல், அதனை மற்ற தந்திரத்தினின்றும் கொள்ளலாம். அது குற்றமாகாது.

5–9. இப்பொழுது சில்பத்தைக் கையாண்டுவந்த மகான்களின் பெயர்கள் கூறப்படுகின்றன. விச்வகர்மாவும், விச்வேசனும், விச்வஸாரனும், பிரபோதகனும், விருதனும், மயனும், துவஷ்டாவும், மனுவும், நளனும், மானவித்தும், மானகல்பனும், மிகுந்த கேள்வியறிவுடைய மானஸாரனும், பிரஷ்டாவும், மானபோதனும், விச்வபோதனும், நயனும், ஆதிஸாரனும், விசாலனும், விச்வகாச்யபனும், வாஸ்துபோதனும், மகாதந்திரனும், வாஸ்துவித்யாபதி

பாராஶரீயகஶ்சைவ காலயூபோ மஹா(னு) ருஷி: |
சைத்யஶ்சித்ரக ஆர்ய(ஶ்சா)பி: ஸாதக(ஸ்)ஸார-
ஸம்ஹித: || ௮ ||

பானுஶ்சேந்த்ரஶ்ச லோகஜ்ஞ: ஸௌரஶ்ச ஶில்பவித்தம: |
ததைவ (த ஏதே) ருஷய: ப்ரோக்தா த்வாத்ரிம்ஶதி: (க)
ஸம்க்யயா || ௯ ||

தாஸு (ச) கோத்ரவஶாத் ஜ்ஞாத்வா ஶில்பி(ஶ்ரீ) ஸர்வத்ர
யோக்யகம் |
ஶுக்லபக்ஷேऽதவா க்ருஷ்ணே ஸர்வமாஸேஷு காரயேத் || ௰ ||

ஶுபயோகே ஶுபநக்ஷத்ரே ஶுபமுஹூர்த்தே ஶுபலக்னகே |
உத்காதயேச்ச்வப்ரம் (தம்) ஸ்தபதிஸ்தாபகாவுபௌ || ௰௧ ||

யும், பாராசரீயகனும், காலயூபனும், சைத்யனும், சித்திரகனும், ஆர்யனும், சாதகனும், ஸாரஸம்ஹிதனும், பானுவும், உலகையறிந்த இந்திரனும், சில்பிசிரேஷ்டனான சௌரனும்; இந்த முப்பத்தி இரண்டு மஹான்களும் ரிஷிகளாகக் கூறப்பட்டிருக்கின்றனர்.

10-12. சில்பியானவன், மகான்களான விச்வகர்மா முதலியோர்களை அவர்களுடைய கோத்திரம் முதலியவற்றை நன்கு உணர்ந்து, எல்லாவற்றிலும் பொருத்தமானதை யறிந்து, எல்லா மாதங்களிலும் வளர்பிறையிலோ தேய்பிறையிலோ பேரத்தைச் செய்யவேண்டும். பேரத்தைச் செய்வதன்பொருட்டு, ஸ்தபதியும் ஸ்தாபகரும் இருவரும் சேர்ந்து, சுபமான யோகமும், சுபமான நக்ஷத்திரமும், சுபமுகூர்த்தமும் கூடிய நல்லதோர் லக்னத்தில், மண்ணெடுக்கவேண்டிய பள்ளத்தை, மந்திரங்களுடன் செய்விக்கவேண்டும். வர்தகி என்பவன் முறையே சாஸ்திரப்படி தேன்மெழுகைக் கலந்து இணைக்கவேண்டும். ஸ்தபதியின் உத்திரவையும் செய்யப்படவிருக்கும் தேவதை

மதூச்சிஷ்டம் யோஜயேத்தீமாந் ஸாங்கம் காரயேத் க்ரமாத் ।
[மதூச்சிஷ்டம் யோஜயேத்து ஸாங்கதः காரயேத் க்ரமாத் ।]
யதாரூபம் ததா த்யாத்வா பூர்வவத்யாஜ்ஞாஸ்து வர்ணகை ‖ ௧௨ ‖
[யதா ரூபம் ததா த்யாத்வா பூர்வவத்யாஜ்ஞாஞ வர்ணகைः ‖]

மதூச்சிஷ்டபிம்பஸ்ய வர்ணைः பஞ்சபிரலங்க்ருதம் ।
க்ஷணிகாபேர ஏவோக்தம் சலம் சாசலம் ததா ‖ ௧௩ ‖

* தஸ்மாத் ஸ்வரூபம் யத்நேந தத்ர தோஷோ ந வித்யதே ।
ஸர்வைः ஸ்தூலிகஸம்யுக்தம் மூர்த்தபாகநஹேவ ச ‖ ௧௪ ‖

ஶேஷேண ஸர்வபிம்பாநாம் தாம்ரவஸ்த்ரேண யோஜயேத் ।
அதவா வஸ்த்ரகாணாம் து வஸ்த்ரமத்யே ந விந்யஸேத் ‖ ௧௫ ‖

நவாங்கவேஷ்டு பாதௌ ச ஸம்யுக்தம் து ஸூத்ரேண ச ।
அதவா ஶிவபூர்வம் ந்யாஸம் லக்ஷணம் ச விஶேஷதः ‖ ௧௬ ‖

ஸ்தூலிகைः ரந்த்ரஸம்யுக்தம் ஜீர்ணவஸ்த்ரேண விந்யஸேத் ।
ஸமஸ்தத்ரவ்யஸம்வேஷ்டம் யுக்த்யா வர்ணம் ஸமாஶ்ரிதம் ‖ ௧௭ ‖

தாரவாதீநாம் ச பிம்பாநாம் மதூச்சிஷ்டம் து யோஜயேத் ।
கூர்ச்சவர்ச்சவ்யஸ்தாதிதோஷஶ்சைவம் ந வித்யதே ‖ ௧௮ ‖

யின் உருவத்தையும் நன்கு தியானித்து, பிம்பத்தைச் செய்விக்கவேண்டும்.

13. ஐந்து நிறங்களால் அலங்கரிக்கப்பெற்ற மதூச்சிஷ்டபிம்பத்தின் யாதாமொரு க்ஷணிகபேரமுண்டோ; அது சலமாகவும் அசலமாகவும் இருக்கலாம்.

* இந்த ஐந்து சுலோகங்களும் தெளிவான பொருளைக்காட்டாமல், பல கருத்தைக்கொண்டு, பிழை மிகுந்தும் இருக்கின்றமையால்; சிறந்த சில்பிகள் முதிர்ந்த அனுபவத்தினால் தெரிந்துகொள்வார்களென, மொழி பெயர்க்காமல் விடப்பட்டன. (வேறு சில்பங்களில் இம்முறை இல்லை.)

𑌸𑌰𑍍𑌵𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌬𑍇𑌰𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍 ।
𑌯𑌜𑌮𑌾𑌨𑌾𑌦𑌿 𑌸𑌂𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑍇𑌵𑍍𑌯𑌂 𑌤𑌤𑍍𑌰𑌾𑌰𑍍𑌚𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௰௯ ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑍈𑌵𑌤𑌾𑌰𑍍𑌚𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌚𑌾𑌨𑍍𑌯𑌗𑍍𑌰𑌾𑌮𑍇 𑌨𑌿𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑍁 𑌶𑌿𑌲𑍍𑌪𑍀 𑌶𑌾𑌲𑌾𑌯𑌾𑌂 𑌤𑍁 𑌬𑍇𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌯𑌤𑍇 ॥ ௨௰ ॥
[𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑍁 𑌶𑌿𑌲𑍍𑌪𑍀 𑌶𑌾𑌲𑌾𑌯𑌾𑌂 𑌚 𑌬𑍇𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍 ॥]

𑌮𑌾𑌨𑍋𑌨𑍍𑌮𑌾𑌨𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍇𑌨 𑌶𑍋𑌭𑌯𑍇𑌚𑍍𑌛𑌿𑌲𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌦𑍍𑌵𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌿𑌕𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌮𑌧𑍂𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑍇𑌨 𑌲𑍇𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௧ ॥

𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌮𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌂 𑌲𑍇𑌪𑍍𑌯 𑌶𑍋𑌷𑌯𑍇𑌤𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑍈𑌃 ।
𑌤𑌤𑍍𑌸𑌿𑌕𑍍𑌤𑌂 𑌸𑍍𑌰𑌾𑌵𑌯𑍇𑌦𑍍𑌯𑌾𑌵𑌨𑍍𑌮𑌧𑍂𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑍋𑌦𑍍𑌗𑌤𑍈𑌃 𑌪𑌚𑌨𑌃 ॥ ௨௨ ॥

𑌕𑌰𑍍𑌤𑍁𑌰𑌿𑌚𑍍𑌛𑌯𑌾 𑌲𑍋𑌹𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑍍𑌰𑍁𑌤(𑌦𑍍𑌰𑍁𑌤𑌂) 𑌤𑌥𑌾
𑌪𑍍𑌰𑌪𑍂𑌰𑌯𑍇𑌤𑍍 (𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌯𑍇𑌤𑍍) ।
𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌽𑌪𑍍𑌯𑍇𑌜𑌯𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑌕𑍍𑌷𑌾 𑌤𑌦𑌯𑌰𑍍𑌥𑌤𑍍𑌰𑌿𑌕𑌃 ॥ ௨௩ ॥
[𑌪𑍂𑌰𑌯𑍇𑌤𑍍𑌤𑍁 𑌜𑌯𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑌕𑍍𑌷𑌾𑌗𑌮𑌸𑌰𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑌮𑍍 ॥]

19–25. இவ்வாறு செய்யப்பட்ட பேரத்தை, கிராமத்தை வலம் வந்த முறையாக, யஜமானன் முதலியோர் ஸேவிக்கத் தக்கமுறையில் ஆங்கு பூசிக்கவேண்டும். அதன்பிறகு தேவதையின் பொருட்டான அதனை யெடுத்துக்கொண்டு, வேறு கிராமத்தில் அமைக்கவேண்டும். பிறகு இம்முறையின்படியே சில்பியானவன் பேரத்தை பிம்பம் வார்க்கும் சாலையை அடைவிக்கவேண்டும். சில்பி சிரேஷ்டன் அதனை மாநம் உன்மானம் இவைகளால் விளங்கச் செய்யவேண்டும். பிறகு தேன்மெழுகினால் இரண்டு அல்லது மூன்று அங்குல கனம் பூசவேண்டும். அதன் மேல்பாகத்தில் மண்ணைப் பூசவேண்டும். அதன் பிறகு அறிஞர்களைக் கொண்டு தேன்மெழுகு வெளியாகும் வரை காயவைக்கவேண்டும். அல்லது கனலில் காய்ச்சவேண்டும். பிறகு ஆக்குபவனின் விருப்பப்படி உலோகங்களை உருக்கி அதனை ஊற்றவேண்டும்; நிரம்பியபின்

𑌬𑌿𑌂𑌬𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌂 𑌸𑌂𑌶𑍋𑌧𑍍𑌯 𑌶𑍍𑌵𑍇𑌤𑌗𑌨𑍍𑌧𑌾𑌨𑍁 (𑌲𑍇𑌪)
𑌲𑍇𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌤𑍍𑌵𑍋𑌪𑌰𑌿 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌾𑌲𑍇(𑌲𑍈)𑌰𑌲𑌂𑌕𑍃𑌤𑌮𑍍 ॥௨௪॥

𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌮𑌙𑍍𑌗𑌲𑌘𑍋𑌷𑌣𑍈𑌃 ।
𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌶𑌾𑌲𑌾𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 (𑌶𑍍𑌯𑌾𑌯) 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௨௫ ॥

𑌤𑌤𑍍𑌰𑍋𑌪𑌾𑌙𑍍𑌗𑌵𑌿𑌹𑍀𑌨𑌂 𑌚𑍇𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑌨𑍍𑌧𑌾(𑌧𑌾)𑌨𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑌿𑌰𑍋 𑌵𑌾 𑌮𑌧𑍍𑌯𑌕𑌾𑌯𑍇 (𑌯𑌂) 𑌵𑌾 𑌹𑍀𑌨𑌂 𑌚𑍇𑌦𑍍𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 ॥௨௬॥

𑌕𑌰𑍍𑌤𑍃(𑌤𑌾) 𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑍋𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 𑌸𑌮𑌵𑌦𑍍𑌦𑍃𑌢𑌵𑍇𑌤𑍍 ।
𑌸𑌮𑌂 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌚𑍇𑌤𑍍 𑌸𑍍𑌥𑌾𑌨𑌨𑌾𑌶𑌂 𑌧𑌨𑌕𑍍𑌷𑌯𑌮𑍍 । ௨௭ ॥

ஜலத்தைத் தெளித்து உள்ளிருக்கும் மண்ணையகற்ற வேண்டும். பிம்பத்தின் அவயவங்களனைத்தையும் சோதித்து வெண்சந்நனத்தால் பூசவேண்டும். பிறகு பிம்பத்தைப் பீடத்தின்மேல் நிறுவி, மலர்மாலைகளால் அலங்கரித்து, ஸகலவிதமான மங்களவாத்தியகோஷங்களுடன் கிராமத்தை வலம் வந்தமுறையில், சில்பிசாலையில் பிரவேசிக்கச் செய்து முன்கூறியவாறு முறையே செய்விக்கவேண்டும்.

26-28. வார்க்கப்பட்ட அந்த பிம்பத்திற்கு, உபாங்கங்களில் குறைவிருந்தால், அதனைச் சீர்படுத்தி ஒட்ட வைத்துக்கொள்ளலாம். தலையோ நடுவுடலோ சிதைந்திருந்தால் அதனை விலக்கிவிடவேண்டும். கர்த்தாவும் சில்பியும் மனதை ஒரு நிலையில் வைத்துக்கொண்டு, முன் கூறியதுபோலவே பிம்பத்தைச் செய்யவேண்டும். அப்பொழுது பிம்பம் சரியாக ஏற்படும். மனதை ஒரு நிலையிற் செய்யாவிடில்; ஸ்தானத்திற்கு நாசமும் தனத்துக்குக் குறைவும் ஏற்படும். பல பிறவிகளில் செய்த புண்ணி

𑌅𑌧𑍈(𑌨𑍈)𑌰𑌜𑍍𑌞𑌾𑌕𑍃𑌤𑌂 𑌵𑌰𑍍𑌣𑍍𑌯𑌂 𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑍁 (𑌶𑍁𑌦𑍍𑌧𑌕𑌃) 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌸𑍁𑌧𑍀𑌃 ॥ ௨௮ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌮𑌧𑍂𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌅𑌷𑍍𑌟𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

யம், சீக்கிரத்திலழிந்துவிடும். ஆகையினுல் அறிஞன் பரிசுத்தனுய் இருந்துகொண்டு, முழு முயற்சியுடன் அதனைச் செய்விக்கவேண்டும்.

மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
தேன்மெழுகு முறையெனும்
அறுபத்து எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌅𑌙𑍍𑌗𑌦𑍂𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
॥ 𑌏𑌕𑍋𑌨𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

—o—

𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌹𑍀𑌨𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂 𑌭𑌵𑍇𑌦𑍍𑌯𑌦𑌿 ।
𑌰𑌾𑌜𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌧𑌿𑌕𑌰𑍍𑌤𑍄𑌣𑌾𑌂 𑌦𑍋𑌷𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௧ ॥

𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌚 𑌸𑌮𑍁𑌤𑍍𑌸𑍇𑌧𑍇 𑌉(𑌪𑍋)𑌪𑌾𑌨𑍇 𑌚 𑌮𑌸𑍂𑌰𑌕𑍇 ।
𑌪𑌾𑌦𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌰𑍇 𑌚𑍈𑌵 𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌗𑌲𑍇 𑌤𑌥𑌾 ॥ ௨ ॥

𑌶𑌿𑌖𑌰𑍇 𑌸𑍍𑌤𑍂𑌪𑌿𑌕𑌾𑌯𑌾𑌃 (𑌯𑌾𑌂) 𑌚 𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌪𑌞𑍍𑌜𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 (𑌷𑍁) ।
𑌦𑍍𑌵𑌾𑌰𑍇 𑌚 𑌭𑌦𑍍𑌰𑌦𑍇𑌶𑍇 𑌚 𑌮𑍃𑌣𑌾𑌲𑌾𑌦𑌿𑌷𑍁 𑌦𑍇𑌶𑌕𑍇 ॥ ௩ ॥

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
அங்கதூஷணவிதானமெனும்
அறுபத்து ஒன்பதாவது அத்தியாயம்.

—o—

1–5½. ஆலயம் முதலியவற்றின் அவயவங்களனைத்திலும் குறைவோ கூடுதலோ ஏற்படுமானல்; அரசன் அதிகாரி ஆக்குபவன் இவர்களுக்குத் தீங்கு நேரிடுமென்பது, இங்கு கூறப்படுகின்றது. அகலத்திலோ அல்லது உயரத்திலோ, உபானம், மசூரம், பாதம், பிரஸ்தரம், வேதிகை, களம், சிகரம், ஸ்தூபிகை, நாசிகை, பஞ்சரம் முதலியவற்றிலும்; துவாரம், பத்ரம், மிருணளம் முதலிய பிரதேசங்களிலும்; கர்பகிருஹத்தின் தலத்திலும், சோபானம் முதலியவற்றிலும், ஸாலமெனும் கோட்டையிலும், கோபுரத்திலும், மண்டபம் முதலியவற்றிலும், அந்தராள

ஶஹர்ம்யேமேஹே தஸ்ய ஸம்வேஶ(வஶ)ஸோபாநாதிஷு ஸர்வகே ।
சோபாந்தே: (ந்தே) ஜ்ஞவாலிந்தேஷ்வ (லிந்தேஷு) பாதநாலே
ஸுவிஸ்த்ருதே ॥ ௪ ॥

ப்ரச்சாதநே ப்ரபாங்கே ச உப (போ) ப்ராந்தே ததோத்தரே ।
பித்திதேஶே ச பாகே ச ஸர்வாங்கே(ங்கை:) ச ந
தோஷயுக் ॥ ௫ ॥

தஸ்மாத்து தோஷஸம்ப்ராப்தி: (ம்) ஶில்பித்ருஷ்டாநி (ஶில்பி
த்ருஷ்டாம் து) வாரயேத் ।
விஸ்தாரே ந்யூநத்வம் தஸ்மாத்து கர்த்துர்தாரித்ர்யகாரகம் ॥ ௬ ॥

தத்ஸ்யாதிகாநாம் பத்நீநாஶோ பவேத் ஸதா ।
ஸூதிதம் ஹ்ரஸ்வகம் பக்த்ரு வ்யாதிதோ விது: ॥ ௭ ॥

ததேவாதிகாநாம் ஶத்ருவ்ருத்திர்ந ஸம்ஶய: ।
அந்தர்ஜங்கே பஹிர்ஜங்கே நிம்நோந்நததயா ஸ்திதம் ॥ ௮ ॥

மெனுமிடைவெளியிலும், அளிந்தத்திலும், ப்ரச்சாதனத்திலும், பிரபாங்கத்திலும், உபப்ராந்தத்திலும், உத்தர பித்திதேசத்திலும், பித்திபாகத்திலும் சகல அவயவங்களாலும் குற்றமுற்று இருத்தல் கூடாது. ஆகையினுல் சில்பத்தில் காணப்பட்ட தீங்கின் நிகழ்ச்சியைத் தடுத்துக் கொள்ள வேண்டும்.

6–10. ஆகையினுல் விஸ்தாரத்தின் குறைவு, ஆக்கியோனுக்கு வறுமையை விளைவிக்கும். அதன் அதிக அளவானது, மனைவியை இழக்கச்செய்யும். அடித்தளத்தின் உயரம் குறைந்திருந்தால், வியாதியை விளைவிக்கும். அதிக அளவானுல், சத்துருக்களைப் பெருக்கும். மேல் தளத்தின் உட்புறம் வெளிப்புறம், மேடுபள்ளமுடையதாயிருந்தால்; ஆக்கியோனுடைய வம்சமே அற்றுப்போய் விடும். அந்த மேல்தளத்தின் உட்செல்லும் வழி வெளி

𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑍇𑌪𑍍𑌯𑍇𑌵 𑌤𑌦𑍍𑌵𑌰𑍍𑌗𑍇 𑌕𑌰𑍍𑌤𑍃𑌵𑌂𑌶𑌂 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍈𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌚 𑌨𑌿𑌮𑍍𑌨𑍋𑌨𑍍𑌨𑌤𑌯𑌾𑌵𑌿𑌤𑍇 ॥ ௯ ॥

𑌨𑌿𑌮𑍍𑌨𑍋𑌨𑍍𑌨𑌤𑍇𑌨 𑌵𑌾𑌪𑌿 𑌪𑍁𑌤𑍍𑌰𑌨𑌾𑌶𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍁𑌯𑌾𑌤𑍍 ।
𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌹𑍀𑌨𑍇 𑌸𑍍𑌥𑌾𑌨𑌨𑌾𑌶𑌂 𑌧𑌨𑌕𑍍𑌷𑌯𑌮𑍍 ॥ ௰ ॥

𑌵𑌪𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑌰𑍍𑌗𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌤𑌨𑍍𑌮𑌾𑌰𑍍𑌗𑍇 𑌨𑌿𑌮𑍍𑌨𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑌮𑍍 ।
𑌕𑌰𑍍𑌤𑍄𑌣𑌾𑌂 𑌕𑍍𑌷𑌯𑌰𑍋𑌗𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌮𑍇𑌨 𑌕𑌰𑌣𑍇𑌨 𑌵𑌾 ॥ ௰௧ ॥

𑌪𑌾𑌦𑌤𑍁𑌙𑍍𑌗𑌾𑌧𑌿𑌕𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌗𑍋𑌤𑍍𑌰𑌨𑌾𑌶𑌂 𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌸𑍍𑌤𑌰𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌹𑍀𑌨𑍇 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑍇𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑍍𑌷𑌣𑌾𑌦𑍇𑌵 ॥ ௰௨ ॥

𑌤𑌦𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌮𑌾𑌨𑌂 𑌚𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌣𑌂 𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌵𑍇𑌦𑌿𑌕𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌹𑍀𑌨𑌂 𑌚𑍇𑌤𑍍 𑌕𑌰𑍍𑌤𑍃𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌵𑌿𑌹𑍀𑌨𑌂 𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍 ॥ ௰௩ ॥

𑌤𑌤𑍍𑌕𑍋𑌣𑌾𑌦𑍍𑌯𑌧𑌿𑌕𑌹𑍀𑌨𑌂 𑌚𑍇𑌤𑍍 𑌶𑍋𑌕𑌜𑌨𑌂 𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌶𑌿𑌖𑌰𑌾𑌧𑌿𑌕𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌃 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌛𑍋𑌟𑌨𑌂 𑌶𑌿𑌵𑌃 ॥ ௰௪ ॥

யேறும் வழி இவைகளுள் யாதாமொன்று மேடு பள்ளமாயினும், புத்திரநாசத்தை அடைவான். அதிஷ்டானத்தின் உயரம் குறைவானல், வாழும் இடத்தின் நாசத்தையும் தனநாசத்தையும் அடைவான்.

11-15. வப்ரம் முதலிய ஸகல வர்க்கங்களிலும் அதன் மார்க்கத்தில் மேடு பள்ளம் இருக்குமாயினும், உயரத் தாழ்வு இருக்குமாயினும்; அதனை ஆக்கியோர்களுக்கு க்ஷயரோகம் ஏற்படும். பாதங்களின் உயரம் அதிகமானலோ, குறைவானலோ, கோத்திரநாசத்தையும் குலத்தின் அழிவையும் விளைவிக்கும். பிரஸ்தரத்தின் உயரம் குறையுமானல், அக்கணத்திலேயே அழிந்துவிடுவான். அதுவே அதிக அளவுடையதானல், கர்த்தா அழிந்துவிடுவான். வேதிகையின் அளவு குறையுமானல், கர்த்தாவின் பார்வை குறைந்துவிடும். அதன் கோணங்களில்

ஸ்தூபிகாதிகஹீனா சேஜ்ஜனானாம் து தரித்ரதா |
நாஸிகாதிகஹீனா சேத் கர்த்து ரோகோ பவிஷ்யதி || ௧௫ ||

பஞ்ஜராத்யங்கம் ஹீனேऽதிகம் ஶ்ரீவிநாஶநம் |
த்வாரே ச பத்ரதேஶே ச மானஹீனாதிகம் து சேத் || ௧௬ ||

கர்த்துர்மஹாரோகோ பவேத் தத்ர ராஜராஷ்ட்ரம் விநஶ்யதி |
ம்ருணால்யதிகஹீனா சேத் குக்ஷிரோகோ பவேத் த்ருவம் || ௧௭ ||

ஜாலகாதிகஹீனம் சேத் ஶ்ரீஹானிர்தனநாஶனம் |
கர்பகேஹஸ்ய மானாதிக்யம் ஹீனே சேத் க்ராமநாஶனம் || ௧௮ ||

ஹர்ம்யஸ்யாங்க்ரி ஸோபானஸ்ய ஸாயுஜ்யாத்ப்ரதேஶகம் |
உத்தரம் ச தயோர்நாம் ஸாயுஜ்யம் ஸ்யாத் ததீத்ருஶகம் || ௧௯ ||

அதிகக் குறைவு இருக்குமானல், உணவு அற்றுவிடும். சிகரமெனும் அங்கத்தில் அதிகமோ குறைவோ ஏற்பட்டால், கர்த்தாவின் தலை வெடிக்க நேரிடும். ஸ்தூபிகை அதிகமாகவோ குறைந்ததாகவோ இருந்தால், ஜனங்களுக்கு வறுமை ஏற்படும். நாசி அதிகமாகவோ குறைந்ததாகவோ இருக்குமானல், கர்த்தாவுக்கு ரோகம் ஏற்படும்,

16-20. பஞ்சரம் முதலிய அங்கம் குறைந்தோ அதிகமாகவோ இருந்தால், சிரீயை அழித்துவிடும். துவாரத்திலும் பத்திரதேசத்திலும் அளவு குறைந்தோ அதிகமாகவோ இருந்தால், கர்த்தாவுக்குப் பெரிய வியாதி ஏற்படும். அரசனின் அரசுரிமை அழிந்துவிடும். மிருணளியானது அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால், வயிற்றுநோவு ஏற்படும். ஜாலகம் அதிகமாகவோ குறைந்ததாகவோ இருந்தால், சிரீஹாநியும் பொருள் சேதமும் ஏற்படும். சுத்தகர்ப்பகிருஹத்தின் அளவு அதிகமாகவோ குறைவாகவோ இருந்தால், கிராமம் அழிந்துவிடும். ஹர்மியத்தின் அடித்தளம் தொடங்கி

𑌸𑌮𑌨𑍍𑌤𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌮𑍍𑌨𑌕𑌮𑌧𑍍𑌯𑌮𑍁𑌨𑍍𑌨𑌤𑌕𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌕𑍃𑌤𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑍋 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ॥ ௨௦ ॥

𑌪𑍍𑌰𑌾𑌕𑌾𑌰𑌾𑌗𑍍𑌰𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌂 (𑌶𑍇) 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌾𑌲𑌯𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ।
𑌸𑌾𑌲𑌜𑌙𑍍𑌘𑌸𑌮𑌂 𑌚𑍈𑌵 𑌧𑌾𑌮𑌜𑌙𑍍𑌘𑌸𑌮𑌂 𑌤𑍁 𑌵𑌾 ॥ ௨௧ ॥

𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌂 𑌚𑍇𑌜𑍍𑌜𑌨𑌾𑌨𑌾𑌂 𑌸𑌮𑍍𑌪𑌦𑌂 𑌹𑌰𑍇𑌤𑍍 ।
𑌸𑍋𑌪𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌹𑍀𑌨𑌂 𑌕𑌰𑍍𑌤𑌾 𑌪𑌙𑍍𑌗𑍁𑌰𑍍𑌹𑌿 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௨ ॥

𑌸𑌾𑌲𑌾𑌙𑍍𑌗𑌾𑌧𑌿𑌕𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌚𑍋𑌰𑍈𑌰𑍍𑌧𑌨𑌂 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ।
𑌗𑍋𑌪𑍁𑌰𑌾𑌙𑍍𑌗𑌾𑌧𑌿𑌕𑌂 𑌹𑍀𑌨𑌂 𑌸𑌰𑍍𑌵𑌨𑌾𑌶𑍋 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ௨௩ ॥

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌦𑌿 𑌸𑍋𑌪𑌾𑌨𑌾 𑌤𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑍂𑌨𑌾𑌧𑌿𑌕𑌂 𑌤𑍁 𑌚𑍇𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌸𑌮𑍍𑌪𑌦𑍍𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌯 𑌰𑌾𑌜𑌾 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑌶𑍍𑌯𑌤𑌿 ॥ ௨௪ ॥

ஸாலத்தின் அடித்தலம் முடியவுள்ளப் பிரதேசத்தை, உத்தமமானத்திஞல் அளக்கவேண்டும். ஜாலத்தின் உயரத்தாழ்வு, சுற்றிலும் தாழ்ந்ததாகவும் நடுவிலுயர்ந்ததாகவுமிருக்கும்படி, அமைக்கப்படவேண்டும், அறியாமையிஞல் செய்யப்பட்ட வஸ்துவானது, எல்லா ஸம்பத்துக்களையும் அழித்துவிடும்.

21–25. பிராகாரத்தின் முடிவுப் பிரதேசத்தில் பரிவாரதேவதைகளின் ஆலயம் முதலியவை இருக்கவேண்டும். அந்தப்பரிவார ஆலயமானது, ஸாலத்தின் அடித்தளத்திற்குச் சமமாகவோ தாமாவின் அடித்தளத்திற்குச் சமமாகவோ இருக்கவேண்டும். அவ்வாறல்லாது விபரீதமாயிருப்பின், ஜனங்களுடைய ஸம்பத்தை அழித்துவிடும், படிக்கட்டு அதிகமாகவோ குறைந்தோ இருந்தால், கர்த்தா கால்முடமாக ஆகிவிடுவான். ஸாலத்தின் அங்கம் அதிகமாகவோ குறைந்தோ இருந்தால், திருடர்களால் பணம் இழக்க நேரிடும். கோபுரத்தின் அங்கம் அதிகமாகவோ

अङ्गपत्र (? अथवा) सन्धे वा हीनाधिक्यं प्रमाणतः ।
कल्प्यानां परिवारादिसर्वस्वविनाशनम् ॥ २५ ॥

ऊर्ध्वशालाङ्ग(ऊर्ध्वाङ्गे)ष्वप्युच्चे वा प्रस्तरे हीनाधिकं तु चेत् ।
लोके ह्यवृष्टिरनावृष्टिः स्वयं वृष्ट्या विनश्यति ॥ २६ ॥

प्रभाङ्गमधिकं हीनं लोके दारिद्र्यमावहेत् ।
लुपमानेऽधिके हीने सज्जना विनश्यति ॥ २७ ॥

अन्तश्चैव बहिश्चैव विपरीतायतं तु चेत् ।
विद्यावृद्धिविनाशं स्याद् बन्धुनाशं भवेद् ध्रुवम् ॥ २८ ॥

कुड्याङ्गमधिकं हीनं विस्तारे चोच्छ्रयेऽपि वा ।
द्विजातिसर्ववर्णानां सर्वनाशकरं भवेत् ॥ २९ ॥

குறைந்தோ இருந்தால், முற்றிலும் நாசம் ஏற்படும். சந்தேகமில்லை. மண்டபம், ஸபை, சாலை முதலியவற்றின் அந்த அந்த அளவின், அதிகம் குறைவு என்பதேற்பட்டால்; எல்லா ஸம்பத்துக்களும் அழிந்துவிடும். அரசன் அழிந்துவிடுவான். தேசம் அழிந்துவிடும். நடுவிலோ அளிந்தத்திலோ அளவின் குறைவு நிறைவு ஏற்படுமாறைல், ஆக்கியோர்களின் பிள்ளை பேரன் முதலிய பரிவாரங்களின் அழிவு ஏற்படும்.

26–30. மேல்தளத்தின் அங்கங்களில் அளவு குறைந்தோ அதிகமாகவோ இருக்குமானல், உலகில் மழையின்மை ஏற்படும். தான் மழையினல் அழிந்துவிடும். பிரபையின் அங்கம் அதிகமாகவோ குறைந்தோ இருக்குமாயின், உலகில் வறுமையை விளைவிக்கும். லுபத்தினளவு அதிகமாகவோ குறைந்தோ இருக்குமாயின், நல்லோர் அழிய நேரிடும். உள்ளும் புறமும் மேல் கீழாயிருக்குமாயின், வித்யையின் வளர்ச்சிக்கு அழிவும் பந்துக்களின் அழிவும் ஏற்படும். சுவற்றின் அங்கம் அகலத்

भित्तिश्रोण्यधिकं हीनं स्थाननाशं धनक्षयम् ।
तत्र हीनाधिकं चैव (ता) पादस्थानाङ्घ्रिकाश्रयम् ॥ ३० ॥

सर्वेषां (षु) भित्तिमानेषु तत्र दोषा न विद्यते ।
पादस्थानं विना भित्तिं (त्तौ) सर्वदोषसमुद्भवम् ॥ ३१ ॥

यद्वास्तु यथा कुर्यात्तत्तदंशाधिकाङ्घ्रिकात् ।
तदंशं वैपरीत्येन स्यात्तु पुत्रपौत्रविनाशनम् ॥ ३२ ॥

उक्तवत्पादमङ्घ्रिकांशं कुर्यात्तद्धितं सदा ।
ऊहापोहादिकं त्वस्यां शास्त्रोक्ते तु यथा तथा ॥ ३३ ॥

ऊहहीना वोक्तहीनात्यधिकत्वे विनश्यति ।
तस्मात्तु शिल्पविज्ञैः परिगृह्योक्तवत्क्रमात् ॥ ३४ ॥

திலே உயரத்திலோ அதிகமாகவோ குறைந்தோ இருக்குமாயின், அந்தணன் முதல் எல்லா வருணத்தார்களையும் முற்றிலும் அழித்துவிடும். சுவற்றின் அடிப்புறம் அதிகமாகவோ குறைந்தோ இருந்தால், ஸ்தானநாசம் ஏற்படும். பணக்குறைவு நேரிடும். ஆங்கு பாதஸ்தானமாகிய கால்களின் ஆச்ரயம் குறைந்தோ அதிகமாகவோ இருந்தால், குற்றமில்லை.

31-36. சுவற்றின் மானங்கள் அனைத்திலும் பாதஸ்தானத்தைத் தவிர, ஸகல தோஷங்களுக்கும் இருப்பிடமாகும். எந்த எந்த வாஸ்துவை எவ்வாறு செய்ய வேண்டுமோ; அவ்வாறு அல்லாது அதனதன் அம்சங்கள் அதிகமாகவோ குறைந்தோ இருந்தால் இவ்வாருகும். அளவானது கால்களில் மாறுபட்டிருந்தால், புத்திரபௌத்திரர்களை அழித்துவிடும். காலின் அம்சம் கூறப்பட்டபடியே இருக்கவேண்டும். அவ்வாறே செய்தால், எப்பொழுதும் நன்மை தரும். சாஸ்திரத்தில் எங்கு ஊகமும் அபோஹமும் (கூட்டிக்கொள்வதும் குறைப்ப

𑌅𑌂𑌗𑌹𑍀𑌨𑌾𑌧𑌿𑌕𑌂 𑌦𑍋𑌷𑌮𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑍈𑌃 ॥ ௬௫ ॥

𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌮𑌣𑍍𑌡𑌪 𑌤𑌥𑌾𑌵𑌰𑌣𑌾𑌦𑌿𑌦𑍇𑌶𑍇
𑌸𑌾𑌂𑌶𑍇 𑌚 𑌗𑍋𑌪𑍁𑌰𑌪𑌦𑍇 𑌸𑌕𑌲𑍇𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑍇 ।
𑌦𑍋𑌷𑌾𑌧𑌿𑌕𑌂 𑌯𑌦𑌿 𑌭𑌵𑍇𑌤𑍍𑌤𑍍𑌵𑌥𑌵𑌾 𑌗𑍁𑌣𑌾𑌧𑌿
𑌤𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑍃𑌦𑍇𑌵𑌨𑍃𑌪𑌤𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌤𑌤𑍍𑌫𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ॥ ௬௬ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇
𑌅𑌂𑌗𑌦𑍂𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌏𑌕𑍋𑌨𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

தும்) கூறப்பட்டிருக்கின்றதோ எப்பொழுது கூறப்பட்டிருக்கின்றதோ; அதனை அறிந்து அப்பொழுது அவ்வாறு செய்யவேண்டும். சாஸ்திரத்திற் கூறப்படாமல் அதிகமாக ஊகிப்பவனும் குறைப்பவனுமாகிய அதிகர்த்தா அழிந்துவிடுவான். ஆகையினல் சில்பமறிந்தவர்களைக் கொண்டு, நன்கு தெரிந்துகொண்டு கூறியபடி செய்வாயாக. இவ்வாறு முன்னோர்களால், அங்கங்களின் குறைவு நிறைவுகளாலேற்படும் தோஷம் கூறப்பட்டிருக்கின்றது. அங்கங்களுடன் கூடிய பிராஸாதம், மண்டபம், வரணம் முதலிய தேசங்களிலும், கோபுரம் பதம் முதலிய எல்லாவற்றிலும்; தோஷங்கள் அதிகமாயினும் குணங்கள் அதிகமாயினும், அதன் பயன்; அதன் கர்த்தாவாகிய மனிதனிடமும், தேவரிடமும், அரசனிடமும் ஏற்பட்டு விடும்,

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
அங்கதூஷணவிதானமெனும்
அறுபத்து ஒன்பதாவது அத்யாயம் முற்றிற்று.

ஶ்ரீமாநஸாரே வாஸ்துஶாஸ்த்ரே

நயநோந்மீலநலக்ஷணம் நாம

|| ஸப்ததிதமோऽத்⁴யாய: ||

—o—

தே³வாநாமபி தே³வீநாம் ப⁴க்தாநாம் நேத்ரமோக்ஷணம் ।
லிங்கா³நாம் லக்ஷணோத்³தா⁴ரம் வஸ்த்வாதீ³நாம் யதா²க்ரமம் || ௧ ||

ஸ்த²பதி: ப்ரக்ருதி: ப்ரோக்த: ஸ்தா²பகோ ஜீவ உச்யதே ।
தஸ்மாத் க்ரியாரம்ப⁴த: (து) ஸஹ கர்மார்த²ம் ஸம்ஸதா³ || ௨ ||

ஏவம் விதா⁴ய ஆசார்யேண வஸ்த்வாதீ³நி க்ருதாந்யபி ।
ஸ்த²பதிஸ்தா²பகாப்⁴யாம் ஹாநி: (ஸ்யாத்) கர்த்ருநாஶம்
ஸமேவ ச || ௩ ||

கிம் ஸ்வதே³ஶயநோந்மேஷாத்காரணாத் ப்ரதி³யே ।
உதி³தே து ஸஹஸ்ராம்ஶௌ யதா² ஸ்பு²ரதி பங்கஜ: || ௪ ||

ஸ்ரீமானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்

நயநோன்மீலன லக்ஷணமெனும்

எழுபதாவது அத்தியாயம்.

—o—

1-6. தேவர்களுடையவும் தேவிகளுடையவும் பக்தர்களுடையவும் கண்திறப்பும்; லிங்கங்களின் லக்ஷணோத்தாரமும்; வஸ்து முதலியவற்றின் முறையும் கூறப்படுகின்றது. ஸ்தபதியென்பவன் ப்ரகிருதியாகக் கூறப்பட்டிருக்கின்ருன். ஸ்தாபகனென்பவன் ஜீவனுகக் கருதப்பட்டிருக்கின்ருன். இவ்வாறு அறிஞர்சமுதாயத்தால் கருதப்பட்டிருப்பதால், கிரியையின் தொடக்கம் முதல் ஸ்தபதியும் ஸ்தாபகனும் சேர்ந்தே அனைத்தையும் செய்ய

[illegible]
[illegible] नाशं न संशयः ॥ ௫ ॥

अथ वा नयनोन्मेषं चक्षुरुन्मीलनं भवेत् ।
तस्मात्तु नयनोन्मेषलक्षणं वक्ष्यतेऽधुना ॥ ௬ ॥

हर्म्ये वा मण्डपे वापि शास्त्र[illegible] ।
स्थापनात्पूर्व[illegible] अङ्कुरार्पणमाचरेत् ॥ ௭ ॥

पश्चात्तु शोभने लग्ने कुर्यान्नयनमोक्षणम् ।
प्रासादाभिमुखे चैव चोत्तरे वाथ दक्षिणे ॥ ௮ ॥

नयनोन्मीलनं (नेत्र) या मण्डपं कल्पयेद्बुधः ।
नवहस्तं सप्तहस्तं पञ्चहस्तमथापि वा ॥ ௯ ॥

வேண்டும். மற்றவனைக் கொண்டு செய்து, வஸ்து முதலியவை செவ்வனே செய்யப்பட்டிருப்பினும்; அந்த வஸ்துவிற்கும் வாஸ்துவிற்கும் சிதைவு ஏற்படும். கர்த்தாவுக்கும் நாசம் ஏற்படும். இக்கண்திறப்புமுறை எதற்காக? இருளைப் போக்குவதற்கு. சூரியன் உதித்தவுடன் எவ்வாறு இருள் நீங்குகின்றதோ; அவ்வாறு தெய்வத்தின் கண்களுக்கும் ஜனங்களுக்கும் இடையே மறைவாய் நின்ற அஸ்தமாநாதி, இதனுல் நீங்குகின்றது. உள்ளும் புறமும் ராகமானுல், பொருள் நாசம் ஏற்படும். சந்தேகமில்லை. கண்திறப்பைச் செய்யாவிடில் நேத்திர ரோகம் ஏற்படும். ஆகையினுல் கண் திறப்பின் இலக்கணம் இப்பொழுது கூறப்படுகின்றது.

7-11. ஸ்தபதியும் ஸ்தாபகனும், ஸ்தாபனத்திற்கு முன் ஹர்மியத்திலோ மண்டபத்திலோ, சாஸ்திரத்திற் கூறப்பட்டபடி, அங்குரார்ப்பணத்தைச் செய்யவேண்டும். அதன்பின், நல்லதொரு முகூர்த்தத்தில் கண்திறப்பைச் செய்யவேண்டும். அறிஞன் கண்திறப்பிற்கான மண்டபத்தை, பிராஸாதத்தின் எதிரிலேயோ வடக்குப் புறத்

சதுரஶ்ரஸமாகாரம் ஷோட³ஶஸ்தம்ப⁴ஸம்யுதமேவ வா |
த்³வாத³ஶஸ்தம்ப⁴ஸம்யுதம் வா கூடம் வாத² ப்ரபாங்க³கம் || ௰ ||

சதுர்தி³க்ஷு சதுர்த்³வாரம் சதுஸ்தோரணஸம்யுதம் |
தந்மண்ட³பஸ்ய மத்⁴யே து வேதி³ம் குர்யாத்³ யதோ²க்தவத் || ௰௧ ||

தத³க்³ரே சாக்³நிகுண்ட³ம் ஸ்யாத்³ கோ³மயாலேபநம் சரேத் |
வியா(தா)நத்⁴வஜஸம்யுக்தம் நாநாவஸ்த்ரேண ஸம்யுதம் || ௰௨ ||

பாதா³நாம் ஸசயம் குர்யாத் கத³லீப²லைர்யுதம் |
ஸசித்ரோல்லோசதைஶ்ச ஸம்ஸ்காரைர்ருசிரம் க்ருதம் || ௰௩ ||

[பாதா³ம்ஸ்து ஸசயம் குர்யாத் கத³லீபி⁴: ப²லைர்யுதம் |
ஸசித்ரோல்லோசதைஶ்ச ஸம்ஸ்காரைர்ருசிரம் க்ருதம் ||]

ஸ்வஸ்திகாத்³யைர்ருசிரம் க்ருதம் ரத்நை: ஸுமைஶ்ச ருசிரம் க்ருதம் |
ஸ்ரக்சந்த³நைர்த³ர்பை⁴: ஸ்வாங்கு³ரை: குஸுமைர்பூ⁴ஷணம் || ௰௪ ||

திலோ தென்புறத்திலோ கல்பிக்கவேண்டும். நான்கு மூலைகளும் ஸம அளவுகொண்ட சச்சதுரமான இந்த மண்டபத்தை ஒன்பதடி கொண்டதாகவோ ஏழடி கொண்டதாகவோ ஐந்தடி கொண்டதாகவோ கல்பிக்கலாம். இந்த மண்டபம், பதினறு தூண்களுடையதாகவோ பன்னிரண்டு தூண்களுடையதாகவோ இருக்கலாம். இதனில் கூடத்தையும், பிரபாங்கத்தையும், நான்கு திசைகளிலும் நான்கு வாயில்களையும், வாயிலின் மேல் தோரணங்களையும் செய்யவேண்டும், அந்த மண்டபத்தின் நடுவில் சாஸ்திரமுறைப்படி வேதிகையைச் செய்யவேண்டும்.

12–16. அதன் எதிரில் அக்னிகுண்டம் இருக்கவேண்டும். சாணத்தினல் மெழுகவேண்டும். விதானமெனும் மேல்கட்டு துவஜம் இவைகளுடன் பல வஸ்திரங்களுடன் கூடி இருக்கவேண்டும். பாதங்களை காய்

വേദികാപശ്ചിമേ വാഽഥ ദക്ഷിണേ വാഽഥ നൈരൃതേ।
കല്പയേത് സ്ഥണ്ഡിലം വാഽഥ ദാരവം പീഠമഥാപി വാ ॥ ൧൫ ॥

തദൂര്ധ്വേ സ്ഥാപയേദ് ബിംബം സകൂര്ചാദ്യൈരലംകൃതം।
തത്പൂര്വേ ശുക്ലപുഷ്പൈസ്തു സ്ഥണ്ഡിലം വൃത്തം ന്യസേത് ॥ ൧൬ ॥

തദൂര്ധ്വേ സ്ഥാപയേദ്ധേമപാത്രം (കും) ശ്വേതവസ്ത്രാവൃതം।
ക്ഷേളപാപൈഃ പൂര്ണം സകൂര്ചാദ്യൈരലംകൃതം ॥ ൧൭ ॥

വേദികോപരി നൈരൃത്യേ വൃത്താകാരം (കം) മണ്ഡലം।
പഞ്ചവിംശത്പദം വാഽഥ കല്പയേത് പീഠമേവ വാ ॥ ൧൮ ॥

களுடன் கூடிய வாழை மரங்களால் அலங்கரிக்கவேண்டும். மேல் பிரதேசத்தில் நாற்புறமும் அழகிய புஷ்ப மாலைகளால் அலங்கரிக்கவேண்டும். அதன் பிறகு ஸகல ரத்தினங்களாலும் அலங்கரிக்கவேண்டும். அறிஞர்களே! அதன்பின் சில்பிகளைக் கொண்டு, கண்திறப்பைச் செய்ய வேண்டும். வேதிகையின் மேற்கிலோ தெற்கிலோ நிருருதி திசையிலோ, ஸ்தண்டிலத்தையோ மரத்தினாலாகிய பீடத்தையோ கல்பிக்கவேண்டும். அதன்மேலே பிம்பத்தை ஸ்தாபித்து, நல்ல கூர்ச்சம் முதலியவற்ருல் அலங்கரிக்கவேண்டும். அதன் கீழ்திசையில் வெண்மலர்களால் வட்டமான மண்டல ஸ்தண்டிலத்தை நிறுவவேண்டும்.

17–20. அதன்மேலே சுவர்ணபாத்திரத்தை வைத்து வெண்பட்டினுல் மூடவேண்டும். இது உள்ளே பாபங்களால் நிரம்பப்பெற்றதாகும். இதனை மேலே கூர்ச்சம் முதலியவற்ருல் அலங்கரிக்கவேண்டும். வேதிகையின் மேலே நெற்குவியலினுல் வட்டமான மண்டலத்தைச் செய்யவேண்டும். அல்லது, இருபத்தைந்து கால்களை யுடைய பீடத்தைக் கல்பிக்கலாம். இதன்மேலே தர்ப்பங்

ஶ்வேதைஸ் தண்டுலரேகாபி: வஸ்த்ராத்ர பங்க்திபிஸ் ஸமலங்க்ருதயா ।
நாநாவர்ணைஶ்ச புஷ்பைஶ்ச லாஜைஶ்ச ப்ரோக்ஷயேச் சோபநாய வை ॥௧௯॥

நவகும்பாந் நவாந்வாபி பஞ்சவிம்ஶதிமேவ வா ।
விதிவத் க்ஷாளயித்வா து ஸூத்ரைராவேஷ்டனம் சரேத் ॥ ௨௰ ॥
[நவம் நவகும்பாநாம் பஞ்சவிம்ஶதிமேவ வா ।
விதிவத் க்ஷாளயித்வா து ஸூத்ரைராவேஷ்டனம் சரேத் ॥]

ஶுத்தாம்பஸா ஸம்பூர்ய வேதிகோபரி விந்யஸேத் ।
மத்யே ப்ரதானகும்பஸ் ஸ்யாத் பரிதஸ்த்வன்யகாஸ் ததா ॥ ௨௧ ॥

களைப் பரப்பி, அதன்பிறகு வெண்மையான அரிசிக்கோடு களினால் அலங்கரித்து; பல வண்ணமலர்களாலும் நெற் பொறிகளாலும், அழகின் பொருட்டுத் தூவுதல் வேண் டும். புதியதான குடங்கள் ஒன்பதையோ அல்லது இரு பத்தைந்தினையோ, முறைப்படி கழுவி, பின்பு நூல்களால் சுற்றவேண்டும்.

21–25. அதன்பிறகு சுத்தமான தண்ணீரால் நிரப்பி நடுவில் பிரதான கும்பத்தையும், முறையே சுற்றிலும் மற்ற குடும்பங்களையும், வேதிகையின்மேல் வைக்க வேண்டும். வைத்த கும்பங்களை வஸ்திரங்களாலும் கூர்ச் சம் முதலிவைகளாலும், தளிர்களாலும், பழங்களாலும், புஷ்பமாலைகளாலும், முறையுடன் அலங்கரிக்கவேண்டும், வேதியின் சமீபத்தில், சாஸ்திரத்திற் கூறப்பட்டபடி அஷ்டமங்களத் திரவியங்களை மேலே வைக்கவேண்டும். அதன்பின் அறிஞர்களான சில்பிகளைக் கால் கழுவச் செய்து, முறைப்படி ஆசமனம் செய்வித்து, கிரமமாக ஸகலீகரணத்தைச் செய்யவேண்டும். பிறகு புண்யாஹ வாசனம் செய்வித்து, பிரதிமை முதலியவற்றைத் தெளிக்க

𑌸𑌵𑌸𑍍𑌤𑍍𑌰(𑌾𑌨𑍍𑌤𑍁) 𑌪𑌰𑌿𑌸𑍍𑌤𑍀𑌰𑍍𑌯 𑌸𑌂𑌵𑍇𑌷𑍍𑌟𑍍𑌯 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿 𑌨𑍍𑌯𑌸𑍇𑌤𑍍 (𑌚𑍈𑌤𑍍𑌯𑌸𑍍𑌥)
𑌪𑌦𑍍𑌮𑌵𑌾𑌨𑍍𑌤𑍁 (𑌪𑌦𑍍𑌮𑍇𑌃) ।
𑌸𑌵𑌿𑌧𑌾𑌨(𑌂) 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌚𑍈𑌤𑍍𑌯𑌂 𑌚𑍈𑌤𑍍𑌯𑌸𑍍𑌥𑌂 𑌪𑌞𑍍𑌚𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌯-
𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌂 (𑌤𑌾𑌨𑍍𑌤𑍁) ॥ ௨௨ ॥

𑌉𑌪𑌵𑍇𑌦𑍍𑌯𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌤𑍋 𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚𑍋𑌕𑍍𑌤𑌵𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌪𑌮𑌙𑍍𑌗𑌲𑍈𑌃 ।
𑌪𑌞𑍍𑌚𑌾𑌮𑍃𑌤𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌪𑌾𑌦𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌾𑌲𑌨𑌂
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ॥ ௨௩ ॥

𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾𑌸𑌨𑌂 𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑍍𑌥𑌂 𑌸𑌕𑌲𑍀𑌕𑌰𑌣𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 ।
𑌸𑌮𑍍𑌪𑍂𑌜𑍍𑌯 𑌪𑌾𑌦𑌪𑌿𑌣𑍍𑌡𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿𑌮𑌾𑌦𑌿𑌕𑌮𑍍 ॥ ௨௪ ॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌚 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌬𑍇𑌰𑍇𑌷𑍁 𑌤𑌤𑍍𑌸𑍍𑌵𑌕𑍈𑌃 ।
𑌪𑍍𑌰𑌣𑌵𑌾𑌦𑌿 𑌨𑌮𑍋𑌨𑍍𑌤𑍇𑌨 𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑌾𑌰𑌾𑌧𑌯𑍇𑌦𑍍𑌬𑍁𑌧𑌃 ॥ ௨௫ ॥

𑌧𑍂𑌪𑌦𑍀𑌪𑌂 𑌦𑌦𑍇𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌮𑌧𑍍𑌯𑌕𑍁𑌮𑍍𑌭𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 ।
𑌆𑌰𑌾𑌧𑍍𑌯 𑌗𑌨𑍍𑌧𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌸𑍍𑌤𑍁 𑌭𑍁𑌵𑌨𑌾𑌧𑌿𑌪𑌤𑌿𑌂 𑌜𑌪𑍇𑌤𑍍 ॥ ௨௬ ॥

வேண்டும். அதன்பிறகு பிரமன் முதலிய தேவர்களை; அந்தப் பிரதிமைகளில், அவரவர்களின், பிரணவாதியான நமோந்தமான நாமமந்திரங்களினால் ஆவாகனம் செய்து, முறையே ஆராதிக்கவேண்டும்.

26–28. அறிஞன் தூபம் தீபம் இவற்றை நடுவிலுள்ள கும்பத்திற்குக் காட்டவேண்டும். கந்தம் புஷ்பம் இவற்றால் ஆராதித்தபிறகு, புவனாதிபதி மந்திரத்தை ஜபிக்கவேண்டும். பிறகு நெய் வெல்லம் கலந்த க்ஷீரான்னம் அல்லது தயிர் சாதம் நிவேதனம் செய்யவேண்டும். அதன்பிறகு தூபதீபம் காட்டி, தாம்பூலம் முதலியவற்றை நிவேதனம் செய்யவேண்டும். பிறகு தேனுமுத்திரை முதலியவற்றைக் காட்டவேண்டும். வாத்தியகோஷங்களுடன் கீதம் நிருத்தம் முதலியவற்றை நிகழ்த்தவேண்டும். அதன்பின், அறிஞனை ஸ்தபதி முறையே ஹோமத்தைச் செய்யவேண்டும்.

வ்ர தஶ-ஸஸஹ்யஷயிக்ஷீராஞம் வா நிவெதயெக் || உஎ ||
ஷஶ-வெஷெந-ஶ-ஷ்ராதீரு ஶீதாதீஞா தவொஷணெ: ।
தஷஹெ ஹ்ரவதி: வ்ராஜ்ஞா ஹொஶம் க-ய-ஶாத்தத: க்ஶாக் ||உஅ||

ஸமிஷாஜ்யவர-ம் ஶாஜாநு வ்ரதெ்யகாஷொத்தர்ம் ஶதழ ।
ஶ-ஜெதாயெந ஸம்வ்யாயா வஞவிம்ஶதிரெவ வா || உகூ ||

[ஶ-ஜாஜெ்யந த- ஸம்வ்யாய வஞவிம்ஶதிரெவ வ ॥]
ஹ்ருல்லெவம் வீஜஶ-ஞாய-ஃ ஸ்வாஹாஞம் வ்ரணவாதிகழ ।
விம்வஶாயத்ரிஶஞ்ஞெண வூணெ-ஶாஹ-திம் வ காரயெக் || ௩௦ ||

கஜிகாய-ஶாவஸாநெ த- வியிவக் விம்வஶாஶ்ரயெக் ।
வ-ண்யாஹம் வாவயிக்வா த- வ்ராஹ்மணெ: ஸஹ
வொஷணெ: ॥ ௩௧ ॥

ரத்நஶ-ஜிம் தத: க-ய-ஶாக் ஶஸ்வ-ஷெ்ஸராவ-ஃயெக் ।

29-32. அந்த ஹோமத்தில் ஸமித்து, நெய், கஞ்சி வடிக்காத சோறு, நெற்பொரி இவைகள் ஒவ்வொன்றினுலும், நூற்று எட்டு தடவை ஹோமமும்; தனி நெய்யினுல் இருபத்தைந்து தடவை ஹோர்மமும்; தவருது எண்ணிக்கையுடன், ஹிருல்லேகையெனும் பீஜாக்ஷரத்தை பிரணவம் முதலாகவும் ஸ்வாஹா முடிவாகவும் கொண்ட முறையில் உச்சரித்துச் செய்யவேண்டும். பிம்பத்திற்கேற்ற காயத்திரீ மந்திரத்தினுல் பூர்ணுகுதியைச் செய்விக்கவேண்டும். அக்கினி காரியத்தின் முடிவில் பிம்பத்தை ஆச்ரயிக்கவேண்டும். வாத்தியகோஷங்களுடன் அந்தணர்களைக் கொண்டு புண்யாஹவாசனத்தை ஜபிக்கச் செய்து, அதன்பிறகு இரத்தின சுத்தியைச் செய்யவேண்டும். அதன்பிறகு கந்தம் புஷ்பம் இவற்ருல்

ஸ்தபதி: ப்ரோக்ஷயேத் பிம்பம் ஸர்வமங்கள-
கோஷணை: ॥ ௩௨ ॥

தூபதீபம் ப்ரதத்யாத் பிம்பம் காயத்ரிமந்த்ரத: ।
ஆராத்ய கந்தபுஷ்பைஶ்ச தேனுமுத்ராம் ப்ரதர்ஶயேத் ॥ ௩௩ ॥

நவவஸ்த்ரேண ஸஞ்சாத்யாங்கம் பிம்பஸ்ய நேத்ரமோசயேத் ।
ஸர்வாங்கம் தக்ஷிணஹஸ்தேன (ஹஸ்தேன) ஸ்ப்ருஶேதேக-
சித்தவத் ॥ ௩௪ ॥

அக்ஷிரேகாம் ஸமாலிக்ய ஸவ்யேக்ஷிணி க்ருஷ்ணமண்டலம் ।
ஜ்யோதிர்மண்டலகம் த்யாத்வா ஸௌரமந்த்ரம் ஸமுச்சரேத் ॥ ௩௫ ॥

பஶ்சாத்து வாமநேத்ரே ச ஶஶிமந்த்ரம் ஸமுச்சரேத் ।
லலாடே லோசனம் த்யாத்வா வஹ்னிபீஜம் ஸமுச்சரேத் ॥ ௩௬ ॥

பூசிக்கவேண்டும். ஸகலவிதமான மங்களவாத்திய கோஷங்களுடன், பிம்பத்தை, ஸ்தபதி பிரோக்ஷிக்க வேண்டும்.

33-37½. பிறகு தூபம் தீபம் இவற்றைக் கட்டா வேண்டும். பிம்பத்தை கந்தம் புஷ்பம் இவற்ருல் பிம்ப காயத்திரீமந்திரத்தால் ஆராதித்து, தேனுமுத்திரையைக் காண்பிக்கவேண்டும். பிறகு புதிய வஸ்திரத்திஞல் பிம்பத்தின் அங்கத்தை மூடி, கண்திறப்பைச் செய்யவேண்டும். இதற்கு முன் வலது கரத்திஞல் ஸகல அவயவங்களையும் ஒரே மனமுடையவஞகத் தொடவேண்டும். முதலில் வலது கண்ணில் அக்ஷிரேகையைக் கீறி, கருவிழி மண்டலத்தைத் தேஜோமண்டலமாகத் தியாநனம் செய்து, ஸூர்யமந்திரத்தை உச்சரிக்கவேண்டும் அதன்பின் இடது கண்ணில் அக்ஷிரேகையைக் கீறி, கருவிழி மண்டலத்தைத் தேஜோமண்டலமாகத் தியானம் செய்து, சந்திர மந்திரத்தை உச்சரிக்கவேண்டும். அதேபோலும் நெற்றி

𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑍁 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌕𑌲𑍍𑌕𑍇𑌨 𑌪𑌯𑌸𑌾𑌜𑍍𑌯𑍇𑌨 𑌲𑍇𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌾𑌦𑌨𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌹𑍇𑌮𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌕𑍈𑌃 𑌸𑌹 ॥ ௩௭ ॥

𑌪𑌾𑌯𑌸𑌂 𑌧𑌨𑌧𑌾𑌨𑍍𑌯𑌾𑌦𑌿𑌰𑌾𑌶𑌿𑌕𑌂 𑌦𑌰𑍍𑌶𑌯𑍇𑌤𑍍 𑌤𑌤𑌃 ।
𑌸𑍍𑌥𑌪𑌤𑌿𑌸𑍍𑌸𑍁𑌵𑍇𑌷𑌾𑌢𑍍𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌲𑌙𑍍𑌕𑌾𑌰𑌭𑍂𑌷𑌣𑌃 ॥ ௩௮ ॥

𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌂 𑌨𑌵𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌾𑌢𑍍𑌯𑌃 𑌸𑌿𑌤𑌪𑍁𑌷𑍍𑌪𑌶𑌿𑌰𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 ॥ ௩௯ ॥

[illegible] 𑌕𑍁𑌮𑍍𑌭𑌂 𑌤𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌕𑍁𑌮𑍍𑌭𑌾𑌨𑌿 𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍𑌪𑌰𑌿𑌚𑌾𑌰𑌕𑍈𑌃 ॥ ௪௰ ॥

𑌛𑌤𑍍𑌰𑌚𑌾𑌮𑌰𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌮𑌙𑍍𑌗𑌲𑌵𑌾𑌦𑍍𑌯𑌘𑍋𑌷𑌣𑍈𑌃 ।
𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌘𑍋𑌷𑌣𑍈𑌸𑍍𑌸𑌹 ॥ ௪௧ ॥

யில் கண்ணைக் கீறி, அக்கினிபீஜத்தை உச்சரிக்கவேண்டும். அதன்பிறகு பால் நெய்யுடன் சுவர்ணக் குழம்பினால் பூசவேண்டும். பின் தங்கம் வஸ்திரம் முதலியவற்றினால் கண்களை மூடவேண்டும். பிறகு தனதானியங்களின் குவியலையும் பாயஸத்தையும் காண்பிக்கவேண்டும்.

38-42. பிறகு ஸ்தபதி சிறந்த வேடங் கொண்டவனாய், ஐந்துவிதமான அணிகள் பூண்டவனாய், வெண்சந்தனம் பூசிக்கொண்டு, புத்தாடை யுடுத்து, தங்கப் பூணூல் தரித்து, வெண்மலர்கள் சூடி, பரிசுத்தனாய் இருந்து கொண்டு, தனது வலக்கரத்தில் பிரதான கும்பத்தையும் இடக்கரத்தில் அதற்கடுத்த கும்பத்தையும் தரித்து; மற்ற கும்பங்களைப் பரிசாரகர்களைத் தரிக்கச் செய்யவேண்டும். அதன்பின்பு! குடை சாமரங்களுடனும் மங்களவாத்திய கோஷங்களுடனும் வேதகோஷங்களுடனும், ஆலயத்தை வலம் வரவேண்டும். அந்த பிம்பத்தை அடைந்ததும்,

தஸ்ய பிம்பம் ச ஸமாஶ்ரித்ய ஸஜலேநாபிஷேசயேத் ।
அந்யேந ஸர்வகும்பாநாம் ஜலேநாவாங்ககாநி து ॥ ௪௨ ॥

ஏவம் கும்பாந் பரிக்ஷிப்ய தத்தத்ஸ்தம் ஸூத்ரம் ஸந்த்யஜேத் ।
நாநாவஸ்த்ரேண ஸம்யுக்தம் நாநாபுஷ்பைரலங்க்ருதம் ॥ ௪௩ ॥

கந்தாநுலேபநாட்யம் ச ஸர்வாபரணபூஷிதம் ।
தூபதீபம் ந்ருத்தவாத்யம் கீதாதிகோஷணை: ॥ ௪௪ ॥

மூர்தாதிபாதபர்யந்தம் மாத்ருகாக்ஷரகம் ந்யஸேத் ।
பாதாதிமூர்தபர்யந்தம் பர்யாயாக்ஷரம் ந்யஸேத் ॥ ௪௫ ॥

அஷ்டத்ரிம்ஶத்கலா: ஸர்வா: தத்ததங்காநி விந்யஸேத் ।
அங்கபாதை: கரைர்வக்த்ரம் கரணாநி ச விந்யஸேத் ॥ ௪௬ ॥

வக்த்ராத்து மூலமந்த்ரேண ஸமஸ்த்யா நவநாயண: ।

பிரதானகும்பத்தின் தண்ணீரினுல் அபிஷேகம் செய்ய வேண்டும். மற்ற கும்பங்களின் நீரினுல், மற்ற அங்கங்களை அபிஷேகம் செய்யவேண்டும்.

43-47. இவ்வாறு அபிஷேகம் செய்தபின்பு, கும்பங்களின் சூத்திரங்களை அவிழ்த்துவிட்டுக் கும்பங்களை வைத்துவிட-வேண்டும். பிம்பத்தைப் பல வஸ்திரங்களாலும் பல மலர்களாலும் அலங்கரித்து, சந்தனத்தால் பூசி, அணிகளை அணிவித்து, நிருத்தகீத வாத்திய கோஷங்களுடன் தூபம் தீபம் முதலியவற்றை அளிக்கவேண்டும். சிரம் முதல் பாதம் வரை மாத்ருகாக்ஷரங்களால் நியாஸத்தையும், பாதம் முதல் சிரம் வரை பர்யாயாக்ஷரங்களால் நியாஸத்தையும் செய்து; முப்பத்து எட்டு கலைகளைத்தையும் அந்த அந்த அங்கங்களாக விசேஷ நியாஸத்தைச் செய்யவேண்டும். அங்கமாகிய பாதங்களுடனும் கரங்களுடனும் முகத்தையும் கரணங்களையும் மூலமந்திரத்

[illegible] || ௪௭ ||

[illegible] |
[illegible] || ௪௮ ||

[illegible] |
[illegible] || ௪௯ ||

[illegible] |
[illegible] || ௫௰ ||

[illegible] |
[illegible] || ௫௧ ||

[illegible] |
[illegible] || ௫௨ ||

திஞல் நியாஸமுடையதாக்க வேண்டும். பிறகு ஸம மான தியானத்தில் ஈடுபட்டவஞக, கந்தம் புஷ்பம் இவற் ருல் பூசித்து, தூபம் தீபம் அளிக்கவேண்டும்.

48–54. அதன்பிறகு நைவேத்தியம் முதலியவற்றை யும் தாம்பூலம் முதலியவற்றையும் நிவேதநம் செய்ய வேண்டும். அந்தணர்களைக்கொண்டு ஸ்வஸ்திகோஷத் துடன் அக்ஷதைகளை இடச் செய்யவேண்டும். பிறகு நிருத்தம் முதலியவற்றையும் முத்திரைகளுடன் காண் பிக்கவேண்டும். அதன்பிறகு கிராமத்தை வலம் வர வேண்டும். இவ்வாறு நயஞேன்மீலனம் கூறப்பட்டது. லிங்கத்தின் பொருட்டுள்ள லக்ஷணேத்தாரமென்பதும் சாஸ்திரத்தில் கூறப்பட்டபடி, லிங்கத்தின் மத்தியில் கோடாகக் கிழிக்கவேண்டியதாகும். இவ்வாறு கூறப் பட்ட உலோகத்திஞலாகிய பிரதிமை ஆஞலும், லிங்க மாஞலும் இந்த பிம்பங்களுக்கு; இப்பொழுது எந்த எந்த

ப்ரவாலம் சாக்³நிகோணே து மஹாநீலம் யமே ததா² ।
வைடூ³ர்யம் ந்யஸேந்நைர்ருத்யே மரகதம் பஶ்சிமே ததா² ॥ ௫௩ ॥

வாயவ்யே புஷ்பராக³ம் ச மௌக்திகம் து குபே³ரகே ।
இந்த்³ரநீலம் து சேஶே து விந்யஸேத்³விதி⁴வித்தம: ॥ ௫௪ ॥

ஸ்த²பதி: ஸ்தா²பகஶ்சைவ ஸ்தா²பயேத் பி³ம்ப³லிங்க³கம் ।
ஏவம் து ரத்நவிந்யாஸம் ஶேஷாங்க³ம் யதோ²க்தவத் ॥ ௫௫ ॥

ஹ்ருத³யகமலமத்⁴யே தீ³பவத்த்வரம் ஸ்யாத்
கமலஜஹரிருத்³ராதி³தே³வதாநாம் ச ஸர்வம் ।
விதி⁴ரிஹ ஸகலாநாமேவம் ச சக்ஷுருந்மீலநம் ச
க்ருதமிதி ரவிமுக்தம் ஜ்ஞாநஸாரம் வராணை: ॥ ௫௬ ॥

கர்மாக்கள் கூறப்பட்டனவோ, அவையனைத்தையும் செய்துவிட்டு; பிம்பம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பு, இரத்தினவிந்யாஸத்தைச் செய்விக்கவேண்டும். பிம்பம் எந்த பீடத்தில் ஸ்தாபிக்கப்படுகின்றதோ, அந்த பீடத்தின் மத்தியில் நவகோஷ்டமெனும் ஒன்பது கோஷ்டங்களைக் கல்பிக்கவேண்டும். அதன் மத்தியகோஷ்டததில் பத்மரரக ரத்தினத்தையும், கிழக்கில் வயிரத்தையும், ஆக்கினேய கோஷ்டத்தில் பவளத்தையும், தெற்கில் மகாநீலத்தையும், நிருருதியில் வைடூரியத்தையும், மேற்கில் மரதகத்தையும், வாயுதிசையில் புஷ்பராகத்தையும், வடக்கில் முத்தையும், ஈசானியத்தில் இந்திரநீலத்தையும், அறிஞன் முறையறிந்து வைக்கவேண்டும்.

55–57, இவ்வாறு இரத்தினவிந்யாஸம் கூறப்பட்டது. எஞ்சிய அங்கமானது, முன் கூறபீபட்டவாறேயாகும். இவ்வாறு பூசிக்கப்பெற்ற பிம்பத்தையோ லிங்கத்தையோ, ஸ்தபதியும் ஸ்தாபகனும் இருவரும் கூடி ஸ்தாபிக்கவேண்டும். பிரவன் விஷ்ணு முதலிய தேவர்களுடைய நயநோன்மீலனவிதி அனைத்தும், இருதயத்தாமரை

[𑌹𑍃𑌦𑌯𑌕𑌮𑌲𑌮𑌧𑍍𑌯𑍇 𑌦𑍀𑌪𑌵𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍
𑌕𑌮𑌲𑌜𑌮𑍁𑌖𑍈𑌰𑍍𑌦𑌿𑌵𑍍𑌯𑍈𑌰𑍍𑌦𑍇𑌵𑌤𑌾𑌨𑌾𑌂 𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 ।
𑌵𑌿𑌧𑌿𑌰𑌿𑌹 𑌸𑌕𑌲𑌾𑌨𑌾𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌂 𑌚
𑌕𑍃𑌤𑌿𑌰𑌿𑌹 𑌵𑌿𑌦𑍁𑌷𑌾𑌂 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑌂 𑌪𑍁𑌰𑌾𑌣𑍈𑌃 ॥]

𑌵𑌿𑌧𑌾𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑍈𑌃 𑌸𑌮𑌸𑍍𑌤𑍈𑌃
𑌦𑍇𑌵𑍈𑌰𑌿𑌦𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌰𑌂 𑌪𑍍𑌰𑌣𑍀𑌤𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌮𑍁𑌦𑍍𑌧𑍃𑌤𑍍𑌯 𑌹𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑌂
𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌕𑍃𑌤𑌂 𑌲𑍋𑌕𑌹𑌿𑌤𑌾𑌯 𑌚𑍈𑌤𑌤𑍍 ॥ ௫௭ ॥

𑌇𑌤𑌿 𑌮𑌾𑌨𑌸𑌾𑌰𑍇 𑌵𑌾𑌸𑍍𑌤𑍁𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌨𑌯𑌨𑍋𑌨𑍍𑌮𑍀𑌲𑌨-
𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌨𑌾𑌮
𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

யின் நடுவில் விளங்கும் விளக்குப்போலும் ஆகும். புண்ணியர்களான புராணமறிந்தப் பெரியோர்களால், மானஸாரமெனும் சில்பசாஸ்திரம், முழுமையானதெனக் கூறப்பட்டிருக்கின்றது. இந்த மானஸாரமெனும் சில்பசாஸ்திரமானது; பிரமன் இந்திரன் முதலிய ஸகல தேவர்களாலும் முன்பு கூறப்பட்ட சில்பசாஸ்திரங்களிலிருந்து, உலகத்தின் நன்மையின்பொருட்டு, ஸாரமாக எடுத்து, ஆக்கப்பட்டதாகும்.

மானஸாரமெனும் வாஸ்துசாஸ்திரத்தில்
நயனேன்மீலன லக்ஷணவிதானமெனும்
எழுபதாம் அத்தியாயம் முற்றிற்று.